லதா



# மொழிபெயர்க்கப்பட்ட மௌனம்

R

லதா

# மொழி பெயர்க்கப்பட்ட மௌனம்



080 லதா SLPR
39996
31/8/06

வெளியீடு

பதிப்பகம்

**Kaattru Publication : 01**

Mozhi Peyarkkappadda Mounam* Author : T.R.P.Latha
*© T.R.P.Latha
* Language: Tamil

* First Edition : August 2006 * Demy 1x8 * Pages 279

* Published by : Kaattru Publication,

199, Arafa School Road, Addalaichenai -01

email : kaattru@gmail.com

* Printed by : Com Print System, HL 1/2, Dias Place, Colombo 12.

*Price : Rs. 400. 10 US $ 6 £. 8 Euro .

**ISBN 955-99609-0-3**

அப்பாவுக்கும்

அம்மாவுக்கும்

காத்திரம் நிறைந்த கலை, இலக்கிய முயற்சிகளைப் பதிவுகளாக்க எண்ணியதன் விளைவே இந்த 'காற்று' பதிப்பகம்!

அந்த வகையில் 'மொழி பெயர்க்கப்பட்ட மௌனம்' நமது முதல் முயற்சி.

இருபது படைப்பாளிகளை 'லதா' என்னும் மற்றொரு படைப்பாளி நேர்கண்ட தொகுதி இது!

ஆக, பல படைப்புக்களின் காத்திரத்தோடு 'காற்றின்' முதல் தொகுதி வெளிவருவதில் மட்டற்ற மகிழ்ச்சி!

நமது தமிழில் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்று நாம் ஆதங்கம் கொண்டுள்ளவைகளைத் தொடர்ந்தும் 'காற்று பதிப்பகம்' அதன் சாத்தியங்களுக்குட்பட்டு நிறைவேற்றும்!

நன்றி.

பதிப்பாசிரியர்

# இவரிடம் மௌனிக்காதீர்கள்!

கவிக்கோ அப்துல் ரகுமான்

நேர்காணல்களில் எனக்குப் பல கசப்பான அனுபவங்கள் உள்ளன. நான் ஒன்று சொல்ல, நேர்காண வந்தவர்கள் வேறொன்று எழுத, அதனால் எனக்குப் பிரச்சினைகள் பல ஏற்பட்டதுண்டு.

ஆனந்த விகடனில் இருந்து என்னை நேர்காண வந்த ஒரு பெண் நிருபர், 'பெண்கள் வெண்டைக்காய் நறுக்கத்தான் லாயக்கு' என்று நான் சொன்னதாக எழுதி விட்டார். உண்மையில் நான் அப்படிச் சொல்லவில்லை. எனக்கெதிராகப் பெரிய போரே நடந்தது. நான் பெரியதொரு விளக்கம் அளிக்க நேர்ந்தது.

ஒரு நாளிதழ் ஆசிரியர் நேர்காணலின் போது, 'தமிழை வளர்ப்பது யார், புலவர்களா? படைப்பாளிகளா?' என்றொரு கேள்வி கேட்டார். 'படைப்பாளிகள் தான்' என்று நான் பதில் சொன்னேன். மறுநாள் காலை அவரது நாளிதழில், 'புலவர்கள் தமிழை வளர்க்கவில்லை - கவிக்கோ' என்று கொட்டையெழுத்தில் தலைப்பிட்டு என் நேர்காணல் வந்திருந்தது. வட ஆர்க்காட்டுத் தமிழ்ப் புலவர்கள் எல்லோரும் சேர்ந்து கூடி என்னைக் கண்டித்துத் தீர்மானம் போட்டார்கள். அதனால் நேர்காணல் என்றாலே எனக்குப் பயம்.

நெடு நாட்களுக்கு முன் லதா என்னைச் சென்னையில் என் வீட்டில் நேர்காணல் செய்தார். பத்திரிகையில் நான் அதைக் கண்ட போது வியப்படைந்தேன். என் வார்த்தைகளைக் காயப்படுத்தாமல், சிதைக்காமல், திரிக்காமல் லதா அப்படியே கொடுத்திருந்தார்.

நேர்காண வருவோரில் பலர் நேர்காணல் தருவோரைக் கவிழ்க்கும் நோக்கத்தோடு வருவார்கள். அவர்களின் கேள்விகள் தூண்டில் முள்ளாகவும், வழியில் போட்டு வைக்கும் வாழைப்பழத் தோலாகவும் இருப்பதுண்டு. லதா அப்படியில்லை. அவருடைய கேள்விகள் நாகரிகமாகவும் நேர்காணல் தருவோரைப் பிழிந்து சாரம் எடுப்ப தாகவும் இருக்கின்றன. நேர்காணல் என்பது ஒரு கலை. லதா அதை நன்றாகவே கற்றவர்.

தமிழ்நாட்டில் உள்ள பிரபலங்கள் பலரை லதா நேர்கண்டு அதை இப்போது ஒரு நூலாகத் தொகுத்து அளித்திருக்கிறார். தோற்றம் வேறு. உண்மை வேறு. இந்த நூலில் பலருடைய உண்மையான நிலையை அறிய முடிகிறது. 'மொழி பெயர்க்கப்பட்ட மௌனம்' என்ற தலைப்பில் கவிதை இருக்கிறது. இதிலிருந்து நேர்காணல் தருவோரின் மௌனங்களையும் மொழி பெயர்க்கும் ஆற்றல் லதாவுக்கு உண்டு என்று தெரிகிறது. அவரிடம் வாயைத் திறந்தால் தான் ஆபத்து என்று நினைத்திருந்தேன். இப்போது தான் தெரிகிறது வாயை மூடிக் கொண்டிருப்பதும் ஆபத்து என்று!





# லதா - துணிச்சல்

''நொந்து போயிருக்கும் எம் தமிழ் நெஞ்சங்களுக்கு என் எழுத்தால்; படைப்பால் ஒத்தடம் கொடுக்க வேண்டும் என்ற ஆசையே என்னை இங்கு வேலை தேடத் தூண்டியது.'' இந்த வார்த்தைகளுக்குச் சொந்தக்காரர் வேறு யாருமில்லை. இந்த அனுபவத் தேடல் ஆக்கத்தின் படைப்பாளியுடையதே!

''பத்திரிகைத்தொழில் வயிறு நிறையச் சோறு போடாது. நாலு காசும் சம்பாதிக்க முடியாது. உங்கள் கல்வித் தகைமைக்கு ஆசிரியர் தொழில் தேடி வரும். அதற்கு முயற்சித்துப் பாருங்களேன்'' என்று பக்குவமாகச் சொன்னேன்.

எங்கள் இளமைக்கால அனுபவம் இப்படிச் சொல்லத் தூண்டியது. அப்பொழுது தான் இவர் நொந்து போன உள்ளங்களை நினைவூட்டி தனது எழுத்தார்வத்தை வெளிக்காட்ட வாய்ப்புக் கேட்டார்.

தோற்றத்துக்கு நவீன காலத்து யுவதியாகவும் இல்லை. நாட்டுப்புற கூச்ச சுபாவம் உடையவராகவும் இல்லை. அந்த நேரம் பார்த்து என் மேசை மீதிருந்த ஃபோன் அலறியது. அந்த அழைப்பை எடுத்து, 'நான் ஆசனத்தில் இல்லை' என்று சொல்லி கட் பண்ணுமாறு கூறி ரிசீவரை இவரிடம் கொடுத்தேன்.

மற்றவரோடு பேசும் இங்கிதத்தையும், முன்பின் தெரியாத ஒருவருடன் உரையாடும் பக்குவத்தையும் பரீட்சித்துப் பார்க்கவே இந்தத் திடீர் ஏற்பாடு.

ஒரு பத்திரிகையாளருக்குள்ள சமயோசித புத்தியும், பேசும் இங்கிதமும், வார்த்தை ஜாலமும் இவருக்கிருக்கிறதா என்பதை அந்த ஃபோன் உரையாடல் மூலம் எடை போட்டேன். அதில் சித்தியடைந்தார்.

ஆரம்பத்தில் செய்தித்துறையில் இந்தப் பொக்கிஷத்தின் படைப்பாளிக்கு நாட்டம் அதிகம் இருக்கவில்லை. யுத்த அவலங்களும் அதனால் மக்கள் குறிப்பாகப் பெண்கள், குழந்தைகள் படும் வேதனைகளும் இவரின் மனதைப் பெரிதும் பாதித்திருக்க வேண்டும். வேலைக்குச் சேர்ந்த புதிதில் அவரது ஆக்கங்கள் பலவும் வடக்கு, கிழக்கு மக்கள் குறிப்பாக பெண்கள், குழந்தைகளின் பரிதாப வாழ்க்கை பற்றியதாகவே இருந்தது. அவற்றைப் படித்தோர் நெஞ்சம் ஒரு கணம் நொந்து வாடினாலும்; மறுகணம் எங்களாலும் சாதிக்க முடியும் என்ற துணிச்சலோடு அந்த வாசகரைக் கெம்பி எழ வைக்கும். அத்தகைய சோகம், வீரம், துணிவு எல்லாம் பொதிந்தவாறு அவரது ஆக்கங்கள் விளங்குகின்றன.

பெண்களின் முதிசமாக இருக்கும் 'அரட்டை அடிப்பு' இவரிடமில்லை. காரியமே குறி. மனதைத் தொடும் ஏதாவது பரிதாப சம்பவங்களுக்கு இவரது சகாக்கள் யாராவது முகம் கொடுக்க நேர்ந்து விட்டால் அதனைப் பொறுக்கமாட்டாமல் நியாயம் கேட்கும் மனச் சுபாவம் கொண்டவர். தனது ஆக்கத்துக்கும், திறமைக்கும் மதிப்பளிக்க யார் தவறினாலும் முகத்துக்கு நேரே கேட்டு விடுவார்.

தவறு யாரிழைத்தாலும் அதைச் சுட்டிக்காட்டி வாதிடவும் தயங்க மாட்டார். இதனால் வரும் நஷ்டங்கள் எதுவென்றாலும் அதனையும் பொருட்படுத்த மாட்டார்.



'செய்யும் தொழிலே தெய்வம்' என்று அடிக்கடி கூறி, தனது சகாக்களுக்கு உற்சாகமூட்டுவார். இந்தப் பொக்கிஷத்தின் படைப்பாளி செல்வி. லதா ஒரு பட்டதாரி. பத்திரிகைத் துறையை நாடி வரும் யுவதிகளின் எண்ணிக்கை தொலைக்காட்சி, வானொலி ஊடகங்களை விடக் குறைவாக இருந்தாலும்; லதா போன்ற துணிச்சல் மிக்க படைப்பாளிகளின் சேவை தமிழ்ப் பத்திரிகை உலகத்திற்குக் கிடைத்திருப்பது ஒரு வரலாற்றுப் பெருமைக்குரியதே!

இலக்கியம், அரசியல், கலை ஆகிய துறைகளில் லதாவுக்குள்ள அறிவையும், பாண்டித்தியத்தையும் இந்த நூலில் பல்வேறு பிரமுகர்களையும் பேட்டி கண்டு அவர் எழுதிய பாங்குகள் பறை சாற்றி நிற்கின்றன.

செல்வி. லதாவின் பணி மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

மூத்த பத்திரிகையாளரும்
வீரகேசரியின் முன்னாள் பிரதம ஆசிரியருமான
செ. நடராஜா

# படைப்பாளிகளின் ஒளிப்படங்கள்!

பழநி பாரதி

'சொல்லாத சேதிகள்' என்கிற சின்னஞ்சிறு கவிதை நூலிலிருந்து தான் நான் முதன் முதலில் இலங்கைத் தமிழ்ப் பெண்களின் படைப்புக்குரலைக் கேட்டேன். அங்கு நிகழ்ந்து வரும் இனப் போராட்டத்தின் தீவிரம் குறித்த இலக்கியப் பதிவுகளை அதன் பிறகு நான் தேடித் தேடிப் படித்தேன்.

எப்போதுமே இலங்கைத் தமிழர்கள் எந்தத் துறையில் ஈடுபாடு கொண்டாலும் அதன் வேர் வரை ஊடுருவிப் பார்க்கிற வியர்வை மழையுடன் இறங்குகிறார்கள். பெரும்பாலும் இங்குள்ள பெண்களுக்கு இல்லாத வெளிப்படையும், துணிச்சலும் அங்குள்ள பெண்களுக்கு வாய்த்திருக்கிறது. துயரங்களிலிருந்து உதறியெழுந்து வாழ்வின் பேரரசிகளாக ஒளி வீசுகிற ஆற்றலைக் காலம் அவர்களுக்கு வழங்கி இருக்கிறது.

இலங்கைத் தமிழ்ப் பெண்களைப் போல் துன்பப்பட்டவர்களும் யாருமில்லை; துணிச்சல் மிக்கவர்களும் யாருமில்லை. ஒரு தோளில் குழந்தையைத் தட்டித் தட்டித் தூங்க வைத்துக் கொண்டும் மறு தோளில் ஆயுதத்தைத் தூங்கவிடாமல் விழிப்பாக வைத்துக் கொண்டும் அங்கு வாழ்கிற ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையும் ஒவ்வொரு வரலாறாக இருக்கிறது.
இந்தப் புரிதல்களோடு அறிவுத்தளத்தில் செயல்படுகிற லதாவை நான் ஒரே ஒரு முறைதான் சந்தித்தேன். வீரகேசரி இதழுக்காக ஒரு நேர்காணல் பொருட்டு அவரோடு பழகினேன். அண்ணன் அறிவுமதி தான் இவரை எனக்கு அறிமுகம் செய்தார்.



நான் சந்தித்த பத்திரிகையாளர்களில் இவரை நான் வித்தியாசமாக உணர்ந்தேன். பத்திரிகைத் தோரணையைக் காட்டாமல் இயல்பாகப் பேசினார். சாமர்த்தியமாக சில கேள்விகளைக் குறுக்கில் போட்டு அவருக்குத் தேவையான செய்திகளைப் பெற்றுக் கொண்டார். ஒரு பத்திரிகையாளனின் பணி செய்திகளைக் கொண்டுபோய் மக்களிடம் அப்படியே சேர்ப்பது மட்டுமல்ல; அதற்கான விவாதங்களையும் விழிப்பையும் உண்டு பண்ண வேண்டும்.

லதா எடுத்திருக்கிற மற்ற நேர்காணல்களையும் நான் படித்தேன். ஒரு படைப்பாளியைப் படம் பிடித்துக் காட்டுவதை விடவும் அந்தப் படைப்பாளியின் வாயிலாக சமூகத்துக்குச் சொல்ல வேண்டிய செய்திகளை நுட்பமாகப் பதிவு செய்திருக்கிறார். பத்திரிகைப் பணியை வெறும் தொழிலாக மட்டும் கொண்டு இயங்குகிறவர்களுக்கு இந்தத் தர்மம் தெரியாது. அதற்கு மனசாட்சி ஒன்று உயிருடன் துடித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

மனத் துணிவும், அறிவுத் தெளிவும் கொண்ட லதா தனது நேர்காணல்களில் அதைச் சாதித்திருக்கிறார். இவை ஒரு நூலாகத் தொகுக்கப்படுவது ஒரு முக்கியமான பதிவு தான்! வாழ்ந்தவர்களிடம் இருந்து வாழ்கிறவர்கள் கற்றுக் கொள்ள இந்நூலில் நிறைய நிறைய விமர்சனங்களும் தீர்வுகளும் உள்ளன.

லதா எழுதி எழுதி மேற்செல்ல எனது அன்பு தளும்பும் வாழ்த்துக்களை அள்ளி அள்ளி வழங்குகிறேன்.

# பொன்னிலத்தில் நம் நந்தவனம்!

இலக்கியக் கிளைகளில் ஊஞ்சலாடிய மகிழ்வோடு இருபது ஆளுமைகளின் மௌனங்களை முடிந்தவரையில் இதில் மொழி பெயர்த்திருக்கிறேன். அல்லது அவர்களுடைய இதய இயக்கப் பதிவுகளையும் (ECG), மூளை மின்னலைப் பதிவுகளையும் (EEG) இயந்திரத் தனத்துக்குப் புறம்பானதொரு தளத்தில் நின்று கொண்டு எல்லோருக்கும் புரியும்படி எழுதிக் காட்டியிருக்கிறேன்.

‘பூக்கள் தருகின்ற நண்பர்களோடு பொன்னிலத்தை ஆள்கிற வசதி உனக்கு’ என்றெனக்கு உணர்த்தியிருக்கிறது இப்படைப்பு உருவாக எடுத்துக் கொண்ட காலம்!

ஓர் எழுதுகோலாளரின் எண்ணம் படைப்பாகி மேடைக்கு வரும் வரையில் கோரி நிற்கும் விடயங்களை என்னுடைய இப்படைப்பு மிகையாகவே கோரியிருக்கிறது. அதற்கு ஈடு கொடுத்துச் செயற்பட்ட நண்பர்களில் மப்றூக்கின் பல பகற் பொழுதுகள் இரவுகளைச் சந்திக்காமலேயே நகர்ந்திருக்கின்றன. வெகு நிதானமான என்னுடைய எண்ணங்களை வேகமாக வடிவமைத்துப் படைப்பாக்க என்னை விடவும் இவர் அதிகமாக ஓடியிருக்கிறார்.

இந்த ஆளுமைகளுடனான சந்திப்பின் மூலம் எனக்குப் பிடித்த எழுத்தை அவ்வப்போது நான் பதிவு செய்து வந்தது நான் முன்பு பணியாற்றிய பத்திரிகையில் எனக்குத் தரப்படாத பணி!



கொடும்பாவி வாத்தியாரின் குத்து வாள்களுக்குத் தப்பித்துப் பிரசுரமான 10 இந்திய ஆளுமைகளின் நேர்காணல்களுக்குப் பிறகு (சுஜாதா முதல் ஜெயகாந்தன் வரை) என் பதிவுகளுக்கு அங்கே தடை விதிக்கப்பட்டது. வாத்தியாரின் மேசையில் மூன்று வாரங்களாகக் காத்திருந்த காசி ஆனந்தனுக்குக் களம் தந்தது தினக்குரல்! தென்கச்சி, பழநி பாரதி, ஈழத்து ஆளுமைகள் ஏழு பேர் என மொத்தம் 10 நேர்காணல்களையும் சிதைக்காமல் பிரசுரித்த தினக்குரல் பத்திரிகைக்கும், அதன் வார வெளியீட்டாசிரியர் - பாரதி அண்ணாவுக்கும் எனது நிறைவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவற்றை வெட்டியெடுத்துப் பாதுகாப்பதில் கூட அக்கறையற்றிருந்த எனக்கு ‘இவற்றைத் தொகுத்தொரு நூலாக்குங்கள்’ என்று ஆலோசனை சொன்னவரும் மப்றூக் தான்!

இதற்காக எழுந்து தொடர்ந்த என்னுடைய ஓட்டம் தரித்து நின்ற போதுகளில்; தாண்டிச் செல்ல வேண்டியிருந்த மீதித் தூரங்களைக் குறுக்கி இழுத்து வந்து என்னருகில் நிறுத்த அல்லது அவ்விடங்களுக்குத் தாமே இறக்கை கட்டிப் பறக்க சார்ள்ஸ், அதிரன் இருவராலும் முடிந்திருக்கிறது!

வங்கியொன்றில் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் தூக்கிப் போட்டு இருப்பு நிலைக் குறிப்பெழுதிக் கொண்டிருந்த நான் ஊடகத் துறைக்குள் வலிந்து போய் நுழைந்த பிறகே மாறுபட்ட மனிதர்களின் எதிரேடுகளைப் படிக்க நேர்ந்தது.

ஆடை கட்டிய ஐந்தறிவு ஜீவராசிகள் அதிகமாக இருந்த அந்தச் சாலையில் நட்பியல் நாகரிகத்தில் பி. எச். டி. முடித்த மனிதர்களும் இருந்தார்கள். அவர்களுடன் கை குலுக்கிக் கொண்டதன் விளைவிலொன்றாகவும் இப்படைப்பை நான் கருதுகிறேன்.

மிகக் குறுகிய காலத்திலேயே என்னுடைய திறமை இன்னதென்று இனங்கண்டு ஊக்குவித்ததுடன், சில சர்வதேச மாநாடுகளில் கலந்து கொண்டது உள்ளிட்ட பல்வேறு வாய்ப்புக்களை எனக்கு ஏற்படுத்தித் தந்த வீரகேசரி நிர்வாக இயக்குநர் - திரு. குமார் நடேசன் அவர்களுக்கும் நிறைந்த மனதோடு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.
விஜய் இனுள்ளான பிரவேசத்தின் பிறகு மிகுந்த துணிச்சலோடு நான் மேற்கொண்ட விடயமாக பெண்களுடனும் கை குலுக்கிக் கொண்டதைக் குறிப்பிடலாம். இயல்பான என் தயக்கத்தை உடைத்து என்னுடன் ஓட்டிக்

கொண்ட நுஸ்பாவும், உமாவும் என்னைப் புதிய உலகொன்றினுள் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். கால தேச வர்த்தமானத்தின்படி, பொதுவான கதவுகள் பூட்டப்படும் போதெல்லாம் திட்டி வாயில்களைத் திறந்து கொண்டு வந்து இப்படைப்புக்காய் உதவியிருக்கிற இவர் களோடு; நான் எழுதுவதையெல்லாம் படித்து அபிப்பிராயம் சொல்லும் குருபரன், தெய்வீகன் இருவரையும் நன்றியோடு குறிப்பிடுவதில் நிறைந்து போகிறேன்.

நட்பில் நேர்த்தி காட்டி கால் நூற்றாண்டு காலமாக என்னோடு கைகுலுக்கிக் கொண்டிருக்கின்ற 'கட்டார் வாழ் தோழி- துஸ்யா'வுக்கு இந்த 'மொழி பெயர்க்கப்பட்ட மௌனம்' தான் வெள்ளி விழாப் பரிசு! பரஸ்பரமான தோள் கொடுப்போடு நகர வேண்டிய நட்புறவில் இவள் எனக்காய் ஆற்றியவை அதிகம்!

பிரத்தியேகமான இந்தியப் பயணங்களின் போது பல ஆளுமைகளை நான் சென்னையில் சந்திப்பதற்கு உதவிய தென்கச்சி கோ.சுவாமிநாதன் ஐயா அவர்களையும் நன்றியோடு ஞாபகித்துக் கொள்கிறேன்.

சென்னையில் நான் வாசம் செய்த காலத்தில் என்னைத் தம் பிள்ளையாகவே நடத்திய மாணிக்கம் தாத்தா-மகாலிங்கம் அங்கிள் குடும்பத்தினருக்கு காலம் முழுதும் நான் நலமாக நன்றி கூற வேண்டும். தென்றலான இக்குடும்பத்து உறவுகளால் என் குடும்பத்தை நான் மறந்து போன நாட்கள் அதிகம்!

பிரிவின் துயர் கொண்டு வேறு செய்ய முடியாமல்; கிரஹாம் பெல் இன் கண்டுபிடிப்புக் கருவி வழி பாசப் பரிமாற்றம் செய்யும் என் குடும்பத்தினருக்கும்



என் நன்றியுணர்வு கடந்து போய் மகிழ்ச்சிப்படுத்தட்டும்! என்னுடைய இலக்குகள் செல்லும் பாதைகளில் கிடக்கும் முட்களைத் தூக்கித் தூரப்போட இவர்களின் மௌனமான இசைவுகள் பேராதரவு வழங்கியிருக்கின்றன.

அடுத்து, இப்படைப்பின் பக்கங்களையும், அட்டைப்படத்தையும் அழகுற வடிவமைத்து அச்சிட்டுத் தந்த கொம் பிரின்டர்ஸ்-அஸீஸ் நிசாருதீன் அவர்களுக்கும், 'காற்று' பதிப்பகத்தின் ஆசிரியருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைவாக, மனித இலக்கணங்களினின்று மாறிப் போகத் தெரியாத நண்பர்களை எனக்குப் பரிசளித்த அவர்களுடைய பெற்றோர்களுக்குச் சிரந் தாழ்ந்த என் நன்றிகள் உரித்தாகட்டும்!

**நாங்கள் நட்பாடும் நந்தவனம் எப்போதும் ஒரு பொன்னிலத்தில் தான் பூத்துக் கிடக்கும்!!**

லதா

*20.07.2006*



# வைரமுத்து

அழகியல் ஊறிய மொழியை நன்கு உபசரித்துத் தன்வசப்படுத்தி வைத்துக் கொண்டு எழுதுகோலிடம் சதா வேலை வாங்கிக் கொண்டிருக்கிற கவிஞர் வைரமுத்து! தமிழிலக்கியத்தோடு ஆழ்ந்து போய், உலக இலக்கியங்களைத் தேடிக் கொண்டிருக்கிற முயற்சியும், வாழ்வினைக் கூர்ந்து நோக்குகிற இயல்புமாகத் தான் கொண்டிருக்கிற பணிக்கும், அப்பாலும் இயங்கிக் கொண்டிருப்பவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. தமிழ் இலக்கியம் பயின்று தங்கப் பதக்கம் வென்ற இவர், பத்தொன்பதாவது வயதிலேயே 'வைகறை மேகங்கள்' என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டவர். கட்டுரை, நாவல், திரைப்பாடல், கவிதை என்று இதுவரையில் 34 படைப்புகளைத் தந்துள்ளார். தற்போது எழுதிக் கொண்டிருக்கிற 'கருவாச்சி காவியம்' ஆனந்த விகடனில் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது.

ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் ஆகிய நான்கு மொழிகளில் வைரமுத்துவின் கவிதைகள் மொழிபெயர்ப்பு செய்யப் பட்டுள்ளன. அத்துடன் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ள சில கவிதைகள் 'A drop in search of the ocean' என்ற ஆங்கில மொழிபெயர்ப்பு நூலாகவும் வெளிவந்துள்ளது. இந்திய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் இந்நூலை டெல்லியில் வெளியிட்டு வைத்துக் கவிஞரைக் கௌரவப்படுத்தினார்.

மண்ணின் உயிர் மணக்கும் நாவலாக வெளிவந்த 'கள்ளிக் காட்டு இதிகாசம்' 2003 ஆம் ஆண்டில் சாகித்திய அக்கடமி விருது பெற்றது. அதே ஆண்டில் தான் இவருக்கு இலக்கியத்திற்காக 'பத்ம ஸ்ரீ' விருதும் வழங்கப்பட்டது.

நவீனப்பட்ட மொழியும் சிந்தனை வீச்சும் கொண்டு வெளிவந்த வைரமுத்துவின் படைப்புக்களை ஆய்வு செய்து 10 பேராசிரியர்கள் டொக்டர் பட்டமும் 30 இற்கு மேற்பட்டவர்கள் எம். ஃபில் பட்டமும் பெற்றிருக்கிறார்கள். தான் நுழைந்து கொண்ட துறையினுள் தனித்து மிளிர்ந்து கொண்டிருந்த இக் கவிஞரை 'கவிப்பேரரசு' என்று அழைத்து விளித்தவர் கலைஞர் கருணாநிதி. இன்னும் 'காப்பியக் கவிஞர்' என்று அப்துல் கலாமினாலும், கவிசாம்ராட் என்று வாஜ்பேயினாலும் கொண்டாடப் பட்டவர்.

வடுகப்பட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் விவசாயக் கலாசாரத்தின் வறுமை குடித்தே கவிதை செழித்தவர். நிலவு காட்டிய வானத்தை நிதானமாக நின்று ரசித்து முடிந்த கிராமத்தின் பசுமை வரப்புகளிலிருந்து புறப்பட்டு வந்த இக்கருப்புக் கவிஞன் 1980 இல் நிழல்கள் படத்தின் மூலம் சினிமாவுக்கு வந்தார்.

இவருடைய சிந்தனைக்கும், எழுத்துக்குமிடையிலான வலுவான பின்னல் ஆடிக் காட்டிய அழகில் மயங்கிப் போன சினிமா; வைரமுத்துவை வாரி அணைத்துக் கொண்டது. 'நிழல்கள்' திரைப்படத்திற்காக எழுதிய 'இது ஒரு பொன் மாலைப் பொழுது' தான் வைரமுத்துவின் முதலாவது திரைப்படப் பாடல். இன்று வரையில் 5500 பாடல்களுக்கு மேல் புனைந்துள்ள இவருடைய சாதனையை வேறெவரும் முறியடிக்கவில்லை.

முதல் மரியாதை (1985), ரோஜா (1992), கருத்தம்மா/ பவித்ரா (1994), சங்கமம் (1999), கன்னத்தில் முத்தமிட்டால் (2002) ஆகிய திரைப்படங்களுக்காக ஐந்து தேசிய விருதுகளைப் பெற்றுக் கொண்டவர். சினிமாவில் சாதித்துக் கொண்டிருக்கிற கவிஞர்களில் வைரமுத்துவின் இடம் அதி விசேடமானது தான். சாலி கிராமத்திலுள்ள அவருடைய இல்லத்தில் நிகழ்ந்த சந்திப்பு இது!

**இதுவரையில் உங்களுடைய எழுதுகோல் எழுத மறந்த அல்லது மறுத்த விடயங்கள் எவை?**

எழுத மறந்து போனவைதான் நிறையவே உள்ளன. ஏனென்றால் உலகக் கவிதைகள், உலக இலக்கியங்கள் எல்லாம் இந்த மானுடத்தை எழுத்துக் கூட்டி அகரத்தை மட்டுமே எழுதிக் காட்டியிருக்கின்றன. அல்லது உச்சரித்துக் காட்டியிருக்கின்றன. இந்தப் பிரபஞ்சம், வாழ்வு, மானுடம், இவற்றின் நன்மை, தீமை, கண்ணீர், வெற்றி, தோல்வி, போராட்டம், எல்லாமே மிகப் பெரியவை. இவற்றிற்கேற்ப கலையும் இலக்கியமும் விரிந்து செல்கின்றன.

அமானுஷ்ய சக்தி கொண்ட பிரபஞ்சத்தின் வளர்ச்சியையும், அது கொண்டிருக்கின்ற வாழ்வின் நீட்சியையும் ஓர் எழுத்தாளனாலோ, சிற்பியாலோ அல்லது ஓவியனாலோ வடித்துக் காட்டுவதென்பது இயலாத விடயம். அவனவன் தன் கைக்குள் சிக்கிய; கைக்குள் அடங்கிய மனத் துகளைப் பிரபஞ்சம் என்று நினைத்துக் கொண்டிருப்பது பிழை. தன் உள்ளங்கையில் அள்ளிக் கொண்ட நீரை, இதுதான் சமுத்திரம் என்று சொல்லிக் கொண்டிருப்பதும் பெரிய பிழை. எனவே என்னைச் சுற்றியுள்ள உலகத்திலிருந்து பெற்றுக் கொண்ட சில செய்திகளை நான் என்னுடைய பார்வையில் வடித்துக் காட்டியிருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால் வாழ்வு என்பது உணர்வது. வாழ்வதல்ல. அந்த உணர்வை கலாபூர்வமாகவும், மொழியின் அழகியல் கூறுகளோடும் வெளிப்படுத்துவது இலக்கியமாகிறது. கல்லில் வெளிப்படுத்துவது சிற்பமாகிறது. ஒலியில் வெளிப்படுத்துவது இசையாகிறது. வர்ணந் தீட்டினால் அதுவே ஓவியமாகிறது.

எல்லாவித படைப்பாளிகளும் தம்மைச் சுற்றியிருக்கிற சின்ன வாழ்க்கையை மட்டுமே பிரதிபலிக்கிறார்கள். எனவே என்னாலும் இதுவரையில் உணரப்பட்டவை சொற்பம்தான். உணர்த்தப்பட்டவை அதனிலும் சொற்பம்.

நான் உணர்ந்ததையெல்லாம் உணர்த்த ஆரம்பித்து விட்டாலே ஒரு பெரிய உலகம் விரிவடைய வேண்டும். அதையே இன்னமும் நான் செய்யவில்லை.

எனவே உணர்ந்ததையெல்லாம் உணர்த்தி விட முடியாது என்பதும் உணர்த்தக் கூடாது என்பதும் படைப்பாளிகளுக்குள்ள கடப்பாடு.

எழுத மறுத்த விடயங்கள் என்றால், வாழ்க்கை கொச்சைப்படுத்தப் படுவதையும், பெண்கள் கேலி செய்யப்படுவதையும், அநீதிக்குத் துணை போவதையும் பெரும்பாலும் எழுத மறுக்கிறேன். இந்தத் தவிர்ப்புகள் எனக்கு நானே இட்டுக் கொண்ட விலங்குகள்.

**உணர்ந்தவற்றையெல்லாம் பதிவு செய்யக் கூடாது அல்லது முடியாது என்பதற்கு ஏதாவது நிர்ப்பந்தங்கள் அல்லது அழுத்தங்கள் காரணமாக இருக்கின்றனவா?**

இல்லை. நாகரிகம்தான் காரணம். சமுதாயத்தின் ஒரு பகுதி காயப்படும் அல்லது பாதிக்கப்படும் என்று கருதுகிறேன் என்பதால் அவ்வாறு எழுதுவதைத் தவிர்க்கிறேன். இது எனக்கு மட்டுமன்றி எல்லோருக்கும், எல்லாத் துறையினருக்கும் உரியது. இந்த நாகரிகம் உண்மைகளை மறைப்பதற்குப் பயன்பட்டால் அது பிழை. உண்மைகளுடைய வேர்களை மறைப்பதற்கு எந்தப் படைப்பாளியும் முயல்வதில்லை. ஆனால் சிலவற்றைப் படைக்காமலே விடுகின்ற நாகரிகம்; பலரைக் காப்பாற்றுவதற்கான மௌனமே!

**எந்த ஒன்றிற்காகவும் நான் இதனை இழக்கவில்லை என்று எதனைச் சொல்வீர்கள்?**

சுய மரியாதையை!

**கவிஞர், திரைப்பாடலாசிரியர் என்கிற பொதுமைக்குள் புதைந்து கிடக்கிற உங்கள் தனித்த அடையாளம் என்ன?**

என்னுடைய அடையாளத்தைச் சொல்ல வேண்டின், என்னை நான் விமர்சனம் செய்ய வேண்டும். அது உகந்ததே அல்ல. இதை என்னுடைய வாசகனும், ரசிகனும்தான் சொல்ல வேண்டும். என்னுடைய முகத்தை நானே பார்த்துக் கொள்ள முடியாது. அதற்குத் தேவைப்படுகின்ற கண்ணாடியே விமர்சனம். அதுதான் ரசிகன். அதுதான் அறிவு ஜீவிகள். அவர்களிலிருந்து பிரதிபலிப்பது தான் எனது அடையாளம்.



**மேற்சொன்ன உங்களுடைய தகைமைகள் இரண்டும் செயற்படுகின்றபோது எவ்வித வேறுபாட்டினை உணர்கிறீர்கள்?**

திரைப் பாடல் எழுதுகிற போது நான் ஒரு பணியாள் என்று நினைக்கிறேன். ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியை அலங்காரம் செய்து கொடுங்கள் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றேன். அந்த உணர்ச்சி ஒரு பாத்திரத்தின் உணர்ச்சி. இரவல் பெறப்பட்ட உணர்ச்சி. ஆனாலும் சில சமயங்களில் அது என்னுணர்ச்சியாகவும் இருப்பதற்கு வாய்ப்பிருக்கும். அப்போது உயர்ந்த பாடல் பிறக்கிறது. கவிதை எழுதும் போது எனக்குச் செரிக்காத; என்னுடைய மனச்சாட்சி சொல்லாதவற்றையெல்லாம் தவிர்த்து விடுகிறேன். அந்த உணர்ச்சி தப்பாக இருக்கலாம். ஆனால் பொய்யாக இருக்க முடியாது.

**எந்த உணர்ச்சிக்கு வரிவடிக்கும் போது நீங்கள் வார்த்தைகளுக்காகக் காத்திருப்பதில்லை?**

கிராமத்து மனிதனுடைய வாழ்க்கை, இயற்கை, காதல் – இம்மூன்று பற்றியும் எழுதும் தருணங்கள் மிக இலகுவானவை. கிராமம்தான் என் மொழி, என் வேட்கை, என் மக்கள், என் துயரம்! இயற்கையின்றி நான் இல்லை. வானத்தைப் பார்க்காவிடில் நான் செத்துப் போய் விடுவேன். காதல் ஓர் உன்னத உணர்வு. அது தொடுகையற்ற தூய்மை.

**நீங்கள் மிகவும் நெகிழ்ந்து போகும்படியோ உங்கள் எண்ணத்தை அப்படியே பிரதிபலிக்கும்படியோ காட்சிகளாக்கப்பட்ட உங்கள் திரைப்படப் பாடல்கள்?**

மூன்று பாடல்களைச் சொல்வேன்.

1. ஆயிரம் தாமரை மொட்டுக்களே (அலைகள் ஓய்வதில்லை)
2. என்ன சத்தம் இந்த நேரம் ( புன்னகை மன்னன்)
3. உயிரே ( பம்பாய்)

என்னுடைய மொழியுடன், இசை ஒரு நூலிழை கூட நகராமல் பயணம் செய்துள்ள பாடல்கள் இவை. பாடலுக்காக ஒரு இயக்குனர் தனது மந்திர ஜாலங்களைக் காட்டுவது என்பதை விட; பாடல் எவ்வளவு கோருகிறதோ அதைக் கலாபூர்வமாகச் செய்து காட்டுவதுதான் சிறப்பு.

**இசை மிகச் சரியாகப் பொருந்தியுள்ளதாய் நீங்கள் நேசிக்கின்ற உங்களுடைய பாடல்...!?**

எந்த மெட்டும் மோசமான மெட்டு கிடையாது. இருந்தாலும், 'காதல் ஓவியம்' படத்தில் வருகின்ற 'சங்கீத ஜாதி முல்லை' என்கிற பாடல். அந்தக் கதையை நான் முழுவதுமாக உள்வாங்கிக் கொண்டு கேட்டபோது உடைந்து போய்விட்டேன். அந்தப் பாடலை நான் எழுதியபோதும், இளையராஜாவின் இசையில் எஸ்.பி.பி பாடிய போதும், பின்னர் காட்சியில் பார்த்த போதும் நெகிழ்ந்து போய் விட்டேன். நான் உணர்ந்ததும், அந்தப் பாடல் கொண்டு வந்து சேர்த்ததும் ஒரே உணர்ச்சியின் புள்ளியில் இருந்தன.

**நீங்கள் பணியாற்றிய இசையமைப்பாளர்களில் உங்களுக்கு மிகவும் வசதியாக இருந்தவர்கள் யார்?**

ஆளுக்கொரு சிறப்பு இருக்கிறது. இளையராஜாவுக்கு ஒரு பேராற்றல் உண்டு. புதியதொரு இசையை உருவாக்கி விட்டவர் ஏ.ஆர்.ரஹ்மான். இவ்விரண்டு பேரையும் இரு வேறு தளங்களில் வைத்து சமமாகப் பார்க்கிறேன். என் தமிழைச் சரியாக இறக்கி வைப்பதற்கு இவர்கள் வசதியாக இருந்தார்கள். சங்கர் - கணேஷ், வித்யாசாகர், ஹரிஸ் ஜெயராஜ், சந்திரபோஸ், ஒரு சில பாடல்களையே தந்திருந்தாலும் அவற்றைச் சிறப்பாகச் செய்த மணிசர்மா என்று எல்லோருமே சிறப்பானவர்கள்தான். அந்தத் திறமைக்குள் மெட்டைக் கெடுக்காமல் தமிழ் இருக்கிறது என்றால் பாடல் ஹிட்தான்!

**புயலாகவே புறப்பட்டு வந்த ஏ. ஆர். ரஹ்மானின் இசைக்குள், வார்த்தைகள் புரிபடாமல் புதைந்து போய்விடுவதாக ஒரு குற்றச்சாட்டு சில வருடங்களுக்கு முன்பிருந்தே தெரிவிக்கப்பட்டு வருகிறதே!**

இன்றைய எல்லா இசையமைப்பாளர்களுக்குமே இது பொருந்தும். எம்.எஸ்.வி. காலத்துக்குப் பிறகு பல்வேறு மேற்கத்தைய இசைக்கருவிகள் தமிழ் நாட்டுக்குள் இறக்குமதியாயின. அவற்றையெல்லாம் தம்மாலும் பயன்படுத்திக் காட்ட முடியும் என்கிற வேட்கையும், ஆர்வமும் தமிழ் நாட்டு இசையமைப்பாளர்களால் தவிர்க்க முடியாதவை ஆயின.



தமிழை அழுத்தாமல், தமிழ் நாட்டுத் தன்மையுடன் இசையமைக்க வேண்டும் என்பது முக்கியம். இது ஒன்றும் அவர்களுடைய குற்றமல்ல. தமிழுக்கு நேர்ந்த விபத்து!

**இன்றைய சினிமா சரியான தளத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறதா?**

எல்லாக் காலத்திலும் நல்ல படங்களும், கெட்ட படங்களும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. நேற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இன்றைய எல்லாம் தீங்காகவே தோன்றும். உங்கள் தாய் தந்தையருடைய நடையுடை பாவனையிலிருந்து நீங்கள் வேறுபட்டிருக்கிறீர்களே! ஒவ்வொரு காலகட்டத்திலும் இரு வேறு சமுதாயங்கள் இருக்கவே செய்கின்றன. மேற்கத்தைய உலகம் நம்மோடு நன்றாகக் கலந்து விட்டதாலும், தொடர்பு சாதனங்களால் தூரம் சுருங்கி விட்டதாலும் கேடுகளுக்கான வாய்ப்புகள் அதிகரித்து விட்டன என்பது உண்மை.

சீரழிவு தூரத்தில் வருகிறபோதே அடையாளம் கண்கொள்கிற வாய்ப்பு அன்று இருந்தது. இன்று அழிந்துபோன பிறகுதான் தெரிகிறது. சினிமா இதையே சொல்கிறது.

**எம்முடைய அடுத்த தலைமுறையின் அடையாளம்!!!**

மேற்கத்தைய உலகத்தின் தாக்கத்திலிருந்து தமிழ்ப் பண்பாடு தன்னைத் தனித்துக் காத்துக் கொள்வதற்கு வேலி கட்டிக் கொள்ளுமா? கொள்ளாதா? என்பதை அது பொறுத்திருக்கிறது.

**பகுத்தறிவுக்கு ஒவ்வாத கற்பனைகளைக் கொண்டதாக இன்றைய சினிமா புனையப்படுகிறது என்று குறிப்பிடுவது பற்றி...**

சினிமா பகுத்தறிவுக்குப் பாடுபட்டது என்று யார் சொன்னது? சினிமாவில் பகுத்தறிவும் பேசப்பட்டது. சினிமா ஒரு வணிகக் கருவி. அது வேப்பிலை கட்டி ஆடும். கணினியைப் பயன்படுத்தும். நிலவில் மனிதன் இருப்பதைக் காட்டும். வைகுந்தத்தில் நாரதர் பாடுவதையும் படம் பிடிக்கும்.

இன்று பகுத்தறிவுப் பத்திரிகைகள் இராசி பலன் போடுவதை எப்படி தவிர்க்கவில்லையோ; அப்படித்தான் சினிமாவும். உங்களுடைய பத்திரிகையிலும் இராசி பலன் உண்டுதானே!

**மொழி ரீதியாக உங்களைப் பாதித்தவர்கள் சிலர் மூலமாகவே உங்களுடைய அடையாளம் வலுப்பட்டிருக்கிறது என்று நான் கூறினால்...**

(சிரிக்கிறார்) ஏற்றுக் கொள்கிறேன். கவியரசு கண்ணதாசன் இல்லையென்றால், வைரமுத்துவினுடைய தமிழுக்கு இவ்வளவு தெளிவு கிடைத்திருக்குமா என்றெனக்குத் தெரியாது. உரை நடைத் தமிழால் என்னைத் தமிழுக்குள் ஆழ்ந்து போக வைத்தவர் கலைஞர் என்றால்; கவிதைத் தமிழால் என்னை அழைத்துச் சென்றவர் கண்ணதாசன்.

**இன்று எழுதிக் கொண்டிருக்கின்ற பெண் கவிஞர்கள் பாலியற் சொற்களை அதிகமாகப் பிரயோகிக்கின்றார்கள். இது ஆண்களைத் தாம் வெற்றி கொள்வதற்கான அடையாளம் என்று கூறியும் கொள் கிறார்கள். படைப்பாளி என்கிற ரீதியில் அதை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்கிறீர்கள்?**

அது சரியா, தவறா என்பது அடுத்த வாதம். 'காதலுற்ற செய்தியினை மாதர் உரைத்தல் வழக்கமில்லை' என்பது பழைய சூத்திரம். 'பெண் தன்னுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்த மாட்டாள், கூடாது, அவ ளுக்கென்று சில தடைகள் இருக்கின்றன, வரம்புகள் விதிக்கப்பட்டிருக் கின்றன' என்று காலங்காலமாகப் பெண் அமுத்தப்பட்டும் மறைக்கப் பட்டும் வந்திருக்கிறாள்.

பெண்ணின் வலியை ஆண் படைப்பாளி எழுதிக் காட்ட வேண்டிய சூழல் இருந்திருக்கிறது. பிரசவத்தைப் பற்றி ஆண் எழுதினால் அது வெறும் தகவலாகத்தான் இருக்க முடியும். 'இதனால் சகலமானவர்க ளுக்கும்' என்ற நூலில் நான் மிகச் சரியாக எழுதியிருக்கிறேன். ஆனால், அனுபவித்து எழுதவில்லை.

அதை ஒரு பெண் எழுதிக் காட்டினால் இருக்கக்கூடிய நுண்மையான உணர்வு; நான் சரியாக எழுதியதில் இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய கருத்து.

உரிமையும், கல்வியும் மறுக்கப்பட்டிருந்ததனால் தமக்கு ஏற்பட்டிருந்த வாழ்வியல் அமுத்தங்களிலிருந்து வெவ்வேறு தளங்களினூடாக அவர்கள் தம்மை விடுவித்துக் கொண்டும், வெளிப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள் என்பதாக மட்டுமே நான் புரிந்து கொண்டிருக்கிறேன்.



அது சரியா, தவறா என்பதை அப்படைப்பாளிகளும், இன்றைய உலகமும்தான் தீர்வு செய்ய வேண்டும்.

**சங்ககாலத்திலேயே 37 பெண் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். கல்வியும் உரிமையும் தாராளமாக வழங்கப்பட்டுவிட்ட; பெற்றுக் கொண்ட பின்னரும் இன்று பெண் படைப்பாளிகள் - கவிஞர்கள் பெருமளவில் உருவாகாததற்கு என்ன காரணம்?**

கவிதை அல்லது படைப்பியலின் பிற அம்சங்கள் இன்று வாழ்வின் கூறாக இல்லை. கவிதை என்பது இன்று தொழிலாக இல்லை. 'எமக்குத் தொழில் - கவிதை' என்று சொன்ன கம்பீரம் இருக்கிறதே. இதை முழுமையாக நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எமக்குத் தொழில் கவிதை என்றால்; கவிதையன்றி எனக்கு வேறு பணி இல்லை.

கவிதையே வாழ்க்கை, கவிதையே எனது உணவு, கவிதையே எனது கனவு என்று சொல்லக்கூடியவர்கள் இன்று எத்தனை பேர் இருக்கி றார்கள். கல்லூரியில் பணியாற்றுகின்ற ஒரு பெண் கவிஞருக்கு கவிதை துணைப் பொருளாக இருக்கிறது. இல்லற வாழ்வில் ஈடுபட் டிருக்கிற ஒரு பெண் தன்னுடைய ஓய்வு நேரத்தில்; தொலைக் காட்சி பார்த்த மீதி நேரத்தில்தான் கவிதை எழுதுகிறார். முழு நேரத் தொழிலாகவும், வருமானம் பெறக்கூடிய கருவியாகவும் கவிதை பயன்படவில்லை என்பதால் பெண்களுக்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது.

காலம் கவிதையை ஓர் ஊதியப் பொருளாக மாற்றியிராத காரணத் தால் கவிஞர்கள் அதிகமாகத் தோன்றவில்லை. சங்க காலத்தில் அர சர்களுடைய ஆதரவும் சமூக அங்கீகாரமும் பெண் கவிஞர்களுக்கு இருந்தது. தற்போது பெண் கவிஞர்கள் வக்கிரமாக பாலியல் ரீதியாக எழுதுகிறார்கள் என்கிறீர்கள். ஔவையாரும், வெள்ளி வீதியாரும் எழுதாததையா இவர்கள் எழுதுகிறார்கள்?!

**கருத்து வெளிப்பாட்டுக்கு இது தேவையாக இருக்கலாம். ஆனாலும் நாகரிகம் பேணப்படலாமில்லையா?**

ஆம். 'கன்றுமுண்ணாது கலத்தினும் படாது...' என்ற அன்றைய கவிதை, பெண்ணின் உறுப்பை நாகரிகமாகச் சொல்லியிருக்கிறது. பிற்காலத்

தில் வைதீகத் தாக்கத்தினால் பெண் மறுக்கப்பட்டும், அடக்கப்பட்டும் போர்க்களத்தில் கைது செய்யப்படுகிற, கொண்டி மகளிராகக் கொண்டு வரப்படுகிற ஒரு போகக் கருவியாக ஆக்கப்பட்டு வாழ்வு மறுக்கப் பட்டபோது, பெண் கல்வி வீழ்ந்து கவிதைகளும் வீழ்ந்து விட்டன என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

**இவற்றையெல்லாம் தாண்டி இன்று எழுதிக் கொண்டிருக்கிற பெண்களின் ஊக்கியாக என்ன இருக்கிறது?**

பிரெஞ்சுப் புரட்சி, தொழிற் புரட்சி, தகவல் தொழில் நுட்பம் - இம் மூன்றிற்கும்தான் பெண்கள் நன்றி தெரிவிக்க வேண்டும். உள்ளூர் போராட்டத்தால் பெண்கள் மாற்றம் பெற்றிருக்கிறார்கள் என்று தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இன்று கணினித்துறையில் கணிசமான பெண்கள் கவனச் சிதைவு இல்லாமல் பணியாற்றுகிறார்கள்.

கல்வி பெண்களுக்கு இது போன்ற பணிகளைக் கொடுத்திராவிட்டால், 40 விழுக்காட்டுப் பெண்கள் கவிஞர்களாக மட்டுமே தோன்றியிருப்பதற்கு வாய்ப்பிருந்திருக்கும்!

**கவிதை தொழிலாகவில்லை; வருமானம் பெறக்கூடிய கருவியாக இல்லை என்பது ஆண்களுக்கும் பொருந்தக் கூடியதே என்பதால் அவர்களும் கவிதைக்கு இரண்டாம் பட்சமான இடத்தையே வழங்குகிறார்கள். இந்த நிலை மாறுமா?**

கவிதையை வாழ்வியல் பொருளாக நாம் மாற்றி, கவிதைக்குரிய சந்தையை ஏற்படுத்தினால் பிரமாதமான கவிஞர்கள் தோன்றுவார்கள்.

**மேற்குலக நாடுகளில் இந்த நிலை எப்படி இருக்கிறது?**

அங்கெல்லாம் தனிக் கவிதை சந்தையாகவில்லை. நாவல் சந்தையாகிறது. அதிர்ச்சி இலக்கியம் சந்தையாகிறது. உலகம் முழுவதிலும் கவிதை தனது சந்தையை இழந்து விட; உரைநடை வந்து உட்கார்ந்து விட்டது. இதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மொழி தோன்றிய காலத்திலிருந்து கவிதைதான் இந்த உலகை ஆட்சி செய்து கொண்டிருந்தது. கவிதைக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுங்கள். உரைநடைப் பக்கம் வாருங்கள் என்று ஒரு குரல் மேற்கிலிருந்து கேட்டுக் கொண்டே இருக்கிறது. மறந்து விடாதீர்கள்!



**'கள்ளிக்காட்டு இதிகாசம்' போலொரு தரமான படைப்பை இனி உங்களால் தர முடியாது என்றொரு விமர்சனம் இருக்கிறதே!**

(சிரித்தார். ஆனாலும் அதில் கோபம் தெரிந்தது). 'கள்ளிக் காட்டு இதிகாசத்தை' எல்லோரும் ஜீரணித்து விட்டார்களா? 'கவிராஜன் கதை' எல்லோருக்கும் செரித்து விட்டதா? 'சிகரங்களை நோக்கி...', 'சிற்பியை விடச் செதுக்குகிறேன்' எத்தனை பேருக்குத் தெரியும்? 'இன்னொரு தேசிய கீதத்தை' மனப்பாடம் செய்யக் கூடிய இளைஞர்கள் எத்தனை பேர்? 'தண்ணீர் தேசம்' பற்றிய தகவல்களை அறிந்து கொண்டவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்?

முதலில் இருப்பது செரிக்கட்டும். அவனுக்குப் பசியில்லை. Pizza வாங்கித் தின்று கொண்டிருக்கின்றான். இருக்கின்ற படைப்புகளை உள்வாங்க நேர்ந்தால் அவனுக்கு வயிறே பத்தாது.

தமிழ் நாட்டில் உள்ள 6.24 கோடி தமிழர்கள் உட்பட உலகெங்கிலும் எட்டு கோடி தமிழர்கள் இருக்கிறார்கள் என்று கணக்குப்போட்டால், ஒரு கவிஞனுடைய படைப்பு எத்தனை இலட்சம் பிரதிகள் இருக்கவேண்டும்? இதுவரை எத்தனை விற்றுத் தீர்ந்திருக்கின்றன?! இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள். நான் நிறைய எழுதுகிறேன்.

**இதனால் அவநம்பிக்கை கொண்டிருக்கிறீர்களா?**

இல்லை. அடுத்த படைப்புக்காக நான் ஐந்து ஆண்டுகளாக ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். 'கள்ளிக்காட்டு இதிகாசத்துக்குப்' பிறகு ஐந்து ஆண்டுகளாகத் தினந்தோறும் இதற்காக மூன்று மணித்தியாலங்கள் வேலை செய்கிறேன். இந்த விமர்சனம் அல்லது அறைகூவல் உண்மையா பொய்யா என்பதை சோதித்துப் பார்த்து விடுவோம். (கருவாச்சி காவியம்தான் அப்போது அவர் ஆராய்ந்து எழுதிக் கொண்டிருந்த படைப்பு - தற்போது ஆனந்த விகடனில் தொடராக வந்து கொண்டிருக்கிறது)

**குறிப்பிட்டதொரு கால கட்டத்திற்குப் பின்பு கவிஞர்களின் கற்பனை ஊற்று, அல்லது படைப்பாளிகளின் ஆக்கத் திறன் வற்றிப் போய் விடுகிறது என்கிறார்களே!**

இதையெல்லாம் பாராட்டுவதற்கான உத்தியாக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர; கற்பனை வரண்டு போய் விட்டதென்றோ, களப்பணி தீர்ந்து விட்டது என்றோ பொருள் கொள்ளக் கூடாது.

**ஆக, இந்த விமர்சனத்தை நீங்கள் சவாலாகவா எடுத்துக் கொள்கிறீர்கள்?**

எதுவுமே சவாலல்ல. படைக்கிற போது உயிரும், உடம்பும், உணர்வும் கரைந்து கரைந்து படைக்கிறோம். சில வடிவம் பெறுகின்றன. சில வடிவப் பிழைகள் நேர்ந்து விடுகின்றன. ஒரே தாய்க்குப் பிறக்கிற; ஒரே கருவில் வளர்கிற பிள்ளைகள் வேறு வேறு வடிவத்தில்; வேறு வேறு குணாதிசயத்தில் உருவாகி விடுகின்றனவே! அப்படித்தான்.

**ஓர் இனத்துக்குரிய இலக்கியம் எப்போது ஜீவனோடு பிறக்கிறது?**

ஓர் இனம் போகத்தின் உச்சத்தில் இருக்கிற போதும், போரின் உச்சத்தில் இருக்கிறபோதும்தான் அந்த இனத்துக்குரிய இலக்கியம் ஜீவனோடு பிறக்கிறது. உண்மையை எத்தனை முறை சொன்னாலும் உண்மை ஒன்றுதான். உங்களுடைய பெயர் லதா என்பது மாறாதது மாதிரி! எல்லா இனமும் ஒவ்வொரு காலத்திலும் போரின் உச்சத்திலும், போகத்தின் உச்சத்திலும் இல்லாமல் இருந்திருக்க முடியாது. சங்க இலக்கியத்தில் 'வீரயுகப் பாடல்கள்' பற்றி கலாநிதி கைலாசபதி ஒப்பிலக்கிய நூலில் கூறியுள்ளார். அகப்பாட்டும் சரி, புறப்பாட்டும் சரி வீரயுகத்தில்தான் பிறக்க முடியும். இன்று பார்த்தால், ஈழத்தில்தான் சரியான கவிதைகள் பிறக்க வேண்டும். வியட்னாம் போர் பற்றிக் குறிப்பிடும் போது, 'வியட்னாம் போரே முடிந்து விடாதே! இன்னும் இங்கு சில பேர் கவிஞர்களாக வேண்டியிருக்கிறது' என்று வரி வடித்திருப்பார் கவிஞர் ஒருவர்.

**இலங்கை பற்றிய உங்களின் கனவு...**

நான் யாழ்ப்பாணம் வர வேண்டும். அந்தக் களத்தில் அமர வேண்டும். அதைத் தொட்டுப் பார்க்க வேண்டும். அங்கு யாகம் செய்த வீர



மறவர்களுக்கெல்லாம் அஞ்சலி செலுத்த வேண்டும். அந்த இடத்தில் நின்று என் உடம்பிலும் உணர்விலும் நினைவுகளைக் கலக்க வேண்டும் என்பதெல்லாம் என் நெடுங்காலக் கனவு! ஆனாலும் எங்களுடைய நிலை உங்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். யாழ்ப்பாணம் சுவிற்சர்லாந்துக்குப் பக்கத்தில் இருக்கிறது. தமிழ்நாடு தூரத்தில் இருக்கிறது. வவுனியாவுக்கு பிரான்ஸ் பக்கத்தில் இருக்கிறது; வேதாரணியம் தூரத்தில் இருக்கிறது. இது அரசியல் சமூக நெகிழ்வுகளால் வந்த இடைவெளியாக இருக்கலாம். அந்த இடைவெளி இருக்கக் கூடாது என்பது என் எண்ணம். ஆனால் இருக்கிறது என்பதுதான் யதார்த்தம்!

**சுனாமிக்குப் பின்பு ஈழத்திற்காக நீங்கள் ஆற்றியிருப்பது...**

இரண்டு மாதங்களுக்கு முன்பு 'வீழ மட்டோம்' என்றொரு ஒலிப் பேழையை சுவிற்சர்லாந்தில் வெளியிட்டிருக்கிறேன் சுனாமிக்காக நிதி திரட்டுவதற்காக இரண்டு நண்பர்கள் வந்திருந்தார்கள். கல்லாறு சதீஸ், புங்குடுதீவு சுரேஷ் - இவர்கள் இருவராலும் முன்னின்று வெளியிடப்பட்ட அந்த ஒலிப் பேழையில் ஈழ சுனாமி பற்றி ஏழு (07) பாடல்கள் எழுதியிருந்தேன்.

*17.07.2005*



# சோலைக்கிளி

ஈழத்தில் இலக்கியச் சிறகடிக்கிற சோலைக்கிளிக்கு; அவருடைய ஆற்றல் கண்டு ஆசிய நாடுகள் அடிக்கடி வியந்து போய்க் கொடுக்கிற விருதுகளையும், கௌரவங்களையும் ஏற்றுக் கொள்வதற்குப் பறந்தடிக்கத் தெரியவில்லை. அடக்கமாக இருக்கிறார் - ஆமை போல! (அசையாமலே ஆயிரம் முட்டைகளை இடுகிற ஆற்றலும், எதிர்ப்படுவது எதுவாக இருந்தாலும் அடுத்ததெனக்குத் தேவையில்லையென்றொதுங்கி/ ஒடுங்கிக் கொள்கிற அடக்கமும்/ அலட்சியமும் ஆமையின் இயல்பு).

மார்வாடிகள் போல மாறிவிட்ட இன்றைய பேனாக்காரர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும், சோலைக்கிளியின் பறப்பு தூரத்தில் தான் தெரிகிறது. தன்னைப் பெற்றெடுத்த கிராமத்தைச் சுற்றிப் பறந்து கொள்வதிலேயே நிறைந்து வாழ்பவர். 'நானும் ஒரு பூனை' - 1985, 'எட்டாவது நரகம்' - 1988(வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது), 'காகம் கலைத்த கனவு' - 1991(சுதந்திர இலக்கிய விழாப் பரிசு), 'ஆணிவேர் அறுந்த நான்' - 1993, 'பாம்பு நரம்பு மனிதன்' - 1995(சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது), 'பனியில் மொழியெழுதி' - 1996 (தேசிய சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது), 'என்ன செப்பங்கா நீ' - 2005 ஆகியவை சோலைக்கிளியின் பறப்பு ஆளுமையை வெளிப்படுத்திய படைப்புக்கள்.

இந்தியாவில், தமிழில் மட்டுமின்றி இன்னும் பல மொழிகளிலும் இவருடைய கவிதைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. மூன்றாம் உலக நாட்டுக் கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து வ.கீதா, எஸ்.வி. ராஜதுரை ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ள 'மண்ணும் சொல்லும்' என்ற தொகுதி சோலைக்கிளிக்காகவும் சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

தமிழவனால் கன்னடத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளிலும் சோலைக்கிளி கவிதைகள் கானம் பாடிக் கொண்டிருக்கின்றன. அந்த நூல் பெங்களூரில் வெளியிட்டு வைக்கப்பட்டது. விழாவில் கலந்து கொண்டு பேசிய தெலுங்கு மொழிப் பேராசிரியர் ஒருவர், 'இவருடைய கவிதைகளில் கற்றுக் கொள்ள நிறைய இருக்கிறது, அவற்றைத் தெலுங்குக் கவிஞர்களுக்கு பாடநூலாகச் சேர்த்துக் கொள்ள முடியும்' என்று பேசியிருந்தார்.

கடந்த வருடம் (2005) ஜப்பான் அரசாங்கத்தினால் சோலைக்கிளிக்கு 'வுங்கா' என்றொரு கலாசார விருது, அவருடைய கவிதைப் பணிக்காக வழங்கப்பட்டுள்ளது. இவ்வைபவம் சமீபத்தில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் நடந்து முடிந்தது.

**எழுதிப் பிழைக்க முடியுமா கவிஞரே?**

ஏன் முடியாது! குரங்கையும், பாம்பையும் ஆட்டிப் பிழைக்க முடியுமென்றால்; ஏன் எழுத்தை ஆண்டு பிழைக்க முடியாது! இனி இம்மாதிரியான கேள்விகளை என்னிடம் மாத்திரமல்ல வேறு எந்தவொரு எழுத்தாளனிடமும் நீங்கள் கேட்டு உங்கள் மூளையைக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

**சரி. 'பத்திக்கை' உங்களுடைய பழைய நினைவுகளின் புதிய பதிவுகளா? அல்லது பழைய பதிவுகளின் புதிய தொடரா?**

எந்த நினைவுகளின் எந்தப் பதிவுகள் என்றெல்லாம் எனக்குத் தெரியாது. என்னால் மறக்க முடியாத சில சுவடுகளை எனக்குத் தெரிந்த மொழியில் அள்ளி இறைக்கின்றேன். நீங்கள் குடித்தீர்களா? எப்படி இருக்கிறது? உங்களுக்கு எப்படி இருந்தாலும் எனக்கு எந்தக் கவலையும் இல்லை. உங்களையெல்லாம் நினைத்துக் கொண்டு நான் 'பத்திக்கையை' எழுதவில்லை. என்னை நினைத்துக் கொண்டே எழுதுகிறேன்.

**பத்திக்கையினூடாக நீங்கள் நவீனங்களை மறுப்பதாக ஒரு விமர்சனம் எழுந்துள்ளதே!**

அப்படியா! எவன் கண்ணில் அப்படிப்பட்டது? அந்த 'மாலைக் கண்ணனை' என்னிடம் அறிமுகப்படுத்த மாட்டீர்களா? எங்களூர்க் காகத்தைக் கூப்பிட்டு அவன் தலையில் எச்சமடிக்க வைக்கிறேன். அழகாக அது வழிந்தோடும். ரசிக்கலாம்.

**சோலைக்கிளி 'தூஷணம்' எழுதுகிறார் என்று உங்களுடைய புதிய வாசகர்கள் கூறுகிறார்கள். இலக்கியத்தில் 'தூஷணம்' பெறுகின்ற இடம் பற்றி அவர்களுக்கு விளக்குங்கள்.**

மனிதனே தூஷணத்தில் இருந்துதான் பிறந்தவன். அவனையும் தூஷணத்தையும் பிரித்தெடுக்க முடியாது. தேவைப்படுகின்ற இடங்களில் தூஷணத்தைப் பேசுவது; செந்தமிழைப் பேசுவது மாதிரித்தான். ஒருவரின் தோளைச் செல்லமாகத் தட்டி 'அட, வேஷா மகனே' என்று சொல்வது அன்பை ஒழுக வைக்கவில்லையா? அழகாகத்



தெரியவில்லையா! இடங்களைப் பொறுத்துத்தான் சொற்கள் தூஷணமாகவும், தூஷணமில்லாமலும் தலைகாட்டுகின்றன. படுக்கையறையில் 'அம்மணம்' அழகுதானே!

**உங்கள் மண்சார்ந்த மக்களே இழிவாகக் கருதுகின்ற சொற்களை நீங்கள் பயன்படுத்தும் போது, உங்கள் படைப்புக்கள் கீழ் நிலை இலக்கியமாக மாறிப் போகாதா?**

இல்லை. முதுமை பெற்று உயரும். ஒரு வீட்டிற்கு முற்றமும் உண்டு. கொல்லைப் புறமும் உண்டு. இரண்டும் சேர்ந்ததே வீடு. இது மாதிரித்தான் சொற்களிலும் அழகானதும் உண்டு. அழகற்றதும் உண்டு. ஒன்றைக் காட்டி ஒன்றை மறைத்துப் போலியாகப் படைக்க எனக்குத் தெரியாது. அதனால்தான் நான் மூத்திரத்தை மூத்திரம் என்றே எழுதுகிறேன் - 'பன்னீர்' என்று எழுதி நடிக்காமல். மணமும், நாற்றமும் இரண்டறக் கலந்ததுதான் காற்று. அது காவித் திரியும் போது மணத்தை மட்டும் நமக்குப் பங்கு வைத்து இழிப்பதில்லை.

**'வேசி' என்கிற பதம் பத்திரிகையின் இலக்கியப் பக்கத்தில் இடம் பெறலாமா? கூடாதா?**

இடம்பெறலாமே! ஏன் இடம் பெறக் கூடாது? அந்தச் சொல்லுக்குக் கடதாசியுடன் கோபமா? இல்லையே! அதுவும் நமது மக்கள் பேசும் வார்த்தைதான். நமது பத்திரிகைகள் என்ன பத்தினியாமோ? அந்தச் சொல்லைப் போடுவது கூடாது என்றால்; அப்படிப்பட்ட பெண்களின் எத்தனை படங்களை இதுவரை பிரசுரித்து ரசிக்கவில்லையா! எண்ணிச் சொல்லவா? கணக்கு கண்டு பிடிப்பது கடினம். நாளையும் ஆடை உரிந்த பெண்களின் படங்கள் வரும்.

**மக்களுடன் மிக நெருக்கமாகத் தொடர்பு கொள்ளக் கூடிய சேவையில் இருக்கின்ற நீங்கள்; மிருகங்களையும், செருப்புகளையும் உங்களுடைய பாத்திரமாக்குகிறீர்களே...**

ஏன் மக்களையும், மிருகங்களையும், செருப்புகளையும் பிரித்துப் பார்க்கிறீர்கள்? மக்கள்தான் மிருகங்கள். மிருகங்கள்தான் மக்கள். ஒரு படைப்பாளியல்லவா நான்! பிரித்துப் பார்க்கலாமா? பிரித்துப் பார்த்துப் பிரித்துப் பார்த்தே சீரழிந்து போனவர்கள் நாங்கள். இனியாவது நமது பாதங்களைத் தாங்கிய செருப்புகளை எடுத்து அலுமாரிகளில் அடுக்குவோம்.

**நிறைய எள்ளலும், அலட்சியமும் காட்டி எழுதுகிற உங்களுடைய நடை, பிறரிலிருந்து வேறுபடுவதற்கான முயற்சியா அல்லது இது தான் இயல்பாக வந்ததா?**

முயற்சியெடுத்து வேண்டுமானால் நீந்தலாம். எழுத முடியாது. ஒரு கடிதம் எழுதுவதற்குக் கூடக் கவித்துவம் இயல்பாக இருக்க வேண்டு மென்று நினைப்பவன் நான். கவித்துவமில்லாத காதல் கடிதங்கள் இந்த உலகத்தில் எழுதப்பட்டால், பலகாதல்கள் செத்திருக்கும். காலக் கிரமத்தில் தன் காதலனை விட; அவன் எழுதுகின்ற கடிதங்களை நேசிக்கிற காதலிகளை நான் கண்டிருக்கிறேன். இது முயற்சியெடுத்து வருவதில்லை. மூழ்கி எடுத்து வழிவது. எங்கு மூழ்கினேன், எதில் மூழ்கினேன் என்பதெல்லாம் என் மூலத்தைப் பிரித்துப் பார்த்து அறியவேண்டியது.

**ஈழத்து இலக்கிய உலகினைத் தெரிந்து கொள்ள யார் யாரைத் தொடர்ந்து படிக்கலாம் என்றொரு கேள்வியைத் தமிழ் நாட்டின் சமகாலப் படைப்பாளிகள் கேட்கிறார்கள்.**

அவர்களென்ன குந்தினால் கழுவத் தெரியாத குழந்தைகளா? நான் வாழைப்பழத்தை உரித்துத் தீத்த! தேடிப் பிடித்து உண்ணச் சொல்லுங்கள். உண்டால் வாந்தி வரும். பண்டமும் விளங்கும். மனதுக்குச் சிறகு கட்டும் மருந்துகளும் கிடைத்துவிடும்.

**இங்கே எழுதிக் கொண்டிருப்பவர்களின் படைப்புக்கள் எதனை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன?**

சில சொர்க்கத்துக்குப் போகின்றன. பல மனநோய் மருத்துவ மனைகளுக்குச் செல்கின்றன. சில கவனிப்பாரற்ற காகங்கள் போல அலைகின்றன. இன்னும் சில புத்தகங்களினூடாகக் குரைக்கின்றன. வாசகனின் கையில் கண்ணாடி இருப்பதற்குப் பதிலாக, இப்போது கற்கள்தான் பெருமளவு தேவைப்படுகின்றன.

**உங்களுடைய ஆரம்ப கால எழுத்துக்களுக்கு ஆதரவு தந்த பத்திரிகையோ அல்லது சஞ்சிகையோ பற்றி...**

மல்லிகைக்குத்தான் நான் ஆரம்பத்தில் எழுதினேன். என்னுடைய எழுத்துக்களைச் சிதைக்காமல் வெளியிட்டவர் டொமினிக் ஜீவா.



ஆக, மல்லிகையிலிருந்து துளிர்க்கத் தொடங்கியவன் நான் என்பதை மகிழ்ச்சியோடும், என்றும் நான் நன்றி பாராட்ட வேண்டியவர் அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவா என்பதையும் குறிப்பிடுவதில் நிறைவு கொள்கிறேன்.

**நம்மிடையே நல்ல திறனாய்வாளரோ, விமர்சகரோ தற்போது இல்லை என்பது குறையாகத் தோன்றவில்லையா?**

தோன்றுகிறதுதான். ஓர் ஆண்மையற்றவனைத் தலைவனாகக் கொண்ட குடும்பம் ஒன்றின் நிலைதான், நமது தமிழ் இலக்கியத்தின் இன்றைய நிலையும்.

**இத்துறைக்கு வருவதற்கு அஞ்சுகிறார்களா? அல்லது...**

அது தெரியாது. நேர்மையும் விஷயமும் உள்ள ஒருவன் இந்தத் துறையில் அமோகமாக வலம் வருவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. இது பொதுவான பதில். மற்றும்படிக்கு; 'விமர்சகர்கள்', 'திறனாய்வாளர்கள்' என்று பச்சை குத்திக் கொண்டவர்களை நான் ஒரு போதும் நம்புவதில்லை. என்னுடைய மனதை மட்டும் நம்புகிற நான் அது சொல்லும் சரியையும், பிழையையும், தரத்தையும், தரமின்மையையும்தான் முதலாவதாக நம்புகிறேன். இரண்டாவதாக எனது படைப்பைப் படிப்பவர்களின் மேலான அபிப்பிராயங்களுக்கு மதிப்பளிக்கிறேன்.

**எழுத்து மத்தியதர வர்க்கத்தின் ஆடம்பரம் என்றொரு கருத்து இருக்கிறதே! சரியா?**

என்ட செல்லான அல்லாவேய்! இப்படியும் ஒரு கருத்து இருக்கிறதா? நான் இப்போதுதானே இதைக் கேள்விப்படுகிறேன். நான் இது வரைக்கும் 'லக்ஸ்' என்கிற மணக்கட்டிதான் அவர்களின் ஆடம்பரப் பொருட்களில் ஒன்று என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

**பேனா வலிமை மிக்கது; புரட்சி செய்யக் கூடியது என்பதெல்லாம் கூடப் பொய் என்கிறேன் நான்.**

குறைந்தது அது காதலாவது செய்கிறதே! சில எழுத்தாளர்களிடம் இதைப் பற்றிக் கேட்காமல், அவர்களின் மனைவிமார்களிடம் வினவினால் எழுத்து என்னவெல்லாம் செய்திருக்கிறது என்ற பல சுவாரஸ்யமான கதைகள் உங்களுக்குக் கிட்டும்.

**தமிழகத்திலுள்ள அநேகமான படைப்பாளிகளுக்கு உங்களுடைய எழுத்துக்கள் மீது தீவிர நாட்டம் இருப்பதை அறிவீர்களா?**

ஆம். அடுத்த நிமிடமே அதை மறந்து விடுகிறேன்.

**ஏன்?**

எனது ஒளிவட்டத்தை, என்னை வீழ்த்த வந்திருக்கும் ஒரு பெரும் வலையாகத்தான் நான் நினைக்கிறேன். அதில் மயங்கிச் சிக்கிச் சீரழிய எனக்கு விருப்பமில்லை. என் தொழில் படைப்பது மட்டும்தான். எல்லாப் புகழும் மேலுள்ள ஒருவனுக்கே. என் ஆறு ஓடிக் கொண்டிருக்கும் போது தன் கரையில் முளைத்து எழும்புகின்ற புற்களைத் திரும்பிப் பார்த்துத் திருப்தியுற முயலக் கூடாது. அப்படிச் செய்தால் அது தனது பயணத்தைத் தொடர்வதில் சிக்கல்கள் ஏற்படும். சிலாவிப் போகும்.

**மொழியொன்று இனம் வேறென்று உருவாகி வருகின்ற இலக்கியங்கள் குறித்து...**

பொதுவாகக் கவிஞனின் மொழி இந்த உலகத்திலுள்ள சராசரி மக்களால் பேசப்படாத பெரிய மர்ம மொழியாகும். ஒரு கவிஞனுக்கு ஆயிரக் கணக்கான மொழிகள் தேவைப்படும். புல்லோடு அவன் பேசுவதற்கென்றே தனி மொழி இருக்கிறது. பூவோடு அவன் விளையாட வேறு மொழியொன்று தேவைப்படுகின்றது. இப்படி ஆயிரம் மொழிகள் அறிந்த ஒருவனால்தான் நல்ல கவிஞனாக இருக்க முடியும். இந்த ஆங்கிலமும், தமிழும், சிங்களமும், கன்னடமும் பிறருக்கு அதை வார்த்துக் காட்டப் பாவிக்கும் ஊடகங்கள்தான்.

ஒரு சராசரி மனிதனாக நான் இங்கு பேசினால், எனது தாய் மொழியாம் தமிழ் மீது எனக்கு அதிகம் பற்று உண்டு. எந்தப் பிரிவினைகளிலும் இந்தக் குருவிக்கு எப்போதும் உடன்பாடில்லை. கொஞ்சக் கால வாழ்க்கைக்குள் நான் கூடு கட்டி வாழ விரும்பவில்லை.

**இலக்கியத்திற்கான இலக்கணம் என்ன? ஒரு இலக்கியகாரனுக்கான குறைந்த பட்சத் தகுதி என்ன?**

'இலக்கியத்துக்கு நிரந்தர இலக்கணம் கிடையாது, அது காலத்துக்குக் காலம் மாறுபடும் என்றெல்லாம் பேசிக் கொள்கிறார்கள். என்னைப்



பொறுத்தவரை இந்த இலக்கண விடயங்களிலெல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. ஓர் ஆற்றை இப்படித்தான் ஓடு என்று யாரும் சொல்ல முடியாது. நான் எனது மனம் போன போக்கில் பாய்ந்து கொண்டிருக்கிறேன். யாராவது அதற்கும் ஓர் இலக்கணத்தை வகுக்கக் கூடும். நம்மிடம் வேலை இல்லாது திண்டாடுபவர்கள் அதிகம்தானே! இலக்கியவாதிக்கான குறைந்தபட்சத் தகுதி என்றால், அவன் ஒரு பாமரனாக இருப்பதுதான்!

**ஓ! அப்படியென்றால் இலக்கியம் செய்ய இலக்கணம் தேவையில்லையோ!**

தேவையில்லை. குழல் இல்லாமல் பிட்டு அவிக்க முடியாதா?

**நெடியதொரு போர்க்காலத்தைச் சந்தித்த எம்மவர்கள், போராட்டத்தின் உக்கிரங்களைக் கவிதையிலோ அல்லது கவிதை என்று நினைத்து எழுதியவற்றிலோ காட்டிய அளவுக்கு நாவல்களில் காட்டவில்லையே! என்ன காரணம்?**

நாவல்களைத் தூக்கிச் சுமப்பது சற்றுப் பாரமாக இருக்கும் என்று நினைத்திருப்பார்கள். அல்லது கவிதை மிக இலகுவாக எழுதக் கூடியது என்று கருதியிருப்பார்கள். எதிலாவது நம்மவர்கள் வளரட்டும். உலகில் உள்ள மனிதர்களின் ஆற்றல்கள் இன்னுமின்னும் மேலோங்கட்டும்.

**நம் நாட்டுக் கவிதைகளுக்கும், தமிழ் நாட்டுக் கவிதைகளுக்கும் இடையில் நீங்கள் வேறுபாடு காண்கிறீர்களா?**

இப்படிப் பிரித்து நான் ஒரு போதும் யோசிப்பதில்லை. உலகில் எழுதப்படுகின்ற கவிதைகள் அனைத்தும் நமது கவிதைகள்தான். அவற்றின் பலம், பலவீனங்கள் என்பவற்றை வேண்டுமானால் யோசிக்கலாம்.

**'ஒரு படைப்பின் பாதிப்பிலிருந்து வேறொரு படைப்பை உருவாக்குதல்' குறித்து உங்கள் பார்வை...**

எனக்கு இவையெல்லாம் தெரியாத விடயங்கள். நான் பாலும், தேனும் ஓடிய பச்சை மண்ணொன்றில் முளைத்த மனிதன். எனது கிராமத்துக் குயிலுக்கு எப்படிப் பாட்டு வந்ததோ அப்படித்தான் எனக்கும் பொத்துக் கொண்டு கவிதை வந்தது.

**பாதிப்புகளையெல்லாம் பதிவு செய்யக் கூடிய சாத்தியம் இல்லாது போகும்போது ஓர் எழுத்தாளனுக்குள் என்ன நிகழ்கிறது?**

எனக்குள்- பாறைகள் முட்டி மோதுகின்றன. எங்கிருந்தோ ஒரு கோழிக்குஞ்சு எப்போதோ வெளிவர வேண்டுமென்று நினைத்து என் இதயத்தைக் கொத்திக் காயப்படுத்துகிறது. சட்டி பானையில் சத்தம் கேட்பது போல சதாவும் அது கேட்டுக் கொண்டே இருக்கிறது.

**சுனாமிக்குப் பின்னர் நீங்கள் பதிவு செய்து நிறைவு கொண்டது...**

தொழில் ரீதியாகப் பல அறிக்கைகள், அதை விட மேலான தொழில் ரீதியாகச் சில கவிதைகள்.

**நீங்கள், குறிப்பிட்ட மண்ணின் வட்டார மொழி சார்ந்து எழுதுபவர். அதற்குள் எதையெல்லாம் பற்றிச் சிந்திக்கலாம் என்று கருது கிறீர்கள்?**

உலகத்திற்கு அப்பாலும் சிந்திக்கலாம். கிண்டக் கிண்டக் கிழங்கு நிறைந்தது எனது மண். நான் ஒன்றைக் கிண்ட ஒன்பது தானாக வருகிறது. இந்த உலகம் இருக்கும் வரைக்கும் யாரும் கவிதை படைக்குமளவு எனது மண்ணுக்குள் ஊற்று உண்டு. அதன் சாறு ஒரு நாளும் வற்றக் கூடியது அல்ல. தொடர்ந்து வழியக் கூடியதே!

**இன்றைய பெண்களின் இயலுமைகள் குறித்து ஏதாவது மதிப்பீ டுகள் வைத்திருக்கிறீர்களா?**

பெண்கள் மதிப்பிற்குரியவர்கள், அவர்கள் அளவில் அவர்கள் என்றும் பூரணமானவர்கள். அவர்களின் பூரணத்துவத்தை நாங்கள் கொச்சைப் படுத்தக்கூடாது.

**வெகுஜனப் பத்திரிகைகள் மூலம் இலக்கியப் பதிவுகளைச் செய்ய முடியுமா?**

ஏன் முடியாது? நன்றாகவே முடியும். அவைகள் மனம் வைத்தால், நமது சூழலில் நல்லதொரு நிலையை உருவாக்கிக் காட்டலாம். இப்போது அந்த நிலை சற்று ஓங்கித்தான் இருக்கின்றது. சந்தோஷப்பட வேண்டிய விடயம்தான்.

**இரண்டு, மூன்று தசாப்த கால அனுபவம் உண்டென்று இன்றைய ஊடகங்களின், பெரிய கதிரைகளில் பொம்மைகள்தான்**



**அமர்ந்திருக்கிறார்கள் என்பதை வாசகனும், ரசிகனும் இன்னும் புரிந்து கொள்ளவில்லையே!**

உலகமே இன்று பொம்மைகளின் ஆட்சியில்தான் அவமானப்பட்டுக் கொண்டிருக்கிறது. மனிதன் பல இடங்களில் மறைந்து விட்டான். பொம்மைகள், பொம்மைகள் எங்கும் பொம்மைகள். 'கவிஞனை' 'கவிஞ்சன்' என்பவன், 'சரி' யை 'செரி' என்பவன், 'வைத்திருக்கிறார்' என்பதை 'வெய்த்திருக்கிறார்' என்பவனெல்லாம் இன்று அறிவிப்பாளன். இவனையெல்லாம் தூக்கிப் பிடிப்பவர்கள் காத்திரமான ரசிகர்களல்ல; கோதுகள். அவர்களைக் 'கோதுகளின் ராஜாக்கள்' என்று சொல்வதே நல்ல பொருத்தம்.

**இந்திய தமிழ் சினிமாவில் நீங்கள் ரசித்த அல்லது பார்க்கக்கூடிய படங்கள் என்று...**

அன்றும் இன்றும் மலையாள மொழியைப் பின்னணியாகக் கொண்டவர்கள் எடுத்த சில திரைப்படங்களை ரசிக்கிறேன். இவர்களின் நகைச்சுவைப் படங்கள் கூடக் கலாபூர்வமானவை. ஆனால் கோமாளிகள் தமிழில்தான் அதிகம். அதில் தமிழ் வளர்ந்துதான் இருக்கிறது. ஆனாலும், தற்போது ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன் போன்றவர்கள் தமிழ் சினிமாவுக்கு வசனம் எழுத வந்தமையானது ஆரோக்கியமான அறிகுறியென்று நினைக்கிறேன்.

**ஆரோக்கியமானவர் என்று நீங்கள் குறிப்பிடுகின்ற எஸ்.ராம கிருஷ்ணன் 'பாபா' திரைப்படத்தில் தன்னை நிரூபிக்க முடியாமல் போய் விட்டாரே!**

சினிமா சக்கரத்துக்குள் சிக்கியிருப்பார். 'கஸ்தூரிமான்', 'சண்டக் கோழி' போன்றவற்றில் ஜெயமோகன் நிமிர்ந்திருக்கிறார். எப்படி இருந்தாலும் தமிழ் சினிமா மெல்ல மெல்ல நல்ல தலை முறையினரிடம் வரத் தொடங்கியிருக்கிறது.

**விருதுகள் பற்றி 'இருப்பில்' மிகவும் காரசாரமாக விமர்சித்து வந்தவர் நீங்கள். விருதுகள் உங்களுக்குக் கிடைத்த பிறகு ஏன் மௌனித்து விட்டீர்கள்?**

எனக்கு விருதுகள் பற்றி எந்தக் கவலையும் இல்லை. ஆதங்கங்களும் இல்லை. விருதுகளை நான் ஒருபோதும் எதிர்பார்த்ததுமில்லை. எனது 'இருப்பு' சஞ்சிகையில் நான் எழுதியிருப்பதெல்லாம் தகுதியானவர்களுக்குத் தகுதியான விருதுகள் வழங்கப்பட வேண்டுமென்று மட்டும்தான்.

**அப்படியென்றால், சாகித்திய விருது உங்களுக்குக் கிடைத்தவுடன், அது தகுதியானவர்களுக்குத்தான் தொடர்ந்தும் வழங்கப்படுகிறது என்கிற முடிவுக்கு வந்து விட்டீர்களா?**

இல்லை. சிலரின் ஆலோசனைப்படி, தவறானவர்கள் பெற்றுக் கொள்வதைத் தடுப்பதற்காகப் பெறவேண்டி ஏற்பட்டது. அவ்வளவுதான். அந்த விருதினைக் கொஞ்சம் கண்ணியப்படுத்தவும் வேண்டுமல்லவா! நமக்கு இருக்கின்ற ஒரே உயரிய விருது அதுதானே!

***சரி. தகுதியற்று விருது பெற்ற அந்தப் போலித் தகைமையாளர்கள் பற்றி...***

பலர். ஒருவரா? இருவரா?

**தினக்குரல் பத்திரிகையில் எஸ். முத்துமீரான் என்ற ஒருவர் வழங்கியிருந்த பேட்டியொன்றில் உங்களையும், உங்களுடைய படைப்புகளையும் கீழ்நிலையானவை என்றும், உங்கள் எழுத்துக்கள் கவிதைகளே இல்லை என்றும் மிக மோசமாகச் சாடியிருந்தாரே! என்ன பதில் வைத்திருக்கிறீர்கள்?**

எனது பிரதேசத்தில் பல காத்திரமான படைப்பாளிகள் சீவிக்கிறார்கள். எஸ்.முத்துமீரான் என்ற படைப்பாளியை நான் இதுவரையில் கேள்விப்பட்டதில்லை. யாரோ ஒரு ஆரம்ப நிலை எழுத்தாளன் அப்படிக் கூறியிருப்பான். அதை விட்டு விடுங்கள். அனுபவமும், எழுத்து முதிர்ச்சியும், ஆற்றலும் அதிகரிக்கும்போது உண்மை விளங்கி விடும். சிறுபிள்ளைகள் பற்றியெல்லாம் இந்தப் பேட்டியில் ஏன் நுழைக்கிறீர்கள்?

**பல்வேறு படைப்பாளிகளுக்குப் பிடித்த கவிஞராகவும், அறியப்பட்ட ஒருவராகவும் இருக்கின்றீர்களானாலும் கூட; நீங்கள் வாழ்கின்ற மண்ணில்; குறிப்பாக உங்களுடைய தொழில் அலுவலர்களிடையே 'சோலைக்கிளி' யார் என்று அறியப்படாமலும் இருக்கிறீர்களே!**



இது எனக்கு மட்டும் நேர்ந்த விடயமல்ல. உலகில் பேசப்பட்ட எல்லாப் படைப்பாளிகளுக்கும் இது நிகழ்ந்திருக்கிறது. ஆம். 'வைக்கம் முகம்மது பசீர்', 'தகழி', 'பாரதி' போன்ற அனைவருக்கும் இது ஏற்பட்டிருக்கிறது. வைக்கம் முகம்மது பசீரைப் பக்கத்து வீட்டுக்காரருக்கே தெரியாமல் இருந்திருக்கிறது. 'தகழி' பெற்ற உயர் விருது ஒன்று பற்றி அவரின் மகளுக்கே தெரிந்திருக்கவில்லை.

இது ஆமையைப் போன்று தன்னை அடக்கிக் கொண்டு வாழுகின்ற எல்லா நல்ல படைப்பாளிகளுக்கும் உள்ள நிலைமைதான். அதே நேரம், உலகிற்கெல்லாம் தெரிந்தவர்களும் அவர்கள்தான். என்ன செய்வது? பூமியில் பாதி இருட்டு. பாதி பிரகாசம். அது ஒரு பந்து போன்றது என்றுதானே சொல்கிறார்கள் இன்னும்!

**இனி உங்கள் பூர்வீகம் பற்றியும் இன்றைய வாழ்க்கை நிலை பற்றியும் சொல்லுங்கள்?**

நான் கல்முனை என்ற ஊரில் பிறந்தவன். இப்போது இது மாநகரம். இருந்தாலும் எங்கள் கிராமியம் இன்னும் அழியவில்லை. எங்கள் ஊர்க் குயில் இப்போதும் கிளைகளில் சொண்டு தீட்டித்தான் பாடுகிறது. தன் குரலை ஒலிப்பதிவு செய்து கொண்டு வந்து மரத்தின் கிளைகளில் வைத்துப் போட்டு விட்டு, அது பாடுவதைப் போல் இன்னும் பாசாங்கு காட்டவில்லை. எனக்கு இரண்டு பிள்ளைகள். இருவரும் ஆண்கள். நல்ல கலை ஆர்வம் உள்ளவர்கள். ஒவ்வொருவனும் இரண்டு மூன்று திருமணங்கள் புரிந்து விடுவானோ என்றெனக்குப் பயமாகவும் இருக்கிறது. மனைவி, நான் எழுதும்போது தூங்குவது எனக்கு மிகவும் வசதியாக வாய்த்திருக்கிறது. நான் அநேகமாக நள்ளிரவில் விழித்திருந்துதான் எழுதுவதுண்டு.

எனது ஆரம்பப் பாடசாலை, நான் வாழ்கின்ற இடத்திற்குப் பக்கத்தில்தான் இருக்கிறது. அது எத்தனையோ நபர்களை வளர்த்தெடுத்த ஒன்று. இன்று நன்றாகவே தேய்ந்து விட்டது. தியாக மனப்பான்மையற்ற ஆசிரியர்களும் இவர்களைக் கட்டிப் போட்டுக் கடமையாற்ற வைக்கத் தெரியாத கல்வி நிர்வாகமும்தான் இதற்குக் காரணம். இந்த 'அல் - அஷ்கர்' வித்தியாலயத்தை மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டு வருவதையிட்டு தீவிரமாக உழைத்து வருகிறோம்.

நான் கட்டிக் கொண்டிருக்கின்ற இல்லம் இன்னும் பூரணத்துவம் அடையவில்லை. இன்னும் வேலை இருக்கிறது. மண்ணுக்கும், கல்லுக்கும் சரியான விலை! குளவி கூடு கட்ட ஒரு செலவும் இல்லை பார்த்தீர்களா! வாழ்க்கை அங்குதான் இருக்கிறது.

**இறுதியாக ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?**

இந்தப் பேட்டியை எடுத்ததற்காக உங்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்.

*26.02.2006*





சுஜாதா

எழுத்தின் வகையறாக்களையெல்லாம் தன்னுடைய எழுதுகோலுக்குப் பழக்கி படைப்புலகின் தெருக்களில் இயல்பாகப் பயணம் செய்கிற புதினம் சுஜாதா! இயற்பெயர் ரங்கராஜன். அறுபதுகளின் ஆரம்பத்தில் எழுத வந்தவர். எழுபது வயது தாண்டியும் இளைஞர்களுக்குச் செரிமானமாகிற நடைமுறை எழுத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிற முன்னிலை எழுத்தாளர். விண்வெளி விஞ்ஞானம், பொறியியல், கணினியுடன் இன்னும் பல துறைகளை நன்கறிந்தவர். இவை சார்ந்த புத்திகளையெல்லாம் தன்னுடைய எழுத்துக்களில் புகுத்தி வாசகனுக்குப் புதிய உலகம் காட்டுகிற போக்கு சுஜாதாவால் மட்டுமே முடிந்த இயலுமை!

80 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய நாவல்கள், 150 இற்கு மேல் சிறுகதைகள், 10 வரையிலான விஞ்ஞானக் கட்டுரை நூல்கள், பல நாடகங்கள், ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள் என இவரால் படைக்கப்பட்ட எதுவுமே வாசகர்களை வகைப்படுத்திப் பிரிந்து நின்றதில்லை.

'கணேஸ் - வஸந்த்', 'குருப்ரசாத்தின் கடைசித் தினங்கள்', 'இரயில் புன்னகை', 'மேற்கே ஒரு குற்றம்', 'நிர்வாண நகரம்', 'ஸ்ரீ ரங்கத்து தேவதைகள்', 'பொது மரத்துப் புது முகங்கள்', 'வசந்தகாலக் குற்றங்கள்' ஆகிய படைப்புக்கள்

இவருடைய ஆளுமையைத் தமிழுலகெங்கிலும் பறைசாற்றி அனைவரையும் வசீகரித்துக் கொண்டவை. தமிழ் நாட்டின் தினசரி, வார, மாத இதழ்கள் சுஜாதாவுக்காகப் பக்கங்களை ஒதுக்கிக் கோரிய போது எதற்கும் மறுக்காமல் எல்லாம் எழுதினார். கணையாழியின் கடைசிப் பக்கங்கள், 'கற்றதும், பெற்றதும்', 'ஏன்? எதற்கு? எப்படி?' என்பன அவற்றுள் சில.

எழுத முடிந்தவன், எழுதாமல் இருக்க நேரும் போது ஏற்படுகிற அவஸ்தையை சுஜாதா இன்னமும் உணரவில்லை. நவீன வருகைகள் எதுவானாலும், அது பற்றிக் காத்திருந்து எழுதுகிற புதிய தெம்பு, அவருடைய முதுமையை நிரந்தரமாகவே விரட்டி விட்டது.

2004 இல் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட 'மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம்' (Electronic Vote Machine) இவருடைய பொறியியல் புத்தி கண்ட புதிய வடிவம். இதன் பதிப்புரிமை பெறுவதற்குப் பறந்து வந்த நாடுகளில் அமெரிக்காவும் அடக்கம். இந்தியாவின் தற்போதைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுடன், ஸ்ரீ ரங்கத்தின் சென். ஜோசப் கல்லூரியில் சேர்ந்து பயின்றவர். மறைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் நல்ல நட்போடு இருந்திருக்கிறார். ஆனாலும் அரசியலின் பக்கம் ஒரு போதும் இவர் திரும்பியதே இல்லை.

சினிமாவுலகினைக் கனவுத் தொழிற்சாலையென்று மிகச் சரியாக இனங்கண்டவர். வெற்றி பெற்ற பல திரைப்படங்களுக்குக் கதையும், திரைக்கதையும் வசனமும் எழுதியிருக்கிறார்.



'நினைத்தாலே இனிக்கும்', 'பிரியா', 'விக்ரம்', 'கரையெல்லாம் செண்பகப் பூ', 'இந்தியன்', 'நாடோடித் தென்றல்',' கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்', 'முதல்வன்', 'போய்ஸ்', 'அந்நியன்', 'தசாவதாரம்', 'சரவணா', 'உள்ளம் கேட்குமே', 'சிவாஜி' (2006), 'ஆய்த எழுத்து', 'கன்னத்தில் முத்தமிட்டால்', 'கண்ணெதிரே தோன்றினாள்', 'ரோஜா', 'செல்லமே' ஆகிய திரைப்படங்களில் இவருடைய எழுத்தாற்றல் மாறுபட்ட கோணங்களில் மக்கள் மனங்களுக்குப் பிடிக்கும்படி பதிவாகி வெற்றி பெற்றிருக்கிறது.

இவற்றுக்காக அடிக்கடி விருதுகள் வாங்குவார். ஆனாலும், 1993 இல் இந்திய தேசிய விஞ்ஞான தொழில் நுட்ப சபையினால் வழங்கப்பட்ட விருது குறித்தே அவருக்குப் பெரு நிறைவு இருக்கிறது. நுங்கம்பாக்கத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் இடம்பெற்ற நேர்காணல் இது!

**கல்லூரி மாணவனுக்குப் பின்னரும், எழுத்தாளருக்கு முன்னரும் ரங்கராஜன் என்ன செய்து கொண்டிருந்தார்?**

வேலை தேடிக் கொண்டிருந்தார்.

**உங்களுடைய கல்வியின் இலக்கு - பொறியியலாளர் என்கிற பதவி. ஆனால் எழுத்துலகில் எவ்வாறு ஆழ்ந்து போனீர்கள்?**

எழுத விழைபவனை எவராலும், எதனாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பது ஒன்று. என்னுடைய குடும்பம் இலக்கியத்தின் மீது தீராத ஆர்வம் கொண்டிருந்தது இரண்டாவது. மூன்றாவது, எனக்குக் கற்பித்த ஆசிரியர்களின் அசாத்திய திறமை என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது.

**பலதரப்பட்ட எழுத்துக்களைக் கற்று, அவற்றின் பாதிப்புகள் இல்லாமல் எழுத வேண்டும் என்பது எழுத்துலகம் எதிர்பார்க்கின்ற நியதி! இவ்விரண்டு விடயங்களும் உங்களுக்குள் எவ்வாறு நிகழ்ந்தன?**

நான் பி.எஸ்.சி படித்த போது ஆங்கிலச் சிறுகதைகள் துணைப்பாடமாக இருந்தது. அவற்றைக் கற்றபோது ஏற்பட்ட சுவாரஸ்யத்தால், அந்தச் சிறுகதை ஆசிரியர்களின் பிற தொகுப்புகளையும் தேடிப் படித்தேன். இதனால் நான் எழுத ஆரம்பித்த போது என்னுடைய எழுத்துக்களில் மேற்கத்தைய பாதிப்புகள் ஏற்பட்டதைத் தவிர்க்க முடியவில்லை.

**நாங்களும் தேடிப் படிக்க வேண்டியிருக்கிற; நீங்கள் படித்த மேற்கத்தைய எழுத்தாளர்கள் யார்?**

ஜேம்ஸ் ஜோய்ஸ், டபிள்யூ டபிள்யூ ஜேக்கப்ஸ், சாம்ரசட் மாம், லோரன்ஸ் மற்றும் அமெரிக்க எழுத்தாளர்-ஜோன் அப்டைக் போன்றவர்களை முக்கியமாகக் குறிப்பிடலாம். ஆனால் என்னை மிக அதிகமாகப் பாதித்தவர்கள் விஞ்ஞான புனைகதை எழுத்தாளர்கள்தான்!

**இந்திய எழுத்தாளர்களில்...**

புதுமைப் பித்தன், கு.ப.ரா., லா.ச.ரா., தி.ஜானகிராமன், மௌனி போன்றவர்களுடைய நூல்கள் வீட்டிலேயே கிடைத்தன. எனது அண்ணனின் கையில் இவர்களில் யாராவது ஒருவர் எப்போதும் இருப்பார். விரும்பித்தான் படித்தேன். ஆனாலும் இவர்களில் யாரும் என்னைப் பாதிக்கவில்லை.



**எள்ளல் கலந்த உங்களுடைய எழுத்துக்கள்...**

அது எனக்குரிய இயல்பான நடைதான். வாசகனுடைய ரசிப்புத் திறனுக்கு இது பெருங் காரணமாக அமைகிறது என்று நினைக்கிறேன்.

**எழுத்துலகில் நுழைந்தவுடன் ஏன் ரங்கராஜனுக்குத் திரையிட்டு சுஜாதாவாக வெளிவந்தீர்கள்?**

இது திரையல்ல; தேவை என்றாகியது. சொந்தப் பெயரில் ஆரம்பத்தில் குமுதத்துக்கு எழுதிக் கொண்டிருந்தேன். அப்போது ரா.கி. ரங்கராஜனும் எழுதினார். இந்தப் பெயர்க் குழப்பத்தை நீக்குவதற்காக என்னுடைய மனைவியின் பெயரை (சுஜாதா) எனதாக வரித்துக் கொண்டேன்.

**உங்களுடைய ஆரம்ப எழுத்துக்களுக்கு இருந்த வரவேற்பு...!**

குமுதத்துக்கு நான் எழுதிய சில கதைகள் திரும்பியும் வந்தன. எல்லாவற்றையும் பிரசுரித்திருந்தார்களானால் எனக்கு விஞ்ஞான ரீதியில் எழுதத் தோன்றியிருக்காது. என்னுடைய விஞ்ஞான ரீதியிலான சிறுகதைகளை வாசகர்கள் விரும்பிப் படித்தது குறித்து குமுதம் ஆசிரியர் எஸ்.ஏ.பி. என்னிடம் தெரிவித்ததுடன் தொடர்ந்து ஊக்குவித்தார்.

**ஓர் எழுத்தாளனை உருவாக்குகின்ற அக, புறக் காரணிகள் எவை?**

குடும்பம், சூழல், ஆசிரியர்கள், கிடைக்கின்ற நூல்கள் என்பன புறக் காரணிகள் என்றால்; தனிமையும், தேடுந் திறனும், பிறரால் நிராகரிக்கப்படுவதும்தான் வலுவான அகக் காரணிகள் என்பேன்.

**விஞ்ஞானம், இலக்கியம் இரண்டுமே இருவேறு துறைகள். இவை உங்களுடைய எழுத்துக்களில் எவ்வாறு கைகோர்த்துக் கொள்கின்றன?**

நல்ல சிறுகதைகளை ஒழுங்கமைத்து எழுதுவதற்கு விஞ்ஞான அறிவு தேவையாக இருக்கிறது. உணர்ச்சிகளைக் கொட்டி எழுதுவதற்கு இலக்கியம் உதவுகிறது. ஆனாலும், காதலை உணர்ச்சிவசப்பட்டு எழுதுவதற்கு என்னுடைய விஞ்ஞான அறிவு தடையாகவும் இருக்கிறது.

**அவ்வாறு முரண்படும் போது...**

அலுப்பு ஏற்படும். இலக்கியம் எழுதிக் கொண்டிருக்கும் போது அலுப்பு ஏற்பட்டால் விஞ்ஞானத்துக்கும், விஞ்ஞானம் எழுதிக் கொண்டிருக்கும் போது அலுப்பு ஏற்பட்டால் இலக்கியத்திற்கும் ஓடி விடுவேன்.

**இவ்விரு தளங்களிலும் பயணிப்பது உங்களுக்குச் சிரமமாகவே இல்லையென்றாலும் ஏதாவதொன்றில் நிலைத்திருந்தால் இன்னமும் வலுவான அடையாளம் கிடைத்திருக்கும் என்று எண்ணியதுண்டா?**

இல்லை. இரண்டு துறைகளிலும் எனக்கிருக்கிற அடையாளம் போதுமென்றே நினைக்கிறேன்.

**உங்களுடைய பொறியியல் புத்தியின் சமீபத்தைய வெளிப்பாடு – மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம்! இதற்கு முன்னர்...**

இந்தியப் பாதுகாப்பு அமைச்சுக்கான பல ஆராய்ச்சிகள் என்னுடைய வழிகாட்டுதலில் முன்பு நடைபெற்றுள்ளன. இராணுவம் சம்பந்தப்பட்ட விடயமாகையால் அவை பற்றி என்னால் இப்போது கூற முடியாது.

**எது பற்றித் தேடாமல் இருக்கிறீர்கள்? எழுதாமலும் தவிர்க்கிறீர்கள்?**

காதல் கவிதைகளை.

**ஏன்?**

எனக்கு வேறு வேலை இருக்கிறது.

**'காக்கை கூடக் காதலை அறிகிறது. கொஞ்சும் பழக்கம் குருவிக்கும் இருக்கிறது' என்கிறார் கண்ணதாசன்.**

கண்ணதாசனின் இந்த வரிகளைக் கேட்டுவிட்டு மிருகங்களோ, பறவைகளோ காதலிப்பதில்லை. அவற்றுக்குத் தேவை; இனவிருத்தி மட்டுமே! காதலை நான் விஞ்ஞான ரீதியாகவே பார்க்கிறேன்.

**சரி. காதல் கொள்ளாமல் நீங்கள் கவிதைகள் எழுதியிருக்கிறீர்களா?**

முன்பு மரபுக் கவிதைகள் எழுதியிருக்கிறேன்.

**அறிவியல் இடம்பெறவே தேவையில்லை என்று எந்தத் துறையினைச் சொல்வீர்கள்?**



கவிதைதான்! ஏனென்றால் கவிதை அழகியல் சார்ந்தது. அதில் அறிவியல் இடம் பெற்றால் கவித்துவம் காணாமல் போய்விடும்.

**மேற்கோள் காட்டி எழுதுவது என்பது ஒருவருடைய படைப்பில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகிறது?**

மேற்கோள் காட்டி எழுதுவது சிறுகதை, நாவல் போன்ற கற்பனை எழுத்துக்களுக்குக் குறை மதிப்பு அல்லது பொருந்தாத் தன்மையினையும், கட்டுரைகளுக்கு மிகை மதிப்பையும் பெற்றுக் கொடுக்கிறது.

**உங்களின் 'நகரம்' சிறுகதையை 'கால்டு வெல்' இன் மேற்கோளுடன்தானே ஆரம்பித்திருந்தீர்கள்?**

ஆம். மிகுந்த அவசரத்தில் எழுதப்பட்ட கதை அது. மேற்கோளுடன் ஆரம்பிப்பதால் எழுத்தாளனின் தரமோ இயல்போ பாதிப்படையுமாயினும், அதுவே சில வேளைகளில் வெற்றி பெற்றுத் தீவிர வாசகர்களையும் தேடித் தருகிறது. நான் படித்த பலருடைய கருத்துக்களை எனது கட்டுரைகளுக்கு மேற்கோளாகப் பயன்படுத்தியிருக்கிறேன் (வாசகர்களுக்காக).

**இணையத்தின் வரவு உங்களுடைய எழுத்துக்களுக்கு எவ்வாறு உதவிக் கொண்டிருக்கிறது?**

நான் விரைவாகத் தேடுவதற்கு இணையம் மிகவும் உதவியாக இருக்கிறது. இதனால் என்னுடைய எழுத்து நன்கே பரவலடைந்திருக்கிறது. வாசகர்கள் பெருகியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய எழுத்தின் தரம் இணையத்தால் மாறிப்போகவில்லை. மிக அற்புதமான வரவு - இணையம்!

**'மொழிப் பரிச்சயம்', 'எழுத்தாற்றல்' – இவ்விரண்டுக்குமுள்ள தொடர்பு குறித்து...**

மிக நல்ல கேள்வி இது. எழுத்தாற்றலுக்கு மிக மிக அவசியமானது மொழிப் பரிச்சயம். எமது மொழி, எழுத்து, இலக்கியம் என்பவற்றை ஆழமாக அறிவது போல, பிற மொழிப் படைப்புகளையும் அறிந்து கொள்வதே ஓர் எழுத்தாளனை உச்சத்தில் வைத்திருக்கும் மிக முக்கிய காரணியாகும்.

**எழுத்துச் சீர்திருத்தம் செய்ய முயன்றீர்களே! இதனூடாக என்ன எதிர்பார்த்தீர்கள்?**

இணையத்தினூடாக 'யூனிகோட்' (Unicode) வந்த பிறகு எழுத்துக்கள் பல தேவைப்படுகின்றன. ஆனால் பழைய எழுத்துக்களை நீக்க வேண்டு மென்றில்லை. எழுத்துச் சீர்திருத்தத்தினூடாகப் புதிய ஒலிகளை ஏற் படுத்தி, அவற்றின் மூலம் புதிய எழுத்துக்களை உருவாக்குவது அவசியம் என்கிறேன்.

**பல பெயர்ச் சொற்களினூடாக வினைச் சொற்களை உருவாக்க முனைந்தீர்கள். (இட்லினான், சவரித்தான் போன்று). இந்த முயற்சியும் நீங்கள் எதிர்பார்த்த மாற்றத்தைத் தரவில்லையே!?**

(சிரித்துக் கொண்டே) மொழியின் வளைந்து கொடுக்கும் தன்மை (Flexibility) என்பார்களே. அதனைத்தான் முயன்று பார்த்தேன். உச்ச ரிக்கும் ஓசை சரியாக இல்லையென்றால் நிற்காது. தூக்கி எறிந்து விடு வார்கள் என்றெனக்கு முன்பே தெரியும். அதை முயன்றுதான் பார்த்தேன். தப்பில்லையே. (சுஜாதாவுடைய இம் முயற்சியின் வெளிப்பாடாய்ச் சில சொற்கள் இன்றும் புழக்கத்தில் இருக்கின்றன. கவித்துவமாக எழுதுப வர்கள் விரும்பிப் பயன்படுத்துகிறார்கள்.)

**இம்மாதிரி எழுதுவதற்கு ஏன் தோன்றியது? இது மொழி மீறலாகப் படவில்லையா?**

(மீண்டும் சிரிக்கிறார் - எள்ளலாகவே) ஆழ்வார் பாசுரங்கள் படித்திருக் கிறீர்களா? 'காண்கின்றனர்களும் கேட்கின்றனர்களும்' என்று எழுதியி ருப்பார். காண்கின்றனர் என்பது பன்மைதானே! அதனோடு 'கள்' விகுதி சேர்த்திருக்கிறார். தவறாகி விட்டதா? மொழியை இப்படி மட்டும் தான் பயன்படுத்த வேண்டும் என்று எடுத்துக் கொள்வது தவறு.

**திடீரெனத் திரள் வாசகர்களால் வியந்து பார்க்கப்பட்ட விஞ்ஞான எழுத்தாளர் நீங்கள். பின்பு வியாபார எழுத்தாளர் என்று விமர் சிக்கப்பட்டீர்களே!**

இந்த விமர்சனம் சரியில்லை. நான் என்னுடைய திருப்திக்காக மட்டும் தான் எழுதுகிறேன். ஆனால் எனக்கிருக்கிற நண்பர்கள் பல்வகைப் பட்டவர்கள். எனக்குத் தேவையான அவர்களுக்காக அவர்கள் கேட்கிற படி எழுதிக் கொடுக்கிறேன். நான் பொறியியலாளராக இருப்பதால் எழுதுவதனூடாக எனக்குப் பணத்தேவை இல்லை. இன்னும்



சொன்னால் பணம் கிடைப்பதைச் சிரமமாகவே உணர்கிறேன். ஏனென்றால் எழுதுவதனூடாகக் கிடைக்கின்ற பணத்துக்கு நான் வரி கட்ட வேண்டியிருக்கிறது. எல்லாப் பத்திரிகைகளிலும் என் பெயர் அடிபட்டதால் (காத்திரமான இலக்கியப் பத்திரிகையிலோ, ராணி போன்ற குடும்பப் பத்திரிகையிலோ) இப்படி நினைத்து விட்டார்கள். விஞ்ஞான ரீதியிலான எழுத்தும் சரி, அல்லாத எழுத்தும் சரி என்னியல்பாய் ஒன்றுக்கொன்று இணையாகவே எழுதப்படுபவை.

**கனவுத் தொழிற்சாலைக்கும் உங்களுக்குமான தொடர்பு மிக நெருக்கமாக இருக்கிறதே!**

இதுவும் தவறு. சினிமாவில் எனக்கு வேண்டிய நண்பர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவுமுகமாகவும் நல்ல திரைப்படங்க ளுக்கு நானும் காரணம் என்ற திருப்தியினாலும் சில படங்களுக்குத் திரைக்கதை எழுதியிருக்கிறேன். அவ்வளவுதான்!

**'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்தில் மணிரத்தினத்துடன் இணைந்து பணியாற்றியிருந்தீர்கள். 'ஈழத் தமிழர்களின் போர்க்கால வாழ்வினைச் சரியாகப் பதிவு செய்யவில்லை' என்ற குற்றச்சாட்டு டன் கூடிய பல விமர்சனங்கள் வெளிவந்தனவே! அது பற்றி...**

இத்திரைப்பட வேலையைத் தொடங்குவதற்கு முன்னர் நானும் மணிரத்தினமும் பல ஈழத்து எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் சந்தித்து அவர்களுடைய எண்ணம், எழுத்து என்பனவற்றையும் சேர்த் துக் கொண்டோம். முடிந்தவரையில் சரியாகத்தான் பதிவு செய்திருக்கி றோம் என்றும் நினைக்கிறேன். மறுப்பவர்களுக்கெல்லாம் நான் சொல்லக் கூடிய ஒரே பதில்; "ஈழத்திலுள்ளவர்களே தமது கதைகளைப் படமாக்கினால்தான் சரியாகப் பதிவு செய்ய முடியும்."

**நாளைய சினிமா எவ்வாறிருக்கும்?**

டிஜிட்டல் (Digital) ஆக இருக்கும். செலுலோய்ட் (Celluloid) முழுக்க முழுக்கப் போய் விடும். ஏறக்குறைய இணையம் மூலமே சினிமா பரவும். ஆனால் மக்களின் மனோ நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தொழில்நுட்பம் (Technology) மட்டுமே மாறும். இன்றைய சாமிப் படங்களை இணையம் மூலம் மக்கள் பார்க்கவே செய்வார்கள். மெகா சீரியல்களைப் பார்த்தால் உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன். மிக அருமையான படங்களைக் காட்டுகின்றார்கள். ஆனால் மிக மிகப் பழமையான விடயங்களைச் சொல்கிறார்கள்.

**ஒரு நூலைப் படைக்கும் போது அதனுடன் தொடர்பான அல்லது புறம்பான வேறொரு விடயம் பற்றிக் கூற விழைகிறீர்கள். ஆனால் அதை விரிவு படுத்தாமல், "அது பற்றிப் பிறகு பேசுகிறேன்" என்று கூறி விட்டு, ஓடி விடுகிறீர்கள். இது, உங்களுடைய அடுத்த படைப்புக்கான விளம்பரமா, அறிவிப்பா, அல்லது...?**

அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. அந்த விடயத்தின் மேல் வாசகர்களுக்கு ஓர் ஈர்ப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் அவர்களை வகைப்படுத்தவே அவ்வாறு செய்கிறேன்.

**உங்களுடைய சமீபத்திய நூல் ஒன்று - 'கடவுள் இருக்கிறாரா?' (இந்த நேர்காணல் 2004 இல் செய்யப்பட்டது). இதில் நாடி ஜோதிடம் பற்றிக் கூற வந்து விட்டு, ஓடி விட்டீர்கள். இது பற்றிப் பிறகு எழுதியிருந்தீர்களா?**

நாடி ஜோதிடத்திற்கு அறிவியல் ரீதியிலான ஆதாரமில்லை என்பதால் இது நிராகரிக்கப்பட வேண்டியதொன்று. நம்ப விரும்புபவர்களுக்குப் பொதுப்படையாக எழுதுகின்ற அல்லது சொல்லப்படுகின்ற விடயம்தான் அது. நாடி ஜோதிடத்தின்படி ஒருவருடைய வாழ்க்கை எழுதப் பட்டு விட்டது என்றால், அது வேறொரு தலைப்பில் போய் விடும். நம்மை முயற்சி செய்ய விடாமல், செயலாற்றும் தன்மையை (Inaction) ஏற்படுத்தி விடும் என்பதால் இது நிராகரிக்கப்படவே வேண்டியதொன்று.

**நீங்கள் விஞ்ஞான எழுத்தாளர் என்பதால் சமயத்தைப் புறக்கணிக் கிறீர்கள் என்றும் கொள்ளலாமில்லையா?**

ஆம். இயற்பியலை முறையாகப் படித்தவர்களுக்கு இந்த நம்பிக் கையெல்லாம் வரவே வராது.

**விஞ்ஞானத்துக்குள் ஆழ்ந்து போகிறவர்களுக்கு வியப்புக்கள் குறை வாகவே இருக்கின்றன. ஆனாலும் கூட உங்களுக்குள் எது குறித் தாவது வியப்புக்கள் அல்லது ஆச்சரியங்கள் இருக்கின்றனவா?**

டி என் ஏ (DNA) பற்றிய விடயமே எனக்குள்ள ஆச்சரியம். அவை பற்றி ஆராயக் கிடைக்கின்ற புதிய புதிய விடயங்களைக் கண்டு வியந்து போகிறேன். இதன் மூலம் உயிரின் இரகசியம் மெல்ல மெல்ல



மனிதனுக்குக் காட்டப்படுகிறது. ஆனால், இந்த அறிவின் மூலம் எதிர் காலத்தில் மனிதன் என்ன செய்வானோ என்று பயமாகவும் இருக்கிறது. (DNA பற்றி இவர் தனியாக நூலொன்று எழுதியிருக்கிறார்)

**குளோனிங் (Cloning) பற்றி...!**

குளோனிங் இன்னமும் குறைந்தளவு வளர்ச்சி மட்டத்தில்தான் இருக் கிறது. இதன் மூலம் ஒரு முழு மனிதனை ஆக்கி விட முடியும் என்ப தற்கான சாத்தியம் இன்னும் 20, 30 ஆண்டுகள் தள்ளியே இருக்கிறது. இதனால் மனித இனத்திற்கு இப்போதைக்கு எந்த அபாயமும் இல்லை எனினும் அது சாத்தியமாகும் போது, மிகப் பெரிய மாறுதலையும் அதிர்ச் சியையும் தரக் கூடும். ஆனாலும் அது தடைசெய்யப்படும் என்றே நம்பு கிறேன்.

**இதனுடைய அபாயத் தன்மை எத்தகையது?**

முக்கிய விடயமாகக் 'குளோனிங்' ஒரு புதிய வர்ணாச்சிரமத்தை ஏற் படுத்தும். தாழ்நிலை மனிதர்கள், கறுப்பினத்தவர் எல்லோரையும் குளோனிங் மூலம் நீக்கி விட முடியும். மாறாக, எல்லோரும் புத்தி சாலிகளாகவும், வெள்ளைக்காரர்களாகவும் உள்ள மிகப் பயங்கர உலகத்தைத் தோற்றுவிக்கும். ஆனால் ஐ.நா போன்ற சர்வதேச அமைப் புகளினால் குளோனிங் மூலம் மனித உருவாக்கம் தடை செய்யப்படும் என்பதால் அச்சப்படத் தேவையில்லை.

**ஈழத்தில் யாருடைய எழுத்துக்களையாவது படித்துப் பார்த்து வியந்து போயிருக்கிறீர்களா?**

செல்வி சிவதர்சினியின் கவிதைகளை இன்றும் நான் எண்ணியெண்ணி வியக்கிறேன். அவருடைய நூல் கிடைத்தால் எனக்கு அனுப்பி வையுங்கள். சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகளிலும் எனக்கு லயிப்பு அதிகம்தான். அதனால் தான் அவருடைய வரிகளைக் 'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்திற்குப் பயன்படுத்தியிருந்தோம். நான் தமிழ்நாட்டுப் பத்திரிகைப் பேட்டியொன்றில் கூறியிருந்ததை உங்களுக்குச் சொல்கிறேன்.

"போராட்டம் நிலைகொண்டிருக்கிற நாடுகளிலிருந்துதான் மிகச் சிறந்த இலக்கியங்கள் தோன்ற வாய்ப்பிருக்கிறது. இந்தவகையில் எதிர்காலத்தில் ஈழத்திலிருந்துதான் மிகச் சிறந்த இலக்கியப்

படைப்புக்கள் வெளிவரும்'' என்று குறிப்பிட்டிருந்தேன். இதுதான் யதார்த்தம். நீங்களும் நிறையப் படியுங்கள். படையுங்கள்.

**இந்தப் பேட்டி குறித்து...**

நல்லாகவே கேட்டிருக்கிறாய். இங்குள்ள பல பேட்டியாளர்கள் என்னிடம் வந்து விபரங்களைக் கேட்டு விட்டே பேட்டியைத் தொடங்குவார்கள். நீ என் பற்றியும் என் படைப்புக்கள் பற்றியும் நிறையவே தெரிந்து வைத்திருக்கிறாய். சிறுகதை, கவிதையெல்லாம் எழுதுவாயா? எழுதி எனக்கு அனுப்பிவை. நான் சரிபார்த்து அனுப்புகிறேன்.

*04.07.2004*





# பி.சுசீலா

அன்றலர்ந்த வாசமலர்களை முகர்ந்து கொள்வதும், இசைக்குயில் பி.சுசீலாவின் பாடல்களில் திளைப்பதுவும் ஒரே விதமான சுகத்தைத் தரவல்லன! தாத்தாவும் பேரனும் என ஒன்றுவிட்ட தலைமுறைகள் ஒரே அரங்கினுள் அருகமர்ந்து இசைகேட்கும் அழகைச் சிருஷ்டிக்க சுசீலாவின் கானக் குரலால் சிறப்பாக முடியும்! எத்தகைய கனத்த உள்ளங்களையும் காற்றாகிப் பறக்க வைக்கும் ஜாலம் கொண்ட இவருடைய கீதங்கள் வட்டச் சுழலாக, ஓடையாக, நதியாக, ஆறாக, அருவியாக, கடலாக என்றெல்லாம் மாறி எமக்குத் தருகின்ற சுகானுபவங்கள் தான் எம்மாத்திரம்!

சமீபத்தில் இலங்கை வந்திருந்தார். 'குயில்கள் பேசுவதே இல்லை; அவை பாட மட்டுமே செய்கின்றன' என்று இலங்கையின் பல ஊடகங்களும் புரிந்து கொண்டது இவர் மூலமாகவே! நிஜம்தான். 52 வருட காலங்கள் இசையுலகுடன் ஐக்கியமாகியுள்ள இந்தக் குயிலை இந்திய ஊடகங்களும் கூட பேசவைப்பதற்குப் பெரிதும் சிரமப்பட்டிருக்கின்றன. ஆனாலும், பேசியிருக்கிறார் - விரல் விட்டு எண்ணக்கூடிய தடவைகள் மட்டும்!

'உங்களுடைய இசையின் திவலைகள் எம் மீது தெறித்தால் மட்டும் போதும். பேசுவது அசௌகரியமெனில் விட்டு விடுங்கள்' எனும் ரீதியில் அங்குள்ள ஊடகங்கள் கொடுத்த சுதந்திரத்தால் இந்த இசைக் குயில் தன்னியல்பாய் பாடிக் கொண்டிருக்கிறது.

ஆன்மா, உடல், உயிர் மூன்றையும் ஒரு சேரக் கட்டிப் போடக்கூடிய இந்த நுண்மையான இசைப் பிரவாகத்தினைப் பருகியவர்கள் பெரு நிறைவு கொண்டு சுசீலாவைப் பல இடங்களிலும் பதிவு செய்து வைத் திருக்கிறார்கள்.

1935 ஆம் ஆண்டு விஜய நகரத்தில் பிறந்த சுந்தரத் தெலுங்கு - பி.சுசீலா! இசை மீது பெருநாட்டம் கொண்ட குடும்பப் பின்னணி. தந்தை முகுந்த ராவ், ஒரு கிரிமினல் வழக்கறிஞர். 'தனது மகள் சாஸ்திரிய சங் கீதம் கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும். எம்.எஸ். சுப்புலட்சுமி போன்று புகழ் பெற்ற பாடகியாக வேண்டும்' என்று விரும்பினாராம்.

பதினைந்து வயதிற்குள்ளேயே சாஸ்திரிய சங்கீதத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றுக் கொண்டு , 1951 இல் விஜய நகரத்திலிருந்து சென்னைக்குப் பயணமானார். 'சங்கீத வித்துவான்' என்கிற பட்டம் பெறுவதற்காகச் சேர்ந்து கொண்ட பயிற்சிக் கல்லூரியில் 'பென்டியாலா நாகேஸ்வர ராவ்' என்கிற பிரபல இசையமைப்பாளர் இவரது திறமையை இனங்கண்டு அகில இந்திய வானொலியில் சிறுவர் நிகழ்ச்சியொன்றுக்காகப் பரிந்துரை செய்திருந்ததையும் அதன் பின்னர் 1952 ஆம் ஆண்டு 'பெற்ற தாய்' என்கிற திரைப்படத்திற்கு முதன் முதலாகப் பாடியிருந்ததையும் நன்றியோடு நினைவு கூர்கிறார்.

இந்த இசையரசியின் பயணத்தில் 'முதன் முதல்' என்கிற பதத்துக்கு வலு அதிகம். கமல்ஹாசன் நடித்த முதல் படமான 'களத்தூர் கண்ணம்மா'வில் சுசீலா பாடியிருந்தார். ஏ.எம்.ராஜா முதன் முதலில் இசையமைத்த 'கல்யாணப் பரிசு' திரைப்படத்தில் பாடியிருந்தார்.

எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் முதல் படமான சாந்தி நிலையத்தில் இடம் பெற்ற பாடல் 'இயற்கையெனும் இளைய கன்னி' – சுசீலாவுடன் இணைந்து பாடியது. இளையராஜாவின் முதல் திரைப்படமான 'அன்னக்கிளி'யிலும் இவரது குரல் இடம் பெற்றது.

'பெற்ற தாய்' திரைப்படத்தில் சுசீலாவுடன் இணைந்து டூயட் பாடியி ருந்த ஏ.எம்.ராஜாவுக்கும் அதுதான் முதல் படம். 'ஏதுக்கழைத்தாய்' என்று ஆரம்பித்த அந்தப் பாடலில் தொனித்த கேள்விக்கு அடுத்தடுத்து வந்தமைந்த வாய்ப்புக்கள் பதிலளித்திருந்தனவோ! ஏனெனில், சுசீலாவுக்கு இசை பிடித்ததை விட; இசைதான் சுசீலாவைப் பிடித்துக் கொண்டது!



அதன் விளைவு - ஏ.வி.எம். ஸ்டுடியோவில் மாதாந்தம், குறித்த சம்பளம் பெற்றுக் கொள்ளும் பாடகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டார். இசையுலகில் இதுவும் இவருக்கு மட்டுமே அமைந்த வாய்ப்பு.

ஏ.வி.எம். நிறுவன உரிமையாளர் - மெய்யப்ப செட்டியார், சுசீலாவின் தமிழ் உச்சரிப்பின் நேர்த்திக்காகத் தமிழ் ஆசிரியர் ஒருவரை நியமித்தார்.

தாய் மொழியல்லாத ஒரு மொழியை எவ்வளவு சொல்லிக் கொடுத்தாலும் கூட அதன் அசல் உச்சரிப்பு வந்து விடுவது அபூர்வமல்லவா! ஆனால் இந்த சுந்தரத் தெலுங்குக்கு தேன் தமிழைப் பருகுவதில் சிக் கல்கள் இருக்கவில்லை என்பதற்கு ஒவ்வொரு பாடலும்தான் சாட்சி. இன்னும் மலையாளம், கன்னடம், சிங்களம், ஹிந்தி என மொத்தம் 13 இற்கும் மேற்பட்ட மொழிகளில், இன்று வரையிரல் 30,000 ற்கும் மேற்பட்ட திரையிசைப் பாடல்களைப் பாடியிருக்கிறார். ஐந்து தேசிய விருதுகளையும், பல மாநில விருதுகளையும் வாங்கியிருக்கிறார். ஆனாலும் 'பத்மஸ்ரீ', 'பத்மவிபூசணம்' ஆகிய விருதுகள் இதுவரையில் இவருக்கு வழங்கப்படவில்லை என்பது குறித்து அவருக்கு வருத்தம் இருக்கிறதோ இல்லையோ அவரது இசைக்குத் தலை வணங்கும் ஒவ்வொரு ரசிகனுக்கும் இந்த ஆதங்கம் இருக்கிறது.

வடக்கில் 'லதா மங்கேஷ்கர்' என்றால்; தெற்கில் 'சுசீலா' என்பது இசை யுலகில் பதிந்து போன அடையாளங்கள். 'லதாஜி'தான் தனது நகர்வுக்கு முன்னுதாரணமாகவும். இருப்பவர் என்று சுசீலா நெகிழ்ந்து பேசியி ருக்கிறார். ஏனெனில் மகள் சாஸ்திரிய சங்கீதம் கற்கவேண்டும் என்று தந்தை விரும்பிய போது; அவருடைய திருப்திக்காக அதனைக் கற்றுக் கொண்டு, லதா மங்கேஷ்கரின் திரையிசைப் பாடல்களையே வானொலி யில் கேட்டுக் கொண்டிருப்பாராம். ''பாடசாலை, கல்லூரிகளில் நிகழும் எல்லா போட்டி நிகழ்ச்சிகளிலும் முதல் பரிசைத் தட்டி வருவேன். ஆனால் படிப்பு சரியாக வரவில்லை'' என்று கூறிச் சிரிக்கிறார்.

'பெற்ற தாய்'க்குப் பின்பு ஒரு சிறு இடைவெளி. மீண்டும் 1955 இல் 'கணவனே கண் கண்ட தெய்வம்' என்ற திரைப்படத்தில் கதாநாய கிக்காகவும், வில்லிக்காகவும் என இரு வேறு மாதிரிப் பாடியிருந்தார்.

'எந்தன் உள்ளம் துள்ளி விளையாடுவதும்' என்று ஆரம்பிக்கும் பாடலில் அவரது குரல் அப்படியே வாழ்ந்து கொண்டிருப்பதாய் தெரியும். இவருடைய புதிய பிரவேசத்திலேயே அது பலரையும் கவர்ந்த காதல் பாடல். எனினும், அத்திரைப்படத்தில் வில்லியாக நடித்த

லலிதாவுக்காகப் பாடியிருந்த 'உன்னைக் கண் தேடுதே' என்ற பாடல் தான் சுசீலாவைப் பிரபலப்படுத்திய முதல் பாடல் எனலாம். இதற்கான விசேட காரணம், அதில் வரும் விக்கல்தான். அதே பரபரப்போடு அதே ஆண்டில் (1955) வெளியான 'மிஸ்ஸியம்மா' திரைப்படத்தில் இவர் பாடியிருந்த 'பிருந்தாவனமும் நந்தகுமாரனும்' என்கிற பாடல் பலருடைய உறக்கத்தைக் கெடுத்த பாடலாகியது. அதைத் தொடர்ந்து 1955 களுக்குப் பின்னர் வெளிவந்த படங்களில் சுசீலாவின் குரல் ஒலிக்காத படங்களே இல்லை எனுமளவிற்கு அதி வேகமாக ஓடிக் கொண்டிருந்தார்.

கார்த்திக்ராஜா, ஏ.ஆர்.ரஹ்மான் உட்பட இது வரையில் 50 இற்கும் மேற்பட்ட இசையமைப்பாளர்களின் இசையில் பாடியிருந்தாலும் எம்.எஸ். விஸ்வநாதனின் இசையில்தான் சுசீலா மிக அதிகமாகப் பாடியிருக்கிறார்.

இந்த இசையரசி குறித்து கவியரசர் வைரமுத்து 'இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்' என்கிற தனது நூலில் சிலாகித்து எழுதியிருந்தார்.

''புற ஒலிகள் உள் நுழையாத அறையொன்றினுள் சுசீலா அம்மாவின் பாடல்களை ஒலிக்க விட்டுக் கண்களை மூடிக் கேட்டுக் கொண்டிருந்தால், 'நான் இறந்து விடுவதற்கு முன்பு; இன்னொரு தடவை பிறந்து விட மாட்டேனா' என்று ஆதங்கம் வருகிறது'' என்று சுசீலா பற்றிய தனது உள்ளக் கிடக்கையை வைரமுத்து அதில் பதிவு செய்திருந்தார்.

புன்னகை இழையோடிக் கிடக்கும் அவருடைய பல பாடல்களில் குழந்தையின் மழலையும், காதலின் செழுமையும், நிரந்தரமாய் வசிக்க, அனுபவத்தின் முதிர்வு மட்டும் தன்னியல்பாய் வளர்ச்சி கண்டிருக்கிறது.

'காதல் சிறகை காற்றினில் விரித்து வான வீதியில் பறக்கவா' என்ற பாடலின் வரிகளின் அழகும் சுசீலாவின் குரலும் நமக்குள் சங்கமிக்கும் போது, நம் கால்கள் தரையில் பாவாமல் பறந்து கொள்வதை உணர்ந்திருக்கிறோமே!

'கோல்டன் மெலடி' என்கிற வரையறைக்குள் அடங்கும் சுசீலாவின் பாடல்கள் எத்தனை தலைமுறை கடந்தும் கேட்கக்கூடிய விசித்திர மானவை!

ஆந்திராவின் ஒரு பல்கலைக்கழகம் இவருக்கு 'டொக்டர்' பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கிறது. மற்றும் கலைமாமணி பட்டமும்



இன்னும் பலவும் கிடைத்திருக்கின்ற போதிலும் இவற்றுள் எதனையும் அவர் பயன்படுத்திக் கொள்வதில்லை.

'எனது பெற்றோரின் உந்துதலுக்குப் பின்னர், எனது வளர்ச்சிக்குக் காரணமாக; ஆணிவேராக இருந்தவர் - எனது கணவர்தான் என்று பெருமை பொங்கக் கூறுகையில், உயிர் பிரிந்த கணவருடன் வாழ்ந்து கொண்டே இருக்கிறார். ஒரே மகன் – ஜெயகிருஷ்ணா. மருமகள் சந்தியா.

சந்தியாதான் தனது இசை வாரிசு என்று நெகிழ்ந்து போகிறார். இரண்டு பேரப்பிள்ளைகள். இவ்வளவுதான் இந்த இசை நாயகியின் குடும்பம் என்றாலும் உலகெல்லாம் பரந்து போயிருக்கும் ரசிகர்களால் இன்னமும் திடமாக வாழ்ந்து பாடிக் கொண்டிருக்கிறார்.

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் பல மேடை இசை நிகழ்ச்சிகளிலும் கூடப் பாடி வருகின்றார். ஆனாலும், இது வரையில் இவர் கச்சேரிகள் செய்ததில்லை.

'சங்கீதத்தை முறையாகக் கற்றுள்ள நீங்கள் ஏன் சபாக்களில் பாடுவதில்லை' என்று அவரிடம் கேட்டிருக்கிறார்கள். 'ஏனோ தோன்றவில்லை' என்ற மிகக் குறுகிய பதிலுடன் முடித்துக் கொண்டு விட்டார். இன்றைய இளம் பாடகர்கள், இசையமைப்பாளர்களையெல்லாம் கூடப் பெரிதும் மதிக்கிறார்.

''ஒத்திகையே இல்லாமல் பாடும் இளையவர்கள் குறித்து எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இது ஃபாஸ்ட் ஃபுட் காலமில்லையா! எல்லாம் காலத்திற்கேற்பத்தான் மாறிக் கொண்டு வருகிறது'' என்று அவர்களையும் ஊக்கமளிக்கிறார். அதிர்ந்து பேசத் தெரியாத தன்னியல்பும், அவையடக்கமும் கூட அவரது வெற்றிக்கான மேலதிக தகைமைகளாகக் கொள்ள முடியும். அதையே கேள்வியாக்கி நோக்கினால், சிரிப்பை மட்டும் பதிலாய் தருவார். சுசீலா இப்படித்தான்!

*09.01.2005*

# கவிக்கோ அப்துல் ரகுமான்



சராசரி வாசகனையும் இலக்கியம் படிக்கத் தூண்டிய கவிஞர் அப்துல் ரகுமான். வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் 30 வருட காலம் பேராசிரியராகப் பணியாற்றியவர். கவிதைகளின் அத்தனை உத்திகளையும், வகைகளையும் தெரிந்து வைத்திருக்கிற கவிக்கழகம்!! 'கவிக்கோ'என்ற காலாண்டு கவிதை இதழின் ஆசிரியரான இவர் உருது, அரபு, கன்னடம், மலையாளம், தமிழ், ஆங்கிலம் எனப் பன்மொழிகளைத் தெரிந்து வைத்துக் கொண்டு; ஒவ்வொரு மொழிக்காரனுக்கும் கவிதை செய்து உதவிக் கொண்டிருக்கிறார். முன்பு கவிதை பற்றிச் சிறு பத்திரிகைகள் காட்டிய கட்டுப் பெட்டித் தனத்தையும்; பண்டிதர்களும், பேராசிரியர்களும் கொண்டிருந்த ஆடம்பரமான உளப் போக்கினையும் அறுவை செய்து ஆரோக்கியப்படுத்தப் பல முயற்சிகளை வெகு இயல்பாய் மேற்கொண்டார். விளைவுகள் வெற்றி தான். குறுகிய வட்டத்துக்குள் சுழன்று கொண்டிருந்த கவிதை; உலகின் எல்லை தொட்டுக் கொண்டாடியது.

வானொலி, தொலைக்காட்சி, மேடை என நூற்றுக்கணக்கான கவியரங்குகளில் மரபையும், புதுக் கவிதையையும் கலந்து கவிதை பாடியதும், பல்லாண்டு காலம் ஒரே மாதிரியாகவே நடத்தப்பட்டு வந்த கவியரங்கங்களைப் பரிசோதனைச் சாலைகளாக மாற்றி 'கவி ராத்திரி' என்று பெயர் சூட்டி, ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவர்களைப் பங்கேற்க வைத்ததும் இவர் வெற்றி கண்ட முயற்சிகள். 'கசல்' கவிதைகளை முதலில் தமிழுக்குக் கொண்டு வந்து 'மின்மினிகளால் ஒரு கடிதம்' எழுதினார்.

'பால்வீதி' தான் கவிக்கோவின் முதலாவது படைப்பு. கவிதை, கவிதை விளக்கக் கட்டுரை என இன்று வரையில் இருபதுக்கு மேற்பட்ட படைப்புகளைத் தந்துள்ளார். 'ஆலாபனை' என்ற கவிதைத் தொகுதிக்காக 1999 ஆம் ஆண்டு இவருக்கு இந்திய சாகித்ய அகடமி விருது கிடைத்தது.

'புதுக் கவிதையில் குறியீடு' என்ற ஆராய்ச்சியில் டொக்டர் பட்டம் பெற்றவர். 'பாரதிதாசன் விருது', 'அட்சரா விருது', 'தமிழன்னை விருது' என்பனவும், கலை மாமணி பட்டமும் கூட இவருக்குக் கிடைத்துள்ள கௌரவங்களிற் சில.

சூஃபித்துவக் கொள்கைப் பிடிப்பாளர். ஆடம்பரங்களெதனுக்கும் ஆட்படாமல்; நகரத்திலேயே ஏகாந்தமாய் வாழ்ந்து வருகிறார். இந்தச் சந்திப்பு திருவான்மியூரிலுள்ள அவருடைய இல்லத்தில் நிகழ்ந்தது.

**கவி 'அரசர்களின்' பரவலாக்கத்துக்குள் நீங்கள் மட்டும் 'கோ' என்று விழிக்கப்படும் காரணம் பற்றி முதலில் கூறுங்கள்.**

குடியாத்தம் என்கிற ஊரில், எனது ரசிகர்கள் எனக்கு அன்புடன் வழங்கிய பட்டம்தான் 'கவிக்கோ' என்பது. ஒரு தாய் தனது குழந்தையைத் தாலாட்டுகிற போது, 'ராஜா' என்று சொல்கிற வழக்கம் உண்டு. அந்தக் குழந்தை தாயிடம் போய் ''அப்படிச் சொல்லலாமா?'' என்று கேட்பதில் அர்த்தமில்லை. அந்தப் பட்டத்தை நான் ஏன் வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றால், அப்துல் ரகுமான்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். சினிமாவில் கூட ஒருவர் இருக்கிறார். இது பெரிய பெயர்க் குழப்பமாகி விட்டது. Phone இல், 'அப்துல் ரகுமான் பேசுகிறேன்' என்றால்; 'யார் கவிக்கோவா?' என்று கேட்கிறார்கள். 'கவிக்கோ' என்பது எனக்குப் பட்டமாக இல்லாமல் பெயராகவே மாறிவிட்டது. ஆனாலும் நான் என்னைக் 'கவிஞர்களின் கோ' என்றோ அல்லது 'கவிதைகளின் கோ' என்றோ நினைத்துக் கொள்வதில்லை.

**இந்தப் பட்டத்திற்கு அப்பால் 'கவிஞர்கள்' என்ற பொதுமைக்குள்ளும் ஏனைய கவிஞர்களிலிருந்து நீங்கள் வேறுபட்டே நிற்கிறீர்கள். அது பற்றி...**

என்னுடைய தாய்மொழி உருது என்பது எனக்கு ஒரு பலமாக மாறியிருந்தது. அதன் காரணமாக என் தந்தையின் உந்துதலால், கவிஞர் 'இக்பால்' போன்ற சிறந்த உருதுக் கவிஞர்களின் கவிதைகளையும் 'மௌலானா ரூமி' போன்ற பாரசீகக் கவிஞர்களின் நூல்களையும் சிறு வயதிலேயே படிக்கத் தொடங்கினேன். அந்தக் காலத்தில் இந்த நூல்களையெல்லாம் படிக்கக் கிடைத்தது பெரிய வாய்ப்பு. நான் உருது இலக்கியங்கள், எழுத்துக்களைப் படிக்கத் தொடங்கியதால், அவற்றின் பாதிப்பு எனது கவிதைகளில் இருக்கும். மேலும் சுரதாவின் கவிதைகள் மீது இருந்த ஈடுபாடும், அவருடன் ஏற்பட்ட தொடர்பும் எதைச் சொன்னாலும் புதுமையாகச் சொல்ல வேண்டும் என்று என்னை உந்தின. கவிஞர் தாகூர், கலீல் ஜிப்ரான் ஆகியோரின் கவிதைகளும் என்னை வெகுவாகவே கவர்ந்திருந்தன.

அதன் பின்பு, புதுக்கவிதை இயக்கம் தோன்றிப் பரவுவதற்கு முன்பு எழுத்து என்கிற பத்திரிகை வந்த பின்பே (1963 என்று நினைக்கிறேன்) பல முயற்சிகளைச் செய்தேன். இந்த இயக்கம் பரவுவதற்கு ஐந்து



ஆண்டுகளுக்கு முன்பு- நான் பி.ஏ. படித்துக்கொண்டிருக்கும் போது, ஆங்கிலப் பேராசிரியர் மூலமாக 'சரியலிஸம்' (Surrealism) பற்றித் தெரிந்து கொண்டேன். பின்னர் அந்த இயக்கத்தில் ஈடுபட்டதால் பல பரிசோதனைக் கவிதைகளைச் செய்ய முடிந்தது. அவற்றின் தொகுப்புத்தான் 'பால்வீதி'! தமிழில் முதன் முதலில் தோன்றிய புதுக்கவிதை நூல் என்று இதனைச் சொல்லலாம். ஆனால் பல ஆண்டுகள் கழித்தே அது வெளிவந்தது. அதற்கு அடுத்த படியாக வெகுஜனப் பத்திரிகைகளில் ஒன்றான ஜுனியர் விகடனில் புதுக்கவிதை பற்றிய கட்டுரைகளை நூறு வாரங்கள் தொடர்ந்து எழுதினேன். அதன் விளைவாகப் பலரும் புதுக் கவிதைகள் பற்றித் தெரிந்து கொண்டு; முன்பு அதன் மீது வெறுப்பாக இருந்தவர்களும் கூட மாறி, நிறைய புதுக்கவிதைகளாகவே எழுத ஆரம்பித்தார்கள்.

ஜுனியர் விகடனில் நான் எழுதிய முதல் கட்டுரை 'ஹைகூ' பற்றியது தான். அதுவும் பலரிடையே தாக்கத்தை ஏற்படுத்தியது. இன்று வரையில் தமிழில் மட்டும் ஆயிரக்கணக்கான 'ஹைகூ' கவிதைப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. இன்னும் சொல்லப் போனால், ஹைகூவுக்கென்று தனியான சங்கம் கூட இயங்கி வருகிறது.

மேலும் கவியரங்கம் என்ற வடிவத்தை மாற்றியிருக்கிறேன். வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் நான் பணியாற்றிய காலத்தில் 'கவிராத்திரி' என்றொரு நிகழ்ச்சியை நடத்தியிருந்தேன். அங்கு நடைபெற்ற முத்தமிழ் விழாவில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சியைப் பெரும் பெருங் கவிஞர்கள் கூடப் பாராட்டினார்கள். உருதுக் கவிஞர் முஷாராய் அவர்களின் சில பத அமைப்புகளை அதில் சேர்த்து, ஒரு கவிஞர் நீண்டதொரு கவிதையை வாசிக்கும் முறையை உடைத்து; ஏறத்தாழ 60 மாணவர்களுக்கு மேற்பட்டவர்களைப் பங்கேற்க வைத்தேன். புதுமையான பல தலைப்புகள் வழங்கப்பட்டு, கவிதைகள் படைக்கும் அந்த நிகழ்ச்சியை தமிழ் நாட்டின் வேறு பல இடங்களிலும் நடத்திக் காட்டியிருக்கிறேன். அது ஒரு பெரிய மாற்றமாக வரவேற்கப்பட்டது. தொலைக்காட்சிகளிலும் இதை நடத்தி வருகிறேன்.

இவை தவிர 'கசல்' கவிதைகளை தமிழுக்கு அறிமுகப்படுத்தி; 'மின்மினிகளால் ஒரு கடிதம்' என்றொரு தனித் தொகுதியையும் வெளியிட்டிருக்கிறேன். 'கசல்' என்றால் என்ன என்பதை விளக்கிய தொகுதி 'மகரந்தச் சிறகுகள்'. இது ஏற்கனவே 'பாக்யா'வில் வெளிவந்தது.

**புதுக் கவிதை என்றதும் இன்று உங்கள் பெயர்தான் முன்னிலைப் படுத்தப்படுகிறது. மரபு மீதுள்ள எவ்வகைச் சிக்கல்கள் உங்களை இதனுள் பிடித்து வைத்திருக்கின்றன?**

மரபில் எந்த அளவுக்குத் தேர்ச்சி பெற வேண்டுமோ அந்த அளவுக்குத் தேர்ச்சி பெற்றிருக்கிறேன். இப்பொழுது நீங்கள் ஈற்றடி கொடுத்தால் என்னால் உடனே வெண்பா பாட முடியும். அந்தளவுக்குப் பயிற்சி உண்டு. மரபில் எழுதிய பல கவிதைகளை நான் வெளியிடவில்லை. இனிமேல்தான் வெளியிடலாம் என்றிருக்கிறேன். மரபு இலக்கணம் தெரியாமல் நான் புதுக் கவிதை எழுத வரவில்லை. மரபை வெறுப்ப வனுமல்ல நான். இரண்டினது பலங்களையும் பலவீனங்களையும் தெரிந்து வைத்துள்ளேன். அதனால் புதுக் கவிதையின் பலத்தையும் இணைத்திருக்கிறேன். மரபில் சிக்கல்கள் உண்டு. அதன் இலக்கணக் கட்டுக்குள் நீங்கள் நினைப்பதையெல்லாம் அப்படியே எழுத முடியாது. கம்பன், வள்ளுவன் போன்ற பெருங்கவிஞர்களுக்கே இந்தச் சிக்கல் வந்திருக்கிறது. இலக்கணக் கட்டுப்பாட்டினால் சொல்லவந்ததைச் சொல்லமுடியாமல் போகிற நிலைமை இது.

இரண்டாவது, எதுகை மோனைக்காகச் சில நேரங்களில் சிரமப்பட வேண்டியேற்படுகிறது. இதெல்லாம், செயற்கைத் தளைகளைப் போட்டுக்கொண்டு Circus கம்பி மீது நடக்கிறது மாதிரி சிரமமானவை. இயல்பாகவே நடக்கலாமே! ஒரு தடியை வைத்துக்கொண்டு கம்பி மேல் Balance பண்ணி நடப்பதுதான் மரபுக் கவிதை என்று நான் நினைக்கிறேன். அது தேவையில்லை. புதுக் கவிதையில் எல்லா வசதி களும் இருப்பதால், மரபுக் கவிதைகளின் இடையூறுகளிலிருந்து வெளியே வந்து ஆழமாகச் சொல்வதற்கு புதுக் கவிதை வசதியாக உள்ளது.

**இங்கு புதுக்கவிதை எழுதுபவர்களின் போக்கினை எவ்வாறு அவதானிக்கிறீர்கள்?**

தமிழ் நாட்டில் புதுக்கவிதை எழுதுபவர்கள் பெரும்பாலும் ஐரோப்பியக் கவிதைகளைப் படிக்கிறார்கள். அதனால், அவர்களின் பாதிப்பு இவர்க ளிடம் இருக்கிறது. தமிழ் நாட்டுச் சூழலில் இப்போது புதுக்கவிதை பரவலடைந்துள்ளது. தொடக்க காலங்களில் நகரத்தில் இருந்தவர்கள் மட்டுமே புதுக்கவிதை இயக்கத்தில் ஈடுபட்டார்கள். அவர்கள் ஐரோப்பிய சிந்தனையோடு எழுதினார்கள். பின்னர் வானம்பாடி போன்ற இயக்



கங்கள் வந்து பரவலடைந்த பிறகு, முற்போக்குச் சிந்தனையாளர்கள் புதுக்கவிதை எழுத ஆரம்பித்தார்கள். ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் முற்போக்குவாதிகள் என்று சொல்லப்படுகின்ற 'கொம்யூனிஸ்டுகள்' புதுக்கவிதையை எதிர்த்தார்கள்.

'வானம்பாடி' இயக்கத்திற்குப் பின்னர் அதிகமாக எழுத ஆரம்பித்த வர்கள்- முற்போக்கு, பொதுவுடமைச் சிந்தனையுடைய இளைஞர்கள். இப்போது இந்நிலையும் மாறி, கிராமப்புற இளைஞர்கள் தமது பிரச்சினை களைப் புதுக் கவிதைகளாக எழுதும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

தலித்தியம், பெண்ணியம் என்றெல்லாம் தோன்றிய பிறகு, தமிழ் நாட்டிலிருக்கிற ஒடுக்கப்பட்ட பெண்களும், தலித்துக்களும் அவர்களு டைய உணர்வுகளைப் பிரதிபலிக்கிற வகையில் இது மாறியிருக்கிறது. முன்பு எழுதப்பட்டவற்றை விட இவை வித்தியாசப்படுவனவாக உள்ளன.

**புதுக் கவிதைகளுக்குரிய யாப்பிலக்கணம் என்று புதிதாக ஏதேனும் உருவாக்கப்பட்டுள்ளதா?**

புதுக்கவிதை தோன்றியபோதே அதற்கு இலக்கணம் தோன்றிவிட்டது. யாப்பை நாம் எல்லோருமே தவறாக நினைக்கிறோம். யாப்பு என்றாலே ஒரு Construction என்கிற வரவிலக்கணம்தான். ஒரு வீடு இப்படித்தான் இருக்க வேண்டும் என்றொரு அமைப்பைச் சொல்கிறோமல்லவா! காலந்தோறும் வீடுகளின் அமைப்பு மாறினாலும், அடிப்படை மாறாது. சமையல் அறை, கழிவறை, படுக்கையறை என்கிற மூன்றும் இல்லாமல் எப்படி ஒரு வீடு இருக்க முடியாதோ அது மாதிரியே புதுக்கவிதையோ, வசன கவிதையோ எதுவாக இருந்தாலும் இலக்கணம் உண்டு. அவற்றின் உள்ளடக்கத்திற்கான இலக்கணங்கள் இஸங்கள் தோன்றிய காலத்திலேயே ஏற்பட்டதாகும். Romanticism இதைத்தான் பாட வேண்டும் என்கிறது. Realism இதைத்தான் பாட வேண்டும் என்கிறது. இது சங்க இலக்கி யத்தில் அகம், புறம் மாதிரி!

Surrealism- இது Subconscious mind இல் இருந்துதான் பாட வேண்டும் என்கிறது. இவையெல்லாம் உள்ளடக்கத்திற்கான இலக்கணங்கள் தான். உள் உருவத்துக்கு என்ன சொன்னார்களென்றால், Mechanical Rythm என்று சொல்லப்படுகிற யாப்பை விட்டு விடுங்கள். உங்கள் மன இய லுக்கு ஒத்ததான Speach Rythm இற்கேற்றபடி வாக்கிய அமைப்புகளை

வையுங்கள். பேசும்போது உணர்ச்சிக்கேற்றபடி ஏற்ற இறக்கம் எல்லாம் எப்படிக் காட்டுகிறீர்களோ அப்படியே அமைக்கலாம் என்றார்கள். இதே மாதிரி வெளி உருவத்துக்கும் இலக்கணம் சொல்லியிருக்கிறார்கள். நாம் சொல்லுகிற கருத்து எப்படி Effective ஆக வடிவம் எடுக்கிறதோ அதுதான் இதனுடைய இலக்கணம்.

அதனால், புதுக்கவிதைக்குப் புதிதாய் இலக்கணம் ஒன்றும் இல்லை. ஏற்கனவே இருக்கின்றன. யாப்பிலக்கண நூல்களைப் படித்து, இதற்கொரு இலக்கண நூல் இல்லையென்று நினைக்கிறோமே தவிர, திறனாய்வாளர்கள் இது பற்றி நிறைய எழுதியிருக்கிறார்கள். நானும் எழுதியிருக்கிறேன்.

**நீங்கள் முற்போக்கு என்று குறிப்பிடுகிறபோது, எனக்கு 'பின் நவீனத்துவம்' (Post Modernism) பற்றிய ஞாபகம் வருகிறது. இது பற்றி இப்போது அதிகமாகப் பேசியும், எழுதியும் வருகிறார்கள். ஆயினும் எவராலும் உருப்படியான விளக்கத்தைக் கூற முடியவில்லை என்றே படுகிறது.**

நான் பின் நவீனத்துவம் பற்றி இங்கு பல மேடைகளில் பேசியிருக்கிறேன். நவீனத்துவம் (Modernism), பின் நவீனத்துவம் (Post Modernism) என்பவற்றுக்கும் Directive படிமுறை உண்டு. அதாவது காரணகாரியத் தொடர்புகள் இருக்க வேண்டும். ஒரு சிறுவன் வளர்ந்து பெரியவனாகிறான், வாலிபனாகிறான், கல்யாணம் பண்ணுகிறான் என்பது மாதிரி; அரும்பு- மொட்டு - மலர்- காய் - கனி என்றாகிறதில்லையா! மேலை நாடுகளின், வாழ்க்கைச் சூழல் காரணமாகவும், கலை இலக்கியங்களில் அவர்கள் கையாண்ட முறைகள் காரணமாகவும், படிமுறையாக வளர்ந்து கொண்டே செல்கிறார்கள். இதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், மேலை நாடுகளில் Romanticism தான் நீண்ட காலமாக ஆட்சி செய்கிறது. ஷெல்லி, கீட்ஸ் ஆகியோர் எழுதிய காலத்திலிருந்து நிலைமை இப்படித்தான் உள்ளது. ரொமான்ரிஸிஸம் என்பது என்னவென்றால், அதீத கற்பனை. அது நன்றாகவிருக்கும். ஆனால், மிகையான கற்பனையாக; வாழ்க்கைக்கு விரோதமாக இருக்கும். இது பற்றிப் பின்பு யோசித்தவர்கள் இயல்பாக இருக்க வேண்டும் என்று ரியலிஸத்துக்கு (Realism) மாறினார்கள். Romanticism ற்கு எதிர்வினையாக Realism (மெய்மையியல்) உருவானது.



Directive அளவுக்கு மீறிப் போனால் எதிர்வினை ஒன்று உருவாகும். பின் Realism அளவுக்கு மீறிப் போனவுடன், என்னடா இது இருக்கிறதையே சொல்கிறார்கள். சுவாரஸ்யமே இல்லை என்று சிந்தித்தார்கள். வாழ்வில் நடப்பவற்றையே பார்த்துக் கொண்டிருப்பது சலிப்பை ஏற்படுத்தும் எல்லைக்குச் சென்றது.

Statuation Point வந்தவுடன்தான் 'சரியலிஸம்' (மீமெய்மையியல்) தோன்றியது. Realism என்பது உண்மையிலேயே மேலோட்டமாக இருக்கிற விடயங்களைச் சொல்வதல்ல. ஆழ் மனதில் (Subconcious mind) மனிதன் பல உண்மைகளை வைத்திருக்கிறான். வெளியே சொல்லப் பயப்பட்டு உள்ளே அடக்கி வைத்திருக்கிறான். அவற்றை எப்போது சொல்கி றானோ அதுதான் Surrealism என்று சொல்லி அதற்கொரு இயக்கம் ஆரம்பித்தார்கள். அது காட்டுத் தீ போல் எல்லோரையும் பற்றிக் கொண்டது.

உலகின் பெருங் கவிஞர்களெல்லாம் அதனைப் பின்பற்றி எழுத ஆரம்பித்தார்கள். இன்று பல இயக்கங்கள் இருந்தாலும் கூட இதன் பாதிப்பு எல்லா இடங்களிலும் உண்டு. அதற்குப் பிறகு இலக்கியத்தைப் பாதித்த இயக்கமாக Structurism தோன்றியது. அவர்கள் என்ன சொன்னார்கள்- எல்லாவற்றையுமே எண்களால் அளந்து சொல்லிவிட முடியும் என்றார்கள். இது புதிதாக இருக்கவே எல்லோரும் அதில் போய் விழுந்தார்கள். ஆனால், நிறைய நாட்களுக்குப் பின்புதான் அது அப்படி முடியாது என்ற நிலைமை உண்டானது. முடியாது என்கிற இந்த நிலைமைதான் Post Modernism. எதையும் நாம் தெரிந்து கொள்ள முடியாது. அதனூடாக நாம் போகலாம், வரலாம் என்று சொன்னதெல்லாம் பொய். செய்ய முடியாது என்கிற அந்த Frustration இருக்கிறது பாருங்கள். அதுக்குத்தான் Post Modernism என்று பெயரை வைத்துக் குழப்பினார்கள். இந்தப் படிமுறை இந்தியாவில் - தமிழ் நாட்டில் ஏற்படவில்லை.

ஒருத்தனுக்கு 50 வயதில் அல்சர் வந்து அவன் மருந்து சாப்பிடுகிறான். அது பின் நவீனத்துவம் (Post Modernism). நம்மவனுக்கு 20 வயது . அவனுக்கு அல்சர் வரவில்லை. ஆனால், இவனும் அல்சர் மருந்தைச் சாப்பிடுகிறான். நாமெல்லாம் Romanticism இல் தான் பெரும்பாலும் இருக்கிறோம். கொஞ்சம் Realism வந்திருக்கிறது. இதுக்கு மேல் சரியலிஸம் - இதை நான் செய்ததுக்கு மேல் யாரும் செய்யவில்லை. தொடவில்லை.

அது ஒரு இயக்கமாக ஆரம்பித்து, நிறையவே பாதித்து, ஒரு எதிர் வினை உண்டாகி, இப்படித்தான் வர வேண்டும். அப்படியெல்லாம் எதுவும் ஏற்படவில்லை. இந்த Post Modernism வெளிநாட்டைச் சார்ந்தது. அங்கு மழை பெய்தால் நாம் இங்கு குடை பிடிக்க வேண்டியதில்லை. மனோவியல் ரீதியாகவோ, சுற்றுப்புறச் சூழல் ரீதியாகவோ, கருத்து ரீதியாகவோ நமக்கு இது ஏற்புடையதல்ல. 'அதை'ப் பார்த்து 'இது' சூடு போட்ட கதையாகச் சில பேர் கதை எழுதுகிறார்கள், கவிதை எழுதுகிறார்கள். ஆனால் Post Modernism உண்மையான ஒரு Development ஆகவோ Evaluation ஆகவோ வரவில்லை என்பதே உண்மை.

**செய்யுள் உரைநடை வடிவம் பெற்றது. உரைநடை வடிவம் புதுக் கவிதையிலிருந்து எவ்விதம் வேறுபடுகிறது?**

செய்யுள், உரைநடை என்பதெல்லாம் வடிவம் சம்பந்தப்பட்ட பெயர்கள். உள்ளடக்கம் சம்பந்தப்பட்டதல்ல. அதனால் புதுக்கவிதையை... நீங்கள் செய்யுளிலும் எழுதலாம். எழுதியிருக்கிறார்கள். புதுக்கவிதை என்பது உள்ளடக்கத்தால் மாறுபடுகிறது என்பதே முக்கியம். வடிவம் என்பது இரண்டாம் பட்சம்தான். அதனால் உரைநடையில்தான் எழுத முடியும் என்பதில்லை. செய்யுளிலும் எழுதலாம். மருத்துவம், ஜோதிடம் எல்லாம் செய்யுளில் எழுதியிருக்கிறார்கள். ஆனால், அவற்றை நாம் கவிதை என்று சொல்வதில்லை.

வடிவம்தான் செய்யுள். ஆனால் Matter கவிதை அல்ல. பழைய தமிழ் செய்யுள்களை எடுத்துப் பார்த்தால் அவற்றில் பெரும்பான்மை இலக்கியமல்ல. ஞாபக சக்திக்காக யாப்பு பயன் படுத்தப்பட்டிருக்கிறது. சிறு கதைகளை எழுத ஆரம்பித்த காலத்திலேயே வசனத்தில்தான் எழுதினார்கள் என்பதால் அது காவியமில்லை என்று சொல்லப்படவில்லை. காவியம், வசனம் என்று வரும்போது சிறுகதையை நாம் எடுத்துக் கொண்டோம். ஆனால், புதுக்கவிதையை மட்டும், 'இன்னும் கூட அது செய்யுளாக இல்லை, இலக்கணத்தில் இல்லை' என்கிறோம். இதை நாம் சிறு கதைகளுக்குச் சொல்வதில்லை. அதை மறந்துவிட்டோம்.

இது உள்ளடக்கம் சம்பந்தமான விடயம்தான். உதாரணமாக, செய்யுளில் இலக்கியமற்றதை எழுத முடியும். உரைநடையில் இலக்கியமானதை எழுத முடியும். உரைநடையில் கவிதை இருந்தால் Poetic ஆக இருக்கிறதென்று சொல்லுவார்கள். அது மாதிரி ஒரு காவியமோ இலக்கியமோ செய்யுளில் இருந்தால், Prosaic (வசனநடை) ஆக இருக்கிறது என்பார்கள். சொல்லக்



கூடிய முறையினால், Prosaic ஆகவோ Poetic ஆகவோ உள்ளடக்கத்தினால் மாறுபடுகிறதே தவிர செய்யுளில் எழுதப்படுகிறது, உரைநடையில் எழுதப்படுகிறது என்பதால் வித்தியாசப்படுவதில்லை.

**படிமம், குறியீடு அங்கதம் போன்ற கவிதை வடிவங்களில் படிமத்தையே நீங்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறீர்களே?**

ஒரு குறிப்பிட்ட வடிவத்தை எடுத்துக்கொண்டு நான் எழுதுவதில்லை. என்னுடைய கருத்தை வெளிப்படுத்த எது உதவுகிறதோ அதை எடுத்துக்கொள்கிறேன். படிமத்தையும் குறியீட்டையும் மிக அதிகமாகப் பயன்படுத்துகிறேன். சில இடத்தில் 'மித்து' பயன்படுத்துகிறேன். அம்மூன்றையும் புதுக்கவிதை உலகம் முழுவதும் பயன்படுத்தவே செய்கிறது. முன்பு நான் 'குறியீடு' என்கிற உத்தியைக் கையாண்டேன். இப்போ படிமத்துக்குத் தாண்டியிருக்கிறேன். படிமம் மிகவும் அழகாக மட்டுமின்றிச் சிறப்பாகவும் இருப்பதாக உணர்கிறேன். மொழி பெயர்க்கவும் படிம உத்திதான் இலகுவாக உள்ளது. மிகச் சிறந்த கவிதைகளைப் படைக்க முடிகிறது. உலகமெல்லாம் அது மாதிரி ஓர் இடத்தை அடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்போடுதான் அந்த முயற்சியில் இறங்கியிருக்கிறேன். இதில் வெற்றி இருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டிருக்கிறேன்.

எப்படியென்றால், National Book Trust நிகழ்த்திய அனைத்திந்திய கவியரங்கம் ஒன்று இந்த ஜனவரியில் நடைபெற்றது. அதில் நான் படித்த கவிதையில் படிமத்தையே கையாண்டிருந்தேன். எல்லோருக்குமே நன்கு பிடித்திருந்தது. தெலுங்குக் கவிஞர் - நாராயணரெட்டி, பிரபல கன்னடக் கவிஞர் ஒருவர்- இவர்கள் எல்லோரும் தாங்கள் இதைத் தமது மொழியில் மொழி பெயர்த்துக் கொடுக்கிறோம் என்று வாங்கிப் போனார்கள்.

எனவே படிமம், எல்லோரையும்; எல்லா மொழிக்காரரையும் ஈர்க்கிறது என்பதையும்; மொழி தாண்டி கருத்து சிதையாமல் இருக்கும் என்பதையும் நான் மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதால், படிமத்தில் எழுத விரும்புகிறேன். அந்தக் கவிதையிலிருந்து குறிப்பிட்ட சில வரிகளைச் சொல்ல வேண்டுமானால்,

நிலா உதிக்கும் போது
வெண் சிறகுடையவர்கள்

கிரணங்களின் வழியாக
இறங்குகிறார்கள்- அவர்கள்
பூக்களின் மீது
கிறுக்கப்பட்டிருக்கின்ற
கெட்ட வார்த்தைகளை
கண்ணீரால் கழுவுகிறார்கள்

இதைப் படித்தவுடன் எல்லோரும் ரசித்தார்கள். மொழி பெயர்க்கவும் சுலபமாக இருந்தது. இதை நானே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பார்த்தேன். இக்கவிதை இப்படியே போய், முடிகையில்...

நிலா உதிக்கும் போது
நீ- எனக்குள்
கொம்ப்யூட்டர் வைரஸ் ஆக
நுழைகிறாய்" என்று முடித்தேன்.

எனவே இதற்குக் கிடைத்த வரவேற்பைக் கண்டு, இந்த வடிவத்திற்கு நான் தற்போது வந்திருக்கிறேன் என்று சொல்லலாம்.

**இந்தக் கவிதை, தொகுதி எதனிலும் வரவில்லையா?**

இல்லை புத்தம் புதிதாக; சூடாக அந்த அரங்கத்திற்குப் போகு முன்பு எழுதிய கவிதை அது.

**சினிமாவுக்குள் நீங்கள் நுழையாதபோதும்; சினிமா உங்கள் எழுத்துக்களைப் பயன்படுத்திக் கொள்கிறது. அது குறித்து...**

தொடக்கத்திலிருந்தே அந்தத் துறை (சினிமா) எனக்குப் பிடிக்கவில்லை. அது ஒரு தரந்தாழ்ந்த துறை என்று அப்போதே உணர்ந்திருந்தேன். நான் படிக்கிற காலத்தில்; கவிதை எழுதுகிறபோதே எனக்கு வாய்ப்பு வந்தது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற படம் வெற்றி பெற்று மிகவும் புகழ்பெற்றதாக ஓடிக்கொண்டிருந்தபோது, அதன் இயக்குநர் ஏ.கே. வேலன் எங்கள் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றுக்குத் தலைமை தாங்க வந்திருந்தார். அன்று நான் நடத்திய நிகழ்ச்சி - மறை மலையடிகள் வில்லுப்பாட்டு. நான்தான் script தயார் செய்திருந்தேன். அந்த நிகழ்ச்சி முடிந்த பின்பு, என்னை மிகவும் பாராட்டிய வேலன் script ஐக் கையோடு வாங்கிப் போய்விட்டார். அது மட்டுமல்லாமல்



நீங்கள் சென்னைக்கு வந்தால் என்னை வந்து சந்தியுங்கள் என்றும் சொன்னார்.

அப்போது (1959) தான் கண்ணதாசனே enter ஆகிறார். எனக்கு திரைத் துறையினுள் நுழைய வேண்டும் என்கிற ஆர்வம் இருந்திருந்தால், நானும் அப்போதே அவரோடு சேர்ந்து enter ஆகியிருப்பேன். அதன் பின்னர், பாரதிராஜா, பாக்யராஜ், மணிரத்னம் போன்ற புகழ்பெற்ற இயக்குநர்கள் கூட அழைத்திருந்தார்கள். மிக அண்மையில் இளையராஜா, ஏ.ஆர்.ரஹ்மான் ஆகியோரும் அழைத்தார்கள். மறுத்து விட்டேன். எனக்கு விருப்பமில்லை.

இவ்வளவு பெரிய Giants அழைத்தும் மறுத்த கவிஞர் என்று எனக்குப் பெயர் இருக்கிறது. அவர்களே கூட என்னைப் பாராட்டியிருந்தார்கள். என்னுடைய கவிதை வரிகளை, ஏறத்தாழ மற்ற எல்லாக் கவிஞர்களும் எடுத்துக் கையாளுகிறார்கள். அந்த வகையில் சினிமாவுக்கு என் கவிதை போய்ச் சேர்கிறது.

**நீங்கள் இவ்வளவு பேரையும் மறுத்ததற்கு மிக முக்கியமான காரணம் என்ன?**

அது ஒரு தொழில் முறை விடயம். பாடல் எனும்போது இயக்குனர் கதாசிரியர் சொல்வதை நான் எழுத வேண்டும். அது ஒரு தொழில். நான் கவிதையைத் தொழிலாகச் செய்ய விரும்பவில்லை. என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு அங்கே இடம் கிடையாது. என்னுடைய கொள்கைகளுக்கு உடன்பாடில்லாத கருத்துக்களைக் கூட எழுத வேண்டிவரும். 'மக்கள் விரும்புகிறார்கள், இது மாதிரி எழுதித் தாருங்கள்' என்று கேட்டால், என்னால் எழுத முடியாது. மிகத் தெளிவாகச் சொன்னால், கவிதையை நான் வியாபாரமாக்க விரும்பவில்லை. அதனால், நான் சில இழப்புக்களை அடைந்திருக்கலாம். பெரியளவில் போய்ச் சேரவில்லை என்று கூட பேசப்படலாம். அதையெல்லாம் நான் இழப்பாக நினைக்க வில்லை. ஏனென்றால் அந்தத்துறையே என்னை மதிக்கிறது. அதில் இருப் பவர்கள் என்னை மரியாதையுடன் வந்து பார்க்கிறார்கள். அதை நான் பெரிய விடயமாகவே நினைக்கிறேன்.

திரைத்துறை குறித்து எனக்கு எந்த எதிர்பார்ப்புகளும் இல்லை. வாய்ப்புகள் வந்தும் நான் போகாமல் இருக்கிறேன். திரைத்துறைப் பாடலாசிரியர்களுக்கு இலக்கிய உலகில் ஒரு மரியாதைக் குறைவு

இருக்கிறது. அது எனக்கு இல்லை. அதிலிருந்து தப்பியிருக்கிறேன் (சிரிக்கிறார்).

**இதை நீங்கள் பகிரங்கமாகவே கூறுகிறீர்களா? அச்சில் வரப் போகிறதே!**

தாராளமாகப் பத்திரிகைகளில் போடலாம். இது பாடலாசிரியர்களே என்னிடம் சொன்ன விடயம்தான். இன்னும் சொல்லப் போனால், என்னுடைய மாணவர் ஒருவர் Production Manager ஆக இருந்ததால் பட பூஜைக்கு அழைத்திருந்தார். அங்கு சென்றபோது, அந்தத் துறையில் இருந்த பல பேர் என்னைப் பார்த்துவிட்டு ''ஐயா நீங்கள் எங்கே இங்கு வந்தீர்கள்? இங்கு வந்திடாதீர்கள், நாங்கள் உங்களை மிக உயர்வான இடத்தில் வைத்திருக்கிறோம். மதித்து வருகிறோம். இது உங்களுக்குரிய இடமல்ல'' என்று கூறியிருந்தார்கள்.

**உங்களுடைய மிகச் சிறந்த குறியீட்டுக் கவிதைகளில் ஒன்று - 'புறத்திணை சுயம்வர மண்டபத்தில் போலி நளன்களின் கூட்டம். கையில் மாலையுடன் குருட்டுத் தமயந்தி.' இதன் மூலம் அரசியல் வாதிகளைச் சாடியிருந்தீர்கள். ஆனாலும் உங்களது 'ஆறாவது விரல்' (பேனாவை கவிக்கோ இப்படித்தான் குறிப்பிடுகிறார்) நேர்மையான அரசியல்வாதிகளை எதிலாவது பதிவு செய்துள்ளதா?**

'சுட்டுவிரல்', 'விதைபோல் விழுந்தவன்', 'முத்தமிழின் முகவரி' இவற்றிலெல்லாம் நான் அரசியல்வாதிகளைப் பதிவு செய்திருக்கிறேன். அண்ணாவையும், கலைஞரையும் இக்காலகட்டத்தின்; தமிழ்நாட்டின் மிகச் சிறந்த தலைவர்களாக அத்தொகுதிகளில் அடையாளம் காட்டியிருக்கிறேன். ஏனென்றால், அவர்கள் இந்த இனத்தினுடைய எழுச்சிக்கு, தமிழின் மறுமலர்ச்சிக்கு நிறைய உதவியிருக்கிறார்கள். அவர்களின் அந்த இயக்கம் உதவியிருக்கிறது. அதே போன்று காந்தி அடிகளார், நேரு, காமராஜர் ஆகியோர் பற்றியும் பதிவு செய்திருக்கிறேன். கவிதைகள் எழுதியது மட்டுமின்றி சொற்பொழிவுகளிலும் உரையாற்றி வருகிறேன்.

**நீங்கள் குறிப்பிட்ட இவர்கள் அல்லது இவர்களைத் தாண்டி; உங்கள் வாழ்க்கை நகர்விலும் சரி அல்லது தொழிலிலும் சரி யாரையாவது முன்னுதாரணமாகக் கொண்டிருக்கிறீர்களா?**



அரசியலில் எனக்கு ஈடுபாடு இல்லாததால், அரசியல் தலைவர்கள் யாரையும் என்னுடைய முன்னுதாரணமாக வைத்துக்கொள்ளவில்லை. அண்ணாவையும், கலைஞரையும் நான் மதிப்பதற்குக் காரணம்- தமிழினத்தின், தமிழ் மொழியின், எழுத்தின் மறுமலர்ச்சிக்கு இவர்கள் காரணமாக இருந்தார்கள் என்பதாலேயே! மற்றப்படி தொழிலில் நான் யாரையாவது மதிப்பதற்கோ, முன்னுதாரணமாக வைத்துக் கொள்வதற்கோ அவசியம் நேரவில்லை.

**இளவயது அப்துல் ரகுமானின் இலட்சியம் கவிஞனாகத்தான் இருந்ததா?**

நான் பிறந்ததிலிருந்தே கவிஞனாக இருந்தேன் என்றுதான் நினைக்கிறேன். வேறெதாகவும் நான் ஆக முடியாது. என் இரத்தத்திலேயே கவிதை இருக்கிறது. என் பெற்றோர்களிடமிருந்து அது வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். அப்போதெல்லாம் அதை என்னால் உணர முடியவில்லை. சிறு வயதிலிருந்தே இசையிலும் எனக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. வாய்ப்புக் கிடைத்திருந்தால் நான் இசைக் கலைஞனாக ஆகியிருக்கக்கூடும். சமீபத்தில் இளையராஜாவைச் சந்தித்தபோது இப்படிக் கூறியிருந்தேன். ''என்னுடைய First Love - Music தான். ஆனால், அவள் எனக்குக் கிடைக்கவில்லை. அவள் தங்கை 'கவி'தான் கிடைத்தாள். கல்யாணம் செய்து கொண்டேன்'' என்று கூற அவர் சிரித்துக் கொண்டே ''இரண்டுமே ஒன்றுதான்'' என்றார். அதனால், சிறுவயது முதலே கவிதையில் இனந்தெரியாத ஒரு ஈடுபாடு எனக்குள்ளிருந்து வளர்ந்து வெளிப்பட்டதாகத்தான் சொல்ல வேண்டும். வேறெந்த மனிதனாகவும் நான் ஆகியிருக்க முடியாது.

**சிறந்த கவிஞர்கள் என்கிற அடையாளம் எந்த எல்லைகளையெல்லாம் கடந்து சாத்தியமாகிறது என்று நினைக்கிறீர்கள்?**

ஒரு 'ஈனுவரோஸிட்டி' என்று சொல்கிற அமைப்பு கவிதைக்குத்தான் உண்டு. மற்றைய இலக்கியங்களில் சுற்றுப்புறம், இனம், மொழி, நாடு என்கிற எல்லைகள் வந்து ஓரளவு சுருக்கும். கவிஞனல்லாத, இலக்கியவாதியல்லாத இடங்களில் இதனுடைய கட்டுப்பாடுகள் அதிகம். ஆனால், இலக்கியவாதிகள், கலைஞர்கள், கவிஞர்கள்- இவர்களுக்கு இந்த எல்லைகளால் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. அவர்கள்

மேகங்கள், பறவைகள் மாதிரி கீழே கோடு கிழிக்கப்பட்ட எல்லைகளைத் தாண்டிப் பறந்து செல்லக் கூடியவர்கள்.

உலகம் முழுவதிலும் உள்ள மனிதனுடைய அடிப்படை உணர்வு ஒன்றுதான் என்று ஏற்கனவே சொன்னேன். இங்கே இந்த அடிப்படை உணர்வு மொழியைத் தடுக்கிறதென்றாலும் கூட, இந்த உணர்வுகளைப் பாடுகிறபோது, எந்த மொழியினூடாகவும் கொண்டு போகலாம். இதனால்தான் பல மொழிக் கவிதைகளை நாம் தேடிப் படிக்கிறோம். நமது கவிதைகளைப் பிறமொழிக்காரன் மொழி பெயர்த்துப் படிக்கிறான். மனித வாழ்க்கை என்று சொல்கிறபோது அகிலத்துவம் இருக்கிறதல்லவா! இது வேறு யாருக்குமே கிடைக்காத அரிய வாய்ப்பு. இதிலும் கூட, கலைகள் எல்லாவற்றிலும், உயர்ந்த இடத்தில் கவிதையே இருக்கிறது என்று சொல்வார்கள்.

இசையும் உயர்ந்ததுதான். ஆனால், கவிதைக்கென்றோர் தனி இடம் இருக்கிறது. உலகம் முழுவதும் பார்த்தீர்களானால், இசைக் கலைஞர்கள் மிகவும் குறைவு. அதை நாம் நேரடியாகக் கேட்க வேண்டும் என்கிற ஒரு கட்டாயமும் இருக்கிறது. கவிதை அப்படியல்ல. மொழி பெயர்த்தும் கேட்கலாம். இசையையும் நாம் எந்த நாட்டிலும் கேட்கலாம் என்பது வேறு விடயம். ஆனால், அந்தந்த நாட்டுக்குரிய அடையாளங்கள் இருக்கின்றன.

அது சில பேருக்கு ஒத்துவராது. கர்நாடக இசையைக் கொண்டுபோய் நீங்கள் மேலை நாடுகளில் ஒலிக்க வைத்தீர்களானால், அது சிலருக்குப் பிடிக்கும்; பலருக்குப் பிடிக்காது. ஆனால், இலக்கியம் - கவிதை அப்படியல்ல. அதன் இயல்பிலேயே அடிப்படை மனித உணர்வுகள் அமைந்துள்ளன. அவை எல்லா எல்லைகளையும் கடந்து செல்லக் கூடியன. அவற்றுள் சோகம் என்பது ஒன்று. எதனால், அது வருகிறது என்பது வித்தியாசப்படலாம். ஆனால் மனித சோகம்- மனிதப் பிரச்சினை என்பது ஒன்றுதான். அதை எல்லாக் கவிஞர்களும் பாடுவதால், அவர்கள் அகிலத்துவம் கடந்தவர்களாக உயரத்தில் இருக்கிறார்கள்.

**கவிதையின் மொழியும், வாசகனின் மனமும் குறித்து உங்கள் கணிப்பு...!**

இது மிகப் பெரிய விடயம். நாம் எழுதுவதே வாசகனிடம் போய்ச் சேர்வதற்குத்தான். அப்பப்போ வாசகனின் மனோநிலையை Study



பண்ணுவது பெரிய சிரமம். மிகவும் கீழ் மட்டத்திலுள்ளவர்களுக்கு எழுத முடியாது. மிகவும் மேலே உள்ளவர்களுக்கு எழுத வேண்டியதில்லை. நடுவில் இருப்பவர்கள்- இவர்களிலும் மேல் தட்டில் இருப்பவர்களுடன் போய் ஒட்டிக் கொள்பவர்கள், கீழ் தட்டில் இருப்பவர்களுடன் போய்ச் சேர்பவர்கள் என்று இரண்டாகப் பிரித்தால் கூட, இவற்றுக்கு நடுவில் இருப்பவர்கள்தான் நமக்கு வேண்டியவர்கள்.

இவர்களைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்குரிய மொழியைக் கவனத்துடன் கையாள்கிறேன். 'பால்வீதி' எழுதும்போது நான், அறிவு ஜீவிகளுக்காகத்தான் (Intellectuals) எழுதினேன். புரியாமல் எழுதி பிரயோசனம் இல்லை என்பதால் அந்தப் போக்கினை இப்போது விட்டு விட்டேன். பெரிய விடயங்களைப் புரியும்படியாக எழுத வேண்டும், என்பதில் வெற்றியடைந்திருக்கிறேன். எனது கட்டுரைகள், கவிதைகள் குறித்து இந்தக் கருத்தைப் பலர் சொல்கிறார்கள். இதனைச் சாதாரணமாக அடைய முடியாது. மிகவும் கஸ்டப்பட்டு அடைய வேண்டிய இடம் அது. அதாவது அந்த மொழியை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். எப்படிச் சென்னால் எடுத்துக் கொள்வார்கள் என்பது, ஒரு கலை இலக்கியவாதி serious ஆகக் கேட்டுக் கொள்ள வேண்டிய விடயம்.

**மதங்களின் நிலைப்பாடு குறித்து உங்கள் கருத்து என்ன?**

நெடுங்காலமாகவே மதம் என்பது தவறான ஒரு கருத்தில்தான் புரிந்து கொள்ளப்பட்டு, பின்பற்றப்பட்டு வருகிறது. உண்மையில் மதங்களின் நோக்கம் மனிதர்களைச் சீர்திருத்தி ஒழுங்குபடுத்துவதுதான். ஆனால், இன்று அது வெறியாகவே இருக்கிறது. மதம் என்றால், சமஸ்கிருதத்தில் வெறி என்று அர்த்தம். மதத்தைப் படித்து, புரிந்து அதைக் கடைப்பிடிப்பவர்களாக இன்று யாருமே இல்லை. பலஸ்தீனத்தில் முஸ்லிம்களும், யூதர்களும் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். அது அரசியல் சண்டையாகத்தான் இருக்க வேண்டுமே தவிர மதச் சண்டையாக இருக்க முடியாது. இந்தச் சண்டை நாடு சம்பந்தப்பட்டதே தவிர மதம் சம்பந்தப்பட்டதல்ல. மதம் சம்பந்தப்பட்டதென்றால், யூதர்களைக் கிறிஸ்தவர்கள் ஆதரிக்கக் கூடாது. ஆனால், ஐரோப்பிய சமூதாயம் முழுவதும் இஸ்ரேலுக்கு ஆதரவு கொடுக்கிறது. யேசுபிரானைச் சிலுவையில் அறைந்தவர்கள் என்று கிறிஸ்தவர்கள் யூதர்களைப் பகைவர்களாகத்தானே நினைப்பார்கள். இதிலிருந்து அரசியலை நீங்கள் புரிந்துகொள்ளலாம்.

**இந்திய அரசியலிலும் இதே விடயம் அப்படியே இருக்கிறதே!**

ஆம். இங்கும் கூட முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் ஒரு பெரிய நெருக்கடி இருந்து கொண்டேயுள்ளது. அயோத்தியில் கோயில் கட்டி, ராமருக்கு அரியாசனம் கொடுக்க வேண்டுமென்கிறார்கள். இராமருக்கு அரியாசனம் கொடுக்கிறார்களோ இல்லையோ, அவர்களின் அரியா சனத்தை அடைவதற்கு இதை ஒரு வழியாக வைத்து அடைந்து விட்டார்கள். Central Government ஐப் பிடித்து விட்டார்கள். இந்து மத உணர்வை அரசியலுக்குப் பயன்படுத்திவிட்டார்கள். (பா.ஜ. கட்சி ஆட்சியின் போது அதாவது கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் 'கவிக்கோ' கூறிய பதில் இது.)

**இதே விடயத்தை இலங்கையில் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

அங்கு நடப்பதையும் பௌத்தர்களுக்கும், சைவர்களுக்கும் இடையில் நடைபெறுகிற சண்டையாக நினைக்க முடியவில்லை. பௌத்தர்கள் மத ரீதியாகச் செயற்படுகிறார்கள் என்று நினைக்க முடியாது. அவர்களும் அர சியல் ரீதியாகவே செயற்படுகிறார்கள். பௌத்தர்களின் மத உணர்ச்சி யினூடாகவே அரசியல் நடைபெறுகிறது. தமிழனின் இன உணர்வோடு தமிழீழம் கேட்கப்படுகிறது. இதுவும் அரசியல்தான். அதனால், மதத்தை எல்லோரும் தவறாகப் பயன்படுத்துகிறார்களே தவிர; சிறந்த மதவாதி யாக யாரையும் கூற முடியவில்லை. மதத்தைப் படித்து, புரிந்து, கடைப்பிடிப்பவர்களாக, நூற்றுக்கு 99% பேரும் இல்லை.

**மீதி 1% இல் நீங்கள் யாரையாவது அடையாளம் கண்டிருக்கிறீர்களா?**

இதைக் குறிப்பிடுவது சிரமம். ஆனால் அந்தந்த நாடுகளில் இவர்கள் இருக்கக்கூடும் - அபூர்வமாக!

**மதம் சம்பந்தமான உங்கள் கருத்து பெரும்பாலும் ஜி. கிருஸ்ண மூர்த்தியின் கருத்துக்களுடன் ஒத்துப் போகிறது. அவர் பற்றிய உங்கள் மனப் பதிவு!**

நான் அவரை மதிக்கிறேன். அவருடைய கருத்துக்களில் எனக்கு ஒரே ஒரு இடத்தில் வேறுபாடு உண்டு. அதாவது, 'உண்மையை நீ அறிய வேண்டும்' என்று சொல்வது அவருடைய அடிப்படையான விடயமாயி ருக்கிறது. இதுவொன்றும் புதிதல்ல. ஏற்கனவே ஞானிகள் சொன்ன



விடயம்தான். ஆனால் நான் அதில் எவ்வாறு முரண்படுகிறேன் என்றால், உண்மையைத் தானாகவே அறிவதென்பது; பக்குவமான தேடலுள்ள சிலரால் மட்டுமே செய்யக்கூடிய விடயம். எல்லோருக்கும் உரிய விடய மாக இதைச் சொல்ல முடியாது. எனவே இன்னொரு Level பிரிக்க வேண்டியிருக்கிறது. அப்போது கீழேயுள்ளவர்கள் என்ன செய்ய முடியும்! அவர்கள் யாருடைய கையையாவது பிடித்துக் கொண்டுதான் நடக்க வேண்டும்.

நடை பயிலும் குழந்தை நடந்து, விழுந்து, எழுந்து மீண்டும் நடக்கும் போதுதான் 'நீயே நட' என்று சொல்ல முடியும். ஆகவே, இரண்டு நிலை கள் இருந்தே ஆகவேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதாவது சாதாரண சாமானியர்களுக்கு ஒரு நிலை, பக்குவமானவர்களுக்கு ஒரு நிலை. சாதாரண நிலையில் உள்ளவர்கள், பெரியவர்களுடைய வழி காட்டுதலின் படிதான் நடக்க வேண்டும். பின்னர் வளர்ந்து பக்குவ மடைந்து விட்டார்களானால் அவர்களே அதைத் தெரிந்து கொண்டு நடக்க வேண்டும். முடியும்!

**'எதிர்ப்பிலேயே வாழுங்கள்' என்று கூறிய 'ஓஷோ' எனப்படுகின்ற 'ரஜனீஷ்' பற்றி...?**

ஓஷோ என்னை மிகவும் பிரமிக்க வைக்கின்ற ஒருவர். உலகளவிலான பல மெஞ்ஞானிகளின் நூல்களைப் படிக்கிறேன். ஆனால், ஓஷோவின் சிறப்பு என்னவென்றால்; ஞான நூல்கள் எவை என்பதை நாம் தேடிக் கற்க வேண்டிய அவசியமில்லை. ஓஷோவினுடைய நூல்களைப் படித்தால் தெரிந்து கொள்ளலாம். அவ்வளவு நூல்களையும் அவர் அடையாளம் காட்டுகிறார் என்பது முதலாவது விடயம்.

இரண்டாவது, அவர் மதம் கடந்து நிற்கிறார். இதைப் பலரிடம் நாம் காணமுடியாது. மூன்றாவது, மிக உயர்ந்த தத்துவக் கருத்துக்களை மிக அழகான நடையில் சொல்கிறார். இந்த விடயங்கள்தான் அவரை வெற்றியடையச் செய்துள்ளது. அவரளவுக்குப் படித்தவர்கள் நிறையப் பேர் இருக்கலாம். ஆனால், மதம் கடந்தவர்களாக இருக்கமாட்டார்கள்.

நீங்கள் ஜி. கிருஸ்ணமூர்த்தி பற்றிச் சொன்னீர்களல்லவா! அவரை நாம் ஓஷோவைப் படிப்பது போல் படிக்க முடியாது. Dry ஆக இருக்கும். நிறைய சிரமப்பட்டுப் படிக்க வேண்டும். அதற்கென அமர்ந்து Concen- trate பண்ணிப் படிக்கவேண்டும். ஆனால், ஓஷோவின் நூல்கள், படிப்ப

தற்கு நல்ல சுவாரஸ்யமாக இருக்கும். அவருடைய ஆங்கில நடை, ஏறத் தாழ பைபிள் நடையோடு ஒத்ததான, அழகிய கவிதை நடை- கவிதைச் சிந்தனையாக இருக்கும். அதனால் அவருக்கும் எனக்கும் Wavelet ஒரே மாதிரி இருப்பது போல் எனக்கொரு Feeling இருக்கிறது. எனது கருத் துக்களும் அவருடைய கருத்துக்களும் கிட்டத்தட்ட ஒத்தவையாகவே இருக்கின்றன.

ஆனால் அவருடன் கருத்து வேறுபாடும் உண்டு. Apart from those differences - நான் சொல்வது.

**நீங்கள் குறிப்பிடும் கருத்து வேறுபாட்டை, காலம் தீர்மானிக்கிறதா? அல்லது ...!**

காலத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ஏனென்றால் இந்த விடயங்கள் மெஞ்ஞானம் சம்பந்தப்பட்டவை. மெஞ்ஞானக் கருத்துக்களுக்குக் காலம் கிடையாது. விஞ்ஞானமும், சமூகவியலும் மாறலாம். ஆனால், மெஞ்ஞானம் மாறாது. உதாரணம் சொல்வதாக இருந்தால், Philosophy யில் Ego வை நீக்க வேண்டும் என்று எல்லா மெஞ்ஞானிகளும் சொல்லி இருக்கிறார்கள். இந்த Ego ஞானத்தைத் தடுக்கிறது என்கிறார்கள். இதில் எனக்குக் கருத்து வேறுபாடு உண்டு. எப்படியென்றால், மனிதனுக்கு எதெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதெல்லாம் அவனுக்கு உதவக்கூடியது என்பதுதான் எனது Philosophy. Ego இல்லையென்றால் மனிதன் வளர மாட்டான். அவனுடைய வளர்ச்சிக்கு Ego தான் காரணமாயுள்ளது.

**என்ன சொல்ல வருகிறீர்கள்?**

மனிதன் ஒரு குறிப்பிட்ட வயது வரை வளர்வதற்கு அவனுக்கு Ego வேண்டும் என்கிறேன். இதற்கு உதாரணம் சொன்னால் ரொக்கெட் (Rocket) புவியீர்ப்பு விசையைத் தாண்டிப் போக வேண்டுமானால் எரிபொருள் அடங்கிய பெரிய Tank ஒன்று தேவை. அது ரொக்கெட்டின் கீழே பொருத்தப்பட்டிருக்கும். அந்தத் தாங்கி இல்லை என்றால் ரொக்கெட் மேலே ஏறாது. ஆனால் தாங்கியுடன் மேலே ஏறிய ரொக்கெட் குறிப்பிட்ட எல்லையைத் தாண்டியவுடன் அதைக் கழற்றி விடவேண்டும். ஏனென் றால் தாங்கி திரும்பவும் ரொக்கெட்டைக் கீழே இழுக்கும். மேலே போன பிறகு அதற்கு இது தேவையில்லை. ஆகவே இது போல் தான் குறிப் பிட்ட ஒரு நிலை வரைக்கும் Ego வேண்டும் என்கிறேன்.



இரண்டரை வயதிலேயே குழந்தைக்கு Ego ஆரம்பிக்கிறது என்கிறார்கள் உளவியலாளர்கள். குழந்தைகள் வளர Ego வேண்டும் என்பது போன்ற கருத்து வேறுபாடுகள் அவருக்கும் எனக்குமிடையிலுண்டு.

**உங்களுக்குள் Ego எந்த நிலையில் இருக்கிறது?**

(சிரித்துக் கொண்டே) நான் புவியீர்ப்பு விசையைத் தாண்டி மேலே போய் விட்டேன். அந்த Tank ஐக் கழற்றி விட்டாயிற்று.

**இலங்கையை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள் என்கிற வகையில், அங்குள்ள அரசியல் குறித்து ...?**

அது குறித்த என்னுடைய முழு எண்ணங்களையும் 'நரம்பறுந்த யாழ்' என்ற தொகுதியில் எழுதியிருக்கிறேன். அதாவது, 'பூலோக சொர்க்கம்' என்று இலங்கைக்குப் பெயர். 'ஏதேன் தோட்டம்' அங்குதான் இருந்த தாக ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அப்படியிருந்த சொர்க்கம் நரக மாக மாறிவிட்டது என்கிற வேதனை எனக்கு இருக்கிறது. எல்லோரும் பொதுவாகப் பார்க்கிற கோணத்தில் இல்லாமல் அங்குள்ள எல்லோரை யும் நான் மனிதர்களாகவே பார்க்கிறேன். மனிதர்கள் எங்கிருந்தாலும் பிரச்சினை இருக்கவே செய்யும். ஆனால் ஒருவரையொருவர் நெடுங்காலம் அடித்துக் கொண்டிருக்கும் போர் நல்லதல்ல. எத்தனை காலம்தான் போரிட்டுக் கொண்டே இருப்பது!

Give and Take Policy மாதிரி சில விட்டுக் கொடுப்புகளைச் செய்து கொண்டு மனிதர்களெல்லோரும் நிம்மதியாக இருக்கலாம். இதற்குப் பல பேர் அமர்ந்து யோசிக்க வேண்டும். இவர்கள் வீம்பு பிடிப்பது மக்க ளுக்கு நல்லதல்ல. அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதென்பது மிகப் பெரிய விடயம். இதற்குச் சில பேர் உதவ முன் வரவேண்டும். ஆனால் அப்படி உதவ முன்வருவார்கள் என்று எனக்குத் தோன்ற வில்லை. எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுகிறார்கள். ஆனால், தண்ணீர் ஊற்றுபவர்கள்தான் வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

*08.08.2004*



# சுதாராஜ்

மனித உணர்வுகளின் மறை பக்கங்களை ஆர்ப்பாட்டமில்லாத தன் எழுத்தினூடாகப் படம்பிடித்துக் காட்டுகிற படைப்பாளி சுதாராஜ்! வாழ்வும், எழுத்தும் சம கோட்டில் தான் பயணப்பட வேண்டும் என்பதில் அவதானமாக இருப்பவர். எழுத்து எதையெல்லாம் செய்யும் என்பதற்கு இவர் கொண்டிருக்கிற கருத்துக்கள் யதார்த்தமானவையும்; தரம் வாய்ந்த பேனாக்காரனுக்கு இருக்க வேண்டிய வலுவான உள முத்திரையுமாகும்.

எழுபதுகளின் ஆரம்பத்தில் எழுத வந்தவர், நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை உள்ளடக்கிய ஏழு தொகுப்புக்கள் (பலாத்காரம், கொடுத்தல், ஒரு நாளில் மறைந்த இரு மாலைப் பொழுதுகள், தெரியாத பக்கங்கள், காற்றோடு போதல், சுதாராஜ் சிறுகதைகள், மனித தரிசனங்கள்), நான்கு சிறுவர் இலக்கிய நூல்கள் (காட்டில் வாழும் கரடி நாட்டுக்கு வந்த கதை, பறக்கும் குடை, கோழி அம்மாவும் மயில் குஞ்சுகளும், சுட்டிப் பையனும் கெட்டிக்காரக் குட்டிப் பூனையும்), இரண்டு சிங்கள மொழி பெயர்ப்பு நூல்கள் (காட்ட தொஸ் பவறமுத?, நொபெனனி பத), 'இளமைக் கோலங்கள்' என்றொரு நாவல் என சுதாராஜ் படைத்துள்ளவற்றின் பட்டியல் மிக நீளமானது. தவிரவும், இவருடைய சில சிறுகதைகள் ஆங்கில மொழியிலும், ஒரு சிறுகதை ரஷ்ய மொழியிலும் கூட மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.



'கொடுத்தல்' எனும் சிறுகதைத் தொகுப்புக்காக சாகித்திய மண்டல விருதும், 'தெரியாத பக்கங்கள்' தொகுப்புக்காக விபவி கலாசார மையத்தின் விருதும் இவருக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனந்த விகடன் வைர விழாப்போட்டியில் (1992) இவர் எழுதிய 'அடைக்கலம்' சிறுகதை முதற்பரிசைப் பெற்றது. பின்னர் விகடன் தேர்ந்தெடுத்துத் தொகுத்த சிறுகதைகளுக்குள் 'அடைக்கலமும்' அடக்கப்பட்டது. அத்தொகுப்பு இரண்டு லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகிச் சாதனை படைத்தது. இந்த 'அடைக்கலம்' சிறுகதையைத் தழுவியே 'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படம் எடுக்கப்பட்டதாகவும், அது தொடர்பாக எழுந்த சர்ச்சைகளும் அதிகம். ஆனால் இவையெல்லாம் நடந்த போது தன்னியல்பாய் அமைதி நாகரிகம் காத்து மனித இலக்கணத்துக்கு வலுவும், அழகும் சேர்த்தவர் சுதாராஜ்.

அடிப்படையில் மின்னணு பொறியியலாளரான இவர், பத்துக்கு மேற்பட்ட நாடுகளில் பணி புரிந்திருக்கிறார். அங்கெல்லாம் சந்தித்த சில விந்தையான மனிதர்களுடனான அனுபவங்களை மிகை, குறைப்படுத்தாமல் 'மனித தரிசனங்கள்' (2006) என்ற நூலில் எழுதியிருக்கிறார்.

மனிதர்களின் உணர்வு நுட்பங்களை உன்னிப்பாக நோக்கும் இவர், படைப்பாளுமைக்குப் பதிப்பாளுமையும் அவசியமென்று கருதியிருக்கக்கூடும்!

சிறுவர் இலக்கிய நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியீடு செய்யும் 'தேனுகா' பதிப்பகத்தின் (புத்தளம்) ஆசிரியராகவும் இருக்கிறார். இதுவரையில் இப்பதிப்பகத்தின் மூலம் 15 நூல்கள் வெளிவந்துள்ளன. தவிரவும் 'தேனுகா' பதிப்பகத்தின் அனுசரணையுடன் இலங்கைப் படைப்பாளிகளின் சிறந்த நூல்களை இனங்கண்டு வருடந்தோறும் விருது வழங்கும் இலக்கியப் பணியையும் ஆற்றி வருகிறார். ஒரு மனித இலக்கணம், இலக்கியம் பற்றிப் பேசிய போது...

### எழுத்துலகில் 'மனிதாபிமானம்' என்பது என்ன?

ஏனைய மனிதர்களையும் பரிவுடன் நோக்கும் ஓர் உணர்வு நிலை இது. எழுத்துலகில் உள்ளவர்களெல்லாம் பொதுவாக மனிதாபிமான உணர்வு கொண்டவர்களாகவே இருப்பார்கள். ஆனால் இது அவர்களது எழுத்தில் எந்த அளவுக்குப் பதியப்படும் அல்லது அவர்களது எழுத்தில் எவ்வளவு தூரம் பிரதிபலிக்க வேண்டும் என்பதற்கு எவ்வித நிபந்தனையும் இல்லை. அதாவது மனிதாபிமான உணர்வுடைய எழுத்தாளனின் எழுத்துக்களிலெல்லாம் மனிதாபிமானம் கலந்திருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்க முடியாது.

அடிப்படை உரிமைகள் பற்றிச் சொல்லப்படும் போது அல்லது எழுதும் போது மனிதாபிமானம் அடிபட்டுப் போகவும் வாய்ப்புண்டு. உதாரணமாக, ஆரம்ப காலத்தில் 'பலாத்காரம்' என்றொரு சிறுகதையை எழுதினேன். 'அக்கிரமங்கள் தலைதூக்கும் போது அவற்றை அழிப்பதற்காகப் பாவிக்கப்பட வேண்டிய ஆயுதம்தான் பலாத்காரம்' எனும் கருத்தை இக்கதை பிரதிபலிக்கிறது. ஓர் உண்மைச் சம்பவத்தையொட்டி எழுதப்பட்ட கதைதான். இதில் பலாத்காரம் (அதாவது வன்முறை) நியாயப் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மற்றவர்களைப் (அவர்கள் எப்படிப்பட்டவராயினும்) பாதிக்கும் காரியங்களைச் செய்வது மனிதாபிமானமல்ல. எனினும் இவற்றை எழுத்தில் கொண்டு வர வேண்டிய தேவை இருக்கிறது. இன்னுமொன்றை இங்கு கூறலாம். தலித்துக்களுடைய பிரச்சினையை தலித்துக்கள்தான் எழுத வேண்டுமென்கிற ஒரு கருத்து சிலரால் முன்வைக்கப்படுகிறது. அடக்குமுறைகள், கொடுமைகளால் பாதிக்கப் பட்டவர்கள் அவற்றை சிறப்பாக வெளிக்கொணரலாம் என்ற வகையில் இது சரியாக இருக்கலாம். எனினும் பல உயர் சாதி எழுத்தாளர்கள் தலித்துக்களின் பிரச்சினைகளை எழுதுகிறார்கள். இவர்களெல்லாம் அவற்றை எழுதுவதற்குக் காரணம் மனிதாபிமான உணர்வுதான்.

### நீங்கள் எழுத வந்ததன் நோக்கம்...

மானிட நேயம், மனிதாபிமானம், மற்ற உயிர்களை நேசித்தல், அன்பு செலுத்துதல், இல்லாதவர்களுக்குக் கொடுத்தல், இரங்குதல், அடக்குமுறைகளுக்கும், கொடுமைகளுக்கும் எதிர்ப்புக் குரல் கொடுத்தல், இயற்கையை ரசித்தல், இயற்கையோடு சேர்ந்து வாழ்தல், இந்த உணர்வுகளை வாசகர்களுக்கும் தொற்ற வைத்தல்.... இவற்றை விட வேறு என்ன?



### ஈழத்து இலக்கியப் போக்கில் 'சீரழிவு' என்று எதை நினைக்கிறீர்கள்?

இங்கு எழுத்தாளனே முதலீடு செய்து தனது புத்தகத்தை அச்சுப் பதிக்க வேண்டியுள்ளது. எழுத்தாளனே பதிப்பாசிரியனாக இருக்கின்றான். எழுத்தாளனே புத்தகத்தை வெளியீடு செய்கிறான். எழுத்தாளனே புத்தக விநியோகஸ்தனாகவும் உள்ளான். தனது புத்தகங்களை தானே சுமந்து திரிந்து விற்பனை செய்கிறான். எழுத்தாளனே வாசகனாகவும் உள்ளான். ஓர் எழுத்தாளன் தனது எழுத்துக்களை நூல் வடிவில் கொண்டு வர விரும்புவது வெறும் ஆசையினால் அல்ல. தான் கூறும் கருத்துக்கள் பல மக்களையும் சென்றடைய வேண்டுமென்ற விருப்பம் சகல எழுத்தாளனுக்கும் உண்டு. அவை புத்தகமாக பதிப்பில் வந்து அடுத்தடுத்த பரம்பரைக்கும் பயன்பட வேண்டுமென விரும்புகிறான்.

ஈழத்து இலக்கியத்துக்கு நீண்ட கால வரலாறு உண்டு. ஆனால் ஓர் எழுத்தாளனின் நல்ல தரமான புத்தகம் கூட, குறைந்தது ஐந்நூறு பிரதிகளாவது விற்பனை செய்யக்கூடிய ஒழுங்கமைப்போ, வாய்ப்போ இங்கு இல்லை. இதனால் எழுத்தாளர்கள் புத்தக வெளியீட்டு விழாக்களை ஏற்பாடு செய்ய கொடையாளிகளின் கைகளை நாட வேண்டியுள்ளது. கவனியுங்கள், புத்தக வெளியீட்டு விழாக்களுக்கும் குறிப்பிட்ட ஒரு சிலரே வருகிறார்கள். இங்கு ஈழத்து எழுத்துக்களை வாசிப்பவர்களின் தொகை குறைவு. ஈழத்து இலக்கிய வளர்ச்சியை இந்தக் காரணங்களெல்லாம் பாதிக்கின்றன.

### நமது வாசகர்களுக்கு நாம் இன்னமும் நவீன இலக்கியத்தை எழுதிக் காட்டவில்லை என்பதன் விளைவுகளாகவும் இவற்றைக் கருதலாமா?

அப்படியல்ல. நவீன இலக்கியம் ஈழத்தில் சிறப்பான வளர்ச்சியை அடைந்துள்ளது. இலங்கையர்கோன் போன்றவர்களின் காலத்திலிருந்தே சிறுகதை இலக்கியமும், நாவல் இலக்கியமும் படிப்படியான வளர்ச்சியைப் பெற்று வந்துள்ளன. இலக்கியத்தின் மூல வளமே மக்கள் வாழ்வுதான். மக்கள் வாழ்வு பற்றி, மனிதர்களைப் பற்றி, மரங்களையும் வேர்களையும் பற்றி, குச்சு ஒழுங்கைகள் குடிசைகள் பற்றி, பஞ்சமர்கள் பற்றி, சின்னையா கந்தையா பற்றியெல்லாம் புழுதிச் சொற்களால் புனையப்பட்ட பல ஆக்கங்கள் இங்கு வந்துள்ளன. இலக்கியத்தின் அடிப்படையான இந்தத் தளங்களில் நின்று புதிய கோணத்திலும், புதிய பார்வையுடனும் எழுதப்பட்ட நாவல்களும், சிறுகதைகளும் இங்கு நிறைய உள்ளன.

ஆனால் இவையெல்லாம் வாசிக்கப்படவில்லை என்பதுதான் பெரிய சோகம். இவ்வாறான நல்ல படைப்புக்கள் வாசகர்களிடத்தில் தெரியப் படுத்தப்படவில்லை. அல்லது பிரபல்யப்படுத்தப்படவில்லை. மாறாக, இங்கு பிரபல்யப்படுத்தப்பட்டவை எல்லாம் தரம் உயர்ந்தவையும் அல்ல. இதற்கு விமர்சகர்களின் பார்வையும் ஒரு காரணம். விமர்சனக் கண்ணோட்டமும் இங்கு நேர்மையான வளர்ச்சி அடையவில்லை. தொன்று தொட்டுச் சொன்னவற்றையே திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். இதனால் புதியவர்களின் தரமுயர்ந்த படைப்புக்கள் வாசகர்களிடத்தில் அறியப்படாமல் போய் விடுகிறது. குறிப்பிடத்தக்க ஒரு சில விமர்சகர்களைத் தவிர இங்கு விமர்சனத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள யாரும் வரவில்லை போல் இருக்கிறது.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரையில் அங்குள்ளவர்களுக்கு இங்குள்ள இலக்கியத்தளங்கள் பற்றித் தெரிவதில்லை. அவற்றை அறிந்து கொள்ளவோ, பிரபல்யப்படுத்தவோ ஆர்வம் கொள்வதுமில்லை. அவர்கள் அங்குள்ளவர்களின் நவீனத்துவ, பின் நவீனத்துவ ஆக்கங்களை மட்டும் பிரபல்யப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கு குறுங் குழுக்களாக இயங்கிக் கொண்டிருக்கும் புதுமை மோகிகளின் படைப்புக்களையும், விமர்சனங்களையும் எமது இலக்கியகாரர்களுக்கும், வாசகர்களுக்கும் அறியச் செய்வதில் பெருமைப் படுகிறார்கள். எமது நவீன இலக்கியங்கள் சரியாக வாசகர்களுக்குக் காட்டப்படவில்லை என்பதுதான் உண்மை.

**கோட்பாடு சார்ந்த இலக்கியங்களைப் படைப்பவர்கள் தாம் இருக்கின்ற அல்லது ஆதரிக்கின்ற கட்சிகளின் விருத்தியையே கருத்தில் கொள்கிறார்கள். இங்கே சமுதாய நோக்கு அடிபட்டுப் போகிறதே! இது சரிதானா?**

பொதுவாக எந்தக் கட்சிக்கும் சமூக நோக்கு கொண்ட கொள்கைகளே இருக்கும். (கட்சியில் உள்ளவர்கள் அவற்றை எவ்வளவு தூரம் இதய சுத்தியுடன் கடைப்பிடிக்கிறார்கள் என்பது வேறுவிடயம்). இவ்வாறு கட்சியின் கொள்கைப் பிடிப்பில் பற்றுக் கொண்டவர்கள் தங்கள் இலக்கியங்களில் அவற்றைப் படைப்பது தவறல்ல. சமுதாய நோக்கு அடிப்பட்டுப் போய்விடும் என்று கூற முடியாது.

**இல்லை. நடைமுறையில் நாம் இத்தகைய படைப்பியல்புகளை/ படைப்பாளிகளின் இயல்புகளைக் காண முடியவில்லையே! நம் நாட்டில் இதற்குப் பொருத்தமாக யாரைக் குறிப்பிட்டுச் சொல்வீர்கள்?**



ஒரு கொள்கையில் ஈடுபடும் போது அதுபோன்றே அவரது வாழ்க்கையும் அமைந்திருக்கும் என எதிர்பார்ப்பது இயல்பானது தான். எழுதுவது போலவே வாழாவிட்டால் அது போலித்தனமானது - கொள்கை ஒன்று (எழுத்து ஒன்று), செயல் இன்னொன்றாக மாறுபட்ட இயல்புகளுடன் வாழ்பவர்களை நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் இவ்வாறான படைப்பாளிகளின் இயல்புகள் பற்றி பழம்பெரும் இலக்கியங்களைப் படைத்தவர்களெல்லாம் தங்கள் படைப்பியல்களுக்கு உகந்த மாதிரி வாழ்ந்தார்களா என்று நாங்கள் எவ்வித ஆராய்ச்சியும் செய்யவில்லை. நம் நாட்டில் இதற்குப் பொருத்தமாக யாரைக் குறிப்பிடுவீர்கள் எனக் கேட்கிறீர்கள். எனக்கு என்னை மட்டும்தான் உள்ளும் புறமும் சரியாகத் தெரியும். நான் எழுதுவது போலவே வாழ்கிறேன். வாழ்வதையே எழுதுகிறேன்.

**முன்பு இலங்கையில் கொம்யூனிஸத்தையும், மாக்சிஸத்தையும் வளர்த்தவர்கள் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிதான் இன்று அதன் மிளிர்வுக்கு அல்லது நிலைப்புக்குக் காரணம் என்கிறார்களே! ஏற்றுக்கொள்ள வேண்டுமா?**

இலங்கையில் தமிழ் இலக்கியம் ஒவ்வொரு கால கட்டத்திலும் வளர்ச்சியைக் கண்டு வந்தமைக்குச் சில அமைப்புக்கள் அல்லது இயக்கங்கள் தூண்டுகோலாக இருந்திருக்கின்றன(?). அப்படியான ஒரு கால கட்டத்தில் கொம்யூனிஸ, மாக்சிஸ கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட பலர் ஓர் இயக்கமாக இணைந்து கொண்டு இலக்கியப் பணியாற்றினார்கள் என்பதோடு அது தமிழ் இலக்கியம் மிளிர்வதற்கு உந்துதலளித்தது என்பதும் மறுக்க முடியாதது. சாதிப்பாகுபாடு, முதலாளித்துவம், ஆணாதிக்கம் போன்ற சமூக அடக்கு முறைகள் மேலோங்கியிருந்த அக்கால கட்டத்தில் அவற்றை எதிர்த்துக் குரல் கொடுத்த கொம்யூனிஸ வாதிகளின் எழுத்துக்கள் இலக்கிய வளர்ச்சியை மேம்படுத்தின. மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை ஆக்க இலக்கியங்களாகப் படைத்தார்கள். மக்களின் பேச்சு மொழியை தங்கள் எழுத்துக்களில் கொண்டு வந்தார்கள்.

ஆக்க இலக்கியங்களையும் வட்டார வழக்கு எழுத்துக்களையும் ஏற்றுக் கொள்ளாத ஒரு சாராரும் அப்போது இருந்தார்கள். இவற்றை 'இழிசனர் இலக்கியங்கள்' எனவும் கேலி செய்தார்கள். பழந்தமிழ் இலக்கியங்கள் தான் நல்ல இலக்கியங்கள் எனத் தூக்கிப் பிடித்தார்கள். அதன் காரணமாகவும், மாக்சிஸக் கொள்கையில் நம்பிக்கை கொண்ட

எழுத்தாளர்கள் தங்கள் ஆக்க இலக்கியங்களை மிக ஆக்ரோஷத்துடன் முன் கொண்டு வந்தார்கள். இவ்வாறு இலங்கைத் தமிழ் இலக்கியம் இன்னொரு கட்ட வளர்ச்சியை அடைந்தமைக்கு இவர்களது பணியும் இன்றியமையாதது என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதுதான். ஆனால் அவர்கள் ஆற்றிய பணி மட்டும்தான் இன்றைய இலக்கிய மிளிர்வுக்குக் காரணம் என்பது சரியல்ல. அதே கால கட்டத்திலும், அதற்கு முன்னரும், பின்னரும் பல தனிப்பட்ட எழுத்தாளர்களது எழுத்துப் பணியும் மிகச் சிறப்பாக இருந்திருக்கிறது.

**வட்டார வழக்கு இலக்கியங்களுக்குத் தொலை தூரம் பயணம் செய்ய முடியாமல் இருக்கிறதே! என்ன செய்யலாம்?**

ஒரு வட்டார வழக்கு இன்னொரு வட்டாரத்தவருக்கு இலகுவாகப் புரியாமல் இருப்பதுதான் இதற்குக் காரணம். தென் இந்தியாவில் கூட சொல்கிறார்கள்; ஈழத்து இலக்கியங்களைப் படிப்பதில் கஷ்டம் இருக்கிறது - புரியவில்லை என்று! இது அவர்களது தவறுமில்லை. எங்களது தவறுமில்லை. வட்டார வழக்குகள் இலக்கியத்துக்குள் வரத்தான் வேண்டும். அவைதான் மொழிக்கு வளம் சேர்க்கும். இன்று இலங்கைத் தமிழர்கள் உலகின் பல பாகங்களுக்கும் புலம் பெயர்ந்திருக்கிறார்கள். தமிழில் இன்னும் பல மொழி வழக்குகள் வந்து சேரப்போகின்றன. இதனால் வட்டார வழக்குகள் எங்கும், எல்லோரையும் (தொலைதூரம்) சென்றடையவில்லை என்று கவலைப்படத் தேவையில்லை. ஆர்வமுள்ளவர்கள் தேடிப்படிக்கிறார்கள். அகராதிகள் மேலும் மேலும் விளக்கம் தருகின்றன. புதிய சொல் வழக்குகளில் ரசனையும் இருக்கிறது. எனவே வட்டார வழக்குகள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்து செல்லும் என்பதில் ஐயமில்லை.

**ஃபெமினிஸம் உள்ளிட்ட இந்த இஸங்களின் விமர்சனங்களையெல்லாம் இலக்கியத்தினூடாகப் பிரதிபலிக்கும் போது இலக்கியம் சிறப்படைகிறதா அல்லது இஸங்கள் வெற்றி பெறுகின்றனவா?**

எந்த இஸங்களாயினும், கருத்துக்களாயினும் அவை மக்களைச் சென்றடைவதற்கு இலக்கியம் ஓர் ஊடகமாகப் பயன்படுகிறது. இவையெல்லாம் இலக்கியத்துக்குள் வருவது இலக்கியத்துக்குச் சிறப்புத் தான். நூறு மலர்கள் மலரட்டும் - அவையெல்லாம் முட்டி மோதட்டும் என்ற கருத்தை இங்கு குறிப்பிடலாம். நல்லவை நிலைக்கும். அல்லாதவை



போய் விடும். இவற்றில் எவை மிளிர்கின்றன என்பது மக்களின் தீர்மானிப்பில்தான் உள்ளது.

**சோஷலிச யதார்த்தவாதம் என்ற இலக்கியக் கொள்கை பற்றி இப்போது யாருமே பேசுவதில்லை. ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களை மனனம் செய்து வாந்தியெடுப்பவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். முன்னதன் தேவை ஏன் அவசியமில்லாமல் போயிற்று?**

சோஷலிச யதார்த்தவாதம் எனும் இலக்கியக் கொள்கை பற்றி வெளிப்படையாகப் பேசுபவர்கள் இப்போது குறைந்திருக்கலாம். அதனால் அது இல்லாமல் போய்விட்டது என்று கூற முடியாது. பொதுவாக சோஷலிச வாதி அல்லது முற்போக்கு எழுத்தாளன் எனச் சார்பாக்கப்படாவிட்டாலும், ஆத்ம சுத்தியுடன் எழுதும் இலக்கியக்காரர்கள் எவரும் முற்போக்கான கொள்கையுடையவர்களாகத்தான் இருப்பார்கள். ஆனால் பழங்கால இலக்கியங்களைப் பற்றிப் பேசுபவர்களுக்கு அவற்றை வெளிக்காட்டுவதற்கு வாய்ப்பு வசதிகள் இருப்பதால் அதிகம் பேர் அவற்றைப் பேசிக் கொண்டிருப்பதாகத் தென்படுகிறது போலும். உண்மையில் பழங்கால இலக்கியங்களை மனனம் செய்து பேசுவது பற்றி நாங்கள் ஆதங்கப்படவும் தேவையில்லை.

எது தேவை, எது தேவையற்றது என்பதை மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும். இதெல்லாம் ரசனை சம்பந்தப்பட்ட விஷயங்கள் என்றே நான் கருதுகிறேன். ஒருவருக்கு கர்நாடக சங்கீதம் பிடிக்கும். இன்னொருவருக்கு சினிமாப் பாடல்கள் பிடிக்கும், வேறொருவருக்குத் துள்ளிசைப் பாடல்கள் பிடிக்கும். இது அவரவர் ரசனை மட்டத்தைப் பொறுத்தது. பழங்கால இலக்கியங்களை ரசித்து, அது பற்றிப் பேசுபவர்களும் அவற்றிலுள்ள நல்ல முற்போக்கான கருத்துக்களை மக்களுக்குக் கூறுகிறார்கள். இவை இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை ஒரு முரண்பாடாகக் கருத வேண்டிய அவசியமில்லை எனக் கருதுகிறேன். மார்க்கம்தான் வேறு; நோக்கம் ஒன்றுதான்.

**வாசகனின் நாடித் துடிப்பை அறிந்து எழுதக்கூடிய படைப்பாளிகள் நம்மிடையே இல்லையென்பதும், இருப்பவர்கள் கூடப் பழந்தமிழுக்குத் தான் புதியவர்களைப் பழக்கி விடுகிறார்கள் என்பதும் கூட நிதர்சனமான உண்மையல்லவா?**

ஒரு படைப்பாளி எழுதுவதற்குச் சில காரணங்கள் (அல்லது உந்துதல்கள்) உண்டு. தங்களது பட்ட நெறிக்காக தமிழ் மொழியைக் கற்றுத்

தேர்ந்து, தொழில் ரீதியாக அல்லது ஆர்வ மேலீட்டால் எழுதுபவர்கள் இருக்கிறார்கள். தங்கள் கட்சி சார்ந்த கொள்கைகளை மக்களிடத்தில் பிரசாரப் படுத்துவதற்காக எழுத்துத் துறையில் ஈடுபடுபவர்கள் உள் ளனர். மற்றது நிலத்தடி நீர் போல், பாறையை உடைத்ததும் சீறிப் பாயும் நீரூற்றுப் போல மக்கள் வாழ்வின் கொடுமைகளினதும் துன்பங்களினதும் பாதிப்பினால் மனம் உடைந்து அடக்கமுடியாது வெளிப்படும் கருத் துக்களை உணர்வுபூர்வமாக வாசகர்களிடம் தொற்றவைப்பது. 'வாசகனின் நாடித் துடிப்பை' இந்த எழுத்துக்கள் சென்றடைந்து அசைக்கும்.

இவ்வாறான பல படைப்பாளிகள் நம்மிடையே இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் இல்லாதது போன்ற மாயத்தோற்றம் தென்படுமானால், அதற்கு அவற்றை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்திப் பழக்கப்படுத்துவதற்கு எவ்வித ஒழுங்கமைப்பும் இங்கு இல்லை என்பதுதான் காரணம். மக்கள் இலக்கிய இயக்கமாக... ஆர்வமுள்ளவர்கள் இதில் ஈடுபட வேண்டும். பழக்கப்படுத்தும் போது விருப்பம் ஏற்படும். இந்த விருப்பம் பல நூல் களைத் தேடிப் படிக்க வைக்கும்.

**இனிமை, எளிமை, நேர்மை ஆகிய இயல்புகளைக் கொண்டு நேரடி யாகவே இலக்கியம் சொல்லப்பட வேண்டும் என்பது ஏற்புடையது தான். இவ்வியல்புக்குள் முற்போக்கான கருத்துக்கள் அதிரடியாக நுழையும் போது இலக்கியத்தின் இயற்தன்மை மாறிப் போய் விடாதா?**

இலக்கியம் மக்களை இலகுவாகச் சென்றடைவதற்கு இனிமையும், எளிமையும் இன்றியமையாதவைதான். ஆனால் இலக்கிய நேர்மை என்பது எழுதுபவர்களின் உயிர் மூச்சாக இருக்க வேண்டும். நாங்கள் யாருக்காக எழுதுகிறோம் என்பது இங்கு முக்கியம். மிகச் சாதாரணமான; வாழ்வின் அடிமட்டத்திலுள்ள மக்களையும் சென்றடைவதில்தான் இலக்கியத்தின் வெற்றி தங்கியுள்ளது. அறிவு ஜீவிகளுக்காக நாங்கள் எழுத வேண்டிய அவசியமில்லை; தேவையுமில்லை. இனிமை என்பது சுவை. இனிமை என்பது அழகு. அதுதான் ரசனையைத் தூண்டுகிறது. அவ்வாறான இலக்கியத்தினையே மக்கள் விரும்பியும் தேடியும் படிப்பார்கள். முற்போக்கான கருத்துக்கள் அதிரடியாக இதில் நுழையுமென்றோ இதனால் இலக்கியத்தின் இயற்தன்மை மாறிப்போய் விடுமென்றோ அச்சப்படத் தேவையில்லை.



**'கலங்கிய நீரில் ஆழம் தெரியாது. தெளிவான நீரில்தான் ஆழம் தெரி யும்' என்று புதுமைப்பித்தன் கூறியுள்ள இக்கருத்து எளிமையாகவும், அல்லாமலும் எழுதுகிற போக்கு பற்றியது. எளிமையாக எழுதுவதால் ஆழம் தெரியலாம். ஆனால் கலையம்சம் காணாமல் போய் விடும் என்கிறார்களே! இது பற்றி நீங்கள்...**

கலையம்சம் என்பது என்ன? புதிது புதிதாக எழுதுவதாகக் கூறிக் கொண்டு நல்ல வாக்கியங்களையெல்லாம் உடைத்து உடைத்து தலை வேறு கால் வேறாகப் போடுவதா? கடுமையான சொற்களால் (புரியாமல்) எழுதுவது தங்களது மேதமையை வெளிக்காட்டுவதற்கு உதவலாம். இதனால் யாருக்கு என்ன பயன்? கலையம்சம் என்பது அழகு சம்பந்தப் பட்டது - ரசனை சம்பந்தப்பட்டது. மனித வாழ்வின் இருப்பே, (அதை எந்தப் பக்கமாகப் பார்த்தாலும்) ரசனையை அடிநாதமாகக் கொண்டது தான். கலை என்பது எவ் வடிவத்திலிருந்தாலும் அதை மக்களுக்குப் புரியும் விதத்தில் எடுத்துச் சொல்லப்பட வேண்டும். எளிமையாக எழுதுவதால்தான் ஆழமும் தெரியும். அகலமும் தெரியும். அழகும் தெரியும். பாரதியினதும், புதுமைப்பித்தனதும் எழுத்துக்கள் எளிமையாக இருந்த தனால்தான் இன்று வரை நின்று நிலைக்கின்றன. விரும்பிப் படிக்கப்படுகிறது.

**தனிப்பட்ட காழ்ப்புணர்வுகளை எல்லாம் எழுத்தில் கொண்டு வந்து எதிராளியை அடித்து வீழ்த்தவோ அல்லது அவமானப்படுத்தவோ முயல்பவர்களைப் படைப்பாளிகளென்று எப்படி அங்கீகரிக்க முடியும்!**

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் இது பெரிதாக இல்லை என்று தான் நினைக்கிறேன். விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் மட்டும் தங்களுக் கான ஊடக வசதி அல்லது பதிப்பு வசதியூடாக எதிலாவது, யாரையா வது தூஷித்துக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கண்டு கொள்ளா மல் விட்டு விட வேண்டும்.

**புதிது புதிதாக வெளிவந்து கொண்டிருக்கிற விடயங்களையெல்லாம் இலகுவாக மொழிப்படுத்த முடியவில்லை என்பது மொழிக்கான தோல்வியா அல்லது கண்டுபிடிப்புக்களின் வெற்றியா?**

மொழிக்கான தோல்வியென்று இதைக் கூற முடியாது. மொழி இன்னும் விரிவடைய வேண்டியிருக்கிறது. வேறு மொழிகள் மூலம் எங்களது

பாவனையிலுள்ள சொற்களை நாங்கள் எவ்வித கூச்சமுமின்றி உள் வாங்கிக் கொள்ள வேண்டும். சில பேருடைய எழுத்துக்களில் கவனித் திருப்பீர்கள்... ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றியோ உணர்வு நிலை பற்றியோ எழுதும் போது... 'வர்ணிப்பதற்கு வார்த்தையே இல்லை' என்பது போன்ற வாக்கியங்களை எழுதுவார்கள். இவற்றைப் பார்த்து நான் கவலைப்பட்டிருக்கிறேன். வார்த்தைகளை அல்லது சொற்களை நாங்கள் அறிந்தோ, தேடியோ பிடிக்கவில்லை என்பதுதான் உண்மை. தூய தமிழ்தான் வேண்டும் என்று நாங்கள் அடம்பிடித்துக் கொண்டிருக் கவும் கூடாது. அதே வேளை தூய தமிழிலுள்ள நல்ல சொற்கள் பாவனை யில் வரும்போது இனிமையாயிருக்கின்றது. வர்த்தக நிலையங்களுக்கு, 'வெதுப்பகம்', 'சேலைச்சோலை' போன்ற சொற்களையெல்லாம் பயன் படுத்துகிறார்கள். அருமையாயிருக்கிறது.

**உங்களுடைய 'மனித தரிசனங்கள்' சமூகத்திற்கான; மனிதர் களுடைய பண்பாட்டுக்கான பிரசாரக் குரல்தானே!**

பிரசாரம் என்ற சொல்லில் தாங்கள் தடுமாறுவது போல் தோன்றுகிறது. அல்லது பிரசாரம் என்பதை தாங்கள் விரும்பவில்லையா? படைப்புக்கள் பிரசாரத் தொனியுடையதா? கலையம்சம் கொண்டதா? என்ற வாதப் பிரதி வாதங்களும் இங்கு உண்டு. நாங்கள் எழுதுவது மற்றவர்களைப் (வாசகர்களிடம் சென்றடைவதற்கு கலை அழகு தேவைப்படுகிறது) பொறுத்தவரை ஒரு விதப் பிரசாரமாகவும் இருக்கலாம். சமூகத்துக்குத் தேவையான கருத்துக்கள் எவ்விதத்தில் அவர்களைச் சென்றடையு மாயினும் அது பயனுடையதுதான். 'மனித தரிசனங்கள்' நான் தொழில் நிமித்தம் சென்று வந்த நாடுகளிலெல்லாம் கண்டு வந்த சில மனிதர் களைப் பற்றிய பதிவுகள்தான். இந்த உலகத்தில் கோடானுகோடி மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒருவரைப் போல் மற்றவர் இல்லை.

எங்கள் வாழ்க்கைக் காலத்தில் ஒவ்வொரு நாளும் யாராவது ஒரு புதிய மனிதரையாவது காண்கிறோம். ஒரு கணம், ஒரு நிமிடம், ஒரு நாள்.... ஒரு குறிப்பிட்ட காலம் அல்லது வருடக்கணக்காகச் சிலருடன் பழகும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அவ்வேளைகளில் சிலர் நடந்து கொள்ளும் விதம் மனதில் பதிந்து விடுகிறது. இனம், மொழி, நாடு இவைகளுக் கெல்லாம் அப்பாற்பட்டு மனிதம் எனும் பண்பாட்டை அவர்களிடத்தில் தரிசித்த போது அதை வாசகர்களுக்குக் கூற விரும்பினேன். அந்த மனிதர்களின் உண்மை முகத்தைக் காட்டும் நோக்கத்தில்தான்



அவற்றைக் (கற்பனைக்) கதைகளாக ஆக்காமல்; கதைக்கும் கட்டுரைக் கும் இடைப்பட்ட ஸ்டைலில் எழுதினேன். இதைத்தான் பிரசாரக் குரல் என்கிறீர்களா?

**'காற்றோடு போதல்' தொகுப்பிலுள்ள சிறுகதைகளும் கூட உங்க ளுடைய அல்லது உங்களைச் சார்ந்தவர்களுடைய அனுபவப் பதிவு தான் இல்லையா?**

எனது சிறுகதைகள் எல்லாமே அனுபவப் பதிவுகள் தான். எவையேனும் கற்பனைக் கதைகளல்ல.

**சிறுகதைகளிலோ, நாவல்களிலோ கற்பனைகளைக் கலக்க முடிவது சாத்தியமில்லைதானே!**

'கற்பனைக் கதைகளல்ல' என நான் குறிப்பிட்டது, அவை சும்மா சோடித்து எழுதப்பட்ட கதைகள் அல்ல எனும் அர்த்தத்தில்தான். கதைகள் மக்களது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டுதான் எழுதப்படுகிறது. அந்த ரீதியில் பார்த்தால் அவை கற்பனைக் கதைகள் அல்ல. ஆனால் வாசகர்களின் மனதைத் தொடும் விதமாகக் கதை சொல்லப்படும் போது ரசனையூட்டப்பட வேண்டும், மெருகூட்டப்பட வேண்டும். இதில் இயல்பாகவே வர்ணனைகள் சேர்ந்து கொள்வது தவிர்க்க முடியாதது. வர்ணனைகள் இல்லாது கதைகள் இல்லை.

**சிறுகதை என்ற இலக்கியக் கூறினை மட்டும் நீங்கள் தேர்ந் தெடுத்ததற்கும், கவிதையின் பக்கம் போகாததற்கும் காரணம் ஏதும் இருக்கிறதா?**

காதல்தான். அல்லது முதற்காதல் என்று கூறலாம். முதலில் யார் மீதாவது காதல் ஏற்பட்ட பிறகு அவரை மட்டும் சுற்றியே கற்பனைகளும் எண்ணங்களும் வட்டமிடுகிறது. அது போலத்தான் முதன் முதலில் மன தைத் தொட்டது சிறுகதை வடிவம். அதன் உருவம், உள்ளடக்கம், உணர்வுகளை வெளிப்படுத்தும் விதம் எல்லாம் மனதைக் கவர்ந்தது. அதற்காக வேறு பக்கங்களைப் பார்க்கக் கூடாது என்று அர்த்தமில்லை. நான் கவிதைகளை மிகவும் ரசிக்கிறேன். எனது வீட்டிற்குக் கூட 'கவிதை' என்று பெயரிட்டவன் நான்.

**சார்பற்ற எழுத்தாளனால் சாதிக்க முடிகிற விடயங்களும், தொட முடிகிற எல்லைகளும் பற்றி...**

எழுத்தாளனை சார்பற்றவன் என்று கூற முடியாது. சார்பற்றவர்கள் என்று யாருமில்லை. நடுநிலையானவன் எனக் கூறப்படும் எழுத்தாளன் கூட அவனளவில் சமூக சார்பான கொள்கை கொண்டவன்தான். தான் சொல்ல நினைக்கும் விஷயத்தை உணர்வு பூர்வமாக வாசகனிடத்தில் கொண்டு சொல்லக்கூடிய எழுத்தாளனால் எல்லைகளையெல்லாம் தாண்டிப் போக முடியும்.

**தென்னிந்தியாவுக்கான நம் நூல்களின் ஏற்றுமதி அளவும் அவர்களிடமிருந்து நாம் செய்கிற நூல் இறக்குமதி அளவும் சம புள்ளியில் சந்தித்துக் கொள்ள நாம் ஏதாவது செய்ய முடியுமா? (நீங்கள் பதிப்பாசிரியராகவும் இருப்பதால் கேட்கிறேன்)**

தென்னிந்தியாவுக்கு எமது நூல்களை ஏற்றுமதி செய்வதற்கு (அதாவது அவர்கள் எமது நூல்களை அங்கு இறக்குமதி செய்வதற்கு) இந்திய சட்ட திட்டங்களில் சில தடைகள் இருக்கின்றன என நினைக்கின்றேன். இந்திய எழுத்தாளர்களின் எழுத்துக்கள் மட்டும்தான் உன்னதமானது என்ற கற்பனையில் எங்களது வாசகர்கள் மூழ்கியுள்ள வரையும் அல்லது அவர்களது சினிமாத்தனமான தகவல்கள் மட்டும் வாசிப்பு ரசனைக்குத் தீனியாகப் போட்டுக் கொண்டிருக்கிற வரையிலும் அவர்களது நூல் களின் இறக்குமதியும் இங்கு நிறைந்து கொண்டேயிருக்கும்.

தென்னிந்திய வாசகர் பரப்பையும் நாங்கள் தொட வேண்டியது அவசியம். சட்ட ரீதியான தடைகளை அகற்றுவதற்கு அரச மட்டத்தில் முயற்சிக்க வேண்டும். இப்போதைக்கு எமது நூல்களை அங்குள்ள பதிப்பகங்கள் மூலம் பதிப்பிக்கவும், அங்கேயே விநியோகிக்கவும், வழிமுறைகளைப் பார்க்க வேண்டும்.

**எழுத்தாளர்களாகி விட்ட உங்கள் பிள்ளைகள் பற்றி...**

அவர்கள் எழுதுகிறார்கள். எழுத்தாளர்களாகி விட்டார்களா என்பது தெரியவில்லை. இனி வரப்போகும் அவர்களது எழுத்து முயற்சிகளும் அவை மக்களைச் சென்றடையும் விதமும்தான் அதைத் தீர்மானிக்கும்.



**எதையெல்லாம் எழுதக்கூடாது என்றவர்களுக்குச் சொல்லி வருகிறீர்கள்?**

எதையெல்லாம் எழுதலாம்; என்று மட்டும்தான் ஊக்கப்படுத்துகிறேன்.

**நான் கேட்காமல் விடுபட்ட எது பற்றியாவது கூற விரும்புகிறீர்களா?**

ஓர் எழுத்தாளன் எனும் ரீதியில் என்னிடம் கேள்விகள் கேட்கப் போகி றீர்கள் என எதிர்பார்த்தேன். ஆனால் ஒரு விமர்சகனிடம் கேட்க வேண் டியவற்றை என்னிடம் கேட்டிருக்கிறீர்கள். இங்கு எனது கதைகளைப் பற்றியோ, கதை மாந்தர்களைப் பற்றியோ ஏதும் பேசவில்லை.

எனது ஒவ்வொரு கதைகளைப் பற்றியும் கதை மாந்தர்களைப் பற்றியும் பேசுவதற்கும், அலசி ஆராய்வதற்கும் சுவாரசியமான நிறைய விடயங்கள் உள்ளன. எனினும், ஈழத்து இலக்கியத்துறைக்குப் பயனுள்ள விடயங் களைப் பேசியிருக்கிறோம். இதனூடே ஒன்று தென்படுகிறது. நமது நல்ல இலக்கியங்களை இலக்கிய ஆர்வலர்களும், விமர்சகர்களும் தேடிப்படித்து அவற்றை வாசகர்களிடம் அறிமுகப்படுத்தும் பணியை ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும்.

*28.05.2006*



# கே.ஜே. ஜேசுதாஸ்

நம்முடைய காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற சங்கீத சகாப்தம் கே. ஜே. ஜேசுதாஸ்! நல்ல சாரீரத்தோடும், சாகித்யப் பிரக்ஞையோடும் சங்கீதம் பாடக்கூடிய வெகு சிலரில் ஒருவர். கேரளாவின் புராதன துறைமுக நகரான கொச்சினில் பிறந்த மலையாள மொழிக்காரர். தந்தையார், அகஸ்டின் ஜோஸப் பாகவதர்.மலையாள தேசத்தில் புகழ் பெற்ற சங்கீதக்காரராகவும், மேடை நடிகராகவும் திகழ்ந்தவர். ஐந்து வயதிலேயே ஜேசுதாஸ் கீர்த்தனைகளைப் பாடுவதற்குக் காரணமான முதற்குருவாகவும் விளங்கியவர்.

சங்கீத உலகில் நிலைப்பதற்குத் தேவையான திறமையும், அர்ப்பணிப்பும், ஒழுக்கமும் மட்டுமன்றி ஆண்டவனின் அனுக்கிரகமும் ஜேசுதாஸுக்கு அதிகமாகவே வாய்த்திருக்கின்றன. கர்நாடக சங்கீதத்தில் திளைத்துப் போயிருந்த இவரைத் திரையுலகம் உள்வாங்க நேர்ந்தமையானது; நம்முடைய ரசனைக்கு ஒளியூட்டக் கிடைத்த பெரும் விடயமென்றே படுகிறது. இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் ஆயிரக்கணக்கான திரைப்படங்களில், 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ள இவர் இதுவரையில் 7 தேசிய விருதுகளையும், 35 மாநில விருதுகளையும் பெற்றிருக்கிறார்.



1965 இல் சோவியத் ரஷ்ய அரசாங்கம் பல்வேறு நகரங்களினின்றும் சங்கீதக் கலைஞர்களை அழைத்து தேசிய அளவிலான கச்சேரியொன்றினை ஒழுங்கு செய்திருந்த போது, அதில் பாடுவதற்காகக் கேரளாவிலிருந்து ஜேசுதாஸ் அழைக்கப்பட்டிருந்தார். அங்கு ரஷ்ய மொழியில் பாடிவிட்டுத் திரும்பிய போது அகில இந்தியாவும் அவரைக் கொண்டாடி மகிழ்ந்தது.

'பத்ம ஸ்ரீ', 'பத்ம பூஷணம்' ஆகிய விருதுகளுடன் 'சங்கீத ராஜா', 'சங்கீதச் சக்கரவர்த்தி', 'சங்கீத சாகரம்','சங்கீத கஜகன்'(கேரளா) ஆகிய பட்டங்களையும் ஜேசுதாஸுக்கு அடுத்தடுத்து வழங்கி நிறைவு கண்டு வருகிறது இந்தியக் கலைத்துறை. 1989 இல் இவருக்கு 'டொக்டர்' பட்டம் வழங்கிக் கௌரவித்தது அண்ணாமலைப் பல்கலைக்கழகம். அதே ஆண்டில் யுனெஸ்கோ (UNESCO) என்கிற சர்வதேசஅமைப்பு 'சமாதானத்திற்கான சங்கீதம்'(Music For Peace) என்கிற விருதினை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் பிளவு ஏற்படத் தொடங்கிய காலத்திலிருந்து தேசிய சமாதானத்திற்காகவும், அமைதிக்காகவும் எண்ணற்ற இசைக் கச்சேரிகளை நிகழ்த்தியிருக்கிறார். இருதய நோயாளிகள், அங்கவீனர்கள், அநாதைச் சிறுவர்கள், வறிய மாணவர்கள், ஆதரவற்ற பெண்கள், இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டோர் என இவர்கள் சார்ந்திருக்கும் அமைப்புகளுக்காகத் தானே முன்வந்து கச்சேரிகள் செய்து நிதி திரட்டிக் கொடுத்து நிறைவு காண்பது தான் ஜேசுதாஸுக்குப் பிடித்த பொழுதுபோக்காக இருக்கிறது. இந்தத் தாராளம், தன்னுடைய நாட்டுக்கு மட்டுமன்றி தான் செல்கின்ற நாடுகளுக்கும் தான்!

ஓய்வெடுப்பதற்கென்று 2005 இல் மகன் 'விஜய்' (பின்னணிப் பாடகர்) உடன் இலங்கை வந்திருந்தவரை தாஜ சமுத்திராவில் சந்தித்தேன்.

**இசை ஒரு பெருங்கடல் என்கிறார்கள். அதற்குள் நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்?**

சந்தேகமே இல்லாமல் இசை கடல்தான். அதன் ஆழம், அகலம், அழகு, அதற்குள்ளிருக்கிற சிரமங்கள் என்றெல்லாவற்றையுமே இசையுடன் ஒப்பிடலாம். திரை மாலை - அலைகள் வருகிற போது அவற்றை அளக்கவும், எண்ணவும் முடியாது போலவே; இசையிலும் அளக்க முடியாத விடயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. என்னுடைய அனுபவம் வெகு சொற்பம். இன்னமும் நான் கடலுக்குள் இறங்கவில்லை. கரையில் நின்றுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

**கர்நாடக சங்கீதத்தை முறையாகக் கற்றுள்ள நீங்களே இவ்வாறு கூறுகிறீர்கள். ஆனால் சங்கீதமே கற்காமல் சினிமாவுக்கு வந்தவர் எஸ்.பி.பி. உங்களைப் போலவே விருது பெறும் அளவுக்கு இருக்கிறாரே!**

நான் சொல்வது உங்களுக்குப் புரியுமா இல்லையா என்று எனக்குத் தெரியாது. இப்போது உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் எத்தனையாவது ஜென்மம் எடுத்தவர்கள் என்பது எமக்குத் தெரியாது. இந்த ஜென்மத்தில் அவர்கள் படிக்கவில்லையென்று நாங்கள் அறியாமல் பேசுகின்றோம். இதற்காக; இந்த நிலையை எய்துவதற்காக அவர்கள் எத்தனையோ ஜென்மங்கள் படித்திருப்பார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் இறந்துபோன மகான்களுடைய கனவுகள் கூட இவர்களுக்குள் நுழைந்திருக்கக் கூடும். இதெல்லாம் மிகப் பெரிய வரம். சாதாரணமானவர்களுக்குச் சாத்தியமே ஆகாதது.

நான் கர்நாடக சங்கீதம் கற்கச் சென்ற போது எனக்கு ஐந்தரை வயதுதான். ஆனால் ஸ, ரி, க, ம, ப பாடவில்லை. நேரடியாகக் கீர்த்தனை பாடினேன். அவ்வளவு சிறிய வயதில் பெரிய கீர்த்தனையை என்னால் எப்படிப் பாட முடியும் என்றால், அது கடவுளுடைய அனுக்கிரகமே தவிர என்னுடைய திறமையில்லைம்மா. விருதுகளினூடாகப் பார்த்தீர்களானால், இன்று வரையில் எம். எஸ். விஸ்வநாதன், ரி. எம். சவுந்தரராஜன் இருவருக்கும் எவ்வளவோ ஆயிரம் விருதுகள் கிடைத்திருக்க வேண்டும். கிடைக்கவில்லையே!

விருதுகளின் பின்னால் ஓடுபவர்களுக்குத்தான் அதெல்லாம் பெரிய விடயம். பாலுவுக்கு (எஸ்.பி.பி. யைப் பாசமாக இப்படித்தான் அழைக்கிறார்) விருது குறித்து ஆர்வம் எதுவும் இல்லை என்பது எனக்குத்



தெரியும். தவிரவும் அவர் இந்த நிலையில் இருப்பதற்கு; முன்பு எத்தனையோ ஜென்மங்கள் படித்திருக்க வேண்டும் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

**ஆன்மீகத்தினூடாக விளக்கம் தருகிறீர்கள். இதுவே வலுவாகி விடுமென்றால், சினிமாவுக்குப் பாடுவதைக் குறைத்து அல்லது தவிர்த்து ரசிகர்களைத் தவிக்க வைத்து விடுவீர்களா?**

இல்லவே இல்லை. ஆன்மீகம் வேறு அல்ல. அதன் சிந்தனைகள் நமக்குள்தான் புதைந்து போயிருக்கின்றனவே தவிர, புதியதொரு சந்தர்ப்பத்தில் உள்ளே வருவதில்லை. எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைப்பதுதான் மனித குணம். மனிதர்கள், அவர்களின் பிறப்பு, இறப்பு பற்றியெல்லாம் சிந்திப்பது கூட இயல்பானதுதான். ஆத்ம சுத்தியோடு தொழிலைச் செய்கிறோம். என்கிற போது; ஆன்மா வேறுபக்கம் இயங்கினால் தொழில் ஆகுமா? இல்லையல்லவா! எல்லாமே இணைந்துதான் இருக்கின்றன. தூரச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

**கர்நாடக சங்கீத ரசிகர்களின் அளவு முன்பை விட இப்போது குறைந்து போய் விட்டதா?**

இல்லைம்மா. கர்நாடக சங்கீத ரசிகர்களை மற்றெந்த விடயமும் வந்து தடுத்து விட முடியாது. அதன் ரசிகர்கள் மாறவே மாட்டார்கள். மக்களின் தொகைக்கேற்ப அதன் விகிதம் மாறாமலோ அதிகரித்தோதான் செல்லும். நடைமுறையிலேயே பாருங்களேன். எவ்வளவு குழந்தைகள் எல்லாம் கர்நாடக சங்கீதத்தை விரும்பிக் கற்கிறார்கள். நன்றாகப் பாடவும் கூடச் செய்கிறார்கள்.

**இன்று சினிமாவில் உங்களுடைய குரலை அரிதாகத்தான் கேட்க முடிகிறது!**

என்னுடைய மனதுக்குப் பிடித்த சங்கீதத்தை - பாடலை யார் கேட்டாலும் போய்ப் பாடுவேன். அது சினிமா என்றாலும் சரி. அவர்களுக்கு என்னைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்கிற எண்ணம் இருந்தால்; கேட்டால் பாடுவேன். நானாக வாய்ப்புத் தேடிச் செல்வது அன்றைக்கும் இல்லை, இன்றைக்கும் இல்லை. தவிரவும் என்னுடைய பாடல்களைத் தெரிவு செய்வதும், சம்பளத்தை மாற்றாமல் வைத்திருப்பதும் கூட இதற்கான காரணங்கள்தான்.

**இன்று வெளிவருகின்ற திரைப்படங்களில் தாளம் வேதாளமாக இருப்பதாக விமர்சனம் இருக்கிறதே!**

யார் சொல்கிறார்களோ எனக்குத் தெரியாது. நான் சொல்ல மாட்டேன். இந்த வித்தியாசங்களெல்லாம் இசையினுடைய அழகுக்கு; அதன் பல பரிமாணங்களுக்கு அவசியமானவை. நமக்குப் புரியவில்லை என்பதற்காகத் தோன்றுவதையெல்லாம் பேசக் கூடாது.

**உங்களுக்கான வாய்ப்புக்களின் போது ஏதாவது காரணங்களுக்காக நிராகரித்த பாடல்கள் ஏதாவது இருக்கிறதா?**

ஆம். அந்தவொரு பாடல் எனக்கு இப்போது நினைவில்லை. ஏ.வி.எம். ஸ்ருடியோவில் பதிவு செய்யப்பட்ட பாடல் அது. மிகவும் உச்சஸ்தாயியில் பாட வேண்டியிருந்ததால் என்னுடைய குரலுக்கு ஒத்து வராது என்று மறுத்து விட்டேன். பின்பு அந்தப் பாடலை மலேசியா வாசுதேவன் பாடியிருந்தார்.

கலாசாரத்துக்குப் பொருந்தாத வார்த்தைகள் கொண்ட பாடல்களையும் தவிர்த்திருக்கிறேன். அல்லது திருத்தச் சொல்லிக் கேட்டிருக்கிறேன். 'இல்லை நன்றாக இருக்கிறது சேர்' என்றார்களானால், வேறு வழியில்லை. படத்துக்காகப் பாடித்தான் ஆக வேண்டும். ஆனால் சில வேளைகளில் அதிர்ஷ்டவசமாகத் தணிக்கைக் குழுவினரால் வெட்டப்பட்டு விடும்.

**துள்ளிசைப் பாடல்கள் பாடுவதைத் தவிர்க்கிறீர்களா அல்லது...**

என்னுடைய குரல் துள்ளிசைக்கு ஏற்றதல்ல என்பது எனக்கும் இசையமைப்பாளர்களுக்கும் தெரியும் என்பதால் அவர்களும் கேட்பதில்லை. நானும் விரும்புவதில்லை. அதற்குப் பொருத்தமாக வேறு பாடகர்கள் இருக்கிறார்கள்.

**ஆனாலும் சிந்து பைரவியில் 'தண்ணீர்த் தொட்டி' பாடி அசத்தியிருந்தீர்கள்!**

சிந்து பைரவி ஒரு தரமான திரைப்படம். அந்தப் பாடலில்தான் கதையே நிற்கிறது என்பதால் பாடியிருந்தேன். மிகவும் பிடித்திருந்தது. (அப்பாடலின் இரண்டு வரிகளைப் பாடும்படி கேட்டேன். முதலில் மறுத்தார். பின்பு சிரித்தபடியே மெலிதாகப் பாடினார்).



**உங்களுக்குமிகவும் பிடித்த எஸ்.பி.பி.யின் பாடல் எது? அவருடைய ஏதாவது பாடலை 'நான் பாடியிருக்கலாம்' என்று எண்ணியதுண்டா?**

'பாலு' பாடிய 'இளைய நிலா பொழிகிறது' எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் அதை நான் பாடியிருக்கலாம் என்று, ஒரு போதும் எண்ணியதில்லை. அவரவர்களுக்குரியதை அவர்கள்தான் செய்ய வேண்டும்.

**எஸ்.பி.பி.யுடன் இணைந்து அநேகமான வெளிநாடுகளில் நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறீர்கள். இலங்கையிலும் அதுபோலொரு...**

யாராவது ஏற்பாடு செய்தால் நிச்சயம் வருவோம்.

**உங்களுக்குப் பிடித்த ஆண் , பெண் குரல்?**

முஹமது ரா∴பி , சுசீலா.

**நீங்கள் பாடியவற்றில் மிகவும் பிடித்தமான பாடல்கள் சில.**

தெய்வம் தந்த வீடு (அவள் ஒரு தொடர்கதை)
விழியே கதை எழுது (உரிமைக் குரல்)
பூவே செம்பூவே (சொல்லத் துடிக்குது மனசு)
அம்மா என்றழைக்காத (மன்னன்)

**அந்தமான் காதலி என்ற திரைப்படத்தில் இடம் பெற்ற பாடல் ஒன்று 'நினைவாலே சிலை செய்து உனக்காக வைத்தேன்' அதில் திருக்கோயிலே ஓடிவா என்று பாட வேண்டியதைத், 'தெருக்கோயிலே ஓடி வா' என்று பாடியிருந்தீர்கள்...**

மிகப் பெரிய தவறுதான். கவியரசர் கண்ணதாசன் எழுதி எம்.எஸ்.வி. இசையமைத்த மிக அற்புதமான பாடல் அது. நான் ஒரு மலையாளி. தமிழ் சினிமாவுக்குப் புதிதாக வந்திருந்தேன். ஏன், மொழியே சரியாகத் தெரியாது. 'ரெக்கோடிங்' போவதற்கு முன்பு ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கே உதவியாளர்கள் (தமிழ் மொழி நன்கு தெரிந்தவர்கள்) ரீ குடித்துக் கொண்டும் வம்பு பேசிக் கொண்டும் இருந்தார்கள். அவர்கள்தான் என்னுடைய பாடலின் சொற்களைச் சரி

செய்திருக்க வேண்டும். செய்யவில்லையே! அது நான் செய்த தவறுதான். ஆனால் இதற்கான காரணம் இதுதான். (ஜேசுதாஸிடம் அத்தவறு குறித்த உணர்வு இன்னமும் இருக்கிறது. அற்புதமான கலைஞனல்லவா!)

**பி.பி.ஸ்ரீநிவாஸ், சுசீலா, ஜானகி, ரி.எம்.எஸ் என இவர்களுடைய காலத்துப் பாடல்களைத் திகட்டாமல் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருக்கின்ற ரசிகர்களை சினிமா உலகம் நன்கே அறியும். ஆனாலும் மீண்டும் அந்தப் பொன்னான பாடல்களுக்குத் திரும்ப முடியாமல் அல்லது விரும்பாமல் இருக்கிறதே! இதற்கு இன்றைய உலகின் வேகம்தான் காரணமா?**

நிச்சயமாக. இப்போது எம்.எஸ்.வி அண்ணனை எடுத்துக் கொண்டால் அவருடைய Capacity இன்னும் மாறாமல் இருக்கிறது. அவரால் இசையமைக்க முடியும். ஆனால் கூப்பிடுவதற்கு யாரும் இல்லை. அதனால் அவர் Divert ஆகி விட்டார். நடிக்கவும் செய்கிறார்.

சமீபத்தில் எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அம்மா இறந்த போது அங்கே அவரைச் சந்தித்துப் பேசியிருந்தேன். "நாம் நல்ல தமிழ்ப் பாடல்களை உருவாக்க வேண்டுமே" என்று அவரிடம் கேட்டிருந்தேன். கண்டிப்பாகச் செய்வோம். எனக்கும்தான் ஆசையிருக்கிறது என்றார். செய்வோம்.

**சினிமாவுக்காகவா?**

இல்லை. தனியாகச் செய்யவுள்ளோம்.

**இது வரையில் எத்தனை திரைப்படங்களுக்கு இசையமைத்திருக்கிறீர்கள்? பாடகர் - ஜேசுதாஸ், இசையமைப்பாளர் - ஜேசுதாஸுக்கு எவ்விதம் உதவுகிறார்? அல்லது சிரமம் கொடுக்கிறார்?**

நான்கு படங்களுக்கு இசையமைத்திருக்கிறேன். அவற்றுள் மூன்று மலையாளப் படங்கள். மற்றையது 'ஜீஸஸ்' என்றொரு தமிழ்ப் படம். (மலையாளத்திலிருந்து தமிழுக்கு டப் செய்யப்பட்டது) ஆனால் இசையமைப்பதில் எனக்குச் சிரமம் இருக்கிறது. மிகக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கிறது. என்னுடைய தொழில் பாடகன் என்பதால் தொழிலில் Concentrate பண்ண வேண்டிய நேரத்தை இசையமைப்பதற்காகச் செலவு செய்ய முடியவில்லை. நானும் விரும்பவில்லை.



**பார்த்தவுடன் மறந்து போகிற சினிமாவும், கேட்டவுடன் மறந்து விடுகின்ற பாடல்களுமாக இன்று இருப்பது குறித்து உங்களுக்குள் கேள்வி எதுவும் இல்லையா?**

இது Fast food காலம். பாடி விட்டும், பார்த்து விட்டும் போய்க் கொண்டே இருக்க வேண்டியதுதான். மீட்டிப் பார்ப்பதற்கு நேரமில்லை. முன்னைய காலம் அப்படி இருக்கவில்லை. ஒரு பாடலுக்கோ படத்துக்கோ ஒதுக்கப்பட்ட நேரம் மிக அதிகம். சிந்தனையை அதிகம் உபயோகித்தார்கள். நேர்த்தி இருந்தது. ஆனாலும் இன்றைய காலம் குறித்துக் குறை சொல்வதற்கு ஒன்றும் இல்லை, யாரும் இல்லை.

ஆனாலும் காலத்துக்குத் தகுந்தாற் போல மாறிக் கொண்டிருப்பவற்றிற்கேற்ப நாமும் மாற வேண்டியதுதான் என்று நான் சொல்ல விரும்பவில்லை. யாருக்குஎது பிடிக்கிறதோ அதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்.

**மொழியினூடாகத்தான் இசை அடையாளப்படுத்தப்படுகிறது என்பது உங்களுக்கு ஏற்புடையதா?**

நிச்சயமாக இது பற்றி இன்னொரு கருத்து இல்லை.

**அப்படியென்றால் 'செம்மீன்' படத்தில் இடம்பெற்ற 'கடலினக்கரப் போனோரே' என்கிற உங்கள் மலையாளப் பாடல் தமிழ் ரசிகர்களிடையே பிரபல்யமாகவும் பரவலாகவும் மூனு முனுக்கப்பட்டது. இங்கு மொழி அடையாளம் பெறவில்லையல்லவா! (இவருக்குத் தேசிய விருதை வென்று கொடுத்த பாடல் இது)**

விதிவிலக்குகள் வெற்றிபெறக் கூடாதென்று வரயைறையொன்றும் இல்லையல்லவா. இப்பாடலில் இசைதான் பேசப்பட்டது. வெற்றி பெற்றது.

**நீங்கள் பாடிய பாடல்கள் காட்சிகளாக்கப்பட்டதில் 'அடடா' என்று மகிழ்வோடு வியந்து பார்த்த பாடல் ஏதாவது...?**

சினிமா பார்க்கிறதே இல்லைம்மா. பிடிக்கும்தான். ஆனால் நேரம் கிடைப்பதில்லை. பலர் திறமையானவர்கள், நல்ல படங்களைத்தான்

எடுக்கிறார்கள். பார்த்தாலும் கூட நான் அபிப்பிராயம் ஒன்றும் சொல்றதில்லை. கிடைக்கிற நேரத்தைப் படிக்கிறதுக்காக ஒதுக்கிக் கொள்கிறேன்.

**தற்போது இலங்கை வந்திருப்பதன் நோக்கம்!**

கடந்த டிசம்பர் - ஜனவரி வரை தொடர்ந்து கச்சேரி இருந்தது. நான்கு நாட்கள் ஓய்வெடுக்கலாம் என்றுதான் நானும் மகனும் வந்தோம். வந்த பின்புதான் இங்கு சுனாமியால் நிறையவே அடிபட்டிருக்கிறதைப் பார்க்க கஷ்டமாகி விட்டது. என்னால் முடிந்த உதவி ஏதாவது செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. எதிர்வரும் பெப். 14, 15 ஆம் திகதிகளில் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. மகனையும் (விஜய் ஜேசுதாஸ்) கேட்டிருக்கிறேன். ஆனால் அவருடைய வரவு பற்றி உறுதியாகச் சொல்லத் தெரியவில்லை. ஏனென்றால் அவரும் தொழிலை வைத்திருக்கிறார். இங்குள்ள வாத்தியக் கலைஞர்கள், பாடகர்களுடன் சேர்ந்து நிகழ்ச்சி நடத்தவுள்ளேன்.

*30.01.2005*





# குஷ்பூ

"இந்த ரொமாண்டிக் நூற்றாண்டில் வாழ்க்கைக்கான கோடுகள் குறைந்து அல்லது மறைந்து போய் விட்டன என்பதை விடத் தேவையில்லை என்றாகிவிட்டதே உண்மை. இன்னமும் நாம் காணும் பெண்ணடிமைத் தனங்களுக்கு அப்பெண்களே பொறுப்பாகிறார்கள் என்பதைத் தவிர; சமுதாயத்தின் கடப்பாடென்று ஒன்றும் இல்லவே இல்லை!'' என்று இலங்கைப் பத்திரிகையொன்றுக்கான பேட்டியின் போது என்னிடம் கருத்துச் சொன்னவர் குஷ்பூ! நடப்புலக வாழ்க்கையின் யதார்த்தங்களைத் தனக்கு இலகுவான ஆங்கில மொழியில் அவர் அடுக்கிக் கொண்டே போன போது, இது குறித்த எதிர்க்கேள்வி எனக்குள் எழவே இல்லை.

பெண்ணடிமைத் தனங்கள் உருவாவதற்கான சூழலும், உருவான பின் தோன்றும் சீரழிவுகளும் பற்றியெல்லாம் இவரைப் போலவே தான் பல புத்திசாலிப் பெண் மூளைகளுக்குள் அலசிப் பார்க்கப்பட்டிருக்கிறது.

ஏதாவதொன்றினைச் சார்ந்து நின்று கொண்டு எழுப்பப்படுகின்ற; எண்ணிக்கையில் குறைந்த பெண் குரல்களால் (அறிவுடையோருடையதாயிருந்த போதிலும்) சமுதாயத்தில் அவர்கள் எதிர்பார்த்ததில் 25 சதவீத அளவு மாற்றத்தைக் கூடக் காண முடிந்ததில்லை. இந்தத் தோல்விதான் ஆணுடன் தம்மை ஒப்பிட்டு ஒப்பிட்டுத் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க வைக்கிறது! மனதாலன்றி; மூளையால் சிந்தித்துச் செயற்படுகிற நிலைக்கு ஒவ்வொரு பெண்ணும் சுயமாகவே மாறும் வரையில் அடிமைத்தனங்களுக்கு ஆட்படுவது தவிர்க்க முடியாததாகவேதான் இருக்கும் போலிருக்கிறது!

''சமுதாயத்திலுள்ள நூறு பேர்களில் தொண்ணூற்றொன்பது முகங்கள் நமக்குப் பரிச்சயமில்லாதவை எனும்போது; அறிமுகமான அந்த ஒரு நபருடைய அபிப்பிராயத்துக்கு மட்டும் மதிப்பளிப்பது போதுமானது என்று நினைக்கிறேன். அனாவசியமானவர்களின் விமர்சனங்கள் என்னை ஒரு போதும் கலவரப் படுத்தியதில்லை'' என்று செயற்கைத்தனம் சிறிதுமில்லாமல் தன் உளப்போக்கினை வெளிப்படுத்திய போது கலையுலக வாழ்வில் இவர் நிலைத்து நின்று வெற்றி பெற்றதற்குரிய காரணம் விளங்கியது.

மும்பையில் பிறந்து வளர்ந்த இஸ்லாம் மதத்தவர் குஷ்பூ! ஏழு வயதாயிருந்த போது அவருடைய குடும்பத்துடன் நல்ல நட்பு கொண்டிருந்தவரான ஹிந்தி நடிகை ஹேமமாலினி மூலம் 'த பேர்னிங் ட்ரெயின்' (The Burning Train) என்ற ஹிந்திப் படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகியிருந்தார். சில வருடங்கள் கழித்து ஹிந்தி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிப்படங்களில் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்புக்கள் அதிகரிக்கத் தொடங்கின. ஒரு தடவை தற்செயலாகச் சென்னைக்கு வந்திருந்த போதுதான் குஷ்பூவுக்குத் தமிழ் சினிமாவும் வலிந்து போய் வாய்ப்புக் கொடுத்தது.

ரேவதி, ராதா, கௌதமி என்றொரு பட்டியல் கதாநாயகிகள் வெள்ளித் திரையில் அதிகமாக மின்னிக் கொண்டிருந்த காலத்தில் நிகழ்ந்தது குஷ்பூவின் தமிழ் சினிமாப் பிரவேசம். எஸ்.பி. முத்துராமன் இயக்கத்தில், ரஜினி - பிரபு இணைந்து நடித்த 'தர்மத்தின் தலைவன்' திரைப்படத்தில் (1988) பிரபுவுக்கு ஜோடியாக அறிமுகமானார். படம் சுப்பர் ஹிட். பாஸிலின் 'வருஷம் 16', வாசுவின் 'சின்னத்தம்பி' என்று அவருக்கான வாய்ப்புக்கள் தொடர்ந்தன. படங்களும் வெற்றி பெற்றன. இவருடைய முத்திரை தமிழ் நாட்டிலும் வலுவாகப் பதிந்து கொண்டது.



வெறும் சினிமா நடிகை என்பதற்கப்பால் குஷ்பூ கொண்டாடப்பட்டார். கை வண்டிகள், கல்லூரி வாயில்கள், ரயில் நிலையங்கள், மதுபானக் கடைகள் எனத் தமிழ்நாட்டில் திரும்பிய இடமெங்கிலும் பெயராகவோ, படமாகவோ தெரியத் தொடங்கினார். பெண்களுக்கான ஆடைகள், அழகு சாதனப்பொருட்களுக்கு மட்டுமின்றி இட்லி போன்ற சில உணவுப் பொருட்களுக்கும் கூட குஷ்பூவின் பெயர் குறிக்கப்பட்டது.

சேகுவராவின் பெயர், படம் குறிக்கப்பட்ட பண்டங்கள் உலகளவில் அதிகம் விற்பனையாகுவதாக அறிகிறோமே! ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் மட்டுமன்றி தமிழர் வாழும் நாடுகளிலெல்லாம் குஷ்பூவின் பெயர் குறிக்கப்பட்ட பண்டங்கள் மிக அதிகமாக விற்பனையாகின.

'கனவுக்கன்னி' என்கிற சினிமா அந்தஸ்தைத் தாண்டி, கடவுள் என்று ஆராதிக்கப்பட்டு; இவருக்கு திருச்சிராப்பள்ளியில் கோயில் (குஷ்பாம்பிகா) கட்டி மகிழ்ந்தது ரசிகர் கூட்டமொன்று! இது வேறெந்தவொரு காலத்திலும் வாழ்ந்த நட்சத்திர அந்தஸ்துக்கு கிட்டாத ஒன்றுதான்.

தமிழில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகித் தமிழிலும், ஹிந்தியிலும் நம்பர் வன் நாயகியாகத் திகழ்ந்தவர் ஸ்ரீதேவி என்றால்; ஹிந்தியில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகித் தமிழில் நம்பர் வன் நாயகியாக ஜொலித்தவர் குஷ்பூ! வயது வேறுபாடின்றி ஆண், பெண் அனைவர் மனதிலும் இடம்பிடித்த ஒரே நடிகையும் இவர்தான். பத்திரிகைக்குத் தேவையான எனது கேள்விகளுக்கு அவர் தந்த பதில்கள் இதோ!

ஒன்பது வரையே படித்திருக்கிறேன். நடிக்க வந்ததால்தான் படிப்பு நின்று போய் விட்டது. ஆனாலும் அது குறித்து எனக்குள் வருத்தம் எதுவும் இல்லை. சினிமாவில் நான் சாதித்தது, என்னுடைய கணவரைச் சந்தித்தது மட்டும்தான்! வாழ்க்கை திருப்தியாகவே இருக்கிறது. ஐந்து இந்திய மொழிகளில் 150 திரைப்படங்களுக்கு மேல் நடித்து விட்டேன். இன்றும் கூட நடித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் சினிமாவை விட்டு ஐந்து வருடங்களாகிறது.

கதாநாயகி கல்யாணம் செய்வதும், குழந்தை பெற்றுக் கொள்வதும் தவறென்று கருதுகிற சினிமாவை விட; எனக்கு என்னுடைய வாழ்க்கைதான் முக்கியமாக இருக்கிறது. அவந்திகா, அனந்திகா என்று இரண்டு பெண் குழந்தைகள். அவர்களை அக்கறையோடு கவனிக்க வேண்டும் என்பதில்

நான் அவதானமாக இருக்கிறேன். வெளிப்புறப் படப்பிடிப்புக்களையும் 6 மணிக்கு மேல் நடிப்பதில்லை என்பதையும் தற்போதைய வழக்கங்களாக் கியுள்ளேன்.

இப்போது கூட, அக்கா, அண்ணி, அம்மா வேடங்களுக்கு வாய்ப்புக்கள் வருகின்றன. எனக்கு விருப்பம் இல்லை. சினிமா தயாரிப்பதற்கு நிறைய ஆசை இருந்தது. எனது தயாரிப்பில் கடந்த வருடம் வெளியான 'கிரி' வெற்றிப்படமாகியதில் பெருந் திருப்தி. ஒரு நல்ல தயாரிப்பாளர் என்று பெயர் வாங்குவது தவிர எனக்கு வேறு இலட்சியம் ஒன்றுமில்லை.

ஆன்மீகம், அரசியல் இரண்டும் சுத்தமாகப் பிடிக்காது. எனக்குப் பிடித்த வாழ்க்கையை நான் வாழ்கிறேன். இந்த சினிமாத் துறையினுள் நான் வருவதற்கும், நிலைப்பதற்கும் எனக்குத் தடைகள் எதுவும் இருந்த தில்லை. எல்லோருக்கும் கிடைக்க முடியாத; எனக்குக் கிட்டிய இந்த வாய்ப்புக் குறித்து மகிழ்ச்சியாகவே இருக்கிறேன். எனக்குரிய அதிர்ஷ்டம் தான் இந்த வாழ்க்கை என்பதில் எனக்கு இரண்டு கருத்துக்கள் இல்லவே இல்லை. இதை நான் கர்வமாக எண்ணவில்லை. சரியாக நடக்க வேண்டும் என்கிற தெளிவு எனக்குள் இருக்கிறது. கடவுள் நம்பிக்கை கூட எனக்கு அதிகம் கிடையாது. ஆனால் வீட்டில் இருக்கிற போது தவறாமல் பூஜை செய்வேன். நானோ, என்னுடைய கணவரோ மதத்தினூடாகக் கலவரப் பட்டதில்லை. இதுதான் நம்முடைய காதலின் வெற்றி என்று கூடச் சொல்லலாம்.

எனக்கு இன்ஸ்பிரேஷன் (Inspiration) யாருமே இல்லை. நான் யாரை யாவது follow பண்ணி வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டேன் என்றோ, அல்லது அவர்கள்தான் என்னுடைய idle, அதனால்தான் இப்படி இருக் கிறேன் என்றோ சொல்ல மாட்டேன் என்று குஷ்பூ பேசி நிறுத்திய போது, நிஜ வாழ்க்கையில் அவருக்கு நடிக்கவே தெரியாதென்று புரிந்தது.

விஸ்கி, பிரெண்டிக் கடைகளுக்குத் தன் பெயர் பொறிக்கப்பட்ட போதும் சரி; சுந்தர்.சி. ஐத் திருமணம் செய்வதற்கு முன்பு சில நடிகர்களுடன் கிசு கிசுக்கப்பட்ட போதும் சரி, குஷ்பூ தன்னுடைய நிதான உலகத்தி லிருந்து இறங்கி வரவேயில்லை. இவை குறித்துச் சில ஊடகக்காரர்கள் அவ்வப்போது கருத்துக் கேட்டபோது "இந்தியா ஒரு சுதந்திர நாடு, தாம் விரும்பியதைப் பேசுவதற்கு மக்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு.



அதே போல் தாம் விரும்பிய ஒரு பெயரைத் தமது உடமைகளுக்குச் சூட்டுவதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது" என்று விட்டேற் றியாகப் பேசிவிட்டுப் போய் விடுவார்.

தான் வாழ வந்த தமிழ் நாட்டையும், மக்களையும் மிகவும் நேசித்தவர் குஷ்பூ! ஆனாலும், சமீபத்தைய பேட்டியொன்றின் மூலம் அவர் அனுப விக்க நேர்ந்த அவலம் யாருமே எதிர்பாராதது. கருத்துச் சுதந்திரத்திற்கு மிகவும் மதிப்பளித்த அவர் தனது பேட்டியின் போது கூறிய கருத்தைத் திரித்துப் பெரிதாக்கி நீதிமன்றம் வரை எடுத்துச் சென்று இறுதியில் அதற்காக மன்னிப்புக் கோர வைத்து ஓய்ந்து போனது தமிழ் நாடு.

தன்னை உலகுக்குக் காட்டிய சினிமாவின் தன்மைகளையும் அது மக்க ளோடு உறவாடிக் கொண்டுள்ள போக்கினையும் உன்னிப்பாகவே அவதானித்து வர வேண்டிய தேவை உள்ளவர் என்பதன் அடிப்படையில் அமைந்த என்னுடைய கேள்விகளும் குஷ்பூவின் பதில்களும்...!

**இப்போது வருகிற புதிய கதாநாயகிகள் மிக வேகத்தில் காணாமல் போய் விடுகிறார்களே! காரணம் என்ன?**

தெரியவில்லை. Trend of film making மாறிக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் ரசிக ரசனை மாறிப் போவதை சினிமாத் துறையால் புரிந்து கொள்ள முடியவில்லை. ரசிகர்களுக்கு நடிப்புப் பிடிக்கவில்லை என்பதால் மட்டும் தான் கதாநாயகிகள் காணாமல் போகிறார்கள் என்றும் கூற முடியாது. சென்ற வருடம் Sentiment படம் ஓடியிருந்தால் இந்த வருடம் Action படம் ஓடுகிறது. அடுத்த வருடம் Love Subject படம் ஓடலாம். சினிமாவில் எதுவும் நிரந்தரம் இல்லை. மேலும் இப்போது புதிதாக அறிமுகமாகும் நடிகைகள் தாம் நின்று நிலைக்க மாட்டோம் என்பதைத் தெரிந்து கொண்டுதான் உள்ளார்கள். (இதற்கான காரணமாக எதுவும் இருக்கலாம் என்பதுதான் சினிமா உலகம்)

**காதல் திரைப்படமோ, Action படமோ எதுவாக இருந்தாலும் இப்போது அதிக பட்சமாக வன்முறையைக் காட்டுகின்றார்கள். முடிவு என்னவோ ஏற்புடையதாக இருந்தாலும், முன் காட்சிகள் பல பின்விளைவுகளை - சமுதாயத்துக்கு முரணான கிளர்ச்சிகளைத் தூண்டி விடுவதற்குக் காரணமாக இருக்கிறதே!**

இன்று எதில் வன்முறை இல்லை என்கிறீர்கள்? தொலைக்காட்சி தான் மிகப் பெரிய வன்முறைச் சாதனம். சினிமாவுக்குத் தணிக்கைக் குழு

இருப்பது போல் தொலைக்காட்சிக்கு இல்லை. அவ்வாறு தொலைக்காட்சிக்கும் இருக்கும் எனில், நீங்கள் தொலைக்காட்சியையே பார்க்க முடியாது தெரியுமா! 'கார்ட்டூன்' சிறுவர்களுக்கான சிறப்பு ஒளிபரப்பு. அதில் எவ்வளவு வன்முறை இருக்கின்றது என்பதை எத்தனை பேர் புரிந்து வைத்திருக்கிறீர்கள்?

**சினிமாவுக்குப் பிரத்தியேகமான ஆடைக் கலாசாரம் அருவருப்பின் உச்சத்துக்குச் சென்று விட்டதாகவும், இதனால் இளைய சமுதாயம் மோசமாகப் பாதிக்கப்படுகிறது என்றும் பலமான குற்றச்சாட்டு இருக்கிறதே!**

தெருவில் போகின்ற இளைய சமுதாயத்தையும், அவர்களுடைய நடப்புகளையும், கல்லூரி மாணவ மாணவிகளின் ஆடை அலங்காரங்களையும்தான் சினிமாவுக்குக் கொண்டு வருகிறார்களே தவிர; 'சினிமா வுக்குப் பிரத்தியேகமானது' என்பது தவறு. சினிமா உலகத்தினர் வேற்றுலகமொன்றில் கண்டவற்றைப் படமாக்கவும் இல்லை. அப்படி ஒரு உலகம் தனியாகவும் இல்லை.

**சினிமாக்காரர்களின் சங்கதிகள்தான் இன்றைய உலகுக்குக் கவர்ச்சியாகவும், சுவாரசியமாகவும், அதேவேளை மோசமாகவும் விளங்குகிறது என்கிறார்களே!**

திரையில் மட்டும் எங்களைப் பார்த்து விட்டு மறந்து விடுங்கள் என்று எந்த நடிகனும், நடிகையும் உங்களுக்குப் பேட்டி தர முடியாது. ஆனால் நீங்கள் இதைச் செய்வதுதான் சரி. படத்தினதும் நம் நடிப்பினதும் விமர்சனங்களை நீங்கள் தாராளமாகச் செய்யலாம். ஆனால் எங்களது தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி ஏன் சிந்திக்கிறீர்கள்? கவலைப் படுகிறீர்கள்? அல்லது விமர்சிக்கிறீர்கள்?

**முன்னர்தான் குஷ்பூ விமர்சனங்களைப் பற்றிக் கவலைப் படாதவர்!**

*21.12.2004*





# பழநி பாரதி

அழகின் தாய் நாட்டில் பூக்களுக்கு மாநாடு நடத்திய வல்ல கவிஞன் பழநி பாரதி! வணிக வெற்றிக்கு இலக்கு வைக்கின்ற சினிமாவில் இருந்தாலும் கூட விளம்பரத்தில் விருப்பமில்லாமல் வெகு இயல்பாக இருக்கின்ற பாடலாசிரியர். எட்டாவது படிக்கும்போதே கவிதை எழுதத் தொடங்கிப் பன்னிரண்டாவது படிக்கும்போது 'வெளிநடப்பு' என்றொரு கவிதைத் தொகுதியை வெளியிட்டு நிறைவு கண்டவர். அதற்கு அணிந்துரை வழங்கியிருந்த கவியரசு வைரமுத்து, ' நம்மூரில் முதியவர்கள் எல்லோரும் சிறியவர்களைப் போல் எழுதிக்கொண்டிருக்க, ஒரு சிறியவன் முதியவனைப் போல் எழுதிக்கொண்டிருக்கிறான்' என்று சிலாகித்திருந்தார்.

பாரதி பரம்பரையிலிருந்து பேனா பிடிக்க வந்த இவர்; 'என்னுடைய தந்தை சாமி பழனியப்பன் பாரதிதாசனுடைய நேரடி மாணவர் என்பதாலும் பத்திரிகை, இலக்கியப் பரப்புக்களில் அவர் பெற்றிருந்த அடையாளங்களினாலுமே என்னால் இவ்விரு துறைகளுக்குள்ளும் இலகுவாக நுழைய முடிந்தது' என்று தன்னுடைய பேட்டிகளின் போதெல்லாம் அடக்கத்தோடு உண்மை பேசுகிற அற்புதமான மனிதர்.

*அழகின் அழகு பற்றி மிக அழகாக மொழியாடத் தெரிந்த இவருடைய எழுதுகோல் சினிமாவுக்குப் பயன்படத் தொடங்கிய போதே ரசிர்களால் வியந்து பார்க்கப்பட்டார். இதர கவிஞர்களால் விசாரிக்கவும் பட்டார்.*

*'சினிமாவில் வாலியும், வைரமுத்துவும் கோலோச்சிக்கொண்டிருந்த காலத்தில் நான் எறும்பு போல உள்ளே நுழைந்தவன்' என்று தன்னுடைய சினிமா பிரவேசம் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆனால் இன்று வைரமுத்துவுக்குப் பிறகு, சினிமாவில் அதிகமாகப் பாடல்களை (இருநூறு படங்கள், ஆயிரத்திற்கும் மேல் பாடல்கள்) எழுதியுள்ளவர் பழநி பாரதி தான்.*

*பத்திரிகைத்துறையில் சில வருடங்கள் பணியாற்றியபோது தன்னுடைய இயலுமைகளை இலக்கியமாகவும், பிறவாகவும் பதிவு செய்து படைப்பாளிகளுடைய கவனத்தைத் தன்பால் திருப்பினார்.*

*இவருடைய மொழியழகினையும், சிந்தனை வீச்சையும் மிகச் சரியாக இனங்கண்டதனால்தான் சினிமா என்கிற பல்லக்கு தானே விரும்பி வந்து பழநிபாரதியை ஏற்றிக்கொண்டது. கால் பதிப்பதற்கே கடினமான கனவுத் தொழிற்சாலைக்குள் இவருடைய சிறகடிப்பிற்கு இன்று நிறையவே வரவேற்பு இருக்கிறது.*

*இளைஞன், கவிஞன், பத்திரிகையாளன் என்கிற முக்கூட்டுக் கலவைத் தகைமையுள்ள ஒருவர் சினிமாவுக்குள் நுழைய முயல்வதும் சாதிக்க விரும்புவதும் வேண்டுமானால் சாதரணமானதொன்றாக இருக்கலாம். ஆனால் நுழைந்தவரைத் தொடர்ந்து வரவேற்றுக் கொண்டிருப்பது சினிமாவில் ஆச்சரியம்தான்! வட பழனியிலுள்ள அவருடைய இல்லத்தில் இடம் பெற்ற நேர்காணல் இது!*

**கவிஞன் திரைப்படப் பாடலாசிரியனாக மாறும்போது சமூதாயத்தின் மீதான கவனமும், கவிஞனுக்கான பொறுப்பும் குறைந்து போய் விடுவதாகக் கூறப்படுவது சரிதானா?**

தவறு. கவிஞனும், பாடலாசிரியனும் வேறுவேறுதான். ஆனால் இருவருமே தார்மீகப் பொறுப்பு மிக்க கலைஞர்களாக இருப்பவர்கள், இருக்க வேண்டியவர்கள் ஆகையால் கவிதை, பாடல் இரண்டிலும் கவனம் குறையாமல் பயணிக்க முடியும்.

'உடுமலை நாராயண கவி', 'பட்டுக்கோட்டை' போன்றவர்கள் முக்கியமான பாடலாசிரியர்கள். அவர்களின் மறுபுறத்தில் பொறுப்பு மிக்க கவிஞர்கள் இருந்தார்கள். 'கம்பதாசன்', 'கண்ணதாசன்' போன்றவர்கள் சிறந்த கவிஞர்கள். அவர்களின் மறுபுறத்தில் திறமையான பாடலாசிரியர்கள் இருந்தார்கள்.

**கவியரசராகவே மறைந்துபோன கண்ணதாசன்; கவிப்பேரரசராக வாழ்ந்து வருகிற வைரமுத்து- இவ்விருவர் பற்றியும் உங்களுடைய மதிப்பீடு என்ன?**

திரையிசைப் பாடல்களுக்கென்றே ஒரு மொழியைக் கண்டுபிடித்து அதில் அரசோச்சியவர் கண்ணதாசன். திரைப்பாடல்களில் எல்லாவிதமான சோதனைகளையும், சாதனைகளையும் கண்டு வென்று நிற்பவர் அவர். அவரோடு யாரையும் ஒப்பிட முடியாது.

தமிழில் புதுக்கவிதையின் உத்திகளையும், சிந்தனை மரபையும் கொண்டு தனக்காகத்தானே ஒரு பாதையை அமைத்துக் கொண்டவர் வைரமுத்து. திரையிசைப் பாடல் வரலாற்றில் இருவரும் ஒவ்வொரு திருப்பம் என்பதில் யாருக்குமே இரண்டாவது கருத்து இருக்க முடியாது.

**திரைத்துறையினுள் நீங்கள் எந்தெந்த விடயங்களிலெல்லாம் கவனமாக இருக்கிறீர்கள்?**

அதிக ஆபாசத்துடன் பாடல் எழுத வேண்டும் எனும் போதோ, இயக்குநர்களுடன் சமரசம் செய்துகொள்ள முடியாத போதோ, வேண்டாம் என்று விட்டு வந்திருக்கிறேன். என்னுடைய அப்பாவைப் பார்த்து வளர்ந்ததால் மொழி மீதுள்ள மரியாதையைக் குலைக்கும்படியாக எழுதிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறேன்.

**ஆங்கிலச் சொற்கலப்பு, கொஞ்சம் ஆபாசம் என்கிற ரீதியில் உங்களுடைய பாடல்கள் நிறையவே வெளிவந்தனவே! அவை தவறென்று தெரியாமலா எழுதினீர்கள்?**

அவையெல்லாம் என்னுடைய முன்னைய தவறுகள்தான் என்பதை நான் மறுக்கவில்லை. 'ஆட்டோகிராஃப்', 'ஸ்டைல்' போன்றவை ஆங்கிலச் சொற்களாக இருந்தாலும் எல்லோருக்கும் புரிந்த பதங்கள் என்பதால் ரசிக்கப்பட்டது. அதிரடியாகச் சில விடயங்களைச் சொல்லும்போது ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாக இருந்திருக்கிறது. இதையெல்லாம் விட, சில நிர்ப்பந்தங்கள் அழுத்துகின்றன என்பதே உண்மை. பல பாடலாசிரியர்கள் இதை வெளியே சொல்வதில்லை.

நான் ஒரு பாடலை 'வேண்டாம்' என்று மறுத்துவிடுகிறேன் என்றால், அதை வேறொருவர் எழுதி விடுகிறார். அப்போது நான் மறுத்ததற்கான காரணம், அப்பாடல் வெளிவர முடியாததற்கான சூழ்நிலை என்பன தவிர்க்கப்படுகிறது இல்லையா!

சில நேரங்களில் பல பாடல்கள் டம்மி வார்த்தைகள் போடப்பட்டும் வரும். இவை இசையமைப்பாளர்கள் மெட்டுப் போடும்போது அவர்களே போட்டு விடுகின்ற வார்த்தைகள். அவற்றைக் கேட்டுக் கேட்டுப் பழகிய இயக்குநர்களும், உதவி இயக்குநர்களும் அதையே பல்லவியாக வைத்துக் கொள்வோம் என்பார்கள். அது நல்லதாக இருந்தாலும் சரி; மோசமானதாக இருந்தாலும் சரியே! இது இக்கட்டானதொரு சூழ்நிலை. இதற்காக நாங்கள் இரண்டு மூன்று பல்லவிகள் எழுதிக் கொடுத்திருப்போம்.

இந்தப் பல்லவிகளுக்கு இன்னொன்றும் நிகழும். ஒன்றின் வார்த்தைகளுடன் இன்னொன்றினைத் தொடுத்துத் தாமே புதிய பல்லவியொன்றினையும் அமைத்துக் கொள்வார்கள்.

'உள்ளத்தை அள்ளித்தா' திரைப்படத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மேற்கத்தைய, அராபிய மெட்டுக்களுக்குச் சந்தம் மாறாமல் சுவை கூட்ட நான் பயன்படுத்திய ஆங்கிலச் சொற்கள் அனைவரையும் கவர்ந்ததால் சில காலம் தொடர்ந்து அவ்வாறு எழுதினேன்.



**இருபது வருடங்களுக்கு முன்னர் திரைத்துறையில் பாடலாசிரியர்களுக்கு இருந்த சாதகபாதக நிலைமைகளை உங்களுடைய இக்காலத்துடன் ஒப்பிட்டுக் கூறுங்கள்.**

முன்பெல்லாம் கவிஞர்கள், எழுத்தாளர்களுக்குத் திரைத்துறையில் மிகப் பெரிய மரியாதை இருந்தது. உடுமலை நாராயண கவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், வாலி ஆகியோருடைய காலத்தில் பாடலாசிரியர்கள் பெரிதும் மதிக்கப்பட்டார்கள். மருதகாசி போன்றவர்களின் காலத்தில் கதைகளையே அவர்களிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லி, யாரைக் கதாநாயகியாகப் போடலாம் என்று இயக்குநர்கள் ஆலோசனை கேட்பதுண்டாம். மருதகாசியின் மகன் மருதபரணி பழைய நிலைமைகள் பற்றிப் பல விடயங்களை என்னிடம் கூறியிருக்கிறார்.

இப்போது திரைத்துறையில் பாடல் எழுதுபவர்களுக்குரிய முக்கியத்துவமும் மரியாதையும் வழங்கப்படாமைக்குக் காரணம்; வயது குறைவான இளைஞர்களே புதிது புதிதாக வந்து கொண்டிருப்பதுதான். நாங்களும் பாடல் எழுத வேண்டும் என்கிற ஆர்வத்தில் அவர்கள் வருகிறார்களே தவிர; அனுபவமோ தனி ஆளுமையோ இவர்களிடம் மிகக் குறைவாகவே இருக்கிறது. இதற்கான காரணம், தற்போதைய பத்துப் படங்களில் எட்டுப் படங்கள் காதல் படங்களாக இருக்கும். இவற்றில் இடம் பெறுகின்ற பாடல் சூழல்களும் வெறும் காதல் வெளிப்பாடுகள்தான். இதற்கெல்லாம் ஒரு பெரும் எழுத்தாளன்தான் எழுத வேண்டும் என்கிற அவசியமும் இல்லை. இதை ஒரு குற்றச்சாட்டாக நான் சொல்லவில்லை. எல்லாவற்றிலுமே படிப்படியாக இறங்கி வந்து கொண்டிருக்கிறோம்.

**அதாவது ஆரம்ப கால சினிமாவில் நாம் உணர்ந்த காத்திரத் தன்மையை இக்கால சினிமா கொண்டிருக்கவில்லை என்று கூறலாமா?**

ஆம். சினிமாவில் தொழில்நுட்பம் அடைந்த வளர்ச்சியின் பாதியளவுக்குக் கூட கதை சொல்லிகளும் பிறரும் கவனம் செலுத்தவில்லை. படங்களைப் போலவே பாடல்களிலும் ஆபாசம் என்றொரு பெருங்குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. இதற்கு எல்லோரும்தான் காரணம். கதை என்றால் முன்பெல்லாம் ஒரு பெரிய கதை இலாகாவே இருக்கும்.

சட்டத்துறையிடம் ஆலோசனை பெற்று, காட்சிகள் அமைக்கப்படும். இந்நிலைமைகள் இன்றில்லை. விடயம் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள்

என்றொரு பெரும் இளைஞர் படையே சினிமாவுக்குள் குதித்திருக்கிறது. ஒரு கூர்ந்த கவனிப்பு இல்லாமலே இன்று சினிமாப் பாடல்கள் உருவாக் கப்பட்டுக்கொண்டுள்ளன.

**திரைப்படப் பாடல் எழுத வந்த இளைஞர் படைக்கு நீங்கள்தானே முன்னோடி!**

உண்மைதான். என்னுடைய சினிமா நுழைவுக் காலத்தில் (வைரமுத்து காலம் வரை) தமிழை நன்கு படித்திருந்தால் மட்டுமே பாடல் எழுத முடி யும் என்கிற நிலை இருந்தது. அது தப்பே இல்லை. ஆனால் எளிமை யான மொழியாடல் மூலம் பாடல் எழுதிக் காட்டியவன் நான்தான். இது ஒரு புறம் பலம் என்றால்; மறுபுறம் பலவீனமாகிவிட்டது. திரைப்பாடல் எழுதும் முறை நிறையவே எளிமையாகிவிட்டது. இன்று சுமார் 50 இற்கும் மேற்பட்ட பாடலாசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்குள் சாதிக்க வேண்டும் என்கிற நெருப்பு கனன்று கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு வரும் வெவ்வேறு ஆளுமைகளை வளர்த்துக் கொண்டு முயன்று கொண் டிருக்கிறார்கள்.

**நீங்கள் எண்ணியதையும், உங்கள் உணர்வுகளையும் மட்டும் பதிவு செய்து கொண்டிருந்த உங்களுடைய எழுதுகோல், சினிமாவுக்குள் நுழைந்த பின்பு பிறருடைய எண்ணங்களுக்காகவும், விதிப்புக்களுக் காகவும் இயங்கத் தொடங்கியதே! ஆரம்பத்தில் இதனை எவ்வாறு உணர்ந்தீர்கள்?**

சந்தோசமாகத்தான் உணர்ந்திருக்கிறேன். கவிஞன் பாடலாசியரினாக வும் மாறும்போது அவனுடைய சிந்தனை பல நூறு மடங்கு மக்களைச் சென்று சேர்கிறது என்கிற திருப்தியோடும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து விட்ட பலவீனத்தோடும்! இதற்கப்பால் அற்புதமாக எழுதிய பாடல்கள் வெற்றியடையாத போது ஏற்படுகின்ற வலி அதிகமாகி விடுகிறது. விட்டுக் கொடுத்து விட்ட பலவீனம் என்று நான் சொல்வது, மோசமான சூழல் களில் செய்து கொள்கிற சமரசமும் அதன் போது செத்துவிடுகிற எனது சொற்களும்தான்.

**இன்று வரையிலான உங்கள் மிளிர்வுக்கு இவர்கள்தான் காரணம் என்று எவர்களைக் குறிப்பிடுவீர்கள்?**



எனக்குள் ரசனை மிக்க ஒரு பாடலாசிரியன் இருப்பதைக் கண்டு பிடித்து அறிமுகம் செய்து வைத்தவர் இயக்குநர் விக்ரமன். திறமையின் மீது நம்பிக்கை வைத்து எல்லாப் பாடல்களையும் எழுது என்று அள்ளிக் கொடுத்தவர் இயக்குநர் சுந்தர். சி. (உள்ளத்தை அள்ளித்தா). ஒருவர் சிறகுகளைக் கொடுத்தார். இன்னொருவர் வானத்தையே கொடுத்தார்.

**ரசிகர்கள் உங்களைத் தொடர்ந்து கொண்டாடிக் கொண்டிருப்பதற் குரிய காரணங்களாக எவற்றையெல்லாம் பட்டியலிடுவீர்கள்?**

எளிமையாகப் பாடல் எழுதியது, இசைக்கு வசப்பட்ட வார்த்தைகளைப் போட்டது, இயக்குநர்கள் கேட்பதைச் சரியாக கொடுப்பது (இதனூடாகச் சமரசம் செய்ய வேண்டிய சூழ்நிலைகளைத் தவிர்ப்பது), பத்துப் பாடல்கள் எழுதினேன் என்றால் அவற்றுள் எட்டுப் பாடல்கள் வெற்றிப் பாடல்களாக அமைந்து விடுவது என்றிவற்றைச் சொல்லி விடலாம்.

**இசையமைப்பாளர்களின் மூலம் தான் பாடலாசிரியன் புகழ் பெற முடியும் என்பதுதான் நாளையும் கூடச் சரியாக இருக்குமா?**

மாறிப் போகலாமே! ஒரு பாடலின் புகழ் இசையமைப்பாளருக்கும், பாடலாசிரியருக்கும் சரி சமமாகக் கிடைப்பதுதான் எப்போதும் சரியாக இருக்கும் என்பதால் இந்த நிலைமை மாறி விடும்.

**எந்த இசையமைப்பாளருடன் இணைந்து அதிகமான திரைப் படங் களுக்குப் பாடல்கள் எழுதியிருக்கிறீர்கள்?**

சிற்பியுடைய இசையில் என்று நினைக்கிறேன். ஒரு வருடத்தில் இருவரும் சேர்ந்து 28 படங்கள் செய்திருக்கிறோம்.

**இசைஞானி பற்றி...!**

இசைஞானமும், மொழிப் புலமையும் பின்னிப் பிணைந்த கலைஞனாக இந்த நூற்றாண்டில் நமக்குக் கிடைத்திருப்பவர் இசைஞானி இளைய ராஜா! பாடல்கள் எப்போதும் எளிமையான மொழியில் பேணப்பட வேண்டும். காதுகளில் கேட்கிற போதே கருத்துக்களில் உள்ளம் ஊறி விட வேண்டும் என்பதை அவர் பல பாடல்களில் குறிப்பிட்டு உணர்த்து வார். சில நேரங்களில் சரணங்களுக்கு வார்த்தைகள் கிடைக்காமல் திணறு கிற போது அதை எப்படிப் பிரித்துக்கொண்டால் எளிதாக இருக்கும்

என்று எழுதிக் காட்டுவார். பிரமிக்கும்படியான சில பாடல்களைச் சொல்லி இப்படி எழுதினால்தான் இன்றைய பாடல் நாளையும் இருக்கும் என்பார். ஒரு சிகரம் குழைந்து குழைந்து பழகுகிற குழந்தைமையை அவர் பக்கத்தில் பாடல் எழுத உட்கார்ந்திருக்கும் போதுதான் உணர்ந்திருக்கிறேன்.

**முன்னைய திரைப்படப் பாடலாசிரியர்களில் யாரை வியந்து போய்ப் பார்க்கிறீர்கள்? அல்லது அவரைப் போலவே புகழ் பெற வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

தமிழர்களின் திருவிழாப் பாடகனாகக் கண்ணதாசன் என்னை அதிகமாக ஊடுருவிப் பாதித்திருக்கிறார். தமிழர்களின் வீடுகள், ஊடகங்கள், உள்ளங்கள் எங்கும் அவரது பாடல்களே பொங்கி வழிகின்றன. இந்த மண்ணையும் மக்களையும் அவருடைய பாடல்களைப் போலவே என்னுடைய பாடல்களும் கொண்டாட வேண்டுமென்று நினைக்கிறேன். அதை நோக்கியே நகர்ந்து கொண்டும் இருக்கிறேன்.

**நீங்கள் எழுதிய பாடல்களில் பத்து வருடங்கள் கழித்துக் கேட்கும் போது கூட, கேட்கக் கூடிய சுகமாயிருக்கிறது என்று எந்தெந்தப் பாடல்களைக் குறிப்பிடுவீர்கள்?**

இதை நான் சொல்லக் கூடாது. ரசிகர்கள்தான் சொல்ல வேண்டும்.

**சரி, நீங்கள் எழுதிய பாடல்களில் எவற்றையெல்லாம் மீண்டும் மீண்டும் ரசிக்கிறீர்கள்?**

(சிரிக்கிறார்) என்னுடைய ரசனையைத் தொலைத்துவிட்டு எவருடைய நிர்ப்பந்தத்திற்காகவும் நான் இதுவரை பாடல் எழுதவில்லை. எல்லாவற்றையுமே உருகி உருகித்தான் எழுதியிருக்கிறேன் - நானும் ரசிப்பதற்காக! ஆனாலும் மிகவும் பிடித்த பாடல்கள் என்றால்,

ஆனந்தம் ஆனந்தம் பாடும் (பூவே உனக்காக)

உன் மார்பில் விழி மூடி (நினைத்தேன் வந்தாய்)

என்னைத் தாலாட்ட வருவாளா (காதலுக்கு மரியாதை)

முன்பனியா முதல் மழையா (நந்தா)

இளங் காற்று வீசுதே (பிதா மகன்)



அழகிய லைலா (உள்ளத்தை அள்ளித்தா)

நீ கட்டும் சேல மடிப்பில நான் (புதிய மன்னர்கள்)

சேலையில வீடு கட்டவா (அவள் வருவாளா)

நீயில்லை நிலவில்லை (பூச்சூடவா)

ஒரு மணி அடித்தால் (காலமெல்லாம் காதல் வாழ்க)

(பத்தாவது பாடலை அவர் கூறி முடித்தவுடன் குறுக்கிட்டு "என்ன நீங்கள் எழுதிய டொப் டென்னா" என்று ஹாஸ்யமாகக் கேட்டேன். இல்லை நான் முடிப்பதற்குள் குறுக்கே புகுந்து விட்டீர்களே! விடுங்கள் மொத்தப் பாடல்களையும் பட்டியலாகத் தருகிறேன் என்று கூறிச் சிரித்தார். )

**வேறொரு கவிஞர் எழுதி வெற்றி பெற்ற பாடல்களை ரசித்துக் கொண்டே; இவற்றை நான் எழுதியிருந்தால்.... என்று எண்ணிப் பார்த்ததுண்டா?**

நிறையவே! அவையெல்லாம் கண்ணதாசனின் பாடல்கள்தான்.

**ஏன் கண்ணதாசனையே சுற்றிச் சுற்றி வருகிறீர்கள்?**

இரண்டு வரியில் பெரியதொரு கதையை - வாழ்க்கையைச் சொல்லக் கூடியவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? அவரது பாடலின் முதல் வரியிலேயே சூழல் ஆரம்பமாகி விடும். பாடல் எதைப் பற்றிச் சொல்ல வருகிறதென்பதும் ஆரம்பத்திலேயே புரிந்துவிடும். முதல் வரியிலிருந்து இறுதி வரைக்கும் சிறந்த ஓர்மை இருக்கும். அவருடைய பெருமளவு பாடல்கள் இப்படித்தான் இருக்கின்றன.

**இன்று வாழ்ந்து கொண்டுள்ள கவிஞர்களில் யாரை அசாதாரணமாகப் பார்க்கிறீர்கள்?**

சுரதாவைப் பார்க்கிறேன். நேற்றைய பழமையும், நாளைய புதுமையும் ஒரு சேரக் கையாண்ட எழுத்து அவருடையது. கவிதை என்பது காலத்தின் கண்ணாடி என்கிற உண்மையை அவரது கவிதைகளில் காண முடியும்.

**கவிதை, கவிஞன் - இவ்விரண்டு பற்றியும் சிந்திக்காமல் பதில் சொல்லுங்கள்?**

கவிதைகள்தாம் ஒரு மொழியின் செல்லங்கள்; செல்வங்கள். கவிஞன் மொழியின் தலை ஞாயிறாக நின்று ஒளி வீச வேண்டியவன்.

ஒளி தருவது யாது?

தீராத இளமையுடையது யாது?

வெய்யவன் யாவன்? இன்பம் எவனுடையது?

மழையை எவன் தருகிறான்? புகழ் எவனுக்குரியது?

அறிவு எதுபோல் சுடரும்?

அறிவுத் தெய்வத்தின் கோயில் எது?

ஞாயிறு அது நன்று!!

(சிந்திக்காமல் ஒரே மூச்சில் அவர் இதைக் கூறி முடித்தபோது தந்தையை வியந்து போய்ப் பார்த்துக் கொண்டே இருந்தது அவருடைய குழந்தை).

**உங்களுக்குக் கனவு (கவிதை) வந்த பாதையில்....!**

அப்பாவே என்னை நடத்தினார். உங்களுடைய நாட்டின் வீரகேசரி பத்திரிகையிலும் இரண்டு வருடங்கள் வரை அவர் பணியாற்றியிருக்கிறார். இன்று வரையில் 25 புத்தகங்கள் வரை எழுதியிருக்கிறார். எனக்குச் சிறு வயதிலேயே விளையாட்டில் விருப்பம் இருக்கவில்லை. அப்பா போகின்ற கவியரங்கங்களுக்கெல்லாம் போவேன். அவர் கவிதைகள் எழுதும்போது அருகிலிருந்து கவனித்துக் கொள்வேன். அவர் படிக்கும் புத்தகங்களை எடுத்துப் படிப்பேன். எட்டாவது படிக்கும்போதே நானும் கவிதை எழுத வேண்டும் என்று முயன்று விட்டேன். அவற்றை அப்பாவிடமே கொடுத்துத் திருத்தச் சொல்வேன். எனது பிழைகளைத் திருத்திச் சரியான புத்தகங்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

முதலில் குழந்தைப் பாடல்கள்தான் எழுத ஆரம்பித்தேன். கண்ணதாசன் பாடல்களைப் படித்த பின்புதான் மரபுக் கவிதைகளை எழுத ஆரம் பித்தேன். அக்காலப் பகுதியில் தான் மேத்தாவின் 'கண்ணீர் பூக்கள்' படித்தேன். புதுக்கவிதைகள் எழுதத் தோன்றியது. எழுதும் போது அவை எனக்கே பிடித்தது. இதற்கு, வயதும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.



அதன் சிந்தனை வீச்சு, உள்ளடக்கம் எல்லாம் சுவையாகி விட்டதன் வெளிப்பாடாகவே பிளஸ் 2 (பன்னிரண்டாவது வகுப்பு) படிக்கும்போதே 'வெளிநடப்பு' என்றொரு கவிதை நூலைப் படைத்தேன். அவற்றைப் படித்துப் பார்த்து அணிந்துரை வழங்கியிருந்தார் கவிப்பேரரசு வைரமுத்து. அதில் அவர் குறிப்பிட்டிருந்தது எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. 'நம்மூரில் முதியவர்களெல்லோரும் சிறியவர்களைப் போல் எழுதிக் கொண்டிருக்க; ஒரு சிறியவன் முதியவர்களைப் போல எழுதிக் கொண்டிருக்கிறான்' என்று புகழ்ந்திருந்தார்.

**உங்களுடைய கவிதைகளில் மழையும், பட்டாம்பூச்சியும், வான வில்லும் அடிக்கடி வருகின்றனவே! சென்னையில் இருப்பதாலா?**

எல்லோருடைய படைப்புக்களிலும் ஏதோ ஒன்றோ இரண்டோ அடிக்கடி வரும். அது ஓவியங்களுக்கும் பொருந்தும். கண்ணதாசனுடைய பாடல் களைப் பார்த்தீர்களானால், நிரம்பவே உணர்ச்சி வசமாக வார்த்தைகள் போக முடியாமல் நிற்கும்போது 'அம்மம்மா' என்ற வார்த்தையைப் போடுவார். நிறைந்த மகிழ்ச்சியிலும் 'அம்மம்மா' போடுவார்.

இன்னொன்று நீங்கள் கேட்டது போலவே சென்னையில் இருப்பதால்; இவற்றைப் பார்க்க முடியாததால் கவிதைகளில் ஏங்குகிறோம். இங்கே வெறும் வாகனங்களின் புகைதானே இருக்கிறது.

**திரைத்துறையில் இருக்கிறேன் என்று நீங்கள் எண்ணும்போதெல்லாம் உங்களை மகிழ்ச்சியின் எல்லைக்கு அழைத்துச் செல்வது, அதனூடு கிடைக்கிற புகழ் மட்டும் தானா?**

எழுதக்கூடிய ஆற்றலுள்ள வேறெந்தத் தொழிலிலும் பெற முடியாத 'பெருந்தொகை', திரைப்பாடல் எழுதும் போது கிடைக்கிறதே! தவிரவும், ஊடகங்கள் மூலம் பெயரும் புகழும் கிடைக்கிற போது ஒரு நிறைவை உணர்கிறேன். திறமையிருக்கிற எவருக்கும் பொருளாதார ரீதியாக வசப்படுகின்ற இடம் இதுதான்!

**நவீன சினிமா இளைஞர் சமுதாயத்தைக் கெடுத்துக் கொண்டே இருக்கிறதென்கிற குற்றச்சாட்டு பரவலாகவும் பலமாகவும் கூறப் படுகின்றது. இளைஞர்களைச் சீர்குலைக்காத வகையில் இன்றைய சினிமாவைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதில் உங்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது?**

மேற்குலகுடனான தொடர்பு எம்முடன் இரண்டறக் கலந்துவிட்டதே இதற்குக் காரணம். இந்தக் கலப்பை சினிமா செய்ததைவிடத் தொலைக்காட்சிகளே மிக அதிகமாகச் செய்து கொண்டிருக்கின்றன. முன்பெல்லாம் இவ்வளவு ஊடகங்கள் இருக்கவில்லை.

வீட்டுக்குள் இருந்தவாறே எல்லா நாட்டு நடப்புக்களையும் சமூதாயம் உள்வாங்கிக் கொண்டிருக்கிறது. என்னுடைய குழந்தையே 80 சனல்கள் மாற்றும். ஏதாவது ஒன்று வித்தியாசமாய் இருந்தால், அதில் நிற்கும். என்ன சொல்லித் தடுப்பீர்கள்? அப்படியென்றால் பெற்றோர் பக்கத்திலேயே இருக்க வேண்டும். இது எத்தனை குடும்பங்களில் சாத்தியம்!

இன்னொன்று பத்திரிகையிலும் சரி; வேறெந்த ஊடகத்திலும் சரி, எதிர்மறையான; மோசமான விடயங்கள்தான் செய்தியாகிறது. இவற்றையெல்லாம் படமாக எடுக்கிறார்கள். இதற்கு எதிர்ப்பு வரும்போது, வாழ்க்கையில் இருப்பதைத்தான் சொல்கிறோம் என்கிறார்கள். இதெல்லாம் நமக்கெல்லாமான திணிப்புகள்தான்.

தரமானவர்கள், சமூகத்திற்கு நல்ல கலைஞர்களாக இருக்க வேண்டும் என்று நினைத்து எழுதும்போது மோசமான விடயங்களைக் குறைத்தும் நல்ல விடயங்களை அதிகரித்தும் எழுதுகிறோம். வியாபார எண்ணத் துடனேயே கலைஞர்கள் பெருகுவார்களானால் விளைவு மோசமாகித் தானே போகும்.

பத்திரிகைப் பேட்டியொன்றின்போது இயக்குநர் மகேந்திரன் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். 'வாழ்க்கையில் நாங்கள் நுகரக்கூடிய ஆயிரமாயிரம் நல்ல விடயங்கள் இருக்கும்போது, மோசமான விடயங்களை முன் வைப்பது சிறந்ததோர் கலைஞனுக்கு முறையல்ல' என்றார்.

**ஊடகங்கள் மோசமான சினிமாவைச் சரியான விமர்சனத்துக்குள்ளாக் குவதனூடாக அது மக்களால் நுகரப்படுவதைத் தடுக்கலாம் அல்லது குறைக்கலாம் இல்லையா?**

(சிரிக்கிறார்) இந்தக் கேள்வி இன்றைய ஊடகங்களையோ அவற்றின் போக்கினையோ அறியாத ஒரு சிறு பகுதி மக்களுக்கான விடை தேடல் என்று நினைக்கிறேன். இன்றைய உலக ஊடகங்களில் சினிமாவைத் தவிர்த்து இயங்குபவை எத்தனை இருக்கின்றன? சினிமாவை நம்பியே பெருமளவு ஊடகங்கள் இயங்கி வருகின்றன. சினிமா சம்பந்தமான செய்தி



தரவில்லையென்றால், அந்த ஊடகம் விற்காது என்கிற வியாபாரப் புத்தியுடன் ஊடகங்கள் இயங்கும்போது கலை நோக்கோ சமுதாய அக்கறையோ அவர்களுக்கு எப்படி வரும்? இதனூடாக ஊடகங்களை நான் விமர்சனம் செய்யவில்லை. உண்மையைச் சொல்கிறேன்.

**இந்த விடயத்தில் தணிக்கைக் குழுவின் இயலுமை என்னவாக இருக்கிறது?**

தணிக்கைக் குழுவில் இருப்பவர்கள் அரசாங்க அதிகாரிகளே தவிர; கலைஞர்கள் இல்லை.

**கலைஞர்களும் இருப்பார்களில்லையா?**

மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். தணிக்கைக் குழுவின் தலைவர் ஓர் அரசாங்க அதிகாரி. மத்திய அரசாங்கத்தில் ஆட்சி புரிபவர்களுக்கே தணிக்கைக் குழுவில் உறுப்பினராக முடியும். இவர்களுக்குப் பாட்டும், நடிப்பும், நடனமும் தெரியும் என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் சரியான, பொருத்தமான கலைஞர்களைத் தணிக்கைக் குழு கொண்டிருக்கவில்லை.

நான் எழுதியிருந்த ஒரு பாடல் வரி 'உன் முத்தத்துக்குள்ள நான் ஊறணும், உன் முந்தானையா நான் மாறணும்' என்பது. இதில் 'ஊறணும்' என்ற வார்த்தையை மட்டும் வெட்டி விட்டு காட்சியை அப்ப டியே விட்டுவிட்டார்கள். காட்சியில் உதடுகளின் அசைவு; நான் எழுதியதை விட மோசமானதொரு விடயத்தைக் கொண்டு போய் மக்க ளிடம் சேர்த்திருக்கிறது.

இன்னொன்று இதைக் கையாள்கிற கலைஞர்களுக்கு நேர்மையில்லை. சமூகத்திற்கு நாம் எதனை முன்வைக்க வேண்டும் என்கிற நேர்மை வேண்டும். சமூகப் பொறுப்பு மிக்க இளைஞர்கள் நிறையப் பேர் இதற்குள் வர வேண்டும். ஆனாலும் கூட இவையெல்லாம் முழுமையான தீர்வுகள் என்று கூறி விட முடியாது. இவர்கள் சினிமாவை உருவாக்குகின்ற நிலைமை என்றைக்கோ இழக்கப்பட்டு விட்டது.

**நீங்கள் எழுத விரும்பிய/ விரும்புகிற ஏதாவது விடயத்தினை, எழுதவே கூடாதென்கிற உத்தரவு அல்லது சட்டங்கள்...!**

இதுவரையிலும் அப்படியொரு சூழல் எனக்கு வந்ததில்லை. ஆனால் ராஜீவ் படுகொலை நடந்த போது இங்குள்ள தமிழ் அறிஞர்கள் உளவு

பார்க்கப்பட்டார்கள். அந்த நேரத்தில் எழுதுவது சிரமமாய் இருந்தது. விழுப்புரத்திலிருந்து சென்னைக்கு வந்து படைப்பொன்றை உருவாக்கிய கவிஞர் ஒருவருடைய அந்த நூலுக்குப் 'புலிகளின் காலம்' என்று நான் தான் பெயர் வைத்தேன். பொலிஸ் வந்து குடைய ஆரம்பித்து விட்டது. நானோ, அவரோ வெறும் இனப்பற்றாளர்களே தவிர; புலிகளுக்கு ஆதரவாளர்களில்லை. அதையும் தாண்டி நான் எழுதியிருக்கிறேன். என்னுடைய 'வெளிநடப்பு' நூலில் இலங்கை இனப் பிரச்சினையைப் பற்றி எழுதியிருக்கிறேன்.

**ஓ! இந்தத் துணிச்சலின் தொடர்ச்சிதான் பத்திரிகைத் துறைக் குள்ளான நுழைவா?**

ஆம். துணிச்சலாக எழுதுகின்ற பத்திரிகையாளனுடைய பேனா என்பது; உண்மையாகவும், நேர்மையாகவும் எழுதக் கூடிய/ எழுத வேண்டிய அவனுடைய தனித்துவத்தைக் குறிப்பதாக என்னுடைய அப்பா அடிக் கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். பள்ளி மேல்வகுப்பு முடிந்தவுடனேயே பத்திரிகைக்குள் போய் விட்டேன். அத்துறையோடான பரிச்சயத்துக்கு அப்பாதான் காரணம் என்பதால் சிரமமின்றி நுழைந்தேன்.

'நீரோட்டம்', 'போர்வாள்' ஆகிய பத்திரிகைகளில் சில காலமும், வலம்புரிஜான் நடத்திய 'தாய்' பத்திரிகையில் நான்கு வருடங்களும் பணி புரிந்தேன். நிறைய எழுத்தாளர்கள் எனக்கு அறிமுகமாகியதும், நான் இலக்கியத்தில் ஊறிப் போகக் களம் அமைந்ததும் தாய் பத்திரிகையில் தான். பத்திரிகையை உருவாக்குவதற்குத் தேவையான அத்தனை விடயங்களையும் கற்றுத் தந்ததுடன் என்னைச் சுதந்திரமாக எழுத வைத்தவரும் வலம்புரிஜான்தான். சென்னையில் எந்த இலக்கியக் கூட்டம் நடந்தாலும் அங்கு நடைபெறும் சர்ச்சைகளையெல்லாம் தவறாமல் பதிவு செய்து விடுவேன்.

**இன்று இங்கிருந்து வெளிவருகின்ற பத்திரிகைகளின் தன்மையை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

ஒன்று, நடு நிலைமை என்கிற பெயரில் பல நேரங்களில் பிழையான கருத்துக்களை எழுதிப் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்கின்றன.

இதுதான் நம்மைப் போன்றவர்களைச் சரியான நேரத்தில் குழப்பி விடு கிறது. சில பத்திரிகைகள் தமது முடிவைச் சரியாகச் சொல்ல வேண்டும்



என்பதில் கவனமாக இருக்கின்றன. 'சோ' வின் 'துக்ளக்' பத்திரிகை இந்த வகை. இவை முழுக்க முழுக்க அவர்கள் எதைச் சார்ந்திருக்கிறார்களோ அதையே நிறுவ முற்படும்.

இன்னொன்று அரசியல் பத்திரிகை. ஆசிரியர் எந்த அரசியலைச் சார்ந்திருக்கிறாரோ, அது சார்ந்த கருத்துக்களை எழுதுவது இந்த வகை. எல்லாவித சரியலிஸக் கருத்துக்களையும் இவர்கள் எழுதுவார்கள்.

பொது தர்மம் கருதி வெளிவருகின்ற பத்திரிகைகள் இந்தியாவில் மிகவும் குறைவு. அதிலும் சிற்றிதழ்களில் மிக மிகக் குறைவு. தங்களுடைய சண்டை சச்சரவுகளைத்தான் அவற்றில் எழுதுகிறார்கள்.

**இலத்திரனியல் ஊடகங்களின் வருகைக்குப் பின்பு அச்சு சற்றே புறந்தள்ளப்பட்டு விட்டது என்று பேசிக் கொள்கிறார்களே!**

சினிமா என்கிற ஊடகம் பற்றி மக்கள் கொண்டிருக்கிற கருத்துத்தான் காரணம். நடிப்புத் துறையைத் தவிர்த்து சினிமாவின் பிற துறைகளில் பெண்கள் அதிகம் ஜெயித்ததில்லை. கெமரா, எடிட்டிங், டைரக்ஷன் - இதிலெல்லாம் பெண்கள் அதிகமில்லை. கெமராவுக்கு விஜயலக்ஷ்மியும், பாடலுக்குத் தாமரையும்தான் இன்று வரையான சினிமா சாதனைப் பெண்கள் (நடிப்பு தவிர).

ஆனால் பெண்கள் எங்கே நுழைந்தாலும் ஆண்களைத் தாண்டிச் சென்று விடுவார்கள். அந்தளவுக்கு அவர்களுக்கு அறிவும், துணிவும் உண்டு. ஆனால் சமுதாயம் இன்னமும் இயல்பாக எடுத்துக் கொள்ளாத சில இடையூறுகளைப் பெண்கள் தாண்ட முடியவில்லை. கால நேரம் பார்க் காமல் செயற்பட வேண்டிய துறையல்லவா சினிமா! இரவில் தாமதமாக் வீட்டிற்குச் செல்வது, நடுராத்திரியில் கூடக் கூப்பிட்டால் செல்ல வேண்டியிருப்பது போன்ற சந்தர்ப்பங்களில் குடும்ப சூழ்நிலையையும், மற்றையவர்களின் பார்வைகளையும் தாண்டிச் சென்று செயற்படுவது இன்னும் இவர்களுக்குச் சிரமமாகவே இருக்கிறது.

**சினிமாவுக்கு வெளியே இருக்கிற பெண் எழுத்தாளர்கள்...**

கிருஷாங்கினி, சுகிர்த ராணி, மாலதி மைத்ரி, சல்மா என்று சில முற்போக்குஎழுத்தாளர்கள் பெண்ணியம் பேசவருகிறார்கள். ஆனால் அவர்களுக் குள்ளேயே முரண்பட்டுப் போகிறார்கள். இதைத் தாண்டி எழுதிக் கொண்டிருப்பவர்கள் என்று பார்த்தால், கடந்த ஐந்து

வருடங்களுக்குள் பெரு மளவு பெண்கள் எழுத வந்திருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியே. கனிமொழி, மீரா நம்பியார், தாரா கணேசன், மாலதி, அழகு நிலா என்றிவர்கள் எல்லோரும் முன்னிலையில் இருக்கிறார்கள்.

**முன்பு எழுதிய பெண் எழுத்தாளர்களில் உங்களுக்குப் பிடித்தவர்கள்...**

எழுபதுகளில் எழுதிக் கொண்டிருந்த இரா. மீனாட்சி மிகச் சிறந்த எழுத் தாளர். இவருடைய எழுத்துகளில் பெண்ணின் அழகான பார்வை தெரியும். இதை நான் பிரித்துச் சொல்லவில்லை. ஒரு விடயத்தை நாங்கள் பார்ப்பதற்கும், அவர்கள் பார்ப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இவருக்குப் பிறகு சுகந்தி சுப்பிரமணியத்தைச் சொல்லலாம். மிக அற்புத மான பதிவுகள் அவருடையவை. மேலும் சில தலித் பெண் எழுத்தாளர் களும்நன்றாக எழுதுகிறார்கள். அவர்களில் சிலர் பெண்ணியவாதிகளா கவும் வெளியே வந்திருக்கிறார்கள்.

**மாலதி மைத்ரி, மேற்கத்தைய பெண்ணியவாதம் ஆசியாவுக்குப் பொருந்தும் என்று எதிர்பார்க்கிறாரா? அல்லது மாற்ற முயற்சி செய்கிறாரா?**

அவர் எதிர்பார்க்கலாம். ஆனால் மாற்றத்தைக் காண முடியாது. ஆண்களை மாதிரியே நாங்களும் சிகரெட் பிடிக்க வேண்டும், உடை அணிய வேண்டும் என்றெல்லாம் எழுதுகிறார் மாலதி. அதையெல்லாம்தானே செய்தும் கொள்கிறார். சிகரெட் ஆணுக்கும் தீங்குதான், பெண்ணுக்கும் தீங்குதான். ஆண்களுக்குச் சமமாக நாங்களும் இருக்க வேண்டும் என்று நினைத்துச் செயற்படுகிற தோல்வி இது!

இன்னும், உடலைக் கொண்டாடுவது என்றொரு விடயத்தை முன் வைத் துத் திரும்பத் திரும்ப தம்முடைய பாலியல் உறுப்புகளை – அவற்றின் பெருமிதங்களைப் பற்றிப் பேசுகிறார். இவர்களுடைய இந்த வாதம் எப் படியென்று எனக்குப் புரியவே இல்லை.

பெண்ணின் விடுதலைக்கு இந்த எதிர்வாதம் எப்படிச் சரியாகும் என்று தெரியவில்லை. எல்லோரையும் தன் பக்கம் திருப்புகின்ற அதிர்ச்சி மதிப்பீடுகளாகவே இவருடைய எழுத்துக்கள் உள்ளன.

*29.01.2006*





# காசி ஆனந்தன்

தவிர்க்க முடியாமல் தமிழ் நாட்டில் வாழ்கின்ற நம் நாட்டுக் கவிஞர் காசி ஆனந்தன்! உலகம் முழுவதிலும் பரவிய தமிழன் எங்காவது ஓரிடத்தில் தமிழனாக நிலைத்தானா என்று நியாயமாகவே கேட்கிறார். ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழைப் புறந்தள்ளி, வெறும் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குள் தோன்றிய ஆங்கிலத்தோடு ஒன்றிப் போன, போகிற தமிழர்கள் இவருடைய கவனத்துக்குள் அதிகமாக இருக்கிறார்கள். தனது மொழி மீது கொண்டுள்ள தீராப் பற்றுதலால் அதற்குள் பிற மொழிகளெதுவும் வந்து கலந்து விடக் கூடாதென்று கருத்துரைக்கின்றார். இதுவரை கலந்து விட்டவைகளைக் களைந்து கொள்வதற்கு ‘தமிழனா? தமிங்கிலனா?’ என்ற படைப்பு மூலம் அவர் தந்துள்ள விளக்கங்கள் கனதியானவை. தமிழ் நாட்டுப் படைப்பாளிகளின் மொழிக் கலப்பினையும் கூட இந்நூலில் மிகச் சரியாக விமர்சித்திருப்பதுடன், தமிழ் மொழியின் முரண்பாட்டாளர்களையும் முடிந்தவரை அதில் சாடியிருக்கிறார். அவசியத்துக்கு மட்டும் அடுத்த மொழி பேசுவது தான், தன் மொழிக்குத் தானே வழங்குகிற கௌரவம் என்று கருதுகிறார்.

எத்தனை வருட காலங்களுக்கு என்னால் ஈழத்துக்கு வர முடியாமல்; வர விடாமல் தடுப்புக்கள் நேர்ந்தாலும் என்னுடைய எழுதுகோல் ஈழத்தைப் பதிவு செய்வதை எவர் வந்து தடுக்க முடியும்?! என்கிற மிடுக்கான கேள்வி

அவருடைய பேச்சிலும், எழுத்திலும் மிதந்தே தெரிகிறது. காசி ஆனந்தன் கொண்டிருக்கிற எழுதுகோல் அவரைப் போலவே வலிமையானது தான் என்பதற்குத் தடைகளையும், தணிக்கைகளையும் சட்டை செய்யாமல் வெளிவருகின்ற அவருடைய படைப்புகளே ஆதாரம்!

இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்துக்குப் பிறகு இலங்கையில் காண முடியாமல் போய் விட்ட நம் கவிஞரைக் காலம் நம்மிடமே திருப்பித் தர வேண்டும். ஏனென்றால், இங்கு மொழியைக் கொலை செய்து பிழைத்துக் கொண்டிருக்கிறவர்கள் பெருகிப் போய் விட்டார்கள். நமது அடையாளங்களை நயமாகக் கருத்துரைக்கக் கூடிய கவிஞர்கள் காணாமல் போய் விட்டார்கள் என்பது நமக்கான இழப்பாகி விடக் கூடாது.

காசி ஆனந்தன் படைப்புகளைத் தமிழகத்தில் தேடிப் படிக்கிற கூட்டம் தற்போதும் காத்திருக்கிறது; இவரிடமிருந்து இன்னும் என்ன வருமென்று! அங்குள்ள மேடைகள் பலவும் கூடக் காசி ஆனந்தன் வேண்டுமென்று அடம் பிடித்துக் கொண்டிருப்பதால் ஓய்விற்கும் அவருக்குமான நெருக்கம் மிகக் குறைவாகவே இருக்கிறது. சென்னை-96, மேட்டுக் குப்பத்தில் உள்ள 'காசி ஆனந்தன் குடிலில்' இந்த நேர்காணல் இடம்பெற்றது.

**இங்குள்ள கவிஞர்களின் மனோநிலையை ஈழத்துக் கவிஞர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்திருப்பீர்கள். முடிவு சொல்லுங்கள்?**

இங்கு உவமை தேடாமல் உண்மையை எழுதுபவர்கள் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள். நம்மவர்கள் ஈழத்தில் எங்காவது நடந்துபோகும்போது செவ்வரத்தம் பூவைப் பார்த்தால் அதில் போராளியின் குருதியைப் பார்க்கிறார்கள். அதுவே உண்மையான இலக்கியமும் கூட! ஆனால், குருதியில் செவ்வரத்தம் பூவைப் பார்ப்பது இலக்கியம் அல்ல. இங்கு அப்படித்தான் அதிகம் பேர் எழுதுகிறார்கள். வர்ணனை அதிகமாக இருக்கிறது. இதில் எனக்கு உடன்பாடில்லை.

**உங்களுடைய எழுதுகோல் இங்கே சுதந்திரமாக இயங்கக்கூடிய சூழல் இருக்கிறதா?**

எந்தச் சூழலும் என்னுடைய எழுதுகோலைக் கட்டுப்படுத்தாது. உலகின் எந்த மூலையில் இருந்தாலும் என்னுடைய உணர்வு ஈழத்தின் விடுதலையிலிருந்து விலகி ஓடாது. சில விடயங்களை நான் எழுதக்கூடாது என்கிற நிலை இருந்தாலும் கூட, எழுதக்கூடிய வகையில் எழுதிக்கொண்டே இருக்கிறேன். சூழல்கள் தடுக்கிற கட்டுப்பாடுகளை உடைத்துக்கொண்டு எழுத என்னால் முடியும்! (குரலில் மிகுந்த உறுதி)

**நேற்றைய, இன்றைய ஈழப் போராட்டத்தின் நாளைய நிலைமை என்ன?**

வெற்றிதான்! எப்பொழுதும் அறமே வெல்லும் என்று நான் நம்புகின்றேன். தமிழ் இனத்தை முற்றாக அழித்தொழிப்பது என்கிற சிங்கள இனவெறிக் கோலம் அறத்துக்குக் முரணானது. அறத்தையே கொலை செய்வது. அறத்துக்கு குழி பறிப்பது. அறத்துக்கு எதிரான இனவெறி எக்காலத்திலும் வெல்லாது. இறுதியான வெற்றி அவர்களிடம் போய்ச் சேராது என்பது உறுதி!

இன்னொரு விடயம், இதுவரையில் 18,000 பேர் களத்தில் போராடி மடிந்திருக்கிறார்கள். ஒரு போராட்டத்தை வளர்த்து வெற்றியின் விளிம்புக்குக் கொண்டு வந்து விட்டே இவர்கள் மடிந்தார்கள். இவ்விரண்டு காரணங்களும் வெற்றி தவிர்க்கப்பட முடியாதது என்பதற்கும் தமிழீழம் மலரும் என்பதற்குமான நம்பிக்கைதான்!

---

**உணர்ச்சிக் கவிஞர் என்று விளிக்கப்பட்டவர் நீங்கள். இது...**

(இடைமறிக்கிறார்) உணர்ச்சிக் கவிஞர் என்று அழைக்கப்படுவதை நான் விரும்பவில்லை. என்றோ ஒருநாள் ஆதித்தனார் ஐயா என்னை அப்படி அழைத்தார். அது, அவர் என்மீது கொண்டுள்ள பாசத்தின் வெளிப்பாடு. என்னுடைய பெயருக்கு முன்பாக இதை நான் ஒரு போதும் போட்டுக் கொள்வதில்லை.

**ஆனால், தமிழ்நாட்டில் இது தாராளமாக இருக்கிறதே!**

ஆம். வேந்தர், அரசர், பேரரசர், கோ, கவிக்கோ என்றெல்லாம் பல முன்னொட்டுக்கள். தமிழன் அடிமையாக வாழ்கிற காலத்தில் இவன் அரசு என்றும் வேந்தன் என்றும் பெயருக்கு முன் பின்னாகப் போட்டுக் கொண்டு அரசை இழந்து நொண்டியாக நடுத்தெருவில் நின்று கொண்டிருக்கிறான்.

என்னைப் பொறுத்தவரையில், பாக்களை எழுதுகிறோம். அவற்றை நம்முடைய மண்ணுக்காகவும், மொழிக்காகவும் படைத்துவிட்டுப் போக வேண்டியதுதான்.

**ஈழம், மக்கள், விடுதலை - இவற்றுக்காகவே உங்களுடைய எழுதுகோல் இயங்கும் என்பது போன்றதொரு அடையாளத்தை; உணர்வை வெகு இயல்பாக ஏற்படுத்தியிருந்த நீங்கள் இன்று அங்கில்லை. இது குறித்த உங்களுடைய உளப் போக்கு எப்படி இருக்கிறது?**

தூரங்களால் என்னுடைய உணர்வுகளை இல்லாமல் செய்ய முடியாது. நான் எங்கிருந்தாலும் என்னுடைய சிந்தனை ஈழத்தினின்றும் அகலாது. களத்தில் நிற்கிற வீரர்களின் ஈகம், தற்கொடை - உயிரிழப்பு இவற்றுக்கு ஈடாக நம்மால் எதையும் கொடுக்க முடியவில்லை என்கிற இயலாமை என்னைக் கடுமையாகத் துன்புறுத்துகிறது.

நமது மண்ணின் விடுதலைக்காக நம்மால் ஆன பணியை; நம்முடைய ஆற்றலுக்கேற்ப செய்ய முடிந்ததைச் செய்யாமல் யாருமே மடிந்து விடக்கூடாது என்பதே எனது எண்ணம்!



**போராட்டத்திற்காகத் தன்னை அர்ப்பணிக்கிற ஓர் எழுதுகோலாளனுக்குச் சமமாக யாரைக் கொண்டாட முடியும்?**

போராளிக்கு உணவளிக்கிற எவரையும் கொண்டாட முடியும். ஓர் இலக்கியகாரனுக்குச் சமமாக 'உணவளித்த தாய்' ஆகிவிடுகிறாள். இதுவெல்லாம் வரலாற்றின் மிகப் பெரும் பகுதியும், பதிவுமாகும்.

**போராளிகளுக்கு- போராட்டத்துக்கு உணவு கொடுத்து உதவுகிற எவரும் கொண்டாடப்பட வேண்டியவர்கள் என்கிறீர்கள். 'இதைச் செய்த நாங்கள் அவர்களால் தூக்கி எறியப்பட்டோம்' என்ற கருத்தை இலங்கை வாழ் முஸ்லிம்கள் இன்னமும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி...!**

முஸ்லிம்கள் நேற்றைப் போலவே இன்றும், நாளையும் கூட தம்மை இப் போராட்டத்தில் முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில், தமிழீழத்தில் இருக்கிற முஸ்லிம்கள் அரபு நாட்டிலிருந்து வந்தவர்களல்ல. அல்லது இஸ்லாம் மதத்தில் பிறந்து வளர்ந்து உருவானவர்களுமல்ல.

இவர்கள் தமிழீழத்தில் தமிழர்களாகப் பிறந்து, தமிழர்களாக வளர்ந்து, இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொண்டவர்கள். அதனால்தான் இன்றும் கூட மட்டக்களப்பில் உள்ளவர்களிடம் 'நீங்கள் யார்' என்று கேட்டால், 'நாங்கள் இஸ்லாம் ஆனவங்க' என்றுதான் சொல்வார்கள்.

அவர்கள் நம்முடைய பழைய தமிழர்கள். ஆனால், அவர்களிடையே தேசிய உணர்வைவிட மத உணர்வுதான் காலங்காலமாக ஊட்டி வளர்க்கப் படுகிறது. நீங்கள் பழைய தமிழர்கள் என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை.

அவர்களிடம் மிகவும் பணிவாக நான் ஒரேயொரு எடுத்துக் காட்டினைக் கூற விரும்புகிறேன். நாம் இன்றுவரையில் போற்றி மதிக்கத் தகுந்த இஸ்லாமியர்கள் குர்திஸ்தானில் இருக்கிறார்கள். ஈரான், ஈராக், துருக்கி ஆகிய நாடுகளின் எல்லைகளில் குர்திஸ் மக்கள் வாழ்கிறார்கள். ஈரானில் வாழ்கிற இஸ்லாமியர்கள் தனியொரு தேசிய இனம். அவர்கள் பாரசீக மொழி பேசுகிற பாரசீக தேசிய இனம். ஈராக்கில் வாழ்பவர்கள் அரபு மொழி பேசுகிற அரேபிய தேசிய இனம். துருக்கி எல்லையில் இருப்பவர்கள் துருக்கி மொழி பேசுகிற துருக்கிய தேசிய இனம்.

ஆனாலும், இம்மூன்று தேசிய இனத்தினரும் இஸ்லாம் மதத்தவர்கள். இவர்களுக்கு இடையில் மாட்டிக்கொண்டு இம் மூன்று நாடுகளின் எல்லை களிலும் இருக்கிற குர்திஸ் மக்கள், குர்திஸ் மொழி பேசுகிற குர்திஸ் தேசிய இனம். ஆனால், இவர்கள் இஸ்லாம் மதத்தையே பின் பற்று கிறார்கள்.

துருக்கியையும் ஈரானையும் ஒருபுறம் விட்டு, ஈராக்கை எடுத்துக் கொண் டால், அங்கு உள்ளே வாழ்கிற இஸ்லாமியர்கள் அரபு மொழி பேசுகி றார்கள். எல்லையில் வாழ்கிற இஸ்லாமியர்கள் குர்திஸ் மொழி பேசுகிறார்கள்.

**இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்ன?**

குர்திஸ் மக்களுடைய மதத்தைத் தோற்றுவித்த மிகப் பெருந்தலைவர் முஹமது நபி அவர்கள். இவருடைய தாய்மொழி அரபு மொழி. அரேபியர்களுக்குப் பக்கத்திலேயே வாழ்ந்தாலும் கூட குர்திஸ் மக்கள் அரபு மொழி பேசவில்லை. தம்முடைய மதத்தைத் தோற்றுவித்து வழி காட்டிய நபி பெருமானுடைய தாய்மொழியும், திருக்குர்ஆன் எழுதப் பட்டுள்ள மொழியுமான அரபு மொழியை குர்திஸ் மக்கள் பின்பற்ற வேயில்லை.

தம்முடைய இனத்தைவிட, மொழியைவிட, மதம்தான் உயர்வானது என்று குர்திஸ் இனம் நினைத்திருந்தால்; தம்முடைய புனித நூலான திருக்குர் ஆன் எழுதப் பட்டுள்ள மொழியை ஏற்றுக்கொண்டு அரபு மக்களுடைய மொழியைப் பேசி அவர்களுடனேயே இரண்டறக் கலந்து வாழ்ந்திருக்க முடியும். ஆனால், குர்திஸ்கள் தமது தேசிய இனத் தன்மையையும் மொழியையும் மதத்துக்காக விட்டுக் கொடுக்கவில்லை.

ஆனாலும், அல்லாஹ்வையோ, நபிகளையோ, குர்ஆனையோ குர்திஸ்கள் மறந்துவிடவில்லை. தம்முடைய உயிரிலும் மேலானது தமது மொழி என்று களத்தில் நின்று இன்றுவரை போராடி வருகிறார்கள். அவர்களுடைய உணர்வுக்கு நான் தலை வணங்குகின்றேன். இந்தத் தேசிய உணர்வு ஈழத்தில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கும் வரவேண்டும் என்பதே என்னு டைய விருப்பம்.

**'ஒரு சிலர் செய்த தவறுக்காக ஒட்டுமொத்தமாகவே நாம் தமிழீழத்திலிருந்து விரட்டப்பட்டோம்' என்று இன்றுவரை கூறிக்**



**கொண்டிருக்கிற முஸ்லிம்கள் உங்களுடைய இக்கருத்தோடு முரண்பட மாட்டார்களா?**

போராட்ட களங்களில் சில நேரங்களில் ஏதாவது சறுக்கல்கள், தவறுகள் ஏற்படுவதுண்டு. மிகப் பெரியளவிலான இழப்புகளுக்கு மத்தியில் ஒரு இனம் நிமிர முற்படுகின்ற போது சில குறைபாடுகள் நேர்வதைத் தவிர்க்க முடிவதில்லை. வரலாற்றில் அவற்றையெல்லாம் நாம் திருத்திக் கொண்டு மேல் நோக்கிச் செல்ல வேண்டும் என்பதே என் கருத்து.

தவிரவும், ஈழத்து முஸ்லிம் மக்கள் ஒன்றை மறந்துவிடக் கூடாது. இவர்கள் கடந்த காலங்களில் நிகழ்ந்த போராட்டங்களுக்கு முழு அளவில் தமது பங்களிப்பெதனையும் செய்யவில்லை.

கால் நூற்றாண்டைக் கடந்து விட்ட போராட்ட காலத்தில் 18,000 விடு தலைப் போராளிகள் தமிழினத்தின் விடுதலைக்காகக் குருதி சிந்தியி ருக்கிறார்கள். அக்காலத்தில் முஸ்லிம்கள் தங்களுடைய மக்களின் சொந்த நல்வாழ்வுக்காகத்தான் தம்மால் முடிந்த பணிகளைச் செய்தார்கள். அது இஸ்லாமிய மக்களுக்காகச் செய்தார்கள் என்கிற அளவோடுதான்!

ஆனால், விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்த இஸ்லாமியர்களல்லாத தமிழர்களுடைய அர்ப்பணிப்பில் இஸ்லாமிய மக்களுக்கான பாதுகாப்பும் அடங்கியிருந்தது என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது.

**இலங்கையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு, அறப் போராட்ட நிலைமை எப்படி இருந்தது?**

அக்கால அரசியல் சூழ்நிலைகளின்போது அறப்போராட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்வதில் பல சிரமங்கள் இருந்தன. அறப்போராட்டம் முழுமை பெறுவதற்கு அரும்பணி செய்தவரான தந்தை செல்வாவின் காலத்தில்தான் அதற்குச் சரியான தளம் அமைக்கப்பட்டது. ஆனாலும், அவர் போராட்டத்துக்கான முன்னெடுப்புகளைத் திட்டமிட்டு எடுத்தார் என்று கூற முடியாது. ஏனெனில், அவருடைய உடல் நிலை அப்படி இருந்தது. இருப்பினும் தந்தை செல்வாவின் முன்னெடுப்பு நடவடிக்கைகளால்தான் தமிழ் மக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டார்கள்.

தமிழினத்தை அழிப்பதையே நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய இனவெறி பிடித்ததாகவே இலங்கையில் சிங்கள இனம் இருக்கிறது

என்பதை தந்தை செல்வா சரியாக இனங்கண்டார். அதனால் அவர் என்ன செய்தார் என்றால், 'இலங்கை முழுவதும் ஒரு தேசியம்' என்கிற எண்ணம் இருக்கக் கூடாது. அது வேரோடு பிடுங்கி எறியப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

அதனால் தமிழீழப் பகுதியில் எந்தக் காலத்திலுமே முழு இலங்கையும் ஒரு தேசம் என்று ஏற்றுக் கொள்கிற ஒரு அரசியல் கட்சி காலூன்ற முடிய வில்லை. இலங்கை அரசியல்வாதிகள் 'இலங்கை ஒரு தேசம் '(Sri lanka is a nation) என்று சொல்கிறார்கள். ஆனால், தந்தை செல்வாவோ, 'Sri lanka is a Country comprising of two nations' என்றார்.

அதாவது, இலங்கை இரண்டு தேசங்களைக் கொண்ட ஒரு நாடு என்பதை அவர் உறுதி செய்தார். இது தந்தை செல்வாவினாலான நல்லதோர் தொடக்கம். இத்தொடக்கத்தினாலேயே பின்னாளில் மிகப் பெரிய விடுதலைப் போரை ஆரம்பித்து, வளர்த்து, வெற்றி நோக்கிச் செல்ல முடிந்தது.

**இவ்விரண்டு போராட்ட காலப் பதிவுகளும் இலங்கைப் படைப்பு களில் மிகச் சரியாகவும், தவறாமலும் இடம்பெற்றுள்ளனவா?**

இதில் ஒரு நிலைப்பாடு இருக்கிறது. கொழும்பு வட்டம், தமிழீழ வட்டம் என்றிரு பிரிவுகள் எங்களுடைய இலக்கியங்களில் அறப்போராட்ட காலத்திலிருந்தே நிலையாக இருக்கின்றன. கொழும்பிலேயே வாழ வேண்டிய சூழல் இருந்ததால், ஆட்சியிலுள்ளவர்களைப் பகைக்காமல் கொழும்பு வட்ட இலக்கியப் படைப்புகள் வெளிவந்தன. சிங்கள வெறியர்கள் வீடு புகுந்து ஆட்களை வெட்டிப் புதைக்கிற அக்காலத்தில் அவர்களுக்குப் பயந்தே இலக்கியம் செய்ய வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் அறப்போராட்ட காலத்திலேயே இருந்தது. இதனுடைய விளைவுதான்; கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்கள் (அவர்களைக் குறை சொல்வ தாகக் கருத வேண்டாம்) சிங்கள ஆட்சியாளர்களோடு இணைந்து செயற்பட வேண்டியிருந்தது.

அறப் போராட்டத்தை நடத்தியவர்களைச் சிங்களவர்களோடு இணைத்துக் கிண்டல் செய்த தமிழ்ப் படைப்பாளிகளும் கொழும்பில் இருந்தார்கள். ஆனால், இவற்றையெல்லாம் மீறி, தமிழீழத்திலிருந்து நாம் எம்மால் முடிந்ததை எழுதினோம். எம்முடைய அந்த எழுத்துக்கள் மிகவும் பிற்போக்கானவை என்கிற விமர்சனங்களும் கொழும்பிலிருந்து வந்து



குவிந்தன. எமது இலக்கியம் வகுப்பு வாத இலக்கியம் என்றார்கள். நாங்கள் பேசுவதெல்லாம் குறுகிய நோக்கம் கொண்டதென்று எழுதி னார்கள். ஆனாலும், எம்முடைய கால்கள் மண் விடுதலையைத் தேடியே அடியெடுத்து வைக்கிறதென்று திடமாகப் புரிந்து கொண்டோம்.

எங்களுக்குச் சரியென்று பட்டவற்றையெல்லாம் தெளிவாகவே எடுத்து வைத்தோம். விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நாம் முன்பு எழுதியவைகளே விதைகளாகவும் வேர்களாகவும் இருந்தன. இதனுடைய வளர்ச்சியாகவே இன்று களத்தில் நின்றுகொண்டு இலக்கியம் படைக்கிறார்கள். அவர்களுடைய இந்தச் சுதந்திரம் இன்றும்கூட கொழும்பு சார்ந்த சூழலிலும் அரசு கட்டுப்பாட்டுப் பகுதியிலும் உள்ள படைப்பாளிகளுக்கு இல்லை. இவர்கள் அஞ்சி அஞ்சியே தமது கருத்தை முன்வைக்கிறார்கள்.

வெளிப்படையாகக் கூறினால், தமிழீழத்தின் களத்திலிருந்தும், வெளிநாடு களிலிருந்தும் வெளியாகிற இலக்கியங்கள் ஆற்றல் மிக்கவையாக வெளி வருகின்றன.

பலஸ்தீனம், சீனா, வியட்நாம் ஆகிய நாடுகளில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதெல்லாம் எப்படி களங்களிலிருந்து இலக்கியங்கள் உருவாகின்றனவோ அவ்வாறு நம்முடைய போர்க் களங்களிலிருந்தும் இலக்கியங்கள் பிறந்து கொண்டிருக்கின்றன.

**இயந்திரத்தனமான வெளிநாட்டு வாழ்க்கைச் சூழலிலிருந்து மிகக் குறைவாகவும்; அச்சம் நிறைந்த கொழும்புச் சூழலிலிருந்து உண்மை கள் மறைக்கப்பட்டனவாகவும் வெளிவருகின்ற ஈழத்து இலக்கியப் படைப்புகளை நோக்குகையில்; தரமான படைப்புகளைத் தொடர்ந்து இழந்து கொண்டிருக்கிறோம் என்று படவில்லையா?**

இதற்கு ஆம் என்றும் இல்லை என்றும் பதில் கூற வேண்டியிருக்கிறது. அண்மையில் நமது எஸ்.பொ.இங்குதமிழகத்தில் ஒரு கருத்தைக் கூறியிருந்தார். 21 ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த இலக்கியங்கள் இலங்கையிலிருந்தே வெளிவரும் என்றார். இதற்குப் பல எதிர்ப்புக் குரல்களும் இங்கு கிளம்பின.

உண்மையில், களத்தில் நின்றுகொண்டு அல்லது களத்தை நினைத்து வெறெங்கிலுமாவது இருந்து எழுதுகின்ற படைப்புகளில் சோர்வு

தெரியாது. ஒரு தூய்மை இருக்கும். வேகம் இருக்கும். அதையெல்லாம் எம்முடைய படைப்புகளில் காண்கிறோம்.

இதற்கு மாறாக, ஆம் என்பதற்கான பதில் தான்; படைப்பாற்றல் மிக்கவர்களின் கொழும்பு வட்ட இலக்கியங்களும் படைப்புகளும்! இவை காத்திரத்தன்மை குறைந்தவை. உண்மைகள் மறைக்கப்பட்டவை. ஆனாலும் கூட, இவையெல்லாவற்றையும் தாண்டி தமிழீழ இலக்கியம் செழிப்பாகவே வளர்ந்து கொண்டிருக்கிறது.

**'தமிழ்மொழி அழியாது' என்று அழகாக உச்சரிக்கிறார்களே தவிர; 'அதை அழிய விடமாட்டோம்' என்பதற்கான சரியான முயற்சிகளில் இங்குள்ள கலைஞர்கள் என்கிற திரை உலகமோ, பெரும்பாலான இலக்கியக்காரர்களோ ,ஊடகங்களோ இறங்கிச் செயற்பட வில்லையே!**

தமிழகத்தில் எனக்குச் சுமையாக இருக்கும் விடயம் இதுதான்! நீங்கள் குறிப்பிட்ட இவர்களெல்லாம் தமிழைப் படுகொலை செய்து வேரோடு பிடுங்கி எறிகிறார்கள். வழிகாட்ட வேண்டிய பலர் வியாபாரம் பார்க்கிறார்கள். ஆனாலும், இதை எதிர்த்து சில பேர் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார்கள். மருத்துவர் ராமதாஸ், தொல். திருமாவளவன், மருத்துவர் சேதுராமன், இவர்களோடு உலகமே போற்றுகிற நம்முடைய பழ. நெடுமாறன் எல்லோரும் இணைந்து ஒரு பெரிய தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தைத் தொடங்கி முன்நடத்தி வருகிறார்கள். இவர்கள் தமிழ்க் காப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனாலும், மக்களிடம் இந்தத் தமிழ்க் காப்பை நேரடியாக எடுத்துச் செல்வதற்கு ஆட்சியிலுள்ள மக்கள், செல்வாக்குள்ள பெருங்கட்சிகள் நினைத்தால் சாதிக்க முடியும். ஆனால், அவர்களிடம் அப்படி ஒரு முயற்சி இருக்கிறதா, ஈடுபாடு இருக்கிறதா, அது குறித்த கவலை இருக்கிறதா என்றால் எதுவுமே இல்லையென்றே படுகிறது.

கல்வி மொழியாகத் தமிழ் மொழி ஆக வேண்டியது; தமிழ் மொழி குறித்த பெரிய கட்டாயமாகும். தமிழ்க் காப்புத் தேவையென்றால் தமிழ்நாட்டில், தமிழ் காலத் தாழ்வு இன்றி கல்வி மொழியாக வேண்டும். அதேபோன்று, ஆட்சிமொழியாக அது முழு அளவில் செயற்படவும் வேண்டும்.



**ஒடுக்குமுறையின் பயங்கரத்தை ஒரு விடுதலையாளன் எவ்வாறு எதிர் கொண்டு வெற்றிபெற வேண்டியிருக்கிறது?**

பல்வேறு ரூபங்களிலுமான ஒடுக்கு முறைகளையெல்லாம் எதிர்க்கக் கூடியவன்தான் உண்மையான விடுதலையாளனாக முடியும். நிற ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்குமுறை, சாதிய ஒடுக்குமுறை, இன ஒடுக்கு முறை, தேசிய ஒடுக்கு முறை என்ற இவ்வெல்லா ஒடுக்கு முறைகளையும் எதிர்க்கப் போராடித்தான் ஆகவேண்டும். இதுவே உண்மையான விடுதலைப் போர். ஆனாலும், இவற்றுள் தேசிய ஒடுக்கு முறைக்கே முதலிடம் தரவேண்டும். ஒரு தேசிய இனத்தை இன்னொரு தேசிய இனம் ஒடுக்குவதென்பது பேராபத்தானது.

எப்படியென்றால், நிற ஒடுக்குமுறையில் ஒடுக்கப்படுகின்ற கறுப்பன் எந்தவொரு காலகட்டத்திலும் கறுப்பனாகவே இருப்பான். அவன் ஒடுக்கப்படுவான், மிதிக்கப்படுவான், துன்புறுத்தப்படுவான்; ஆனால் அழிக்கப்படமாட்டான். ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அவன் கறுப்பனா கவே இருப்பான். பின்னர் தனக்குரிய எல்லாவற்றையும் பெற்று நிமிர்வான்.

வர்க்க ஒடுக்குமுறையில் ஒடுக்கப்படுகின்ற தொழிலாளியை முதலாளி சுரண்டுவான், பிழிவான். ஆனால், அழிந்து போகவிடமாட்டான். ஏனெனில் தொழிலாளி இருந்தால்தான் அவனால் முதலாளியாக இருக்க முடியும்! சாதிய ஒடுக்கு முறையிலும் அப்படித்தான். தாழ்த்தப்பட்ட மக்கள் அழிக்கப்படுவதில்லை. அவன் தாழ்த்தப்படுவான், இழிவுபடுத்தப்படுவான், சேரிக்கு நெருப்பு வைத்தும் கூட துன்புறுத்தப்படுவான். ஆனால், அழிக் கப்பட மாட்டான்.

ஆணாதிக்க ஒடுக்குமுறையிலும் பெண் வதைக்கப்பட்டு துன்புறுத்தப் பட்டாலும் அவள் அழிக்கப்படமாட்டாள். பல வருட காலங்களாக அவள் போராடி வெற்றிபெறுவாள்.

ஆனால் தேசிய ஒடுக்குமுறையில், ஒடுக்கப்படுகிற ஒரு தேசிய இனம் அழிக்கப்படக் கூடியது. அழியும் தன்மையுடையது. அழிந்தும் இருக்கிறது.

**அவ்வாறு அழிந்து போன ஒரு தேசிய இனம் பற்றி...**

தென் அமெரிக்காவிலிருந்து வந்த நாகரிகங்கள் இரண்டு - 'மாயா நாகரிகம்', 'மின்கா நாகரிகம்' - இவற்றின் மொழி, கலை, பண்பாடு

எல்லாமே அழிந்துபோய்விட்டன. இது மிகவும் நீண்டகாலப் பழைய கதை என்றாலும் அதன் வரலாறு நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

இதுபோன்று தான் 700 வருடங்களுக்கு முன்பு, தமிழராக இருந்த சேர மக்கள் இன்று மலையாளிகளாகப் போய்விட்டனர். இத் துயர நிலை எல்லா நாடுகளிலும் உள்ள தேசிய இனங்களுக்கும் இருக்கிறது.

ஒரு இனம் அழகாக உருவாகி, வளர்ந்து, தேசிய இனமாகி விட்டதென்றால் அதனைக் காப்பாற்றியாக வேண்டும். அதற்காகப் போராடுவது நம்முடைய முதல் கவனமாக இருக்கவேண்டும்.

**இங்கு திராவிடம் பேசுபவர்கள் தற்போது தமிழ் மொழியைச் சரியாகவே மதிக்கிறார்களா?**

இங்குள்ள திராவிடர்கள் எல்லோரும் தமிழ் உணர்வாளர்கள். ஆனால், ஆங்கிலத்தை முண்டு கொடுத்து நிறுத்துவதற்கான முயற்சியாளர்களாக பார்ப்பனர்கள் மீது தவறான பார்வையைச் செலுத்திக் கொண்டிருக் கிறார்கள் என்றே எனக்குச் சொல்லத் தெரிகிறது.

பார்ப்பனரல்லாதவர்கள் தமிழைப் படித்துக்கொண்டிருந்தால், பார்ப்ப னர்கள் ஆங்கிலத்தைப் படித்து வளர்ந்து விடுவார்கள் என்றும், தமிழர்கள் பார்ப்பனர்களுக்குச் சரியாகப் போட்டி போட்டு வளரவேண்டுமானால் ஆங்கிலம் படித்தே ஆகவேண்டும் என்றும் திராவிடர்கள் நினைக் கிறார்கள்.

பெரியார் என்ன கூறியிருக்கிறார் என்றால், பார்ப்பனர்கள் எதைச் செய்கிறார்களோ எந்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறார்களோ அதற்கு எதிரானதையே நாம் செய்யவேண்டும் என்கிறார். அதுதான் சரியான அணுகுமுறையாக இருக்குமாம்.

ஆங்கிலத்தைத் தமிழர்களிடம் பரப்ப வேண்டும் என்பதில் இங்குள்ள பார்ப்பனர்கள் மிகுந்த அவதானமாகச் செயற்படுகிறார்கள்.

ஆனந்த விகடன், குமுதம் போன்ற வார இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் என்பவற்றினூடாக ஆங்கிலம் புகுத்தும் உத்தியை விரைவாகச் செய்து கொண்டிருக் கிறார்கள். ஆங்கிலம் படிப்பதே சிறப்பென்று 'த ஹிந்து' (The Hindu) பத்திரிகை எழுதிக்கொண்டிருக்கிறது. தமிழர்கள் இவற்றையெல்லாம்



நம்பி வீழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மொழியைத் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திராவிடர்களுடைய பார்வையும், பார்ப்பனர்களுடைய கருத்தும் எவ்வாறு முரண்படுகின்றன?**

தமக்குச் சமமாகத் தமிழர்கள் தொழில் வாய்ப்பில் உயர்ந்து வளரக் கூடாது என்று மட்டும் பார்ப்பனர்கள் நினைத்திருப்பார்களானால், தாங்கள் மட்டுமே ஆங்கிலத்தைப் படித்திருப்பார்கள். தமிழர்களை வற்புறுத்தியிருக்க மாட்டார்கள். ஆனால், பார்ப்பனர்கள் தமிழர்களை ஏன் வற்புறுத்துகிறார்கள்?

தமிழைக் கல்விமொழி ஆக்கவேண்டும் என்று தமிழன் கொண்டுவந்த சட்டத்தை எதிர்த்து நீதிமன்றம் சென்றவன் பார்ப்பனன். ஆங்கிலம் படிக்க வைப்பதனூடாக நம்மை இனமாற்றம் செய்ய அவன் எப்படி யெல்லாமோ முயல்கிறான். இதன் மூலம் தமிழ்த் தேசியம் அழிந்து போய் விடவேண்டும் என்பதே அவனுடைய எதிர்பார்ப்பு. இந்தச் சூழ்ச் சியில் தமிழர் நாம் பதவி பெற்று உயர்ந்தால் கூடப் பரவாயில்லை. ஆனால் அவனுக்குச் சமமாக தமிழனாக உயராமல், தாழ்வானதோர் கலப்பினமாகவே உயர வேண்டும் என்று நினைக்கிறான். தமிழனுடைய பார்வை இவ்விடயத்தில் முற்றிலும் தவறாகிப்போய் விடுகிறது.

**நீங்கள் குறிப்பிடுகிற 'பார்ப்பனச் சூழ்ச்சி' இங்கு தமிழ் அல்லாத ஏனைய இனங்கள் மீதும் பிரயோகிக்கப்படுகிறதா?**

ஆம். பார்ப்பனச் சூழ்ச்சியால் பல இனங்கள் மாறிப்போய் விட்டன. ஆனால், தமிழரல்லாதவர்களால் பிராமண (பார்ப்பன) எதிர்ப்புகள் எதனையும் முகங்கொள்ள முடியவில்லை. ஆந்திராவில் பிராமணர் களுக்கெதிரான எதிர்ப்பு இல்லை. கன்னடம், மலையாளத்திலும் கூட இல்லை. அங்கெல்லாம் இருக்கின்ற தமிழர்கள்; தமிழரல்லாத இன்னொரு இனமாக மாறிப்போய்விட்டார்கள். இவ்வாறு மாறிப் போனதால் என்ன நடக்கிறதென்றால், தமிழர்களாக இருந்தவர்கள் தெலுங்கர்களாக மாறும்போது 85 வீதம் சமஸ்கிருதம் கலக்கிறது. அப்போது அங்கே தெலுங்கர்களாக இருக்கிற பிராமணர்களுக்கு தெலுங்கர்களாக மாறிய தமிழர்களை விடவும் கூடுதல் உரிமை வருகிறது. மாறிப்போன தமிழ னுக்கு 15 வீதமான உரிமையே கிடைக்கிறது. இங்கே சமஸ்கிருத மொழி தன்னுடையது என்றும் தமிழிலி

ருந்து தெலுங்குக்கு மாறியவன் தனக்குக் கீழானவன் என்றும் பார்ப்பனன் நினைக்கிறான்.

ஆனாலும், சமஸ்கிருத மொழியைத் தமிழன் ஏற்றுக்கெண்டு விட்டான் என்கிற பெருமிதம் இவனுக்கு! இறந்துபோய்விட்ட சமஸ்கிருதத்தை எப்படிக் கொண்டு தள்ளி, இன்னொரு இனத்தை உருவாக்கி, அதில் அவன் பெரும்பான்மையாகி...! இதைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

**இதையெல்லாம் உங்களுடைய ஏதாவதொரு படைப்பில் பதிவு செய்திருக்கிறீர்களா?**

புதிதாகப் பதிவு செய்து கொண்டிருக்கின்ற 'தமிங்கிலர் எதிர்ப்பு இயக்கம்' என்ற நூலில் இவற்றை உள்ளடக்கவுள்ளேன். ஆனால், தற்போது இங்கு பல மேடைகளில் இக்கருத்துகளைப் பகிரங்கமாகப் பேசி வருகிறேன்.

**தமிழ் நாட்டில் இன்றுவரை நிலவுகின்ற எவ்வெந்த நடைமுறைகள் உங்களுக்கு விசனத்தை ஏற்படுத்துகின்றன? தமிழீழத்துடன் ஒப் பிட்டுக் கூறுங்கள்.**

இங்கு தமிழ் நாட்டில் பல்வேறு சிக்கல்கள் உண்டு. தமிழ்நாடு வெட்கப் பட வேண்டிய சிக்கல்கள் அவை. நமது நாட்டில் தந்தை பெரியார் தோன்றவில்லை. ஆனால், அவர் தமிழ்நாட்டில் எவையெல்லாம் ஒழிய வேண்டுமென்று கனவு கண்டாரோ அவற்றையெல்லாம் அவர் இல்லாமலே நாம் தமிழீழத்தில் ஒழித்துக் கட்டியிருக்கிறோம். 90 வயதைத் தாண்டிய பிறகும் மக்களிடம் சென்று கருத்துக்களைச் சொன்னவர் பெரியார். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் செவி கொடுக்கவில்லை என்பது என்னுடைய பெருங்குற்றச்சாட்டு. வெறுமனே பெரியாரைப் போற்றிக் கொண் டிருப்பதில் பயனில்லை. அவருடைய கொள்கைகளைப் போற்றவேண்டும்.

இன்றுவரை தமிழ்நாட்டில் ஓரளவு மக்களேனும் திருந்தியிருக்கிறார்கள் என்றால் அதற்கு தந்தை பெரியார் ஏற்படுத்திய விழிப்புணர்வே காரணம்.

ஆனாலும், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி போன்ற தொகுதிகளில் தாழ்த்தப் பட்ட மக்கள், இன்றுவரையில் தேர்தலில் நிற்கமுடியவில்லை. 'திண்ணையம்' என்ற இடத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட தமிழனின் வாயில் மலத்தை அள்ளித் திணித்திருக்கிறார்கள்.



இவைபோன்ற பெருங்கொடுமைகள் எதனையும் தமிழீழத்தில் தாழ்த்தப் பட்ட ஒருவனுக்கு தமிழ் மக்கள் செய்ததில்லை.

அதுபோல் சாதியின் பெயரில் சங்கங்களும் எம் நாட்டில் இல்லை. சாதி யின் பெயரை சொந்தப் பெயருக்கு முன்பின் போடும் பழக்கமும் இல்லை. (காமராஜ நாடார், முத்துராமலிங்கத் தேவர், பக்தவச்சல முதலியார், ராஜா அண்ணாமலைச் செட்டியார்).

இன்னும் சொன்னால், தமிழீழத்தில் பெண் குழந்தைகள் பிறந்தால் கள்ளிப்பால் கொடுத்துக் கொல்லப்படுவதுமில்லை, சமையலறைகளில் காஸ் அடுப்புகள் வெடித்துப் பெண்கள் இறப்பதுமில்லை. தமிழ்நாட்டில் இந்தக் கொடுமைகள் நிறைந்து போயிருப்பதால் இவற்றைச் சுற்றியே இலக்கியங்கள் அந்தப் போராட்டத் தன்மையுடனேயே படைக்கப் படுகின்றன.

மேலும் தமிழ் நாட்டில் இன்னொரு பக்கம் பொழுது போக்குத் தன்மை யுடன் கூடிய இலக்கியங்களாக (அவற்றுள் பெரும்பாலானவற்றைக் குப் பைகள் என்றே சொல்ல முடியும்) வெளிவருகின்றன. ஆனால், இவற்றுள்ளும் மிகச் சூடான போராட்ட உணர்வு கலந்த ஒடுக்கு முறைக்கெதிரான சில வெடிப்புகள் நல்ல இலக்கியங்களாக மலர்கின்றன 'பூமணியன் புதினம்' போன்றவற்றை எடுத்துக் காட்டாகச் சொல்லலாம். இன்குலாப், அறிவுமதி போன்றவர்களின் பாடல்கள் ஒடுக்குமுறைகளுக்கு எதிரானவையாகவுள்ளன. இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒரே நேரத்தில் அனைத்து ஒடுக்குமுறைகளையும் உடைத்தெறிந்த தமிழீழம் குறித்து நாம் பெருமைப்பட வேண்டும்.

**நீங்கள் குறிப்பிடுகிற ஒரு சிலரைத் தவிர, 'தமிழுக்காகவே வாழ்கிறோம், ஈழமக்களை நேசிக்கிறோம்' என்றெல்லாம் பதிவு செய்பவர்கள் நடைமுறைக்குப் புறம்பானவர்களாகவே இருக்கி றார்கள் என்று கூறலாமா?**

தமிழ் நாட்டில் விடுதலைப் போரை ஆதரிக்கிற இலக்கியர்கள் துணி வாகத் தமது கருத்தைப் பதிவு செய்கிறார்கள். ஆனால், மிகக் குறைவாக இருக்கிறார்கள். அவர்களிலும் தமிழீழம் குறித்து இறுக்கமான சட்டங்கள், அரசியல் அணுகுமுறைகள் அவிழ்த்து விடப்படும்போது பல இலக்கி யர்கள் வாயை மூடி விடுகிறார்கள். பின்னர் அவர்கள் வேறு எதையாவது எழுதிக் கொண்டிருப்பார்கள்.

**இங்கு காதல் குறித்து எழுதுபவர்களும் வெளிவருகிற இதழ்களும் மிக அதிகமாக இருக்கிறதே!**

(சிரிக்கிறார்) நான்கு நான்கு வரிகளில் எழுதிவிட்டுப் புதுக்கவிதை என்கிறார்கள். அவை கவிதைகள் அல்ல. உரை இலக்கியம் என்று வேண்டுமானால் கூறலாம். அழகழகான ஓவியங்களுடன் வெளிவருகிற குமுதம், விகடன் ஆகியவற்றில் கவிதை என்கிற பெயரில் வெளி வருகிற வரிகளைப் படித்திருப்பீர்கள். ஏதாவதொன்று ஞாபகம் இருக் கிறதா? புரியாமல் எழுதுவதுதான் உயர்ந்த கவிதை என்று சொல்கிற முட்டாள்களும் இருக்கிறார்கள். ஓசை இல்லாமல் உரை நடை வடிவில் இருந்தாலும், எடுத்துச் சொல்கிற மாதிரி எழுதுபவர்களை வாழ்த்தலாம். ஆனால் நம்முடைய மண்ணிலிருந்து வெளிவருபவை பளிச்சென நேரடியாக ஒன்றைச் சொல்கிறபோது இயல்பான இலக்கியங்களாகி மனதை நிறைக்கின்றன.

**ஈழப் போராட்டத்தின் கட்டாயம் / இன்றியமையாமை பற்றி தமிழ் நாட்டிலுள்ள ஊடகங்கள் உங்களிடம் கேட்கும்போது நீங்கள் கூறும் பதில் என்ன?**

எந்த நாட்டு ஊடகங்கள் கேட்டாலும் என் பதில் ஒன்றுதான். ஆனால், என் நாடு தவிர்ந்த பிற நாட்டுக்காரர்களுக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

எமது மண்ணின் போராட்டம் இனவெறியின் அடிப்படையில் தொடங்கப்பட்டதல்ல, நடத்தப்பட்டதுமல்ல. சிங்கள மொழியும், இனமும் அழிய வேண்டும் என்று நாங்கள் போர் தொடுக்கவில்லை. தமிழ் மொழியையும், இனத்தையும் அவர்களிடமிருந்து காத்துக் கொள்வதற் காகவே நாங்கள் போர் தொடங்கியவர்கள்.

நாங்கள் சிங்கள இனத்தைத் துன்புறுத்த வேண்டும் என்று போர் தொடங்கியவர்களல்ல. சிங்கள இனம் தமிழ் இனத்தைத் துன்புறுத்தக் கூடாது என்று போர் தொடங்கியவர்கள். நாங்கள் சிங்கள ஸ்ரீலங்காவை அடிமைப் படுத்துவதற்காகப் போரைத் தொடுக்கவில்லை. தமிழீழத்தை விடுதலை செய்வதற்காகவே போர் தொடங்கியவர்கள்.

இதற்கெல்லாம் முன்பு எல்லோரும் ஒன்றாக, ஒரே மண்ணில் வாழவேண்டுமென்று விரும்பியவர்கள். இயலாமல்போன நிலையிலேயே போராட்டத்தைத் தொடங்கியவர்கள். எங்களுக்கு அது தேவையாக



இருக்கிறது. இல்லையென்றால் எங்களுடைய தேசியத் தன்மையை இழந்து எங்களுடைய அடையாளத்தைத் தொலைத்துவிடுவோம். எங்கள் மீது திணிக்கப்பட்ட போரை எதிர்ப்பது தவிர்க்க முடியாததாகிப் போனது. எங்களுக்கான கடமையிலிருந்து நாங்கள் நழுவ முடியாது. எங்கள் விடு தலையை வென்றெடுப்பதற்காக நாங்கள் போராடித்தான் ஆக வேண்டும் என்பதை அவர்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டியிருக்கிறது. இதை எனது கடமையென்றுதான் கருதுகிறேன்.

**தமிழீழம் விடுதலை பெற்றால்; அவ்வாறு அமைகிற தமிழீழம் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று இங்கு தமிழ்நாட்டில் ஒரு பரவலான கருத்து நிலவுகிறதே!**

ஆம். மிகவும் கொச்சைத்தனமாக இக்கருத்து பரப்பப்படுகிறது. இந்திய அரசை வழிநடத்துகிற, அதற்கு வழி காட்டுகிற அரசியல் அறிவுரை யாளர்கள் விடுகின்ற மிகப் பெரிய பிழை இது! விடுதலை பெற்று அமை கிற தமிழீழம் ஒரு போதும் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமையாது.

இந்தியாவின் அரவணைப்பை இன்னும் இன்னும் பெரியளவில் வேண்டு கிற, இந்தியாவை நேசிப்பதற்காகத் துடிக்கிற, இந்தியாவோடு உறவு கொண்டு வாழவேண்டும் என்பதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிற, அதைக் கட்டியெழுப்பப் பணியாற்றுகிற ஒரு மண்ணாகவே தமிழீழம் இருக்கும். ஏனெனில் இந்தியா தமிழீழத்திற்கு ஒரு அண்டை நாடாகவே இருக்கும். ஆகவே அண்டை நாடு எப்போதும் தமிழீழத்திற்கு உறவு நாடாக இருக்க வேண்டுமென்றே தமிழீழம் விரும்புவது இயல்பானது. அது மட்டுமல்ல அப்படி விடுதலை பெற்றதொரு தமிழீழம் எந்தக் காலத் திலும் இந்தியாவுக்கு எதிராகப் போரைத் தொடுக்காது. அச்சுறுத்தலாக இருக்கும் என்று சொன்னால், இந்தியாவுக்கு எதிராகப் போர் தொடுக்கும் என்பதுதான் அதன் பொருள். அந்த நிலை உருவாக வாய்ப்பே இல்லை.

இதற்கு எடுத்துக்காட்டாகச் சொன்னால், கியூபா ஒரு சின்னஞ்சிறிய தீவு. பக்கத்தில் மிகப்பெரிய வலிமை கொண்ட வல்லரசாக அமெரிக்கா இருக்கிறது. எந்தக் காலத்திலும் கியூபா அமெரிக்காவுக்கு எதிராகப் போர் தொடுக்காது. தொடுக்கவும் முடியாது. அதேபோன்றுதான் பிரிட்டனுக் குப் பக்கத்தில் அயர்லாந்து இருக்கிறது. 300 வருடகாலப் போராட்டத் தின் பின்னர் விடுதலை பெற்ற ஒரு சிறு தீவு அது. அயர்லாந்தும் பிரிட் டனுக்கு எதிராக ஒரு போதுமே போர் தொடுக்க முடியாது.

ஆனால், இதற்கெல்லாம் அப்பால்,(குரலில் மிகுந்த அழுத்தத்துடன்

கூறினார்) கியூபா அமெரிக்கா மீது போர் தொடுத்தால் அதை எதிர்த்து கியூபா போராடும். பிரிட்டன் அயர்லாந்து மீது போர் தொடுத்தால் அயர் லாந்து மக்களும் பிரிட்டனை எதிர்த்துப் போராடுவார்கள். இதேபோன்று தான் தமிழீழத்தின் நிலையும் இருக்கும்.

தமிழீழம் ஒரு நாடாகவோ, அரசாகவோ அமைந்தால் அது எந்தக் காலத் திலும் இந்தியாவுக்கு எதிராகப் போர் தொடுக்காது. ஆனால், இந்தியா தமிழீழம் மீது போர் தொடுத்தால் அதை எதிர்க்கப் போராட்டம் நடத்துவது தமிழீழத்தின் கடமையாக இருக்கும். இங்குள்ள நிருபர் ஒருவர் என்னிடம் நீங்கள் கேட்ட இதே கேள்வியைக் கேட்டபோது நான் இவ்வாறுதான் பதிலளித்திருந்தேன்.

**ஈழத்தில் சிங்கள இனம் 2,500 ஆண்டுகால வரலாறு கொண்ட தென்கி றார்களே! சரியா?**

தவறு. ஏனென்றால் கி.பி.500 ஆம் ஆண்டில்தான் சிங்கள மொழியே தோன்றுகிறது. விஜயன் இலங்கைக்கு வந்தது கி.மு. 5 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். ஆனால், அதற்கு 1000 ஆண்டுகளுக்குப் பிறகு கி. பி. 500 இல் தான் சிங்கள மொழியே தோன்றுகிறது. சிங்களத் தேசிய இனமும், அதன் பின்புதான் தோன்றுகிறது. ஆகவே, அவர்களுடைய காலம் 1500 ஆண்டுகளே. இவ்வளவு காலமும் அவர்களுடைய கொள்கையாக இருந்தது; தமிழ் இனத்தை முற்றாக அழித்தொழிப்பதே. இது குறித்த அவர்களுடைய நிலைப்பாடு மிக உறுதியாக இருக்கிறது.

**அமைதித் தீர்வு குறித்து மூன்று வருடங்களாக முடிவுறாத பேச்சுக் குறித்து...**

இலங்கையில் தமிழர்களுக்கான இடம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்ற வரை சுருக்கி விட்டார்கள். வெளியே சிலாபம் போன்ற இடங் களைக் கூட விட்டு, தமிழர்களின் மண்ணாக இருந்த பட்டிப்பளையாறு, அம்பாறை மாவட்டங்களிலெல்லாம் தாங்கள் குடியேறி தமிழ்த் தேசி யத்தை அழித்தொழிப்பதில் உறுதியாக இருக்கிறார்கள். சிங்கள தேசிய இனத் தலைமையின் மிக உறுதியான நிலைப்பாடு; தமிழ்த் தேசிய இனத்தை முற்றாக அழித்தொழிப்பது. ஆகவே அமைதித் தீர்வு என்று வருகிறபோது தமிழீழ மக்களின் சிக்கலைத் தீர்ப்பது அவர்களுடைய நோக்கமல்ல, தமிழீழ மக்களைத் தீர்ப்பதுதான் அவர்களுடைய நோக்கம். இதை நாம் இதுவரை கால வரலாற்று அடிப்படையில் உணர்ந்து கொள்ள



முடியும். அமைதி வேண்டும் என்று உணரப்பட்டால் அது அறுவடையாக வேண்டும். அவ்வாறு உணர்வதற்கே இவ்வளவு காலம் எடுக்கிறதென்றால், பேச்சுவார்த்தை மூலம் எமது மக்களுக்கு விடுதலை கிடைக்கும் என்று படவில்லை.

தற்போது நிலவுகிற அமைதியை நிரந்தரமான முடிவாக, தீர்வான அமைதியாகக் கொள்ள முடியாது. இதுவும் போராட்டத்தின் ஒரு கால கட்டம்தான்.

வரலாற்றின் அனுபவத்தில் ; பட்டறிவில் நான் பெற்ற முடிவு இதுதான்! எனது மக்கள் இதுவரை காலமும் பட்ட இன்னல்களிலிருந்து மீண்டும் அமைதியாக வாழவேண்டுமெனில், அந்த அமைதி தமிழீழ விடுதலை யின் மூலமாகத்தான் முடியும்!!

*06.11.2005*



# எம். ஏ. நுஃமான்

மொழியின் கூறுகளுக்குள் ஆழ்ந்து போய், இலக்கியக் கிளைகளிலெல்லாம் வாசம் செய்ய முடிந்த ஒட்டு மொத்த ஆளுமை-எம். ஏ. நுஃமான்! மொழியியல் ஆய்வு, திறனாய்வு, நூற்பதிப்பு, மொழி பெயர்ப்பு என்கிற தளங்களிலெல்லாம் மேடாய்த் தெரிபவர். கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ., பி. ஃபில்., யாழ். பல்கலைக்கழகத்தில் எம். ஏ., தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. எச். டி. என்பன மொழியியற் துறையில் இவர் முடித்துக் கொண்ட பட்ட நெறிகள்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தற்போது பேராசிரியராகப் பணியாற்றி வரும் இவர், யாழ். பல்கலைக் கழகத்தில் 15 வருட காலம் விரிவுரையாளராகவும், இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம், தென் கிழக்குப் பல்கலைக் கழகம், தமிழ் நாடு தஞ்சாவூர் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் Visiting Lecturer ஆகவும் கடமையாற்றியவர். இலங்கையின் தேசிய மட்ட கல்வி நிறுவனங்களுக்கும், பல்கலைக் கழகங்களின் மொழியியற் பிரிவுகளுக்கும் ஆலோசகராகவும், அங்கத்தவராகவும் கூடச் செயற்படுபவர். இருபத்தைந்து (25) க்கு மேற்பட்ட தேசிய, சர்வதேசமாநாடுகளிலும், சார்க் எழுத்தாளர் மாநாடுகளிலும், ஆசிய நாடுகளுக்கிடையில் நடைபெற்ற கலை, இலக்கியக் கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டவர்.

தமிழ், ஆங்கிலம், அரபு, சிங்களம் ஆகிய மொழிகளில் நன்கு பரிச்சயமுள்ள இவர் படைப்புக்களை ஆய்வு செய்வதிலும், பதிப்பிப்பதிலும் முன்னோடி.

'திறனாய்வுக் கட்டுரைகள்', 'சோவியத் யூனியனின் உடைவு', 'பாரதியின் மொழிச் சிந்தனைகள்', 'மாக்சியமும் இலக்கியத் திறனாய்வும்', ' ஆரம்ப இடைநிலை வகுப்புகளில் தமிழ் மொழி கற்பித்தல்: ஒரு மொழியியல் நோக்கு', 'இன முரண்பாடும் வரலாற்றியலும்', 'தொடர்பாடல் மொழி நவீனத்துவம்', 'A Contrastive Grammer of Tamil and Sinhala Noun Phrase', 'Understanding Sri Lankan Muslim Identity', 'A Lankan Mosaic' என 27 படைப்புக்களைத் தந்துள்ளார்.

'மழை நாட்கள் வரும்', 'அழியா நிழல்கள்', 'தாத்தாமாரும் பேரர்களும்' என கால நிகழ்வுகளைப் பதிவு செய்த கவிதைத் தொகுப்புக்களும் 'பலஸ்தீனக் கவிதைகள்' (தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது) தொகுப்பும் இவற்றுள் அடக்கம். வன்முறை வன்முறையையே பிரசவிக்கிறது என்கிற மாறா உண்மை இவருடைய பல கவிதைகளில் துருத்திக் கொண்டு தெரியும்.

தன்னுடைய ஆளுமையைப் புதுப்பித்தபடியே இப்போதும் வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் இவரை இடைமறித்து இப்பேட்டியை எடுப்பதற்குள்...! எனக்குப் பொறுமை இருந்தது!

நன்றி gmail.

**பல தளங்களினூடாகவும் வீறுநடைபோட்ட நுஃமான், இப்போது பல்கலைக்கழகத்திற்குள் மட்டும் நிதான நடைபயில்கிறார் என்று கூறப்படுகிறதே. உங்களுக்கு எங்கே, என்ன முடியாமல் இருக்கிறது?**

இப்படி யார் கூறுகின்றார் என்று தெரியவில்லை. நான் எப்போதும் போல் நிதான நடையில்தான் இயங்கிக்கொண்டிருக்கிறேன். படைப்பிலக்கியத் துறையில் 1970 களுக்குப் பிறகு நான் அதிகம் ஈடுபடவில்லை. விமர்சன ஆய்வுத் துறைகளில் எனது கவனம் அதிகம் ஈர்க்கப்பட்டது. பட்ட, பட்டப்பின் மாணவர்களுக்குக் கற்பிப்பதில் நான் அதிக நேரத்தைச் செலவிட்டிருக்கிறேன். நாடளாவிய நிலையில் மொழி கற்பித்தல் துறையில் புதிய மாற்றங்களை சிறிதளவேனும் புகுத்துவதில் நான் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வந்திருக்கிறேன். மொழி பெயர்ப்புத் துறையில் அதிக அக்கறையுடன் உழைத்திருக்கிறேன். நூல் வெளியீடு பதிப்பு முயற்சிகளில் பெருமளவு நேரத்தைச் செலவிட்டிருக்கிறேன். பத்திரிகைகளுக்கு நான் இப்போது அதிகம் எழுதுவதில்லை. கூட்டங்களில் கலந்து கொள்வதை முடிந்த அளவு குறைத்திருக்கிறேன். இவற்றால் ஏதாவது சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை பெருமளவு குறைந்து விட்டது. என்றாலும் எனது அக்கறைகளும், செயற்பாடுகளும் தொடர்ந்தும் பல தளங்களில் நிலைகொண்டுள்ளன என்றுதான் நினைக்கின்றேன். எனது செயற்பாடுகள் ஆரவாரமற்றவை. அதனால் பலரின் கவனத்தை அவை ஈர்க்காதிருக்கலாம். என்றாலும் எனக்கு எப்போதும் சுயதிருப்தி இல்லை. நான் செய்திருக்கக் கூடியவற்றில் பத்துவீதமாயினும் நான் செய்யவில்லை என்ற மனக்குறை எனக்கு உண்டு.

**பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் ஒருவர் மாணவர்களின் அங்கீகாரத்துடன்தான் செயற்பட முடியுமா?**

அப்படி இல்லை. ஆனால், மாணவர்களின் நலனில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்று நினைக்கின்றேன்.

**இலக்கியவாதிகளுக்கான அங்கீகாரத்தை வழங்குவது பல்கலைக் கழகங்களா? மக்களா?**

இரண்டும் இல்லை. அவர்களின் படைப்புகள்தான் அவர்களுக்குரிய அங்கீகாரத்தை வழங்கும். தரமற்ற படைப்புகளைப் படைக்கும் இலக்கியவாதிகளை பல்கலைக் கழகங்களோ, மக்களோ வெவ்வேறு பின்புலங்களின் அடிப்படையில் அங்கீகரித்தாலும் காலம் அவற்றை நிராகரித்துவிடும்.



தரமான படைப்பாளிகளை பல்கலைக் கழகங்களோ மக்களோ உடனடியாக அங்கீகரிக்காவிட்டாலும் பிற்காலத்தில் அவர்கள் இனங்காணப்பட்டு அங்கீகாரம் பெறுவார்கள். பாரதியின் காலத்தில் அவனுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. இப்போது அவனை அங்கீகரிக்காதவர்கள் யாரும் இல்லை. அங்கீகாரத்துக்காக ஆலாய்ப் பறக்கும் இலக்கியவாதிகள் இலக்கியவாதிகளே இல்லை என்பேன்.

**பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர் நவீன இலக்கியத்தைத் தெரிந்து கொள்ளக்கூடாது என்கிற பிடிவாதத்தில் இருக்கிறார்களா? அல்லது...**

விஞ்ஞானம், பொருளியல், புவியியல் போன்ற துறைசார்ந்த பேராசிரியர்களும் நவீன இலக்கியத்தைக் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும் என்று நீங்கள் கருதமாட்டீர்கள் என்று நினைக்கின்றேன். இலக்கிய ஈடுபாடு இவர்களின் சுயவிருப்பு சார்ந்ததாக இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். பொதுவாகத் தமிழ்ப் பேராசிரியர்களை மனதில் வைத்துக் கொண்டுதான் இவ்வாறு கேட்கிறீர்கள் என்று நம்புகின்றேன். நவீன இலக்கிய ஈடுபாடே இல்லாத பல சிறந்த தமிழ்ப் பேராசிரியர்கள் இருந்திருக்கிறார்கள். பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையை ஓர் உதாரணமாகச் சொல்வேன். தமிழ் இலக்கணம், கல்வெட்டு ஆராய்ச்சித் துறையில் அவர் பெரிய அறிஞர். தமிழ் நாட்டில் அனேக தமிழ்ப் பேராசிரியர்கள் அவ்வாறு இருந்திருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை நவீன இலக்கிய ஈடுபாடு இன்மையை நான் ஒரு குறையாகக் கருதமாட்டேன்.

பேராசிரியர் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோர் பழந்தமிழ் இலக்கியம், நவீன இலக் கியம் ஆகிய இரு துறைகளிலும் ஆழமாகவும், அகலமாகவும் காலூன்றி நின்றவர்கள். இவர்களுடைய அக்கறை விசாலமானது. இவர்களுக்குப் பின்வந்த பல தமிழ்ப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பழந்தமிழ் இலக்கியத்திலோ நவீன இலக்கியத்திலோ ஆழமான அகலமான பார்வையும் பரிச்சயமும் அற்று நுனிப்புல் மேய்பவர்களாக இருக்கிறார்கள். இது அவர்களது ஆர்வம், அக்கறை சார்ந்த விடயம். பிடிவாதமா என்று தெரியாது.

**இன்றைய உங்கள் பண்பாட்டுப் பன்மைத்துவத்தினூடாக நீங்கள் அழுத்தமாகப் பதிவு செய்யவோ, கருத்துரைக்கவோ விரும்புவது என்ன?**

பண்பாட்டுப் பன்மைத்துவம் என்பதை நாம் எவ்வாறு புரிந்து கொள் கின்றோம் என்பது முக்கியமானது. என்னைப் பொறுத்தவரை பல்வேறு பண்பாடுகள் ஒன்றுடன் ஒன்று முட்டிமோதிக் கொள்ளாது, கொண்டும் கொடுத்தும் சகவாழ்வு வாழ்வதையே பண்பாட்டுப் பன்மைத்துவம் என்று கருதுகின்றேன். வரலாற்றுக் காலம் முழுக்க பண்பாட்டுக் கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்தே வந்திருக்கின்றது. தூய பண்பாடு என்று எதுவும் இல்லை. பண்பாட்டுத் தனித்துவம் பற்றிப் பேசுவது ஒரு அரசியல் சார்ந்த கட்டமைப்புத்தானே தவிர யதார்த்தம் அல்ல. யதார்த்தத்தில் எல்லாப் பண்பாடுகளும் கலப்புப் பண்பாடுகள்தான். நவீன தொழில்நுட்ப யுகத்தில் பண்பாட்டுக் கலப்பு முன் எப்போதையும் விட வேகமாக நிகழ்கின்றது.

அதேவேளை சமூக அரசியல் முரண்பாடு காரணமாக தூய பண்பாட்டு அடையாளம் ஒன்றையும் நாம் கட்டமைக்க முயல்கின்றோம். இது பண்பாடு களுக்கிடையே ஏற்றத்தாழ்வையும் பகைமையையும் உருவாக்குகின்றது. அரசியல் மோதல் பண்பாட்டு மோதலாக உருவெடுக்கின்றது. இதனைப் புரிந்துகொண்டு பண்பாட்டுப் பன்மைத்துவத்தை வலியுறுத்த வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். நல்லிணக்கத்துக்கும், சமாதான சகவாழ் வுக்கும் அது அடிப்படையாக அமையும் என்பதே என் கருத்து.

**யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்த காலப்பகுதியில் நீங்கள் கற்றுக் கொண்டவற்றைப் பதிவு செய்து விட்டீர்களா?**

யாழ் பல்கலைக்கழகத்தில் 1976 முதல் 1990 வரை பதினைந்து வருடங்கள் பணியாற்றியிருக்கிறேன். நான் அங்கு வாழ்ந்த காலம் இன்றைய அரசியல் வரலாற்றில் முக்கியமான காலம். அக்கால கட்டத்து அனுபவங்கள் சில கவிதைகளாக வெளி வந்திருக்கின்றனவே தவிர ; முழுமையாகப் பதிவு செய்தேன் என்று கூற முடியாது. அக்கால அனுபவங்களை ஒரு புனை கதை சாராப் படைப்பிலக்கியமாகக் (creative non fiction) கொண்டு வர வேண்டும் என்பது என் நீண்ட நாள் ஆவல். அதற்கு இன்னும் போதிய அவகாசம் கிடைக்கவில்லை. விரைவில் அது சாத்தியமாகும் என்று நம்புகின்றேன்.

**அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த போது ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தின் குரலாக இருந்த நுஃமான், புலம் பெயர்ந்த பிறகு முஸ்லிம் மக்களின் குரலாக மட்டுமே மாறியது உண்மை தானா?**

என்னைப் பற்றிய பல தவறான அபிப்பிராயங்களுள் இதுவும் ஒன்று. இது தமிழ்த் தேசியவாத நிலைப்பட்ட கருத்து என்றுதான் நினைக்கின்றேன்.



உண்மையில் முஸ்லிம் மக்களின் துயரம் பற்றி நான் எதுவுமே எழுதவில்லை என்ற கடுமையான குற்றச்சாட்டும் சில முஸ்லிம் நண்பர்களால் முன் வைக்கப்பட்டுள்ளதையும் நான் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். என்னுடைய எழுத்துக்கள் இனத்துவம் சார்பானவை அல்ல. ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவே அது என்றும் ஒலிக்கின்றது.

வடக்கில் தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப் பட்டபோது 'துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும்', 'புத்தரின் படுகொலை' போன்ற கவிதைகளை எழுதினேன். விடுதலை இயக்கங்கள் தமிழ் மக்கள் மீது அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டபோது 'துப்பாக்கிக்கு மூளை இல்லை' போன்ற கவிதைகளை எழுதினேன். அதே இயக்கங்கள் முஸ்லிம் மக்களை அடக்கு முறைக்கு உள்ளாக்கிய போது 'அவர்களும் நீயும்' போன்ற கவிதைகளை எழுதினேன். எப்போதும் எனது கவிதைகள் அடக்குமுறைக்கு எதிராகவே இருந்து வந்துள்ளன.

நூற்றாண்டுகளாக தாங்கள் வாழ்ந்த நிலத்தில் இருந்து உடுத்த உடை யோடு விரட்டப்பட்ட முஸ்லீம்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டம் இல் லையா? கடந்த இருபது ஆண்டுகளில் இரண்டாயிரத்துக்கு அதிகமான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். பல்லாயிரக் கணக் கான ஏக்கர் நிலங்களில் பயிர் செய்ய முடியாது தடுக்கப்பட்டிருக்கி றார்கள். இது ஒடுக்கு முறை இல்லையா? என்று கேட்கத் தோன்றுகின்றது. இனத்துவப் பார்வை பக்கச்சார்பானது. நுஃமான் ஒருபோதும் ஒரு பக்கச் சார்பாகச் செயற்பட்டதில்லை.

**இத்தகைய பார்வைகள், விமர்சனங்கள் உங்களை நோக்கி வருவது உங்கள் ஆளுமையை வெளிக்கொணரும் வாய்ப்பாக இல்லையா?**

ஒருவரைப் பற்றிய விமர்சனம் அவரைப் பற்றிய சரியான புரிதலின் அடிப்படையில், ஆதாரங்களின் அடிப்படையில் வர வேண்டும். மனம் போன போக்கில் முன்வைக்கப்படக் கூடாது. ஆனால் இன்றைய விமர்சனங்கள் பெரும்பாலும் இவ்வாறுதான் இருக்கின்றன. என்னுடைய எழுத்துக்களை முழுமையாகப் படிக்காது என்னைப் பற்றி மொத்தமாக அபிப்பிராயம் சொல்ல முனையும் சிலரது எழுத்துக்களை அண்மைக் காலத்தில் நான் படித்து ரசித்திருக்கிறேன். இத்தகைய எழுத்துக்கள் பொறுப்புணர்ச்சி அற்றவை. எழுதப்பட்டவரின் ஆளுமையை அன்றி;

எழுதியவரின் ஆளுமையையே வெளிக்காட்டுவன. இவற்றுக்கெல்லாம் பதில் சொல்வது அவசியமென்று நான் நினைக்கவில்லை.

**போராட்டத்திற்குப் பிறகு முஸ்லிம் இலக்கியவாதிகளின் படைப்புக்களும் அவ்வினத்தின் முகம் காட்டவென்று மட்டுமே படைக்கப்பட்டுக் கொண்டிருப்பதாய் தெரிகிறதே!**

ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் மக்களின் குரல் இலக்கியத்தில் ஒலிப்பது தவிர்க்க முடியாதது. 70, 80 களில் ஒடுக்கு முறைக்கு உட்பட்ட தமிழ் மக்களின் குரல் நமது இலக்கியத்தில் ஓங்கி ஒலித்தது. அதுபோல் 90 களின் பிற்பகுதியில் இருந்து கிழக்கு முஸ்லிம்களின் குரல் அங்கு பிறக்கும் இலக்கியத்தில் ஓங்கி ஒலிக்கின்றது. முன்னதை நீங்கள் ஏற்றுக்கொண்டால் பின்னதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழரின் துயரத்தைத் தமிழரும், முஸ்லிம்களின் துயரத்தை முஸ்லிம்களும், பேசவேண்டியிருப்பது ஒரு துர்ப்பாக்கிய நிலைமை. பிறருடைய துயரத்தைப் புரிந்துகொள்ளவும் அதைத் தம்முடைய இலக்கியத்தில் பதிவு செய்யவும் கூடிய சூழல் உருவாக வேண்டும்.

**இலங்கைக்குள் சமாதானம் சாத்தியமா?**

சாத்தியமா என்பது ஆராய்ச்சிக்குரிய கேள்வி. சாத்தியமாக வேண்டும் என் பதுதான் நமது எதிர்பார்ப்பு.

**இலங்கையின் இன்றைய அரசியல் குறித்து எவற்றையெல்லாம் பதிவு செய்ய நினைத்திருக்கிறீர்கள்?**

இன்றைய இலங்கை அரசியல் சிக்கலானது, குறுகலானது, குரூரமானது, அவமானகரமானது, சுயநலத்தில், பிரதேசவாதத்தில், இனவாதத்தில் வேரூன்றியது. தொலைநோக்கு அற்றது. இதிலிருந்து நாம் விடுபட வேண்டும். புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்க வேண்டும். இதைத்தான் நான் கூற விரும்புகிறேன்.

**'தலித்தியத்தின் தந்தை - டானியல்' என்று சொல்லிக் கொள்வதில் நாம் பெருமைப்படலாமா?**



இதெல்லாம் பெருமைப்படக் கூடிய விடயம் அல்ல. தலித்தியம் என்ற கருத்து தோன்றுவதற்கு முன்பே இலக்கியம் படைத்தவர் டானியல். அவர் முற்போக்கு இலக்கியம் என்ற சட்டகத்துள் நின்றுதான் படைப்பில் ஈடுபட்டார். செ. கணேசலிங்கன், டொமினிக் ஜீவா ஆகியோரையும் நீங்கள் இவருடன் சேர்க்க வேண்டும். டானியலுக்கு முன்பே சாதிப் போராட்டம் பற்றி நாவல் எழுதியவர் கணேசலிங்கன். தலித்தியம் என்பது மேல்சாதி வாதத்துக்கு எதிரான ஒரு சாதிவாதம்தான். ஒடுக்கப்பட்ட சாதியினரின் குரல் என்ற வகையில் அதற்கு ஒரு முற்போக்குப் பாத்திரம் உண்டு என்பதை மறுக்கமுடியாது. ஆனால் டானியல், கணேசலிங்கன் ஆகியோர் வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே சாதியமைப்புக்கு எதிரான பஞ்சமர்களின் போராட்டத்தைக் கருதினர். அந்த வகையில் இன்றைய தலித் எழுத்தாளர்களிலிருந்து அவர்களது கருத்து நிலை வேறுபட்டது என்றே நான் நினைக்கின்றேன். இவ்வகையில் டானியலைத் தலித்தி யத்தின் தந்தையாக்குவது டானியலுக்குப் பெருமை சேர்க்கும் என்று எனக்குத் தோன்றவில்லை.

**முற்போக்கு இலக்கிய வாதத்தின் சமூகப் பரிமாணங்கள் என்ன?**

முழு மொத்தமான மனித விடுதலையின் குரல் தான் முற்போக்கு இலக்கியத்தின் குரல். சாதி, மத, இனத்துவ, தேசிய எல்லைகளைத் தாண்டிய, சுரண்டலற்ற, ஒடுக்கு முறையற்ற மனித விடுதலையை, சமூக விடுதலை யைக் கனவு காண்பவர்களின் இலக்கியக் குரல் அது. இனவாத, மதவாத, தேசியவாதக் குரல்கள் மேலோங்கியுள்ள இன்றைய சூழ்நிலையில் முற்போக்கு இலக்கியக் குரல் சில வேளை கேலிக்குரியதாகக் கூட ஒலிக்கலாம். ஆனால் அது தான் மனித ஆத்மாவின் குரல் என்று நான் நினைக்கிறேன்.

**புலம்பெயர்ந்தவர்களின் இலக்கியங்கள் நமது இலக்கியத்துக்குத் தந்தவை என்ன?**

புதிய களங்களையும், புதிய அனுபவங்களையும் தந்திருக்கின்றன. உள்நாட்டு நிலைமையைத் தள்ளி நின்று பார்க்கும் வாய்ப்பை சில படைப்பாளிகளுக்காவது புலப்பெயர்வு வழங்கியிருக்கிறது. எனினும் புலப்பெயர்வு தமிழ் இலக்கியத்தில் எந்தளவு ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். புலம்

பெயர்ந்தோரின் அடுத்த தலைமுறை தமிழில் எழுதுமா என்பதும் ஒரு கேள்விக் குறிதான்.

**தமிழ் விமர்சனத்துறையில் முன்னிலை வகித்த சிவத்தம்பியோ, கைலாசபதியோ மஹாகவியை முன்னிலைப்படுத்தாதது ஏன்?**

கைலாசபதியையும், சிவத்தம்பியையும் சிறுமைப்படுத்துவதற்குச் சிலர் மஹாகவியை ஒரு சாதனமாகப் பயன்படுத்த முயல்கிறார்கள். ஒரு படைப்பாளியைப் பற்றிய ஒரு விமர்சகரின் மதிப்பீடு, அந்த விமர்சகரின் கருத்துநிலை சார்ந்தது. இதில் அவரது இலக்கியக் கொள்கை, அரசியல் நிலைப்பாடு, ரசனை எல்லாம் அடங்கும். கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரின் விமர்சனக் கருத்து நிலை மஹாகவியை வெளி ஒதுக்கி யமைக்காக யாரும் அவர்களைச் சிறுமைப்படுத்த முடியாது என்பதுதான் என் நிலைப்பாடு. கைலாசபதி, சிவத்தம்பி போல் தளையசிங்கமும் ஒரு முக்கியமான விமர்சகர். அவர் மஹாகவியைவிட மு.பொன்னம்பலம்தான் முக்கியமான கவிஞர் என்று எழுதியிருக்கிறார். அது அவரது கருத்து நிலை சார்ந்த மதிப்பீடு. அதற்காக தளையசிங்கத்தை யாரும் சிறுமைப் படுத்துவதில்லை.

கைலாசபதியையும், சிவத்தம்பியையும் முக்கியமான வர்களாகக் கருதிய எழுத்தாளர்களை இவர்களது கருத்து நிலைக்கு எதிரான; எதிர் பிற்போக்கு முகாமை செய்த தளையசிங்கமோ எஸ். பொன்னுத்துரையோ முக்கியமான எழுத்தாளர்களாகக் கருதியதில்லை. உங்கள் வார்த்தையில் சொன்னால் முன்னிலைப் படுத்தியதில்லை. இதை கோஷ்டி மனப்பான்மை, இருட்டடிப்பு என்று சொல்வதைவிட கருத்துநிலை வேறுபாடு என்று கருதுவது விமர்சன முதிர்ச்சியின் பாற் படும். விமர்சன மதிப்பீட்டின் கருத்து நிலைச் சார்பைப் புரிந்து கொள்ளாது விமர்சகர்களைச் சிறுமைப்படுத்த, இழிவுபடுத்த முற்படுவது சிறுபிள்ளைத்தனமானது

**இலங்கையை விடவும் தமிழ் நாடு பெரிதும் கொண்டாடுகிற இவ்விரு வருடைய காலத்து விமர்சனப் பதிவுகள் மிகச் சரியாகவும், கலை நோக்கிலும்தான் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்றா கருது கிறீர்கள்?**



மிகச் சரியான விமர்சனப் பதிவுகள் என்று எதுவும் இல்லை. நான் ஏற் கனவே சொன்னதுபோல் எல்லா விமர்சனங்களும் கருத்துநிலைச் சார்புடையனதான். எனது நோக்கில் சரியானதாக இருப்பது பிறிதொரு வரின் நோக்கில் சரியானதாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. கலை நோக்கு என்பதும் இப்படியானதுதான். இச் சொல்லும் ஒரு வாய்ப் பாடுபோல் பலராலும் பயன்படுத்தப்படுகின்றது. கலை நோக்கு என்பதும் கூட கருத்துநிலைச் சார்புடையதுதான். இவை பற்றி நிறையச் சர்ச்சைகள் நடந்திருக்கின்றன. ஒருவருடைய விமர்சன அபிப்பிராயத்தை அது அவருடைய அபிப்பிராயம் என்று ஏற்றுக்கொள்ளும் பக்குவம் நமக்கு வரவேண்டும்.

**கவிஞர் சேரன், தந்தை மஹாகவியின் தோளிலேறி உலகை விசாலமாகப் பார்ப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?**

இருவரது காலச் சூழலும், நோக்கு நிலையும் வேறுபட்டவை என்று நினைக்கின்றேன். சேரனுக்கு மட்டுமன்றி பிந்திய தலைமுறைக் கவி ஞர்கள் எல்லோருக்குமே மஹாகவி உட்பட முந்திய தலைமுறையின் தோளில் ஏறி உலகத்தைப் பார்க்கும் வாய்ப்பு உண்டு. ஆனால், உலகத்தை விசாலமாகப் பார்க்கும் வாய்ப்பை நமது இனத்துவ அரசியல் இன்றைய கவிஞர்களுக்கு மறுத்துவிட்டது என்றே நான் நினைக்கின்றேன். சேரனும், ஜெயபாலனும் கூட இதற்கு விலக்கு அல்ல. இனத்துவ அரசியலின் எல்லைகளைத் தாண்ட முடியாமல் நமது கவிதை அதற்குள்ளேயே சுழல்கின்றது என்பதுதான் என் கவலை.

**மஹாகவி ஒரு மரபுக் கவிஞர். அவருடைய கவிதைகளைப் பதிப் பிக்கும் போது நீங்கள் ஏன் புதுக்கவிதை வடிவில் பதிப்பிக்கி றீர்கள்?**

இது ஒரு தவறான புரிதல். மஹாகவியின் மிகப் பெரும்பாலான கவிதை கள் யாப்பு மரபுக்கு ஏற்பவே அச்சாகியுள்ளன. சில கவிதைகளின் வரியமைப்பை மஹாகவியே மாற்றியமைத்திருக்கிறார். மிகச் சில கவிதைகளிலேயே, பொருள் தெளிவுக்காக நான் வரியமைப்பில் சில மாற்றங்களைச் செய்திருக்கிறேன்.

**இலங்கையில் எந்த ஊடகத்தை நம்பகத் தன்மையோடு பார்க்கிறீர்கள்?**

நம்பகத் தன்மையோடு பார்க்கக் கூடிய எந்த ஊடகமும் இலங்கையில் இருப்பதாகத் தெரியவில்லை.

**இன்றைய மக்கள் தொடர்பு சாதனங்களால் சமாதானத்துக்கான எத்தனங்களைச் செய்யவே முடியாது என்றா நினைக்கிறீர்கள்?**

இலங்கையில் இனக் குரோதத்தை வளர்த்ததில், வளர்த்துக் கொண்டிருப்பதில் நமது தொடர்பு சாதனங்களுக்கு முக்கியமான பங்கு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஓரளவு இதில் மாற்றத்தைக் கொண்டு வர விசுவாசமாக முயன்றவை சில மாற்று ஊடகங்கள்தான். ஆனால், அவையும் அடிப்படையிலேயே செயற்படுகின்றன. இந்நிலையில் ஊடகங்களில் நம்பிக்கை கொள்வது எவ்வாறு?

*30.07.2006.*





# வாணி ஜெயராம்

பின்னலான தன்மை கொண்ட இசையின் சிருஷ்டியில் வெற்றுத் தெளிவுகளை நாடுகின்ற மேலோட்டமான போக்கு நிராகரிக்கப்படுகிறது. இசைக்கே உரித்தான இத்தன்னுணர்வு விளைவு விசேடத்தினை தற்பரிவோடு உக்கிரமில்லாமல் அனுசரித்ததால் மட்டுமே பிரகாசமான அடையாளத்தினைப் பெற்றுக் கொண்டு இன்று வரையில் மிளிர்ந்து கொண்டிருக்கின்ற உன்னத இசைநாயகி - வாணி ஜெயராம்!

ஐந்து வயதிலேயே ஸ்ருதியின் நுண்மையோடு இயைந்து போனவருக்கு, எட்டு வயதில் அகில இந்திய வானொலி களம் அமைத்துக் கொடுத்திருந்தது. அப்போது பருவமும், திறமையும் இவருக்குள் முரண்பட்டு நின்றன. பத்து வயதில் முதன்முதலாக முழு அளவிலான மேடை நிகழ்ச்சியொன்றினை வழங்கியிருந்தார். அன்றைய அந்தக் கானக் குரலின் சுத்தத்தினால் ஈர்க்கப்பட்ட இந்தியாவின் சங்கீதக் காரர்கள், சபாக்களினூடாகத் தொடர்ந்தும் இவரது குரலைக் கேட்க விரும்பினார்கள்.

'திறமைகளை இனங்கண்டு ஊக்குவிக்கின்ற பெற்றோர் அமைந்து விட்டாலே எல்லாப் பிள்ளைகளினுடைய வாழ்க்கையும் ஒளிமயம்தான்!

இந்தப் பேறு இவருக்குத் திறம்பட வாய்த்திருந்தது. கச்சேரிகளில் தொடர்ந்த இவரது இசைப் பயணத்தின் மிகப் பெரிய திருப்புமுனை; இந்திய சினிமாவுலகம் வாணிஜெயராம் என்கிற பாடகியை உள்வாங்கிக் கொண்டதுதான். தாய்மொழி தமிழ். கர்நாடக சங்கீதமே இவருடைய வளர்ச்சியின் பின்புலம். ஆனாலும், இவர் சினிமாவில் பாடிய முதல் பாடல் ஹிந்தி மொழியில்தான்.

சங்கீத சபாக்களினூடாகப் பேசப்பட்ட இவரது குரலை 'Guddy' என்கிற ஹிந்தித் திரைப்படத்திற்கு இசையமைப்பாளரான 'வசந்த் தேசாய்' அழகாகப் பயன்படுத்திக் கொண்டார். அத்திரைப்படத்தின் அனைத்துப் பாடல்களையும் வாணிஜெயராம் மட்டுமே பாடியிருந்தாலும், அவற்றுள் 'போல் ரெ பப்பி' என்கிற பாடல்தான் அவருக்கு மிகுந்த புகழைத் தேடிக் கொடுத்தது.

'இதற்காகவேதான் நான் படைக்கப்பட்டிருக்கிறேன்' என்கிற மனோதிடம் ஆரம்பத்திலிருந்தே அவருக்கு உரித்தானதாக இருந்திருக்கும் போலும்!

கர்நாடகம், ஹிந்துஸ்தானி, வெஸ்டர்ன் என்ற சங்கீத வகையறாக்கள் எதுவுமே இவருக்கு வில்லங்கமானவையாக இருக்கவில்லை. இது வரையில் 14 மொழிகளுக்கு மேல் பாடியிருக்கிறார். நான்கு மொழிகளைச் சரளமாகக் கற்றிருக்கிறார்.

1970 களின் ஆரம்பத்தில் கேட்ட வாணி ஜெயராமின் குரல் இன்னமும் கூட மூப்பினால் தளர்ச்சியடையவில்லை. ஆனால் அனுபவத்தின் முதிர்வு நாம் எதிர்பார்ப்பதற்கும் அதிகமாகவே இருக்கிறது என்று படுகிறது. 11 வருட காலங்கள் தமிழ், மலையாளம், ஹிந்தி என திரைப்படவுலகில் கோலோச்சியவர். எம்.எஸ்.வி.யின் இசையில் இவர் பாடிய 'மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான மலரல்லவோ' என்ற பாடல் அவரது கணவரை மயக்கியதை விட தமிழ் ரசிகர்களை வசீகரித்ததே அதிகம். அந்தப் பாடலினுடைய இசையின் நினைவுகளிலிருந்து இன்னமும் எமது முந்திய மூன்றாவது தலைமுறை கூட மீளவில்லை. அவரது மெல்லிசையின் அசுர சாதனை அது.



ஸ்ருதியின் வடிவத்தினைத் தகர்க்கவே தெரியாத இந்தப் பாடகியை சினிமா உலகம் பலகாலங்களாக ஏனோ மறந்திருந்தது. மொழியின் சுபாவீகமான வார்த்தைகளுடன், எண்ணக்கலப்பும், உணர்வுக் கலப்பும் அவருக்குள்ளிருந்து வெளிவருகிறபோது மயங்காதவர்கள் யாருமில்லை. சமீபத்தில் இலங்கை வந்திருந்தார். கூடவே அவர் கணவர் ஜெயராமும்.

தமிழ் கலாசாரத்தின் நேரான அம்சங்களுடன் எந்த விதமான சிதைவுகளும் இல்லாமல் இருந்த அவரது தோற்றமும் நடப்பும் கூட இன்றைய சங்கீத சந்ததியினருக்குத் தேவையான ஒன்றுதான். மிகவும் எளிமையாக இருக்கிறார் என்பதால்; இளமையாகவும் தெரிகிறார். வெறும் 20 நிமிட உரையாடலில் அவர் பேசியதும் நான் வினவியதும் குறைவுதான். தனது வளர்ச்சியில் கணவரின் பங்குதான் மகத்தானது என்றார்.

'பல்வேறு மொழிகளில் பாடியிருக்கிறீர்கள். பாடுமுன்பு குறுகிய நேரத்தில் உங்களுக்கு அந்த மொழிக் கருத்துக்கள் விளக்கப்படலாம். ஆனாலும், இவ்வாறு சொல்லிக் கொடுப்பதால் மட்டுமே அந்தந்த மொழியின் இனிமை பாடலுக்குச் சரியாக வந்து விடுமா?' என்று கேட்டபோது, தனது கூர்மையான அவதானமே அதற்குக் காரணம் என்றும் ஒவ்வொரு மொழியிலும் தனக்குப் பல்வேறு நண்பர்கள் இருப்பதாகவும் பதில் தந்தார்.

ஏற்புடையதே! இந்த இசை வாணிக்கு இறைவன் அளித்துள்ள வரம் இது. பாடும்போது தனது குரலை அந்தப் பாடல்களிலேயே வாழச் செய்யும் வித்தை வாணி ஜெயராமுக்கே உரித்தான ஒன்றுதான். அதனால்தான் இன்னமும் அவரது ரசிகர்கள் அவரை விட்டுப் பிரிந்து செல்லாமல் இருக்கிறார்கள்.

மனம் சிதைந்தும், சோர்ந்தும் போகும் தருணங்களில் வாணி ஜெயராமின் பாடல்களைக் கேட்டால் புத்துயிர் பிறக்கிறது என்கிறார் பிரபல கவிஞர் ஒருவர். மூன்று தடவைகள் தேசிய விருதும், பல மாநில அரசின் விருதுகளையும் பெற்றிருக்கும் அவரிடம், விருதுகள் பற்றிய உயர்வான மனப்பதிவுகள் இல்லை. சினிமாவுக்குள், அரசியல் இருப்பது போலவே விருது வழங்கலிலும் அரசியல் கலந்திருக்கிறது என்கிறார்.

மேலும், ''இவற்றையெல்லாம் நான் பெருமையாக எண்ணிக் கொண்டேனானால் அன்றே 'அவுட்' ஆகிவிட்டேன் என்று அர்த்தம். எந்தவொரு கலைஞனுக்கும் விருது குறித்து பெருமிதம் வரவே கூடாது. ஏனெனில்,

இப்போதெல்லாம் தகைமையைப் பரிசீலித்து விருதுகள் வழங்கப்படுவதே இல்லை'' என்கிறார்.

மிக நீண்ட காலமாக சினிமா உலகம் வாணி ஜெயராமை; அவரது குரலைப் பயன்படுத்தாதற்கு நமக்குக் காரணம் தெரியவில்லை. அவருக்கும்தான். என் குரல் இன்னமும் மாறாமல்தான் இருக்கிறது. ஆனால், என் போன்ற பாடகிகளுக்கு இன்று ஏனோ வாய்ப்பில்லை என்கிறார்.

ஆனால் இந்தக் குரலுக்கு ஏற்ற வரிகளை எழுதக்கூடிய கவிஞர்களும், இசையமைப்பாளர்களும் இன்னமும் ஆரோக்கியமாகவே இருக்கிறார்கள். என்று நான் கருத்துரைப்பதனூடாக வாணிஜெயராம் என்கிற பாடகி வருத்தத்தில் இருக்கிறார் என்று அர்த்தமில்லை.

ஜெய்ப்பூரிலும், பெங்களூரிலும் குழந்தைகளுக்காகவும், மாணவர்களுக்காகவும் இசைப்பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறார். இந்தியாவின் மாநிலங்கள் தோறும் மெல்லிசை நிகழ்ச்சிகளையும், பஜன், கசல்ஸ், பல மொழிகளிலும் அவர் பாடிய திரைப்படப் பாடல்களை யெல்லாம் நிகழ்ச்சிகளாகவும் செய்து கொண்டிருக்கிறார். 'இதனால் எனக்கு நேரம் போதவில்லை' என்றும் கூறியிருந்தார்.

கவிதைகளும், பாடல்களும் கூட எழுதி வருகிறாரம். 'இன்று எப்பேர்ப்பட்ட கவிஞன் எழுதினாலும் அதன் சொற்களை உருப்படி இல்லாமல் செய்யும் திறமையை இன்றைய இசையமைப்பாளர்கள் ஒருவித சங்கல்பமாகவே கொண்டிருக்கிறார்களே' என்று கேட்டதற்கு அவர் கூறிய பதில், ''இது பற்றி நான் கருத்தெதனையும் சொல்ல விரும்பவில்லை'' என்பதே!

மேலும், 'தற்போது திரையிசையை அதிகமாகப் பிடித்து, பீடித்து விட்டது (வே)தாளம்.' இந்தக் கிரகணம் நீங்குமா என்று கேட்டேன். ''இது ரொம்பவும் பெரிய வார்த்தை, பிரார்த்தனை செய்யுங்கள்'' என்றார். பிரபல பின்னணிப் பாடகிகளுடன் இணைந்தெல்லாம் கூட திரையிசை பாடியிருக்கிறார். ஆனால் எந்தப் பாடகிக்காகவும் இவர் 'ட்ராக்' பாடியதே இல்லை.

தமிழில் பெருமளவிலான மெல்லிசைப் பாடல்களையே இவர் பாடியிருந்தாலும் கூட, சில துள்ளிசைப் பாடல்களும் இவரது அடையாளங்களை வலுப்படுத்தியவை.



நீண்டதொரு இடைவெளிக்குப் பிறகு 'விஸ்வ துளசி' என்ற படத்தில் அனைத்துப் பாடல்களையும் வாணிஜெயராம் பாடியுள்ளார். திரைத்துறை மீண்டும் இவரை எந்தளவுக்குப் பயன்படுத்தப் போகிறதென்று தெரியவில்லை. ஆனால் அவருடைய இது வரையிலான அடையாளங்களை சர்வதேசங்களிலுமுள்ள சங்கீதப் பிரியர்கள் சிலாகித்துப் பேசிக் கொண்டே இருக்கிறார்கள்.

'என்னால் எந்த இசையிலும் சாதிக்க முடியும்' என்கிற அவரது போக்கும், நிதானமும் மீண்டும் திரைத்துறையைக் கலக்கலாம். காத்திருப்போம்!

*24.10.2004*



# அறிவுமதி

நிஜங்களை நேசித்துக் கொண்டே வாழ்க்கையை வாசிக்கத் தெரிந்த படைப்பாளி அறிவுமதி! கவிஞர், திரைப்பாடலாசிரியர், இயக்குநர் என்கிற மூன்று வலுவான அடையாளங்களோடு தமிழர் வாழ்கின்ற நாடுகளிலெல்லாம் அறியப்படுபவர். ஆனால், தன்னடக்கத்தையும், எளிமையையும் மட்டுமே மிகைப்படுத்திக் காட்டுகிறது இவருடைய ஆளுமை!

பொதுத் தர்க்க நியதிக்கு உட்பட்டும், யதார்த்தவாதச் சட்டகத்தை மீறாமலும் தான் இவருடைய எழுதுகோல் இயங்கிக் கொண்டிருக்கிறது. தன்னுடைய மொழியைச் சிதைக்க முயல்பவர்களை முழக்கமிட்டு அடக்குவதில் முனைப்பாக இருக்கிற தமிழ் நாட்டின் மொழிப்பாற்றாளர்களின் அணியில் இவரும் அடங்குகிறார். இதன் போதெல்லாம் ஆதிக்க வர்க்கத்தால் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாவதும், சிறைகளில் அடைக்கப்படுவதும் இவருடைய வாழ்க்கையில் சாதாரண விடயங்களாகி விட்டன.

வைரமுத்துவோடு சமகாலத்தில் திரைத்துறையினுள் பாடல் எழுத வந்தவர். ஆனால் வரைமுறைகளோடு மட்டும் தான் எழுதுவேன் என்பதில் விடாப்பிடியாக இருந்து, பெரும் வாய்ப்புக்களையெல்லாம் கூட மறுத்திருக்கிறார். இதனால் ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கள் என்னை என்ன செய்து விடும் என்கிற மிடுக்கோடு சினிமாவைக் கையாண்டவர். இதனால் தான், கலை மலிந்த பல திரைப்படப்பாடல்களை நமக்குத் தர முடிந்திருக்கிறது.

'கண்ணே கலைமானே' என்கிற திரைப்படத்திற்குத்தான் இவர் முதன் முதலில் பாடல் எழுதியிருந்தாரானாலும், 'சிறைச்சாலை' மூலம் தான் தெரியப்பட்டார். இதுவரையில் எத்தனை படங்களுக்கு, எத்தனை பாடல்கள் எழுதியிருக்கிறீர்கள் என்று கேட்டால்; கணக்கு வைத்துச் சொல்கிற அளவுக்கு இவருடைய கொள்கைப் பிடிப்பில் சினிமாவுக்கு இடமில்லை. ஆனாலும் பாரதி ராஜா, பாலுமகேந்திரா ஆகியோரிடம் உதவி இயக்குனராகப் பணியாற்றிய அனுபவத்துடன் கடந்த வருடம் 'நீலம்' என்ற 10 நிமிட நேரக் குறுந் திரைப்படம் ஒன்றினை எடுத்திருந்தார். சுனாமியினால் ஏற்பட்ட அவலத்தின் ஒரு கூறினை வெளிப்படுத்தியிருந்த அத்திரைப்படம் பிரான்ஸில் வழங்கப்படும் 'கான்ஸ்' விருதுக்காகக் கலந்து கொண்டது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இலக்கியத் துறையில் பட்டம் பெற்ற இவர், தொல்பொருளியல் உள்ளிட்ட தமிழ்த்துறை சார்ந்த பல ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார். கவிதைகளோடு நடந்து கொண்டு, மனிதர்களோடு நட்பாடுவதில் இவருக்கு நிகர் இவரே தான்! கல்லூரி மாணவர்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்ற 'நட்புக் காலம்' என்ற இவருடைய கவிதைத் தொகுதி பல பதிப்புகளைக் கண்டது. 'ஆயுள் முதல் அந்தி வரை', 'அணுத்திமிர் அடக்கு' ஆகியன இவருடைய பிற படைப்புகளாகும். இந்த நேர்காணல் கோடம்பாக்கத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் இடம்பெற்றது.

**அறிவும், மதியும் ஒருங்கிணைந்து உங்களைச் சமுதாயம் நோக்கி நகர்த்துவதற்கு முன்பு, உங்களுடைய அடையாளம் அல்லது நிலைப் பாடு என்னவாக இருந்தது?**

ஏறக்குறைய அடையாளப்பட முடியாத ஒரு சின்னஞ் சிறிய புஞ்சைக் காட்டில் பிறந்த நான், அங்கே ஆதிக்க சாதிகளுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த ஒரு சமூகப் பின்புலத்தில் வளர்ந்தேன். புஞ்சைக் காட்டில் பாடு பட்டு உழைத்துக் கொண்டிருந்த எனது மக்களின் நாட்டுப்புறப் பாடல் களை உள் குடித்து, உள் குடித்து தமிழில் செழித்தேன். திராவிட இயக்கத்தின் வளர்ச்சியும், விழிப்பும் எனக்குள் ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தின. தவிரவும், அங்கே இருக்கின்ற திருவள்ளுவர் படிப்பகத்தில் இருந்த நூல்களால் தமிழ் இன உணர்வும், மொழி உணர்வும் பெற்று மெல்ல மெல்லத் தமிழினுள் ஆழ்ந்து போய், ஆர்வ மிகுதியில் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலை படிப்பதற்காக வந்தேன். என்னுடைய சின்னஞ் சிறிய கிராமத்தில் மதியழகனாக வளர்ந்த நான், அதே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குக் கடலூரிலிருந்து படிக்க வந்த அறிவழகனுடன் கொண்ட நட்பு மிகவும் இறுகிப் போனது. அறி வழகன், மதியழகன் என்கிற இரண்டு நண்பர்களும் இணைந்தபோதுதான் 'அறிவுமதி' என்கிற பெயர் எனக்கு அடையாளப்பட்டது. அந்தச் சூழ்நிலையில் என்னுடைய கிராமத்து அரசியல் விழிப்புணர்வும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கொடுத்த தமிழ் உணர்வும்தான் ஒரு சேர்ந்து என்னைச் சமுதாயம் நோக்கி நகர்த்தியுள்ளன.

**இனம் குறித்த விழிப்புணர்வினைக் கல்லூரி மாணவப் பருவத்திலேயே பெற்று விட்டீர்களா?**

கல்லூரிப் பருவத்திற்கு முன்பே – எனது அரைக்காற்சட்டைப் பள்ளிப் பருவத்திலேயே இன விழிப்புணர்வைப் பெற்றுக் கொண்டேன் என்று கூறலாம். இதற்குக் காரணம் எனது தந்தையார்தான். பல்வேறு வகையான திராவிட ஏடுகளை அவர் கொண்டு வந்து படிக்கத் தருவார். அதே போன்று எங்கள் ஊரைச் சுற்றிய குறு நகரங்களில் நடைபெறுகின்ற திராவிட இயக்கக் கூட்டங்களுக்கு 8, 10 மைல் தூரங்கள் நடக்க வைத்தே அழைத்துச் செல்வார். அக்கூட்டங்களுக்கு வருகின்ற தலைவர்களான ஐயா பெரியார், அண்ணா, கலைஞர், நாவலர், கண்ணதாசன், சம்பத், சிற்றரசு போன்றவர்களின் பகுத்தறிவுப் பரப்புரைகளைக் கேட்கத்



தொடங்கிய சிறு பராயத்திலேயே இந்த மாற்றம் எனக்குள் நிகழத் தொடங்கிவிட்டது.

**உங்களை வளர்த்ததில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பங்கு என்ன?**

திராவிட இயக்க அரசியல் வரலாற்றில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு மிகச் சிறந்த இடத்தைப் பெற்றது. எப்படி பச்சையப்பன் கல்லூரி, மதுரை தியாகராஜர் கல்லூரி போன்றவற்றிலிருந்து மிகச் சிறந்த தலை வர்கள் கிடைத்தார்களோ அப்படித்தான் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் மிகச் சிறந்த தலைவர்களை உருவாக்கியது. அவர்களின் போத னையும், பொதுவுடைமைச் சிந்தனையும்தான் என் போன்ற மாணவர்களை ஆய்வாளர்களாகப் பரிமாணப்படுத்தியும், படைப்பாளிகளாக உருவாக் கியும் பெருநிறைவு கண்டது.

எனக்குள் என்றோ முளைவிட்ட இன உணர்வுக்கும், மொழி உணர்வுக்கும், பொதுவுடைமைச் சிந்தனைக்கும் தீனி போட்ட அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தின் சேவை அபாரம்!

**தமிழ் மொழியின் மீதும் இலக்கியத்தின் மீதும் நீங்கள் கொண்டுள்ள ஈர்ப்பினூடாகவே உங்கள் இலட்சியத்தினை எய்த முடியும் என்றா நினைக்கிறீர்கள்?**

மொழி என்பது ஒரு இன அடையாளக் கருவி. அதனைப் போலவே உழைப்பின் அடையாளக் கருவியும் மொழிதான். நமது உடலுழைப் பினுடைய அதிர்வுகளிலிருந்துதான் மொழி தோன்றுகிறது. தன்னுடைய உடல் உழைப்பிலிருந்து வியர்வை தோன்றுவது எப்படி இயல்போ, அதனைப் போலவே மொழி மற்றும் கலைகள் தோன்றுவதும் இயல்பு. அத்தகையதோர் உழைப்பின் கருவியாகிய மொழி; அந்த உழைப்பின் உரிமைகள் மறுக்கப்படுகின்ற போது, உழைப்பைச் செய்கிற இனத்திற் குரிய; அடையாளத்துக்குரிய மக்கள் உரிமைகளை அடக்கப் பார்க்கிறது.

அவ்வாறு அடக்கப்படும்போது அல்லது ஒடுக்கப்படும்போது பாதிப் புறுகின்ற மக்களின் குரலாக – மொழியாக என்னுடைய தாய் மொழிதான் முதல் கருவியாக வந்து பயன்படும்.

அந்தக் கருவி கைவரப் பெற்றால், அதனுடைய படைப்புகளே என்னுடைய இனநல மீட்புக்கான ஒரு மிகச் சிறந்த ஆயுதமாகப் பயன்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்திய விடுதலைக்கு பாரதி, தமிழின் விடுதலைக்கு பாரதிதாசன், தமிழீழ விடுதலைக்கு புதுவை இரத்தினதுரை, காசி ஆனந்தன் போன்று, இன்று தமிழ் நாட்டில் மொழியை மிகச் சிறந்த ஆயுதமாகப் பயன்படுத்துபவராக அண்ணர் 'இன்குலாப்' அவர்கள் இருக்கிறார்.

எனவே, மொழி என்பது இலட்சியம் நோக்கிய பயணத்திற்கு அழைத்துச் செல்லுகிற மிகச் சிறந்த ஆயுதமென்றே நான் கருதுகிறேன்.

**மொழி மீது நீங்கள் கொண்டுள்ள தீவிர பற்றினால் தமிழ்நாட்டைத் தாண்டி, இலங்கைத் தமிழர்கள் மீதும் அக்கறை கொண்டு இங்கு பல மேடைகளில் அவர்களுக்காகப் பேசியிருக்கிறீர்கள். 'தடா', 'பொடா' அச்சங்கள் ஏதும் இல்லையா?**

ஒரு கவிஞன் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவனல்ல. அவனால் சட்டங் களைப் படைக்க முடியும். அதிகார வர்க்கம் எந்தவொரு காலகட்டத்திலும் ஒரு உண்மையான வாழ்க்கையை அழகு செய்ய நினைக்கின்ற, துடிக் கின்ற படைப்பாளிகளுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்காது என்றெனக்குத் தெரியும். எனவே, உலக வரலாற்று நெடுகிலும் மிகச் சிறந்த படைப்பாளி கள் தம்முடைய இனநல மீட்பிற்காகச் சிறைகளையும், தண்டனை களையும், தூக்குகளையும் கண்டவர்கள்தான்!

ஒரு வண்ணத்துப்பூச்சி காயம் பட்டாலும் கூட அதற்கு மருந்து போடுகின்ற ஒரு சிந்தனையாளனாகத்தான் ஒரு மருத்துவன் இருப்பான். அப்படித்தான் ஒரு படைப்பாளியும் இருக்கிறான்.

என்னுடைய கைக்கெட்டிய, கண்ணுக்கெட்டிய தூரத்தில் ஒரு கொடுமை அல்லது அநியாயம் நடக்கின்ற போது அதனைத் தட்டிக் கேட்பதற்கு- என்னுடைய குருதி உறவுகளுக்காகக் குரல் கொடுப்பதற்கு எந்தத் 'தடா' வந்தாலும் 'பொடா' வந்தாலும் அல்லது எந்தத் தூக்கு வந்தாலும் அவற்றையெல்லாம் மீறி, அவர்களின் கண்ணீரைத் துடைக்க நான் என்னுடைய தமிழைத் தொடர்ந்தும் மூச்சுள்ளவரை பயன்படுத்துவேன்.

**சுதந்திரத்தைப் பொறுத்தவரையில், கவிஞன் பத்திரிகையாளனிட மிருந்து எவ்விதம் வேறுபடுகிறான் அல்லது ஒத்துப் போகிறான்?**

ஏறக்குறைய இவர்கள் இருவரும் உடன் பிறந்தவர்கள் என்றே நான் நினைக்கிறேன். சமதளத்தில்தான் நாம் இருவரும் நடந்து கொண்டிருக் கிறோம்.



கருத்தை உற்பத்தி செய்கின்ற களத்திலிருந்து அவற்றை மக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்ற கருவியாகவே 'இதழியல்' இருக்கிறது. உண்மைகள் சுடும் என்பதற்காக அவற்றைத் தெரிவிப்பதில் பின்வாங்கு கிற பயந்தாங் கொள்ளித் தனத்தின் எதிரியாகவே கவிஞனும், பத்திரி கையாளனும் இருக்கிறார்கள். இருக்கவேண்டும்!

**இனம், மத குறித்து நீங்கள் கிளர்ந்தெழுந்திருக்கிறீர்கள். மதம் குறித்த எவ்விடயங்கள் மீது உங்கள் எழுதுகோல் அதிக சினம் கொள்கிறது?**

மதம் என்பது இன்று மதம் பிடித்த ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. தொடக்க நிலையில் பல்வேறு இனக்குழுக்களுடைய தொன்மங்களை உள்வாங்கிய, வாழ்வை அழகு செய்கிற அனுபவக் கூறுகளில் இருந்து தான் மதங்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. ஆனால் இன்று, வாழ்க்கையை ஏமாற்றிப் பிழைக்கின்ற சிலர் அத்தொன்மக் கூறுகளுக்குள்ளாக ஊடுருவி அவற்றில் பல்வேறு வகையான சூழ்ச்சிகள் கலந்த புராணக் கூறுகளைப் புகுத்திப் புகுத்தி, இன்று மதம் என்பது மனித வாழ்க்கையை அழிக்கக் கூடிய மதம் பிடித்த யானையாக நாடுகள் நெடுக உலா வருகின்றன.

என்னுடைய தமிழினச் சூழலில், அதுவும் குறிப்பாக என்னை எடுத்துக் கொண்டால், நான் ஒரு இந்துவுமில்லை, கிறிஸ்தவனுமில்லை, இஸ்லாமியனு மில்லை. நான் முதலில் தமிழன். அடுத்து மனிதன். எனவே, உலகில் அனைத்து மனிதர்களுடைய வாழ்வின் அழகிற்காகவும் சிந்திக்கக்கூடிய மிக எளிய படைப்பாளன் என்ற அடிப்படையில் மதம் என்பது இன்று என்னுடைய அல்லது எங்களுடைய அல்லது நம்முடைய வாழ்வை அழகு செய்வதற்குப் பதிலாக அடக்கி ஒடுக்குவதற்கு, மூளையை வானத் திலிருந்து கிணற்றுக்குள் கொண்டு போய் அமுத்துகிற ஒரு வடிவமாகவே உருப்பெற்றிருக்கிறது. என்னுடைய தமிழ் அமைப்பிலும் கூட, மக்களை; அவர்களுடைய தொன்ம அழகுகளையெல்லாம் அழிக்கின்ற ஒரு மிகப் பெரிய கொடிய காட்டேரிகளாகவே நான் மதங்களைப் பார்க்கிறேன்.

எனவே, அனைத்து மதங்களிலிருந்தும் விடுபட்டு தமிழர்கள் தங்களுடைய இன அடையாளத்தை முன்னிலைப்படுத்துகின்ற போது தான் தம்முடைய வாழ்விற்கான; வாழ்வதற்கான உரிமைக் கூறுகளை - உரிமை அழகுகளைப் பெறமுடியும் என்பதனை நான் அசைக்க முடியாத சிந்தனை யோடு இங்கே பதிவு செய்கிறேன்.

**உங்களுடைய படைப்புகளில் மட்டுமன்றி; உரையாடலிலும் ஆங்கிலத்தைத் தவிர்க்கிறீர்கள். ஏன்?**

ஆங்கிலத்தைத் தவிர்க்கிறேன் என்பது; உலகத்திற்கே மிகச் சிறந்த விழுமியங்களைக் கொடுக்கக்கூடிய ஆற்றல் மிக்கதாகவும், தனித்து இயங்கக்கூடிய பலம் வாய்ந்ததாகவும் எனது தமிழ்மொழி இருப்பதால்தான்! ஒரு மனிதன் நடப்பதற்குக் கால்கள் இருக்கிறபோது அவனுக்கு ஊன்றுகோல் தேவையில்லை. அது போலவே என்னுடைய மொழிக்கு - அது இயங்குவதற்கு ஆங்கிலம் தேவையில்லை.

மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளெல்லாம் தமிழிலிருந்து பிறந்தவைதான். வடமொழியினுடைய ஊன்றுகோலைக் கொண்டுதான் அவை நம்மை விட்டுப் பிரிந்து செல்லக்கூடிய சோகங்களுக்குள்ளாயின. ஒருவன் தனக்கு வறுமை வருகின்ற போதுதான் – தன்னிடம் ஒரு பொருள் இல்லை என்கிற போதுதான் அவன் கடன் வாங்கச் செல்ல வேண்டும். என்னிடம் 'இரவு' என்ற அழகான சொல் இருக்க, நான் ஏன் night என்ற ஆங்கிலச் சொல்லைக் கடன் வாங்க வேண்டும்? 'அம்மா' என்று அழகாக உச்சரிக்க முடிகிறபோது, நான் ஏன் Mummy என்று ஆங்கிலத்துக்குத் தாவ வேண்டும்?

இவற்றுக்குள்ளாக ஒரு தாழ்வு மனப்பான்மை - எம்மைத் தொலைதூரத்துக்கு அடிமையாக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய சூழ்ச்சி - ஆங்கிலம் போன்ற பிறமொழிகள் என்னுடைய மொழிக்குள் வந்து ஆதிக்கம் செலுத்தும்போது நிகழக்கூடிய ஒரு மிகப்பெரிய சோகம் இருக்கிறது. அதனால்தான் நான் தமிழை ஆங்கிலம் கலந்து எழுதமாட்டேன் என்பதில் பிடிவாதமாக இருக்கிறேன்.

ஆனால், ஆங்கிலம் உலகுக்கு வேண்டாம் என்றோ அல்லது தமிழ் நாட்டில் வேண்டாம் என்றோ நான் சொல்லவில்லை. எங்கே அது எனக்கு எப்போது தேவையோ அப்போது பயன்படட்டும். இரண்டு தமிழர்கள் சந்திக்கிற போது அவர்கள் ஏன் ஆங்கிலத்தில் பேசவேண்டும்? அவர்களுக்குள் இருக்கிற தாழ்வு மனப்பான்மையினால்தானே!

இரண்டு மலையாளிகள் உலகத்தின் எந்த மூலையில் சந்தித்துக் கொண்டாலும், அவர்கள் மலையாளத்தில்தான் பேசிக் கொள்கிறார்கள். ஒரு கன்னடன் நம்மைப் பார்த்து மொழி உணர்வு பெற்றவன் அவன்



அங்கேயே சாலையில் இருக்கின்ற கற்களில் கூட மொழிக்கு முதன்மை கொடுக்கிற முன்விழிப்புடன் இருக்கிறான். ஆனால், மொழியுணர்வை ஊற்றெடுக்க வைத்த தமிழ் நாட்டில் இந்தச் சிறப்பைக் காணமுடிவதில்லை!

**உங்கள் மொழிக் கொள்கையுடன் ஒத்துப் போகக்கூடிய சக படைப்பாளிகளை அல்லது சமுதாயத்தினரை நீங்கள் உருவாக்கி வைத்திருக்கிறீர்களா?**

ஏறக்குறைய நான் தமிழ் திரை இசைப் பாடலாசிரியனாக இருந்து இதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால், ஆங்கிலம் கலந்து திரைப்படப் பாடல்கள் எழுத மாட்டேன் என்கிற முடிவை நான் எடுத்து அது பரப்புரைத் தளங்களிலும் தெரியவந்த பின்பு, இப்போது நாங்களும் தமிழில் எழுத முயற்சி செய்கிறோம் என்று என்னுடைய தம்பி, தங்கைகள் மாறி வருகிறார்கள். ஆனாலும் எனக்கு முந்திய வைரமுத்து போன்றவர்களும் இந்த முடிவினை எடுத்தால் நன்றாக இருக்கும். ஏனெனில் அவர்கள் தேவையான அளவு சம்பாதித்து விட்டார்கள். இதன் பின்னராவது அவர்கள் சில கொள்கைகளை எடுப்பதில் தவறில்லை.

எனவே, முன்னத்தையவர்களாக இருக்கிற நாம் இவ்வாறு எழுதவே கூடாது. ஏனெனில், இந்த மொழிதான் நம்மைக் கவிஞனாக, பாடலாசிரியனாக அடையாளப் படுத்துகிற மிகப்பெரிய கருவியாக இருக்கிறது. அவ்வாறு நமக்குச் சோறு போடுகிற, புகழ் தருகிற , பெருமை சேர்க்கிற தமிழ் மொழிக்கு நஞ்சு கலக்கிற ஒரு பணியில் நாம் ஈடுபடக்கூடாது என முன்னத்தையவர்களாக இருக்கிற படைப்பாளிகள் முக்கியமான முடிவு எடுக்க வேண்டிய கால கட்டம் இது!

ஏனெனில், நம்முடைய நாட்டுப்புறப் பாடல்களுடைய மாற்று இடத்திற்குத்தான் திரையிசைப் பாடல்கள் வந்து விருந்தளிக்கின்றன. அந்த விருந்தில் நஞ்சு கலப்பது சரியாக இருக்குமா?பாடல்கள் மட்டுமின்றி புதினங்கள், சிறு கதைகளில் கூட ஆங்கிலம் அல்லது பிறமொழிகளைத் தவிர்த்து எழுதுவதுதான் நல்லது என்று நினைக்கிறேன்.

**ஆங்கிலத்தை ஏன், எங்கே தவிர்க்கிறீர்கள் என்று ஏற்கனவே கூறிவிட்டீர்கள். ஆனாலும், பன்மொழிப் புலமை தான் ஒரு படைப்பாளனுக்கு வலுவான அடையாளத்தைத் தேடித் தருகிறது**

**என்கிற யதார்த்தத்துக்கு அப்பால் உள்ள உங்களின் மொழிக் கொள்கை; உங்களுக்கும், உலகினுக்கும் இடையில் திரை போட்டு விடாதா?**

பன்மொழிப் புலமைக்கும் எதிரியல்ல நான். பல்வேறு வகையான உலக இலக்கியங்களைப் படிப்பதற்கு நான் பல மொழிகளைப் படிக்க வேண்டும் என்கிற கருத்தில் நீங்கள் சொல்கிறீர்கள். அந்தப் பல மொழிகளிலுள்ள இலக்கியங்களை என்னுடைய மொழிக்குக் கொண்டு வந்து நான் படிக்கக்கூடாதா?

இன்று நாம் இங்கு பேசிக் கொண்டிருக்கிற இந்த கருத்துருவாக்கத் தளத்தில் கூட, உங்களுடைய கேள்விகள், என்னுடைய பதில்கள் அனைத்துமே ஒரு பத்து வீதம் அல்லது இருபது வீதம் படித்த மனிதர்களுடைய கருத்துருவாக்கத் தளத்திலேயே நின்று பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றும் காடு மேடுகளில் உழைத்துக் கொண்டிருக்கிற; தமிழை மட்டுமே தாய் மொழியாகக் கொண்டிருக்கின்ற அந்த உழைக்கும் மக்களுக்கு நம்முடைய இலக்கிய நடையிலேயே கொண்டு போய்ச் சேர்த்தால் எத்தனை பேர் படிப்பார்கள்!

1000 நூல்களைப் பதிப்பித்துவிட்டு அவற்றை விற்பதற்கு ஐந்து ஆண்டுகள் அலைந்து கொண்டிருக்கிற நாம், இத்தகைய பன்மொழிப் புலமை என்கிற மயக்கத்துக்கு ஆட்படுகிறோம். நாம் அறிவாளிகளாக ஆவதற்கு - உலக அறிவினைப் புரிந்து கொள்வதற்கு - பன்மொழிப் புலமை நமக்குத் தேவைதான். ஆனால் அத்தகைய வாய்ப்பும், வசதியும், சூழ்நிலையும் உள்ளபோது அத்தகைய மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கு நானும் விரும்புகிறேன். ஆனால், என்னுடய மொழியிலேயே நான் ஆழ்ந்து போய்ப் பார்க்க வேண்டிய - ஆராய வேண்டிய கூறுகள் எத்தனையோ இருக்க, பன்மொழிகளுக்குள்ளான நுழைவு தற்போது அவசியமில்லை என்பதைச் சற்றுத் தயக்கமாகவே சொல்கிறேன்.

என்னுடைய மொழிக்குள்ளாகவே உலக மொழிகளுக்குத் தரக்கூடிய அளவுக்குப் பண்பாட்டுக் கூறுகள், விழுமியங்கள், கவிதைச் செழுமைகள், இலக்கிய உத்திகள் அனைத்தும் இருக்கின்றன. எனவே, உலக மொழிகளைக் கற்றுக் கொண்டுதான் நான் மேம்பட முடியும் என்றால், என்னுடைய தாய்மொழி தாழ்வாக - மற்றைய மொழிகள் மூலமே நான்



கற்றுக்கொள்ள வேண்டிய சூழலில் இருக்கிறேன் என்பது போன்றதோர் வறுமைத் தனத்தை எனக்குள் நீங்கள் சிந்தனையாக உள் நுழைக்கிறீர்கள். அல்ல. என்னுடைய மொழிக்குள்ளாகவே நான் முழுமை பெற்றவனாக என்னுடைய இலக்கியக்கூறுகளையும் தொன்மங்களையும் உள் வாங்கிச் செழித்தாலே அவற்றை நான் உலக மொழிகளுக்குத் தரக்கூடிய ஓர் செல்வந்தனாக இருப்பேன் என்று நம்புகிறேன்.

**'தமிழ் தன்னுடைய தனித்துவத்தை இழந்துவிடும், மொழி அழிந்துவிடும்' என்பது பரவலான; சமீபத்தைய அச்சமாக இருக்கிறது. அதே வேளை ஆங்கிலம்தான் ஆதிக்க மொழி என்கிற போக்கினையும் வலியுறுத்தி வருகிறார்கள். உங்கள் இந்தக் கருத்துக்களை தமிழுலகம் உள்வாங்க நேரும்போது, 'தமிழ் தொலைந்து போய் விடும்' என்கிற அச்சத்திலிருந்து தெளிந்து விடுவார்கள் என்று நானும் நம்புகிறேன். ஒரு படைப்பாளன் காலங்கடந்து நிலை பெறுவதற்கும், காணாமல் போவதற்கும் எத்தகைய காரணங்கள் இருக்க முடியும்?**

ஒருவன் தன்னுடைய நிகழ்காலத்தில், வாழ்க்கை மறுக்கப்பட்ட மக்களுக்காக எவ்வளவு துணிவோடு குரல் கொடுத்தான் என்கிற அந்த அடையாளத்தினால்தான் அவன் தொலைதூரத்து மக்களால் நன்றியோடு நினைக்கப்படுகிறான். மற்றப்படி, அவர்கள் நினைக்க வேண்டும் என்பதற்காக நிகழ்காலத்தில், விருதுகளுக்காகவும் அல்லது அதிகார வர்க்கத்தினுடைய சலுகைகளுக்காகவும் எழுதுபவனாக - படைப்பவனாக இருந்தால் காலம் அவனை எச்சில் இலையாகத் தூக்கிப் போட்டுவிடும். ஆனால் தொடர்ந்து தனது நிகழ்காலத்தினுடைய வலிகளை - குருதியை - கண்ணீரைத் துடைத்தெடுக்கக்கூடிய ஆற்றல் மிக்க மருத்துவனாக ஒரு படைப்பாளன் வாழ்ந்திருந்தால், அவனைத் தொலைதூரத்து மக்கள் - அடுத்த தலைமுறை மக்கள் நன்றியோடு நினைப்பார்கள். பப்லோ நெருடாவை, பாரதியை, பாரதிதாசனை அப்படித்தான் நினைக்கிறார்கள். ஏன் திரைப்படப் பாடலாசிரியனாக இருந்தால் கூட பட்டுக்கோட்டையை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**கவிதை எழுதுகிற போதுள்ள 'கட்டற்ற மனோநிலை', திரைப் படப்பாடல் எழுதுகிறபோது, 'வரையறைக்குள் நிர்ப்பந்திக்கப் படுகிற நிலைமை' - இவ்விரண்டுக்குமிடையிலுள்ள வேறுபாட்டினை எப்படி உணர்கிறீர்கள்?**

தமிழ்நாட்டில் எழுதுகிற போது கட்டற்ற நிலை என்கிறீர்கள். உண்மையில் அப்படி ஒரு நிலைமை இன்று இல்லை. ஏனென்றால், எழுதிய கவிதைக் காக எந்த நேரத்திலும் காவல்துறை வரலாம். கைகளுக்கு விலங்கு பூட்டப் படலாம் என்கிற அச்சப்பாடு இருக்கிறது. எனவே, கட்டுப்பாடற்ற சூழ் நிலையில் கவிதை எழுதுகிற ஒரு தமிழனாக; தமிழ்க் கவிஞனாக இன்று இருக்க முடியவில்லை என்கிற வேதனையை இங்கே பதிவு செய்கிறேன். அத்தகைய ஒரு சூழலுக்கு நாம் இங்கே ஆட்பட்டிருக்கிறோம். ஆனாலும், நான் தைரியமாகவே இருக்கிறேன். என்னுடைய உதடுகளுக்கும், எழுது விரல்களுக்கும் இங்கே அச்சுறுத்தல்கள் ஏராளமாக உள்ள போதிலும் கூட!

புதுவையில் பதுங்கினாலும் கூட தன்னுடைய தமிழ் மொழியினைப் பதுக் காமல் விடுதலைக் குரலாகக் கொடுத்துக் கொண்டிருந்தானே பாரதி, அப் படி ஒரு சூழல், கவிதையிலே எனக்கு இருக்கிறது.

திரையிசைப் பாடல்களிலும் எனக்கு முரண்பட்ட அல்லது எனது கொள் கைக்கு உடன்படாதவற்றை எழுதுவதில் நான் பெரும்பாலும் மறுத்து விடுகிறேன். நான் எழுதுகிற பாடல்களில், காதல் பாடல்கள் அல்லது நாட்டுப்புற வடிவம் சார்ந்த மெட்டுகளுக்கு மட்டுமே எழுதக்கூடிய பாடல் களை ஆண்டிற்கு ஐந்து அல்லது ஆறு என்ற அளவுக்கு எழுதுகின்ற - என்னுடைய குடும்பப் பொருளாதாரச் சூழலைக் காப்பாற்ற முடியாத பாடலாசிரியனாகத்தான் நான் உலகத் தமிழ் மக்களிடையே அடையாளப் பட்டிருக்கிறேன்.

இருந்தாலும் கூட நான் ஒரு கவிஞனாக அடையாளப்பட்டு, மக்களுக்கு கருத்துக்களைச் சொல்லுகிற அந்தத் தளத்தைவிட, நான் பாடலாசிரி யனாக மாறியதால் இன்று உலகத்தமிழர் அனைவரிடமும் 'அறிவுமதி' என்கிற பெயர் அடையாளப்பட்டிருக்கிறது. அதன் வாயிலாகத்தான் இன்று நான் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

நாட்டுப்புறப் பாடல்களின் மாற்றுத்தளமாக இருக்கின்ற திரையிசைப் பாடல்கள்தான், இன்று அதிவேகமாக ஓடக்கூடிய ஒரு வாழ்க்கைச் சூழலில் இருக்கின்ற மக்களின் மன அழுத்தத்துக்கு ஏதோ ஒரு வகையில் மருத்துவம் பார்க்கின்ற கருவியாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் கருவியைப் பண்பாட்டுத் தூய்மையும், மொழித் தூய்மையும் கொண்டதாகத் திருத்தம் செய்ய வேண்டியிருக்கிறது. அவற்றிற்காகவும் நான் உள்ளே போராடிக் கொண்டுதான் இருக்கிறேன்.



என்னுடைய ஒன்றிரண்டு பாடல்கள் பெண்ணியச் சிந்தனையில் பேசப் படுகின்றபோது வலிக்கும்படியாகவே இருக்கின்றன. இதற்குள்ளாக நானும் நுழைந்து கெட்டு விட்டேனோ என்கிற உறுத்தல் இருக்கிறது.

இருந்தாலும், சேற்றில் விழுந்த ஒரு குழந்தையை நான் காப்பாற்ற வேண்டு மென்றால் என்மீதும் சேறுபடும் என்றெனக்குத் தெரியும். இருந்தாலும் அந்தக் குழந்தையைக் காப்பாற்றி அதையும் கழுவி, என்னையும் கழுவி ஒரு தூய்மையான வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லுகிற பொது நோக் கில்தான் அதற்குள் இருக்கிறேனே தவிர; 'என்னுடைய வருமானத்திற்காக' என்கிற தனித்த அந்தத் தளத்தில் நான் சிந்திக்கவில்லை.

**பேனா பிடித்த எல்லோருமே சட்டத்தின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில்தான் எழுத வேண்டும் என்பது நியதியாக இருக்கிறது என்கிறீர்களா?**

ஆம். எல்லா வளர்முக நாடுகளிலும் இந்த சோகம் இருக்கிறது. ஆனால், இந்த அச்சுறுத்தல்களையும், மிரட்டல்களையும், சவால்களையும் ஏற்றுக் கொண்டு ஒரு போராளியின் மன உணர்வோடு இயங்கும் போதுதான் — அவனுடைய மொழி ஆளுமையும், படைப்புத் திறனும் சமுதாயத்திற்குப் பயன்படும் போதுதான் ஒரு படைப்பாளியின் வாழ்க்கை அழகாகிறது. இப்படி இருந்து படைக்கவே நான் முயன்று வருகிறேன்.

**உங்கள் குரு 'கவிக்கோ அப்துல் ரகுமான்' அவர்கள் இன்னமும் திரைத்துறைக்குள் பிரவேசிக்கவே இல்லை. தரமானதொரு எழுது கோலைக் கொண்டிருக்கிற அவர்...**

கவிக்கோ அவர்களைப் போலவே மீரா, சிற்பி போன்றவர்களும் மிகச் சிறந்த கவிஞர்களாக இங்கே அடையாளப்பட்டிருக்கிறார்கள். திரைத் துறை இயக்குனர்கள் இலக்கிய ஆர்வம் மிக்கவர்களாகவும், இசையமைப் பாளர்கள் சிறந்த கவிஞர்களை அடையாளம் காண்பதில் ஈடுபாடு உள்ள வர்களாகவும் இருந்திருந்தால் அவர்கள் கவிஞர்களைத் தேடிச் சென்று தமக்குத் தேவைப்படுகின்ற சூழலை விபரித்து இதற்கேற்ப நீங்கள் பாடல் எழுதித் தாருங்கள் என்று கேட்டு தமிழுக்கும், தமிழ் இசைப்பாடல்களுக் கும் பெருமை சேர்த்திருக்க முடியும்.

இந்தப் பண்பாடு ஹிந்தியிலே உள்ளது. கேரளாவிலும் கூட 'வயலார்' போன்ற மிகச் சிறந்த கவிஞர்களின் பாடல்களைத் தேடிச் சென்று பெற்றுக் கொண்டு பயன்படுத்துகிறார்கள். ஆனால் இங்கே - தமிழ்நாட்டில்

அத்தகைய சூழல் இல்லை. இங்கு இசையமைப்பாளர்கள் கவிஞர்களை விட மேலானவர்கள் என்கிற கருத்துருவாக்கம் இருக்கிறது.

எனவே, இத்தகைய சூழலில் 'கவிக்கோ' போன்றவர்கள் ஓர் இசைய மைப்பாளர் வீட்டுக்குச் சென்று 'எனக்கு ஒரு பாடல் கொடுங்கள்' என்று கேட்பது அவருக்கு மட்டுமல்ல; தமிழுக்கும் அது தாழ்வென்றே நான் கரு துகிறேன். எனவே, அவர் எடுத்த இந்த முடிவு மிகச் சரியானதே. ஆனால் திரைத்துறைக்கு அவருடைய பங்களிப்பு இல்லாமல் போகிறது என்று வருத்தமாகவும் இருக்கிறது. ஏனெனில் மிகச் சிறந்த பாடல்களை ரசித்து அவற்றை எமக்கு அள்ளி அள்ளித் தரக்கூடிய ஆற்றல் மிக்கவர் அவர். பலமொழிகள் தெரிந்தவரும் கூட! இன்று எழுதிக் கொண்டிருக்கிற இளங்கவிஞர்களின் படைப்புகளிலுள்ள இலக்கிய நயங்களைத் தேடிப் பாராட்டுகிற பெருந்தன்மையானவர். அவர் தன்மானத்தை அல்லது சுய மரியாதையை இழந்து ஒரு பாடலாசிரியனாக ஆக விரும்பாததை நான் பெருமையோடும் வியப்போடும் பார்க்கிறேன்.

**கவிஞன், பாடலாசிரியன் என்கிற அடையாளங்களுக்கு அப்பால் உள்ள உங்கள் இயலுமைகளும், அவற்றை அளித்த சூழ்நிலைகளும் குறித்து...**

நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் படித்துவிட்டு இங்கே தொல்பொருள் ஆய்வுத் துறையில் கோயில்கள் பற்றி ஆய்வு செய்வதற்குப் படிக்கத்தான் வந்தேன். அந்தச் சூழ்நிலையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவ னத்தில் 'முருக நடுகல் வீரன்' என்கிற முனைவர் பட்டத்துக்கும் சென் றேன். என்னுடைய வாழ்க்கைச் சூழலில் இயக்குனர் பாக்யராஜ், இலங்கை யில் பிறந்த ஒளிப்பதிவாளர் - பாலுமகேந்திரா, கறுப்பு மக்களுடைய மிகச்சிறந்த அடையாளப் பதிவுகளைச் செய்த இயக்குனர் - பாரதிராஜா ஆகியோருடன் 15 ஆண்டுகள் உதவியாளராகத் திரைத்துறையில் உழன்றிருக்கிறேன். எனவே ஒரு இயக்குனராக மாற வேண்டிய அந்தச் சூழ்நிலையில்தான் 'சிறைச்சாலை' என்கிற திரைப்படத்தில், அண்ணன் 'தாணு' அவர்கள் உரையாடலும், பாடலும் எழுத எனக்கு வாய்ப்பளித் தார். அதில் இசைஞானி இளையராஜா அவர்களுடைய மெட்டுக்கு நான் எழுதிய 'செம்பூவே பூவே', 'சுட்டும் சுடர் விழிப் பார்வையிலே', 'இது தாய் பிறந்த தேசம் என் தந்தை ஆண்ட தேசம்' போன்ற பாடல்கள் உலகத் தமிழர்களிடம் மிகவும் நெருங்கிப் போய் என்னை அடையாளப் படுத்தியதால்தான் நான் ஒரு பாடலாசிரியனாக மாறியிருக்கிறேன். ஒரு



கவிஞனாக இருந்த நான் பாடலாசிரியனாக மாறியதால், கீழே போய்விட்டேன் என்றோ தாழ்ந்து போய்விட்டேன் என்றோ எண்ணவில்லை. ஏனென்றால் திரை இசைப்பாடல்கள் மீது எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

**இன்றைய தமிழ்த் திரையுலகின் மீது உங்களுக்குள்ள விசனம்!**

என்னுடைய தமிழ் அடையாளங்களை மீட்டுக் கொடுக்கின்ற முயற்சிகளில் இன்றைய தமிழ் திரைப்பட உலகம் தன்னுடைய கருவிகளைப் பயன்படுத்தாமல், தமிழ் அடையாளங்களைச் சிதைக்கும் முயற்சியில் பங்கு வகிக்கிறது என்கின்ற சோகம் எனக்குள்ளிருக்கிறது.

இங்கே மிகச் சிறந்த இயக்குனர்களாகக் கருதப்படுகிறவர்கள் கூட எங்களுடைய தமிழர்கள் சிந்துகிற குருதிக்காகக் கண்ணீர் வடிப்பவர்களாக இங்கே அடையாளப்படுகிறார்கள். அவர்களுக்கு விருதுகளை அள்ளித் தருகிற சமூகம் தான், அதே பிரச்சினையைப் பேசுகிற எங்களுக்கு விலங்குகளையும் பெற்றுத் தருகிறது. ஆனால் விருதுகளுக்காக மட்டும் போராட்டங்களைப் பதிவு செய்பவர்கள் தான் பெரும்பாலானவர்களாக இருக்கின்றார்கள்.

**தமிழ் இனம், மொழி - இவற்றின் தன்மை, தகைமை எல்லாவற்றையும் வியாபாரப் புத்தி விழுங்கி விடுகிறது என்று கூறலாமா?**

வணிக நோக்கம் கொண்ட அந்த ஊடகங்களுக்குள்ளாக நீங்கள் எழுத்தாளர்களை அடையாளப்படுத்த நினைக்கிறீர்கள். தம்மை வெளிச்சப்படுத்திக் கொள்வதற்காகத் தம்முடைய படைப்பாற்றலை விற்பதற்குச் சம்மதிக்கின்ற எழுத்தாளர்கள் தான் இங்கே அத்தகைய சூழலுக்கு ஆளாவார்கள். ஆனால் தமது எழுத்துத் திறமைகளை விற்பதற்கு அல்லது விருதுகளுக்காக ஒப்படைப்பதற்கு விரும்பாத எழுத்தாளர்கள் தமது மொழிக்கும், மொழித் தகைமைக்கும் விருது பெற்றுத் தருகிறவர்களாகவே என்றும் இருப்பார்கள்.

**இன்றைய பெண்களின் நிலை குறித்து நீங்கள் எத்தகைய மனோ நிலையினைக் கொண்டிருக்கிறீர்கள்?**

என்னுடைய இளமைக் காலத்து கல்விச் சூழலில் பெண்களுக்குக் கிடைத்த வாய்ப்பை விட, இன்று பெண்கள் எந்தச் சூழ்நிலையிலும், எந்தத் திசையிலும் பறக்கலாம் என்பதற்கான ஒரு வானம் கிடைத்திருக்கிறது.

ஆனால் அவர்களுக்கு வாழ்க்கைச் சூழலில் வலு கிடைத்திருக்கிறதா என்றால், இன்னும் பல்வேறு வகையான எல்லைகளை, இடர்ப்பாடுகளை, ஆணாதிக்கங்களைத் தாண்டி அவர்கள் வளர வேண்டியிருக்கிறது. அத்தகைய சூழ்நிலையில் பெண்ணிய விடுதலையும், தாழ்த்தப்பட்ட மக்களினது விடுதலையும் பெறாமல் தமிழினம் முழு விடுதலை அடைந்ததாகவோ, முழு மகிழ்ச்சியடைந்ததாகவோ ஆகமுடியாது.

**பெண் விடுதலை குறித்து உங்களைப் போன்று பலர் நினைக்கின்ற போதிலும்; பல பெண் அமைப்புகள் குரல் கொடுக்கின்ற போதிலும், பெரும்பான்மைத் தமிழ்ப் பெண்கள் இன்னமும் உலக நடப்புகளுடன் ஒன்ற முடியாமல் ஒதுங்கிப் போகத்தானே நினைக்கிறார்கள்!**

அதுதான் இங்கு மிகப் பெரிய சோகமாக இருக்கிறது. தமிழருடைய வாழ்க்கைச் சூழலில் பெண்களுடைய மூளைப் படிவுகளில் பல பார்ப்பனக் கருத்துருவாக்கக் குப்பைகள் மிக அதிகமாகப் படிந்து போய்க் கிடக்கின்றன. அவற்றை வெளியேற்றாமல் தமிழ்ப் பெண்கள் விடுதலை என்கிற வெளிச்சத்துக்கு வரமுடியாது என்றே நான் முழுமையாக நம்புகிறேன். அவர்களுக்குள் இருக்கின்ற மூட நம்பிக்கைகள் குழந்தைகளையும் அமுத்துவதற்குக் காரணமாகிறது. எனவே, பெண்கள் போதிய பகுத்தறிவினைப் பெறவேண்டிய தேவை அவசியமாக இருக்கிறது.

**நவீன கட்டமைப்பின் மீது இன்றைய தமிழ்ச் சமூகத்தினை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

இன்றைய தமிழ்ச் சமூகம், இயற்கை எமக்களித்த கோடைக்குரிய பொருள்களான இளநீரையும், நுங்கையும் தவிர்த்து பெப்சி, கோக் என்கிற நஞ்சு கலந்த பொருட்களை நவீனமாக ஏற்றுக் கொண்டுள்ள கட்டமைப்பைக் கவலையோடு பார்க்கிறேன்.

*10.10.2004*





# முத்தழகு

மெல்லிசையோடு உறவாடி உலகை வலம் வந்த மெலிந்த கலைஞன் முத்தழகு! மறைந்த தென்னிந்தியப் பாடகர் ஏ. எம். ராஜாவின் குரலை ஞாபகப்படுத்தும் நம் நாட்டுத் தேசிய பாடகர். இலங்கையின் இரு மொழிகளோடு; ஹிந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் கூடப் பாடியிருக்கிறார். இசை நிகழ்ச்சிகள், மேடைநாடகங்கள் தமிழ், சிங்களத் திரைப்படங்கள், சர்வதேச கருத்தரங்குகள், சார்க் மாநாடு ஆகியன, தான் பாடக் கிடைத்த களங்களென்றும் இலங்கை வானொலியின் 'தொழிலாளர் வேளை' என்ற நிகழ்ச்சிக்காக 1957 இல் முதலாவது பாடலைப் பாடியிருந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

வி. பி. கணேசன் தயாரித்த 'புதிய காற்று' திரைப்படத்தின் மூலம் இலங்கைத் திரைத்துறைக்குள் நுழைந்து, முதல் தரப் பாடகனாக அங்கீகரிக்கப்பட்டார். இது வரையில் 20 இற்கு மேற்பட்ட தமிழ்த்திரைப்படங்களிலும், நான்கு சிங்களத் திரைப்படங்களிலும் பின்னணி பாடியுள்ளார்.

எஸ். கலாவதி, சுஜாத்தா அத்தநாயக்க, வனஜா ஸ்ரீநிவாசன், சந்திரிக்கா சிறிவர்த்தன, லதா வல்பொல போன்ற இலங்கைப் பாடகிகளுடனும், இந்தியப் பாடகிகளான ஜிக்கி, ஜமுனா ராணி இருவருடனும் ஜோடி பாடியிருக்கிறார்.

1987ஆம் ஆண்டு பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சினால் 'மெல்லிசைச் செல்வன்' என்ற பட்டமும் 1993ஆம் ஆண்டு அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தினால் (கொழும்பு) 'இன்னிசை மணி' என்கிற பட்டமும், அதே ஆண்டில் மீண்டும் பிரதேசஅபிவிருத்தி இந்து கலாசார அமைச்சினால் 'கலை மணி' என்ற பட்டமும் இன்னும் பல சிறப்பு விருதுகளும் முத்தழகுவிற்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

1993 இல் இலங்கை இந்திய சமுதாயப் பேரவை இவர் பாடிய 10 படங்களின் 15 பாடல்களை ஒன்று திரட்டி 'முத்தழகுப் பாடல்கள்' என்ற ஒலி நாடாவொன்றினை வெளியிட்டு கௌரவம் வழங்கியிருந்தது. 1995 இல் அந்த ஒலி நாடாவை இறுவட்டு (சீடி) வடிவில் ஜேர்மனியில் வெளியிட்டு வைத்தார்; ஜேர்மனி ஒலிபரப்பாளரும், பத்திரிகைச் செய்தியாளருமான லலித் கங்ஹேவ என்ற சிங்கள மொழிக் கலைஞர்.

தமிழ் ஊடகங்கள் மெல்லிசைக் கலைஞர்களைக் கைவிட்டு விட்டதாகக் கவலையோடு தெரிவிக்கும் முத்தழகுவிற்கு சிங்கள மொழியில் தான் 'கலாபூசணம்' விருது வழங்கப் பட்டிருக்கிறது. வானொலிகளும், தொலைக்காட்சிகளும் தான் மெல்லிசையையும் கலைஞர்களையும் கண்டு கொள்ளவில்லையே தவிர; முத்தழகுவின் பாடல்களுக்கு இதர களங்கள் சிரம் தாழ்த்தி வரவேற்பளிக்கின்றன. பாடிக் கொண்டே ஓடிக் கொண்டிருக்கும் அவரைச் சற்று நிறுத்திப் பேசவைத்தபோது...

**இந்தியத் திரைப்படப் பாடல்களோடு இலங்கைத் தமிழ்ப் பாடல்கள் போட்டி போட முடியாமல் போனதற்கு யார் அல்லது எது காரணம்?**

இந்தக் கேள்விக்குக் கஸ்டமான பதிலொன்றையே நான் தர வேண்டியிருக்கிறது. இந்தியத் திரையிசைப் பாடல்களுக்கோ, மெல்லிசைப் பாடல்களுக்கோ இந்திய மக்கள் வழங்குகின்ற ஆதரவும், அங்குள்ள ஊடகங்கள் வழங்குகின்ற சந்தர்ப்பங்களும்தான் மிக முக்கியமான காரணங்கள். இந்த நிலை இங்கு இல்லாமல் இருப்பதால் அவற்றோடு நாம் போட்டி போட முடியவில்லை. முயன்று நெருங்கிப் போகலாமே தவிர போட்டியிட்டு வெற்றி பெறுவது கடினம்.

தென்னிந்திய சினிமாவின் தாக்கம் இங்கு இல்லாமல் போகுமானால்; அவற்றின் இறக்குமதிகள் தடைப்படுமானால் எங்கள் ஊடகங்கள் எங்கள் கலைஞர்களைச் சரியாக இனங்கண்டு பயன்படுத்திக் கொள்ளும். இந்நிலைமை ஆழமாகவும், பரவலாகவும் ஆகிப் போகும் போது தென்னிந்திய சினிமாவை மறப்பதற்கும், தவிர்ப்பதற்கும் வாய்ப்பிருக்கலாம். தங்கள் கலைஞர்களை அவர்கள் வளர்ப்பது போலவே எங்கள் கலைஞர்களையும் நீங்கள் (ஊடகங்கள்) வளர்க்க வேண்டும்.

**சினிமாவுக்காகவும், பாடல்களுக்காகவும் அவர்கள் செய்கிற பெரும் பணச்செலவு நம்மால் முடியாமல் இருப்பதும் எம்மவற்றின் தரக் குறைவுக்கு ஒரு காரணம் எனலாமா?**

ஆம். எழுபதுகளின் ஆரம்பத்தில் நான் பாடிய 'ஓஹோ என்னாசை ராதா', 'எண்ணங்களாலே...' போன்ற பாடல்களுக்காகச் செய்யப்பட்ட பணச் செலவும், இருபதுக்கு மேற்பட்ட இசையமைப்பாளர்களின் அர்ப்பணிப்பான பணியுமே அவற்றை மிகவும் வெற்றி பெறச் செய்தன.காலப் போக்கில் இவ்விரண்டுமே நலிவு கண்டதால் முன்னைய மெல்லிசைப் பாடல்களினளவுக்கு, பின்னர் வெளிவந்த பாடல்கள் சிறக்கவில்லை. இந்தியாவை எடுத்துப் பார்த்தீர்களானால் காலம் சென்றாலும் இவ்விரண்டையும் அவர்கள் குறைக்கவே இல்லை. மாறாக மிகவும் அதிகரித்துச் சிறப்பாகச் செய்வதில் முனைப்பாக இருக்கிறார்கள்.

**ஒரு காலத்தில் ஈழத்து மெல்லிசைப் பாடல்களை மிக அதிகமாக ஒலிபரப்பிக் கொண்டிருந்த இலங்கை வானொலி காலப்போக்கில் அதனைக் கண்டு கொள்ளாமல் போனது ஏன்? அப்போதும் இந்திய சினிமாவின் தாக்கம் இருந்ததுதானே!**

ஈழத்தில் மெல்லிசைப் பாடல்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்துதான் அறிமுகமாகத் தொடங்கின. அப்போதும் தென்னிந்திய சினிமாவின் தாக்கம் இருந்ததுதான். ஆனாலும் மிகவும் குறைவு. அன்று வானொலிகளிலும், தொலைக் காட்சிகளிலும் சேவையாற்றியவர்கள் தரம் வாய்ந்த அறிஞர்களாக இருந்ததுடன் மிகுந்த கலையார்வமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். எதையும் பகுத்துப் பார்த்து, அர்ப்பணிப்புடன் அவர்கள் சேவையாற்றியதால் நம் நாட்டுக் கலைகளும், கலைஞர்களும் கண்டு கொள்ளப்பட்டார்கள். மரியாதையோடு நடத்தப்பட்டார்கள். இன்று அந்த நிலை இல்லையே! ஒலி, ஒளிபரப்புத் துறைகளில் அன்றிருந்தவர்களுடன் இன்றிருப்பவர்களை ஒப்பிட்டுக் கூற முடியாது.

**வானொலி மூலம் மெல்லிசையைப் பிரபல்யப்படுத்தியவர்களில் யாரையெல்லாம் நன்றியோடு நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?**

கே. எஸ். நடராஜா, திருமதி பொன்மணி குலசிங்கம் ஆகியோருடைய காலங்களில்தான் வானொலியில் மெல்லிசைப் பாடல்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் இருந்தது. தேசிய சேவையிலும், வர்த்தக சேவையிலும் மாறி மாறி ஒலித்த மெல்லிசை இப்போது எப்போதாவது ஒரு தடவைதான்; அதுவும் இரவு ஒன்பது பத்து மணிக்குப் பிறகு ஓரிரண்டு பாடல்களாக ஒலிக்கின்றன. அதனை மக்கள் கேட்கக்கூடிய வாய்ப்பில்லை.

ஆனால் நம் சகோதர மொழியில் நான் பாடிய பாடல்களை அடிக்கடி வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும்; கேட்கவும், பார்க்கவும் கூடியதாயுள்ளது. தமிழ் மொழி பேசும் மக்களுக்கு - இன்றைய இளம் தலைமுறைக்கு என்னைத் தெரிந்திருப்பதை விட, சிங்கள மொழி பேசும் மக்கள்தான் என்னை அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அந்த ஊடகங்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டவன்.

**தமிழ் ஊடகங்கள் உங்களைக் கண்டு கொள்ளவில்லை என்பதை நீங்கள் குறையாகவே சொல்கிறீர்களா?**

சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது. மர்ஹூம் எச். எம். பி. முஹைதீன் அவர்களுடைய இசையிலே நான் முதன் முதலாகப் பாடிய பாடல் சிங்கள மொழியில்தான். அதைத் தொடர்ந்து இன்று வரை நான் பாடிய மொத்தப் பாடல்களில் சிங்களப் பாடல்களே மிக அதிகம். தமிழில் நான் பாடு



வேனா என்கிற சந்தேகம் கூட இன்றைய இளைய தலைமுறைக்கு இருக்கிறது. நாடெங்கிலும் அவ்வப்போது அவர்கள் நடத்துகிற இசை நிகழ்ச்சிகளில் பாட அழைத்துப் பணமும் கொடுக்கிறார்கள். அதுதான் தற்போதைய என் சம்பாத்தியம். தமிழ் என்னைப் போன்ற பல கலைஞர்களைக் கண்டு கொள்ளவில்லை என்பதை விட ; கை விட்டு விட்டது என்றே கூற வேண்டும்.

**தென்னிந்தியப் பாடகர்களுக்குக் கிட்டாத எதுவெல்லாம் நம் நாட்டுச் சகோதர மொழிப் பாடகர்களுக்குக் கிடைக்கிறது? அவர்கள் தமது துறையைத் தொடர்ந்து பிரபல்யப் படுத்தி வளர்ந்து வருவதால் கேட்கிறேன்.**

எஸ்.பி. பியோ, ஜேசுதாஸோ, டி. எம். எஸ்ஸோ சென்று வராத நாடுகளுக்குக் கூட இவர்கள் மிக இலகுவாகச் சென்று பாடிப் பணம் பெறக் கூடிய வாய்ப்பு தொடர்ந்து கிடைக்கிறது. நானும் கூடச் சென்றிருக்கிறேன். ஆனாலும் அவர்கள் (சிங்களக் கலைஞர்கள்) தமது மெல்லிசையை வளர்ப்பதற்காக ஈடுபடுகிற முனைப்பை இந்தியத் திரைத்துறை கூடச் செய்து கொண்டிருக்கவில்லை.

**ஒரு நல்ல பாடகனுக்கான அடிப்படைத் தகுதி என்னவென்று நினைக்கிறீர்கள்?**

பி. பி. ஸ்ரீநிவாஸ், எஸ். பி. பி. போன்றவர்கள் அடிப்படையில் சங்கீதம் கற்றுக் கொண்டவர்களில்லை. ஆனால் இருவரின் நிலைகளும் மேம்பட்டவை. முதலில் நாம் எதற்கும் முயன்று பார்ப்பதும், விருப்பத்தோடும், ஆர்வத்தோடும் செயற்படுவதும் முக்கியமானவை. அதை விடப் பணிவும், கனிவும் நம் சுய பண்புகளாக இருக்க வேண்டும். இவ்வளவோடு நல்ல குரல் வளமும் கடவுளின் ஆசியும் இருந்தால் போதுமே! உலகின் எத்திசை நோக்கியும் நாம் பறக்க முடியும் - பாடுவதற்காக!

**நீங்களும் கூட அடிப்படையான சங்கீதத்தைக் கற்றுக் கொள்ளாமல் இசைத்துறைக்கு வந்தவர் தானா?**

ஆம். நான் ஆரம்பத்திலிருந்து சங்கீதம் கற்றவனில்லை. ஆனால் பாட வந்த பிறகு இசை பற்றிச் சற்று விடயங்களைத் தெரிந்து கொண்டேன்.

அந்த அறிவுதான் இத்துறையில் தொடர்ந்து நிற்பதற்கு உதவுகிறது. திட்டமிட்டோ, தற்செயலாகவோ நாம் ஒரு துறைக்குள் நுழைந்து நல்ல அடையாளம் கிடைத்து விட்டால் இன்னமும் நம்மைப் புதுப்பித்துக் கொள்ள நிறைய நடைமுறைகளையும், விதி முறைகளையும் பின்பற்ற வேண்டியதுதானே அவசியம்.

**பாடக்கூடிய திறமை மட்டுமே உள்ள ஒருவரால் இத்துறையில் தொடர்ந்து நிலைப்பது கடினம். நீங்கள் பாடகனாக வேண்டுமென்று எத்தனையாவது வயதில் இத்துறைக்குள் நுழைந்தீர்கள்?**

எனக்குத் தெரிந்து என்னுடைய ஐந்தாவது, ஆறாவது வயதிலேயே பாடக் கூடிய திறமை இருந்தது. அப்பாவும் நன்றாகவே பாடுவார். 1960 களிலிருந்து நான் அங்கீகாரத்தோடு பாடிக் கொண்டிருக்கிறேன்.

**இரு வேறு மொழிகளிலும் இது வரையில் எவ்வளவு பாடல்கள் வரை பாடியிருக்கிறீர்கள்?**

சிங்கள மொழியில் சுமார் 4000 பாடல்களும் தமிழ் மொழியில் 1500 வரையிலும் பாடியிருக்கிறேன். இவற்றுள் மெல்லிசை, பொப்பிசை, நாடகத் துறைப் பாடல்கள் என்றெல்லாம்தான் அடங்குகின்றன.

**உங்களைப் பாடவைத்த இசையமைப்பாளர்கள் என்று யாரைக் குறிப்பிடுவீர்கள்?**

எனக்கு ஆசானும் இல்லை. ஊக்குவிப்பாளர்களும் இல்லை. என்னுடைய முயற்சியாலும் திறமையாலுமே இது எனக்குச் சாத்தியமாகியிருக்கிறது. என்னை இனங்கண்டோ அறிமுகப்படுத்தியோ எந்த இசையமைப்பாளரும் எனக்கு உதவவில்லை. ஆனால் எனக்கு முதன் முதலில் வாய்ப்பளித்த டி. எஃப். லத்தீப் அவர்களை மறக்க முடியாது. காரணம், முதன்முதலில் 'புதிய காற்று' திரைப்படத்தில் அவர் இசையில் பாடியதால் தான் எனக்குத் திரைப்பட அந்தஸ்து என்றொன்று கிடைத்தது. சரத் தசநாயக்கா இசையில் பாடிய 'எண்ணங்களாலே' என்ற பாடல் உலகத்தால் இன்றும் மறக்கப்படவில்லை.

**ஒரு பாடலினுடைய வெற்றிக்கு எது காரணம் - இசையா? வரிகளா?**



நிச்சயமாக இசைதான். ஏனென்றால் வரிகளை வேண்டிய விதத்தில் எழுதலாம். தென்னிந்தியாவிலிருந்து தற்போது வெளிவருகிற பல பாடல் களைக் கேளுங்கள். வார்த்தைகள் புரிபடாமல் போகும் போதும் கூட இசையால் அப்பாடல் வரவேற்பைப் பெற்று விடுகிறது. இரண்டும் முக்கியமானவைதானானாலும் முதன்மையானது இசையே.

**உங்களுடைய இசைப் பயணத்துக்குத் தடையேதும் ஏற்பட்டு விடாமல் உங்களை நடத்திச் செல்பவர்களென்று யாரைச் சொல்வீர்கள்?**

முதலில் என் மனைவி மேரி மொனிக்காவைத்தான் பாராட்ட வேண்டும். அவருடைய ஒத்துழைப்பு இல்லையென்றால் இவ்வளவு தூரம் நான் செயற்பட முடியாது. என்னுடைய மகன் கிருபை ராஜ் - றோயல் கல்லூரியில் ஆண்டு ஒன்பதில் கல்வி கற்கிறார். அவரைப் பெரிதும் பராமரித்து, அவருடைய தேவைகளை ஈடு செய்து வருவது மனைவிதான். இதுவே எனக்கு வழங்கும் பேராதரவு அல்லவா!

அடுத்து என்னுடன் அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்து நட்போடு இருக்கும் நண்பன் மலரன்பனைக் கூறலாம். நல்ல பாடல்களையெல்லாம் கூட எழுதியிருக்கிறார். அடுத்து என்னுடைய மைத்துனர் - அன்ரனிப்பிள்ளை. எனக்கு நல்ல நண்பனாகவும் இருந்து பல்வேறு உதவிகளைத் தயங்காமல் செய்து வருபவர். ஆரம்பத்தில் எனக்குப் பெரிதும் துணையாக இருந்தவர் என்னுடைய சகோதரர் சிவலிங்கம். இவர்களையெல்லாம் நான் மறு ஜென்மத்தில் கூட நன்றியோடு கொண்டாட வேண்டும்.

**ஒரு காலத்தில் நீங்களே மிக அதிகமான பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தீர்கள். புதிய குரல்கள் மிக அரிதாகவே அறிமுகமாகின. எமது பாடல்கள் பன்முகத் தன்மையற்றுப் போனதற்கும், பல பாடகர்கள் தோன்றாமைக்கும் இதுவும் ஒரு காரணம் என்று ஒரு விமர்சனம் இருக்கிறது. இதற்கு நீங்கள் கூறும் பதில் என்ன?**

பல பாடகர்கள் அறிமுகமாகியிருந்தார்கள். ஆனால் நிலைத்து நிற்காமல் போனதற்கு அவர்களேதான் காரணம். எவ்வாறெனில், தங்களைத் தாங்கள் வளர்த்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாமல் போய் விட்டார்கள். அர்ப்பணிப்புடன் செயற்படுந் திறன் இல்லாதவர்கள்

கலைஞர்களாக இருக்க முடியாதென்பது உங்களுக்கும் தெரிந்திருக்கும். அதை விட முக்கியமான விடயம் - நம் குறித்த கவனம் - இதற்குள் சுய கட்டுப்பாடுகள், கட்டுக் கோப்புகள் என்பன அடங்கும்.

**மெல்லிசைப் பாடல்களின் இன்றைய தேக்க நிலையிலிருந்து விடுபடுவதற்கு நீங்கள் ஏதாவது உபாயங்களைக் கூற முடியுமா?**

கலைஞர்களின் திடசங்கல்பமும், ஊடகங்களின் ஆதரவும், வர்த்தகர்களின் உதவியும் இருந்தால் மெல்லிசை மீண்டும் உயிர்பெற்று உலாவும்.

**தென்னிந்தியத் திரைப் பாடல்களின் இறக்குமதிகளும் அவற்றின் ஆக்கிரமிப்பும்தான் தமிழ் மெல்லிசையை வீழ்த்தி விட்டது என்ற கருத்து சிங்கள மொழிப் பாடல்களுக்கும், கலைஞர்களுக்கும் பொருந்தவில்லை. ஒரு வேளை இதுபோன்ற இறக்குமதிகள் அவர்களுக்கும் கிட்டியிருந்தால் அவர்களும் மெல்லிசையைத் தவிர்த்து வந்திருக்கக் கூடுமோ?**

தவிர்த்திருக்க மாட்டார்கள். 'மக்குலொலுவ' போன்ற இசை விற்பன்னர்கள் தமிழில் இல்லை. அவர் தன்னாட்டு மெல்லிசைக் கலையையும், கலைஞர்களையும் பாதுகாப்பதில் மிகக் கவனமாக இருந்தார். மெல்லிசை தம்மை விட்டுத் தவறிப் போய் விடக் கூடாது என்பதற்கான பாதுகாப்பு உபாயங்களை அப்பொழுதே கையாண்டு காப்பாற்றி விட்டார். சிறந்த இசையமைப்பாளர்கள், பாடகர்கள், பாடல் எழுதுபவர்கள் எல்லோரும் சகோதர மொழியில் நிறையவே உருவாகி இருக்கிறார்கள்.

**இப்போதுள்ள இசைப் போக்குகளை எல்லாம் தாண்டி, தமிழ் வானொலி ஊடகத்தில் உங்கள் மெல்லிசையை ஒலிபரப்பி வெற்றி பெற முடியுமென்றா நம்புகிறீர்கள்?**

நிச்சயம் நம்புகிறேன். சரியான தளத்தில் நின்று கொண்டிருந்து முயற்சிகளை மேற்கொண்டு பாருங்கள். முடியாததென்று என்ன இருந்து விட முடியும்!

**இசையாலும், வரிகளாலும் பிரபல்யம் பெற்ற உங்களுடைய சில பாடல்களைக் கூறுங்கள்.**



1. *'ஓஹோ என்னாசை ராதா'* (புதிய காற்று) - டி.எஃப். லத்தீப் இசையமைத்தார்.
2. *'எண்ணங்களாலே...'* (அநுராகம்) - சரத் தசநாயக்கா இசையமைத்தார்.
3. *'ஜீவிதயே கமண சண்சாரே'* - தென்னிந்தியத் திரைப்படப் பாடக பாடகிகளுடன் இணைந்து பாடிய சகோதர மொழிப் பாடல் இது.

(இம்மூன்று பாடல்களையும் முத்தழகு பாடியே காட்டிய போது மறைந்த கலைஞர் ஏ. எம். ராஜா நினைவுக்கு வந்தார்.)

**கவிஞர் சோலைக்கிளி உங்களைப் பற்றிச் சிலாகித்துப் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். நண்பர் ஒருவர் அது பற்றி உங்களிடம் கூறியபோது 'யார் சோலைக்கிளி' என்று கேட்டீர்களாமே! ஏன் இலக்கியத்தில் ஈடுபாடில்லையோ?**

ஈடுபாடுண்டுதான். ஆனாலும் 'சோலைக்கிளி' என்பது புனைப்பெயர். அவர் இலங்கையரா, இந்தியரா என்றறியவே அப்படிக் கேட்டேன். நண்பர் கூறியதற்குப் பிறகுதான் அவர் மெல்லிசை பற்றி எழுதிக் கொண்டிருப்பவற்றையெல்லாம் சேகரிக்கத் தொடங்கினேன். அவர் அங்கிருந்து கொண்டு மெல்லிசை பற்றி இவ்வளவு ஆழமாக எழுதுகிறாரே என்று வியந்தும், மகிழ்ந்தும் போனேன்.

**இலங்கையின் இசைத்துறை வரலாற்றில் முத்தழகுவிற்கான இடம் என்னவென்று நீங்களே கணிப்பிட்டு வைத்திருக்கிறீர்களா?**

'முத்தழகு' தனித்துவமானதொரு பாடகன் என்பது இன்று மட்டுமல்ல; நாளையும்தான்!

**உங்களைப் பின்பற்றி யாராவது இசையில் வளர்ந்திருக்கிறார்களா?**

இது வரையிலும் நானறியவில்லை. இனிமேல் வளர்ந்து வருவார்களா என்பதும் கூடக் கேள்விதான்!

**ஒரு பாடகனான உங்களின் பலமும், பலவீனமும் பற்றி வேறொருவராக இருந்து விமர்சனம் கூறுங்கள்.**

நான் பலவீனங்களுக்கப்பாற்பட்டவன். எனக்குத் தெரிந்து நான் யாருடனும் இதுவரையில் கோபப்பட்டதில்லை என்பதே என் பலம்.

**'முத்தழகுவுடனான நேர்காணல்' என்று கவிஞர் ஒருவரிடம் கூறிய போது, "அவர் எப்போது தலைமுடியை வெட்டப் போகிறாராம்" என்று கேட்கச் சொன்னார். (இந்தக் கேள்வியை சொல் பிறழாமல் கேட்க முடியவில்லை - சிரிப்பை அடக்க முடியாததால்)**

தலைமுடி வளர்வதைப் பற்றிய எண்ணமே இல்லாமல் முன்பு ஓடிக் கொண்டிருந்தேன். ஆனால் அதுவும் எனக்குரியதொரு அடையாளமாகிப் போய் விட்டது. இப்போது முடியை வெட்டி விட்டால் என்னை அடையாளம் காண்பதில் பலர் சிரமப்படக் கூடும். வளரட்டுமே. (சிரித்துக் கொண்டே கூறினார்)

**"ஊடகங்கள்தான் நேயர்களின் ரசனையை மாற்ற வேண்டும்" என்று கலைஞர்கள் கூறுகிறார்கள். "நேயர்கள் கேட்பதையே நாங்கள் கொடுக்கிறோம்" என்கின்றன ஊடகங்கள். மெல்லிசைப் பாடல்களுக்கும் சாலவும் பொருந்துகின்ற இந்த முரண் குறித்து...**

முன்னர் வெளி வந்த மெல்லிசைப் பாடல்கள் இலங்கை வானொலிக் களஞ்சியத்தில் மட்டுமே இன்று வரை இருக்கின்றன. தனியார் வானொலிகள் அவற்றை ஒலிபரப்புவதற்கு அனுமதி இல்லை. ஏனெனில் இலங்கை வானொலிதான் அப்பாடல்களைப் பெரும் பணச் செலவில் ஒலிப்பதிவு செய்து பதிப்புரிமை பெற்று வைத்திருக்கிறது. தனியார் வானொலிகளும் அதே போன்று முயற்சிகளை மேற்கொண்டால்தான் பழைய; புதிய மெல்லிசைப் பாடல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இதுதான் பிரச்சினை. நீங்கள் கேட்ட கேள்வியில் உள்ள கலைஞர்களின் கருத்து சரியானது. இந்தியத் திரைப்படங்களுக்கு ஈடான அல்லது அவற்றை விடவும் தரமான பாடல்களை நாம் உருவாக்க முடியும். சமீபத்தைய பாடல் ஒன்றைத் தொட்டுக் காட்டுகிறேன்.

*'மன்மதராசா, மன்மத ராசா கன்னி மனசைக் கிள்ளாதே!'*

இதே போல் முன்பு மெல்லிசையில் நான் பாடிய பாடல் ஒன்று :

*'பச்சை வயக் காட்டினிலே கொச்சி மஞ்சள் பூசி ஒரு*
*பதினாறு வயசுப் பொண்ணு நடக்குது'*

*'சின்னஞ் சிறுசு நான் செவ்வந்திப் பூ – உனை*
*அள்ளவா கிள்ளவா கொஞ்சவா'*



இரண்டுக்கும் கிட்டத்தட்ட மெட்டும் சாயலும் ஒரே மாதிரியே இருக்கின்றன. திரைப்படத்தில் வந்த படியால் மன்மதராசா பிரபல்யம் அடைந்து விட்டது. 1970 ஆம் ஆண்டுகாலப் பகுதியிலே நாங்கள் மெல்லிசையாகப் பாடியதால் 'பச்சை வயல்' முடங்கிப் போய்க் கிடக்கிறது. இப்போது இதை நான் படித்துக் காட்டியதால்தான் நீங்கள் கூடத் தெரிந்து கொள்கிறீர்களில்லையா. தனியார் ஊடகங்கள் துணிச்சலாகவே பல நிகழ்ச்சிகளை வழங்கிக் கொள்வதில் முனைப்புக் காட்டுகின்றன. இந்த முயற்சியையும் செய்து பார்த்தால் அவர்கள் மிகுந்த பயன் பெற முடியும்.

**மெல்லிசைப் பாடல்களுக்கான பதிப்புரிமையைப் பெற்று வைத்துக் கொண்டுள்ள இலங்கை வானொலி பாடல்களை ஒலிபரப்பாமலே இருக்கிறது. இது சரியா? தனியார் வானொலிகள் இனிமேல்தான் பாடல்களை உருவாக்க வேண்டும். தரமான பல பழைய பாடல்களைப் புதிதாக உருவாக்கும் போது அவை அதே தரத்துடன் கிடைக்க வாய்ப்பில்லையல்லவா?**

அவர்களிடமிருந்து பதிப்புரிமையைப் பெறவோ அல்லது அப்பாடல்களை அவர்களின் அனுமதியுடன் வேறு ஒலிப்பதிவு நிலையங்களில் ஒலிப்பதிவு செய்யவோ குறிப்பிட்டளவு பணம் தேவையாக இருக்கும். பிரபல வர்த்தகர்களின் ஆதரவோடு அதனை யாராவது செய்ய முனையலாம். அந்த ஒலிப் பதிவுகளை எல்லா ஊடகங்களுக்கும் வழங்கும் போது எம்முடைய எதிர்பார்ப்புக்கு மட்டுமன்றி ஊடகங்களுக்கும்தான் வெற்றி கிட்டும்.

உங்களுடைய அடுத்த கேள்வி, பழைய பாடல்களைப் புதிதாக உருவாக்குதல் பற்றியது. அதில் பழைய தரம் கிடைப்பது கடினம்தான். ஆனாலும் சில வேளைகளில் அவ்வளவு பிரபல்யம் பெறாத பாடல்களைப் புதிதாக மீண்டும் பாடும் போது வேறொரு சிறப்பான தரம் கிடைக்கவும் வாய்ப்பிருக்கிறது.

**இலங்கை வானொலியிடம் தனியார் வானொலிகள் பணம் கொடுத்துப் பதிப்புரிமை பெறுவது சாத்தியமாகுமா?**

தெரியவில்லை. ஆனால் குறிப்பிட்ட கலைஞரை அழைத்து 'நீங்கள் மெல்லிசைப் பாடல்கள் பாடியிருக்கிறீர்கள் அப்பாடல்களை மீண்டும் எங்களுக்காகப் பாடித் தர முடியுமா' என்று கேட்டுச் செய்யலாம்.

**இந்தப் பதிலுக்கான கேள்வியை இதற்கு முதல் கேட்டிருக்கிறேன். நீங்கள் 20 வருடங்களுக்கு முன்பு பாடிய போதிருந்த குரல் வளம் இன்றும் உங்களிடமும் பிறரிடமும் மாறாமல் இருக்கிறதென்றா சொல்கிறீர்கள்?**

பிறரைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் என்னிடம் அதே குரல் வளம் இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. இப்போது உங்க ளுக்குப் பாடிக் காட்டினேனே. என்னுடைய குரலை நான் தொடர்ந்து பிசிறின்றித் தக்க வைத்துள்ளேன். 'புன்னகை செய்வாயா பெண்ணே புன்னகை செய்வாயா' இந்தப் பாடலை ஏ.வி.எம். ஸ்ருடியோவில் நான் பாடிக் கொண்டிருந்த போது இளையராஜா கேட்டுவிட்டுப் பாராட்டினார். இப்போது இப்பாடல் இலங்கை வானொலி நிலையத்தில் மட்டுந்தானுள் ளது. அதை நான்தான் (கலைஞன்) செலவு செய்து வெளியில் கொண்டு வர வேண்டும்.

**நீங்கள் உச்சஸ்தாயியில் துள்ளிசைப் பாடல்கள் பாடியது மிகவும் குறைவு. இது உங்கள் குரலின் இயலாமையா அல்லது...?**

இல்லையில்லை (அவசரமாகவே மறுத்தார்). 1978 காலப்பகுதியில் பொப்பிசைப் பாடல்கள் அறிமுகமானபோது அவற்றை அதிகமாகத்தான் பாடினேன். பின்பு பொப்பிசைக்கான களம் கிடைக்காமல் போய் விட்டது. வானொலியிலே 'அரங்கேற்றம்' என்ற பொப்பிசைப் பகுதியை மூடி விட்டார்கள்.

**இலங்கையில் மெல்லிசைப் பாடல்களின், பாடகர்களின் பொற்காலம் எதுவாக இருந்தது?**

1974 - 1980 காலகட்டம்தான் எங்களை வானொலி மூலம் மிகவும் பிரபல்யப் படுத்திய காலம். ஈழத்து மெல்லிசைப் பாடல்கள், பொப்பிசைப் பாடல்கள், பொங்கும் பூம்புனல் என்று பல்வேறு நிகழ்ச்சிகளில் எங்கள் பாடல்களைச் சேர்த்துக் கொண்டார்கள். முத்தழகு என்ற பாடகனை வெளியில் தெரிய வைத்தது இலங்கை வானொலியென்பதை (தமிழ், சிங்கள சேவைகள்) மிகுந்த நிறைவோடு கூறிக்கொள்கிறேன்.



**இன்றைய நவீன தொழில் நுட்பங்களுக்கு ஈடுகொடுத்துப் பாடுவதில் சிரமமேதும் இருப்பதாக உணர்கிறீர்களா?**

இல்லையே. என்ன சிரமம் இருக்க முடியும்? ஹரிகரனும், உன்னி கிருஸ்ணனும் பாடுவது போல்தான் நாங்களும் பாடுகிறோம். அவர்கள் பயன்படுத்தும் தொழில் நுட்பங்களை நம்மவர்கள் ஏன் பயன்படுத்த வில்லை, நம்மை ஏன் அதில் பாட வைக்கவில்லை அல்லது முயலவில்லை என்பது பற்றியெல்லாம் சொல்லத் தெரியவில்லை.

**உங்களுடைய ஜோடிப் பெண் குரல்களின் ஆளுமைகள் பற்றிக் கூறுங்கள்.**

என்னுடன் முதன்முதலில் பாடியவர் சுஜாதா அத்தநாயக்க. அவருடைய குரலுக்கு யாரும் ஈடில்லை. அடுத்தவர் திருமதி கலாவதி. இரு குரல் இசை என்று பேசப்பட்டவர்கள் நானும் கலாவதியும். தமிழில் இவர் என் னுடன் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். இந்தியப் பாடகிகளான சுசீலா, வாணி ஜெயராம் போன்றோர் பாடிய பாடல்களுக்கு நிகரான பாடல்களைத் தந்திருப்பவர் கலாவதி. ஜமுனா ராணி, ஜிக்கி போன்றவர்களுடைய தமிழ்ப் பாடல்களைச் சிங்கள வடிவத்திலும் என்னுடன் இணைந்து பாடிப் புகழ் பெற்றிருக்கிறார்.

**தென்னிந்திய திரைத்துறைப் பாடகர்களில் உங்களைக் கவர்ந்த மூத்த, இளைய பாடகர்கள் யார்?**

மூத்த பாடகர்களில் ஏ. எம். ராஜா - இவரை என் மானசீகக் குருவாகக் கொண்டிருக்கிறேன். அவருடைய குரலை ஒத்ததாகவே என் குரல் இருப் பதாகச் சொல்வார்கள். இளையவர்களில் உன்னிகிருஷ்ணன், ஹரிகரன் இருவரையும் பாடகிகளில் வாணி ஜெயராமையும் மிகவும் பிடிக்கும்.

**தினகரனுக்கு இளையராஜா வழங்கிய பேட்டியொன்றில், அவர் உங் களைப் புகழ்ந்து பேசியிருந்ததாகவும் நீங்கள் அங்கு வந்தால் வாய்ப் புத் தருவதாகவும் எழுதப் பட்டிருந்ததாக அறிந்தேன். பின்னர் என்ன ஆனது?**

1978 இல் இளையராஜா இங்கு வந்தார். கண்ணன் - நேசம் இரட்டை யர்களின் இசையமைப்பில் உருவான 'ஏமாளிகள்' திரைப்படம் சிலோன்

ஸ்ருடியோவில் ஒளிபரப்பப்பட்டது. அதில் கலாவதியும் நானும் பாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு "மிக நன்றாகப் பாடுகிறீர்கள். ஆனால் தொழில்நுட்ப வளங்களில் சில போதாமைகள் இருக்கின்றன. உங்களைப் போன்றவர்கள் அங்கு வந்தால் நிச்சயம் வாய்ப்புத் தருவேன்" என்று கூறியிருந்தார். அப்போது என்னுடைய சித்தப்பா ஒருவர் சென்னையில் வசித்தார். இதை அறிந்ததும் எனக்கு இந்த வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்று முயன்று கொண்டிருந்தார். ஆனால் திடீரென இறந்து போய் விட்டார். அவருடைய இறப்புக்குப் பிறகு அந்த வாய்ப்பு கிட்டாமல் போய் விட்டது.

**நீங்களே நேரடியாகச் சென்று முயன்று பார்த்திருக்கலாமே!**

அப்படியானதொரு சூழ்நிலை எனக்குக் கிடைக்கவில்லை. போயிருந்தால் வாய்ப்புக் கிடைத்து இன்று நல்ல நிலையை நான் பொருளாதாரத்திலும் எட்டியிருக்கக் கூடும்.

**இதை இழப்பாகவே கருதுகிறீர்களா?**

வாய்ப்புக் கிடைத்தும், சூழல் தடுத்தது இழப்புதானே!

**உங்களுடைய துறை பற்றியோ, ஆளுமை பற்றியோ நான் கேட்கத் தவறியவை அல்லது நீங்கள் கூற விரும்புபவை என்று ஏதும் இருக்கிறதா?**

நான் செய்த சாதனைகள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். 'சப்தஸ்வரம்' என்ற தனிநபர் இசை நிகழ்ச்சி செய்து வெற்றி கண்டிருக்கிறேன். அந்த நிகழ்ச்சியில் 25 - 30 எண்ணிக்கையான பாடல்களைத் தனியாகப் பாடியிருக்கிறேன். அதே நிகழ்ச்சியைச் சகோதர மொழியிலும் செய்திருக்கிறேன் . 'பெம் கெகுலு பிபீ' என்ற பெயரில். இதை 'வண் மேன் ஷோ' (One man show) என்போம். இதையெல்லாம் பலர் மறந்து போய் விட்டார்கள். மெல்லிசையை மக்கள் மயப்படுத்த வேண்டும் என்பது நான் காணும் கனவாக உள்ளது.

*30.04.2006*



# தென்கச்சி சுவாமிநாதன்



அவசரமான இவ்வுலகில் அதிகபட்ச நிதானத்துடன் இருக்கிறார் தென்கச்சி கோ.சுவாமிநாதன்! பெயருக்கு முன்னுள்ளது-அவருடைய ஊர். சிரிக்காமலே நகைச்சுவை பேசக்கூடியவர் மட்டுமன்றி எந்த உணர்ச்சியையுமே காட்டத்தெரியாத விந்தை மனிதர். சும்மா இருப்பதற்கே நிரம்பப் பிடிக்குமாம். ஆனாலும், ஊடகங்களும், சமூக அமைப்புகளும் அவரைத் துரத்திக் கொண்டே இருக்கின்றன. பேச்சுத் தமிழை முதன் முதலில் வானொலிக்குள் புகுத்தி வெற்றி கண்டவர். பின்னாளில் தொலைக்காட்சிக்கும் அதுவே மொழியாகி விட்டிருக்கிறது. ஒலிபரப்பாளர், நாடக எழுத்தாளர் கவிஞர் என்கிற பல அடையாளங்களுடன் பேசப்பட்டவர். 2001 ஆம் ஆண்டு வானொலியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு 'சன்' தொலைக்காட்சி இவரைத் தேடிப் போய்ச் சேர்த்துக் கொண்டது.

'இன்று ஒரு தகவல்' மூலம் அனைத்துத் தரப்பினருக்கும் இவர் கூறிய அறிவுரைகள் எவருடனும் ஒருபோதும் முரண்பட்டதில்லை. தினமும் திகட்டாமல் தகவல் சொன்னதால் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உட்பட்ட பலராலும் தேடப்பட்டார். செயற்கைத் தனமான முயற்சிகள் எதுவும் செய்யாமல் இயல்பாகப் பேசி எல்லோரையும் ஈர்த்த இந்த விந்தையான குரல், அகில இந்திய வானொலியில் 14 வருடங்களாகத் தொடர்ந்து (ஒரு நாள் கூடத் தவறாமல்) 'இன்று ஒரு தகவல்' நிகழ்ச்சியை ஒலிபரப்பியிருக்கிறது.

இச்சாதனையை இதுவரையில் வேறெந்தவொரு சர்வதேச வானொலியும், ('பி.பி.சி', 'வொய்ஸ் ஒஃப் அமெரிக்கா') கூட நிகழ்த்தியிருக்கவில்லை. 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெறக்கூடிய இச்சாதனைக்கு முயற்சியெதுவும் செய்யாமல் அமைதியாகவே இருக்கிறார்.

ஒலிபரப்பாளரின் பெயர் குறிப்பிடப்படாமல்; நாளொன்றுக்கு நான்கு தடவைகள் மறு ஒலிபரப்பு செய்யப்பட்ட நிகழ்ச்சியும் 'இன்று ஒரு தகவல்' மட்டுமே! இதுவும் கூட தென்கச்சியினுடைய இன்னொரு சாதனை தான்! பதினான்கு வருட காலங்கள் வானொலியில் இவர் கூறிய தகவல்கள் யாவும் 25 ற்கும் மேற்பட்ட பாகங்களாக அச்சில் வெளிவந்துள்ளன. மேலும் இவரால் எழுதப்பட்ட 'அய்யா சாமியின் அனுபவங்கள்' என்ற வானொலி (நகைச்சுவை) நாடகமும், தேசிய ஒருமைப்பாட்டுப் பாடல்கள் கொண்ட சில நூல்களும் கூட வெளிவந்துள்ளன. பல்வேறு கலை, கலாசார, கௌரவ விருதுகளை ஏற்கனவே பெற்றுக் கொண்ட இவருக்கு 2004 ஆம் ஆண்டுக்கான 'கலைமாமணி' விருதும் வழங்கப்பட்டிருக்கிறது.

வானொலியினூடு தவழ்ந்து சென்ற தகவல்களையெல்லாம் அழகுற அச்சாக்க நினைத்த சில பதிப்பகங்கள் தென்கச்சியிடமிருந்து வெறும் அனுமதியை மட்டும் வாங்கிக் கொண்டு செயலாக்கியிருக்கின்றன. இதற்காக அவர்கள் கொடுத்த 'ஆக்க உரிமைப் பணத் தொகைகளையெல்லாம் கூட அநாதை இல்லங்களுக்குக் கொடுத்து நிறைவு கண்டிருக்கிறார். யாருமில்லாத நேரம் , வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள், 'வீடு தென்கச்சி சுவாமிநாதனுடையது' என்று தெரிந்ததும் திருடாமலேயே சென்றிருக்கிறார்கள். அதிர்ந்து பேசவே தெரியாத இந்த இனிய மனிதருடனான நேர்காணல்,சென்னை, மடிப்பாக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் நிகழ்ந்தது.

**முன் பின் அறிமுகமில்லாத ஒருவரிடம் உங்களை எவ்வாறு அறிமுகப் படுத்திக் கொள்வீர்கள்?**

அறிமுகமானவர்களிடம் கூட என்னைப் பற்றி எதுவும் சொல்லிக் கொள்ள மாட்டேன். அப்படிப் பெருமையாக என்னைப்பற்றிச் சொல்லிக் கொள்ள அதிகப்படியாக எதுவுமில்லை. நான் ஒரு சக மனிதன் என்றே எப்போதும் நினைக்கிறேன். நண்பர்கள் என்கிற ரீதியில் ஏதாவது விபரம் கேட்டால் பதில் சொல்வேன்.

**அரசியல், சினிமா -இவ்விரண்டிலும் உங்களுக்குள்ள ஈடுபாடு பற்றி...!**

இரண்டிலும் பார்வையாளனாக மட்டுமே இருக்கிறேன். எல்லாப் படங் களையுமே ஆர்வமாகப் பார்ப்பேன். அரசியல் கூட்டங்களிலும் கலந்து கொள்கிறேன். அரசியல்வாதிகள் ஒருத்தருக்கொருத்தர் திட்டிக் கொள்வதைப் பார்க்கப் பிடிக்கும். சண்டை என்றால் சுவாரஸ்யம் தானே! நாம் அதில் ஈடுபட்டால்தான் வலிக்கும். வேஷம் போட்டு நடிப்பதும் எனக்கு சிரமமானதே. எந்தத் துறையாக இருந்தாலும் பார்வையாளனாக இருப்பதே சுகமானது.

**'காதலே நிம்மதி' என்ற திரைப்படத்தில் நடித்திருந்தீர்களே!**

ஆமாம். அப்போது ஒளிப்பதிவாளராயிருந்தவரும் இன்று இயக்குநராகி விட்டவருமான தங்கர்பச்சான்தான் என்னை நடிக்க வைத்தார். எம்.ஜி.ஆர். ஃபிலிம் சிட்டியில் அதன் படப்பிடிப்பு நடந்தது. திடீரென்றொருநாள், நான் அலுவலகத்திலிருக்கும் போது தங்கர்பச்சான், என்னை அழைத்து வருமாறு ஒருவரை அனுப்பியிருந்தார். போனேன், நடிக்கணும் என்றார். எனக்கு நடிக்கத் தெரியாது. அழத் தெரியாது, சிரிக்கத் தெரியாது, ஏன் முகத்தில் உணர்ச்சியைக் காட்டவே தெரியாது என்றேன்.

''அப்படியான ஒருவர்தான் எங்களுக்கு வேண்டும். நீதிபதி வேஷத்துக்கு நீங்கள்தான் மிகப் பொருத்தமாக இருப்பீர்கள்'' என்றார். முன்னனுபவம் இல்லை. அவர்கள் சொல்லித் தந்த படி செய்தேன். மேக் - அப் கூடப் போட வில்லை. துண்டு துண்டாக எடுத்தார்கள். ஆனால் பின்பு எல்லாம் சரியாக வந்திருந்ததாய் உணர்ந்தேன்.

**உங்களுடைய குரலைக் கூட சினிமாவுக்குப் பயன்படுத்தியி ருக்கிறார்களில்லையா?**

ஆம். டணார் தங்கவேலு என்ற நகைச்சுவை நடிகர் 'பெரிய மருது' என்ற படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது இறந்து போனார். அவருக்காக 'டப்பிங்' கொடுக்கவென்று என்னை அழைத்தார்கள். பழக்கமில்லை என்றேன். எல்லாம் பழகிக் கொள்ளலாம் வாருங்கள் என்று அழைத்துச் சென்றார் ஈ.கோபாலகிருஸ்ணன். ஏ.வி.எம். ஸ்ருடியோவில் படத்தைப் போட்டுக் காட்டினார்கள். ஒரிஜினலாக அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைச் சொல்லி விட்டு, 'அவர் வாயைத் திறக்கும் போது நீங்களும் திறக்க வேண்டும். மூடும் போது மூட வேண்டும' என்றார்கள். அதுவும் சரியாக வந்தது.

**அதற்குப் பின்பு சினிமா வாய்ப்புகள் உங்களைத் தேடி வரவில்லையா?**

(சிரிக்கிறார்) முதல் படத்தைப் பார்த்தார்கள் இல்லையா! நல்லாவே நடிச்சிட்டேன். அதுதான் கூப்பிடவில்லை. எனக்கு ஆர்வமில்லை என்பது அவர்களுக்கும் தெரியும். முன்பு நடித்ததும், குரல் கொடுத்ததும் நண்பர் கள் என்கிற கட்டாயத்துக்காகத்தான்.

**உங்களுடைய மனோநிலையைக் கூட பல்கலைக்கழகம் ஒன்று ஆய்வு செய்திருந்தது. என்ன முடிவு சொன்னார்கள்?**

சென்னை பல்கலைக் கழகத்தின் மனோதத்துவப் பேராசிரியர் ஒருவர் தன்னுடைய மாணவர்களுடன் ஒரு நாள் என்னுடைய அலுவலகத்துக்கு வந்திருந்தார். உங்களிடம் சில கேள்விகள் கேட்பதனூடாக ஆய் வொன்று செய்யப் போகிறோம் என்றார். ''நான் என்ன பைத்தியமா'' என்றேன். ''இல்லை. வித்தியாசமாக இருப்பவர்களிடம் நாங்கள் எதை யாவது கேட்டுத் தெரிந்து கொள்வது வழக்கம். இது எமது கற்கையில் ஓர் அங்கம். இத்துறை மாணவர்கள் உங்களைப் போன்ற சுபாவம் உள்ள வர்களைப் படிக்க வேண்டும்'' என்றார்.

மாணவர்களுடைய கேள்விகளுக்கு சிந்திக்காமல் உடனே பதில் சொல்ல வேண்டும் என்ற நிபந்தனை வேறு! எல்லாமே உங்களுடைய முதலாவது



கேள்வி போன்றவை. கேள்விச் சுற்று முடிந்ததும் எல்லோரும் அமர்ந்து ஏதோ கணக்குப் போட்டார்கள். கடைசியாக அவர்கள் என்னிடம் கூறிய முடிவு: ''உங்களை யாராலும் ஜெயிக்க முடியாது'' என்பதே! ஏன் என்றேன். ''நீங்கள் தோற்றுப் போவதற்குத் தயாராக இருக்கிறீர்கள். தோற்றுப் போகத் தயாராக இருப்பவனை யாராலுமே ஜெயிக்க முடியாது!'' என்றார் பேராசிரியர்.

**வாழ்க்கையில் முன்னேறி வெற்றி பெற வேண்டும் என்பது தானே மனித இயல்பு!**

உண்மைதான். ஆனால் இது மிகவும் வித்தியாசமானதோர் மனோநிலை. ஆரம்பத்தில் நீங்கள் கூறுவது போல் இருந்தாலும், ஒரு கட்டத்திற்கு மேல் தோற்றுப் போவதுதான் சந்தோஷம். எதிரியிடம் கூட தோற்றுப் போய் அவனை சந்தோஷப்பட வைக்கிற நுணுக்கம் அது! இதில் என்ன சௌகரியம் என்றால் அந்தத் தோல்வி குறித்து நமக்கும் சந்தோஷம், எதிரிக்கும் சந்தோஷம். நமக்குப் பிரியமானவர்களிடம் தோற்றுப் போகும் போது, அது மகிழ்ச்சியை உண்டு பண்ணும் என்பது தத்துவார்த்த உண்மை. எதிரியாக யாரையுமே நினைக்காமல் தோற்றுப் போகும் போது மனம் இதை உணரும். 30 வயது தாண்டிய கட்டத்தில் இந்த உளவியல் மாற்றம் தெரியுமாம். அப்போது மாற்றத்திற்குத் தயாராக இருந்த மனோ நிலை சந்தோஷத்தை ஏற்றுக் கொள்கிறது.

இதற்குப் பிரியமில்லாமல் இருப்பவர்களுக்கு வாழ்க்கையின் பிற்பகுதி மிகுந்த சிரமமாக இருக்கிறது. இவர்கள் கடைசி வரைக்கும் ஜெயிக்க வேண்டும் என்று நினைத்து, தோற்றுப் போகிற போது அவஸ்தைப்பட்டுக் கொள்கிறார்கள். இந்த வயதிலும் நான் ஓட்டப் பந்தயத்தில் முதலாவதாக வருவேன் என்று நினைத்தால் முடியுமா? யதார்த்த வாழ்க்கையில் மனதுக்குப் பிடித்தவர்களிடம் தோற்றுப் போவது மகிழ்ச்சியான விடயம்!

பள்ளிக் கூட விளையாட்டுப் போட்டிகளின் முடிவில் பேசுவதற்காக என்னை அழைப்பார்கள். மாணவர்களிடம் நான் கேட்பதுண்டு: 'உங்களில் எத்தனை பேர் ஜெயித்திருக்கிறீர்கள்' என்று! அமைதியாக இருப்பார்கள். 'நான் படிக்கும் போது இப்படி எத்தனையோ போட்டி நடந்திருக்கு. எதிலுமே நான் தோற்றது கிடையாது. ஏனென்றால் நான் எதிலுமே கலந்து கொண்டதில்லை' என்பேன். சிரிப்பார்கள்.

**போட்டியே வேண்டாம் என்று நினைக்கிற இந்த மனோபாவம் சரி தானா?**

வாழ்க்கையில் முன்னேறுவதற்குப் போட்டி அவசியம். ஜெயிக்க வேண்டும் என்கிற ஆர்வம் இருந்தால் படிப்படியாக முன்னேறலாம். விட்டுக் கொடுக்கிற மனோபாவமும் நல்லதுதான். எல்லா இடத்திலும் முடியாது. ஆனாலும், பல இடங்களில் முடியும். அதற்காக ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டு, விட்டுக் கொடுத்திடலாமா என்றெல்லாம் நினைக்கக் கூடாது. பல இடங்களில் பொது மக்கள் என்னைக் கேள்வி கேட்பதுண்டு. இளைஞர்கள் சுகி சிவத்தினுடைய பேச்சையும் கேட்கிறார்கள். உங்கள் பேச்சையும் கேட்கிறார்கள். யாரைப் பின்பற்றுவதென்று தெரியவில்லை என்பார்கள்.

'வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நினைப்பவர்கள் அவரைத்தான் பின்பற்ற வேண்டும். நிம்மதியாக வாழ விரும்புகிறவர்கள் என்னுடைய பேச்சைக் கேட்கலாம்' என்று நான் பதில் சொல்வதுண்டு.

**மிகவும் அழகான உங்களுடைய இந்த மனோநிலைக்கு குடும்பப் பின்னணி அல்லது வளர்ந்த சூழல் ஏதாவதொன்று காரணமாக இருந்திருக்குமோ?**

எதுவாகவும் இருக்கலாம். எங்களது விவசாயக் குடும்பம். நாகரிகம் குறைந்த வளர்ச்சியடையாத ஊர். படித்தவர்கள் யாரும் இல்லை. பஸ் வசதி கூடக் கிடையாது. நிறையவே முரட்டுத்தனமாக வளர்ந்த மக்கள் கூட்டம். சதா தகராறும் வெட்டும், குத்தும் கொலையும்தான்! சின்ன வயதிலிருந்தே இதைப் பார்த்து வளர்ந்ததால் ஏற்பட்ட மாறுதலாகவும் இருக்கலாம். அல்லது பிறப்பிலேயே அமைந்து விட்டதொன்றாகவும் இருக்கலாம். சின்ன வயதில் யார் என்னை அடித்தாலும் வாங்கி வருவேன். திருப்பியெல்லாம் கொடுக்கிறதே இல்லை. ஆக 'ஜெனடிக்' ஆகவும் இருக்கலாம்.

**பிரபலமோ, புகழோ பெற்றவர்களுக்கு சமுதாயத்தில் சுதந்திரம் குறைவாக இருக்கிறது. உங்களுக்கு எப்படி?**

எனக்கு அப்படியெல்லாம் ஒன்றும் தெரியவில்லை. புகழ் அல்லது பிரபலம் பெற்றதாக நினைத்தால் தான் இந்தக் கஷ்டம் எல்லாம் வரும். தினமும் பஸ்ஸில் தான் பயணம் செய்கிறேன். பெரியவர், சிறியவர் என்று எல்லோருமே பேசுவார்கள். இதில்தான் சுவாரஸ்யங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கு.



(ஏதாவதொன்று கூறுங்களேன் எனும் ஆவலில் இருக்கும் என்னைப் புரிந்து கொண்டு கூற ஆரம்பித்தார்.)

ஒரு நாள் பஸ்ஸில் நான் நின்று கொண்டிருந்தேன். கல்லூரி மாணவர்கள் இரண்டு பேர் அமர்ந்திருந்தார்கள். ஒருவன் என்னைப் பார்த்து விட்டான். மற்றவனைத் தட்டிச் சொல்கிறான். "அவரைப் பார்த்தால் வானொலியில் 'இன்று ஒரு தகவல்' சொல்பவர் போலிருக்கிறார்" என்று. அதுக்கு மற்றவன் சொல்றான் "போடா அவர் எப்பேர்ப்பட்ட விஷயமெல்லாம் சொல்கிறார். இந்த மூஞ்சியைப் பார்த்தால் அப்படித் தெரியலடா" என்கிறான். அவர்களுடைய சுவாரஸ்யத்தைக் கெடுக்க விரும்பாமல் நான் விலகி வந்து விட்டேன். என்னை நான் உயர்வாக நினைத்துக் கொண்டிருந்திருந்தால் சண்டைக்குப் போயிருப்பேன்.

முகத்தை விட குரலுக்கு இருக்கிற மரியாதை அதிகம் என்றே நான் நினைக்கிறேன். இது நடந்தது நான் தொலைக்காட்சிக்கு வருவதற்கு முன்பு. ஆனால் சில பத்திரிகைகளில் ஒன்றிரண்டு புகைப்படங்கள் மட்டும் அப்போது வெளிவந்திருந்தன. அதை வைத்துக் கொண்டுதான் என்னை அடையாளங் கண்டிருப்பார்கள்.

**கோபம், இதனடிப்படையிலான பிரச்சினை எல்லாம் ஏன் தோன்றுகின்றன?**

இந்த உடல் என்னுடையது என்று மனிதன் எப்போது நினைக்க ஆரம்பித்தானோ அப்போதுதான் பிரச்சினை ஆரம்பித்தது. 'இது என்னுடையது' என்று எதையாவது நினைத்துக் கொண்டிருந்தீர்களானால், அதற்கு இடையூறு வரும் போது கோபம் வருகிறது. இந்த உலகில் எதற்குமே நாம் சொந்தக்காரர்களாக இருந்தால் டென்ஷன்தான். வெறும் பாதுகாவலராகவே இருங்கள். உலகியல் பொருட்களையெல்லாம் உபயோகப்படுத்தத் தெரிந்து கொள்ள வேண்டுமே தவிர; உரிமை கொண்டாடுவதற்குப் பிரியப்படக் கூடாது.

இந்த 'ரேப் ரெக்கோர்டரை' என் கையில் தந்திருக்கிறீர்கள். பத்திரமாக வைத்திருந்து பதிவு முடிந்ததும் உங்களிடம் திருப்பித் தந்திட வேண்டுமில்லையா! அலுவலகத்தில் என்னுடைய மேசை, கதிரையை எல்லாம் அழகாகத் துடைத்து வைத்திருந்தேன். இளைப்பாறி வரும் போது

எடுத்திட்டு வந்திட்டேனா? அது உடைந்தால் கூட கவலைப் படமாட்டேன். ஆனால் வீட்டுக் கதிரை உடைந்து போனால் வருத்தப்படுகிறேன். ஏனென்றால் அது என்னுடையது என்று சொந்தம் கொண்டாடிக் கொண்டிருக்கிறேன் என்பதால்.

**எதற்காகவாவது அழுதிருக்கிறீர்களா?**

அப்பா, அம்மா இறந்த போது கூட எனக்கு இயல்பாகவே அழுகை வரவில்லை. நான் அடக்கவுமில்லை. அழக்கூடாது என்று நிபந்தனையும் ஒன்றும் இல்லை. அப்பாவுடைய மரணச் சடங்கில் தப்பு அடிச்சு ஆடிக்கொண்டிருந்தவர்களைப் பார்த்து, "ரொம்ப ஆடாதீங்கப்பா, இறந்தவர் எழுந்து வந்திடப் போறார்" என்று ஜோக் அடித்தேன். சொந்தக்காரர்கள் என்னை மோசமாகப் பார்த்தார்கள். இப்படி ஒரு கல்லு மனமா என்று திட்டினார்கள். இழப்புகள் எதுவும் என்னைப் பாதிப்பதில்லை என்பது தான் உண்மை. அவர்கள் என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இது வித்தியாசமானதொரு மனோபாவம் தான் என்று எனக்கே புரிகிறது. என்னியல்பு இதுதான்!

**வாசகர்களோ, ரசிகர்களோ உங்களைக் கோபப்படுத்த முனைந்து தோற்றுப் போயிருக்கிறார்களா?**

ஆம். முன்பு 'நேருக்கு நேர்' என்றொரு மேடை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. மேடையில் வெவ்வேறு துறை சார்ந்த மூன்று பேர் இருப்பார்கள். சினிமா, அரசியல் சம்பந்தமான கேள்விகளை அவர்களிடம் கேட்பார்கள். பொதுவான ஏதாவது விடயங்களை என்னிடம் கேட்பார்கள். என்னிடம் ஒருத்தர் கேட்டார் "உங்களை முட்டாள் என்று சொன்னால் உங்களுக்குக் கோபம் வராது என்று சொல்கிறார்கள். கவலையாவது படமாட்டீர்களா?" என்று.

"நிச்சயம் கவலைப்படுவேன். ஏனென்றால், என்னை முட்டாள் என்று சொன்னதற்காக அல்ல. ஒரு சர்வதேச இரகசியத்தை வெளியே விட்டு விட்டீர்கள் என்பதற்காக" என்றேன்.

என்னை நான் அறிவாளி என்று நினைத்துக் கொண்டிருந்தால்தான் அந்தக் கேள்வி எனக்கு கோபத்தை ஏற்படுத்தியிருக்கும். ஏற்கனவே நான் ஒரு 'அடி முட்டாள்' என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவர் முட்டாள் என்று கௌரவமாகப் பேசியிருக்கிறார். இது பதவி உயர்வுதானே!



**சராசரி மனிதனை அடியோடு மாற்றி, கெடுத்து விடுபவை எவை?**

பதவி, பணம், புகழ் - இம் மூன்றும்தான். நான் ஜனாதிபதியாக இருந்தால் இப்படி இயல்பாக உங்களுடன் பேசிக் கொண்டிருக்க மாட்டேன் இல்லையா! இம் மூன்றுக்கும் ஒருவர் மாறாமல் இருந்தால் அவர்தான் ஞானி!

**உங்களுடைய முதலாவது தொழிலே வானொலிபரப்பாளர்தானா?**

கோயம்புத்தூர் விவசாயக் கல்லூரியிலிருந்து பட்டதாரியாக 1965 இல் வெளியேறி, பாளையங்கோட்டை பஞ்சாயத்தில் மூன்று வருடங்கள் பணியாற்றினேன். அலுவலகத்திலிருந்து வேலை செய்வது அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. பின்னர் ஏழு வருடங்கள் விவசாயம் செய்தேன். அப்போது ஊராட்சி மன்றத் தலைவராகவும் இருந்தேன். அதற்குப் பிறகு அப்பா இறந்துபோய் விட்டார். அப்போது பத்திரிகையில் ஒரு விளம்பரம் வந்தது. திருநெல்வேலி வானொலிக்கு விவசாய ஒலிபரப்பாளர் தேவை என்று. தடுப்பதற்கு அப்பாவும் இருக்கவில்லை. விண்ணப்பித்தேன். போட்டிக்கு யாருமே வரவில்லை என்பதால் தெரிவாகி விட்டேன். ஏழு வருடங்களுக்குப் பிறகு அங்கிருந்து சென்னைக்கு மாற்றலாகி வந்து விட்டேன்.

**'இன்று ஒரு தகவல்' நிகழ்ச்சி உருவாக்கம் பற்றி...**

இங்கும் 'பண்ணை இல்ல ஒலிபரப்பு'க்காக ஆரம்பத்தில் விவசாயப் பிரிவில்தான் பணி இருந்தது. அப்பணியுடன் மேலதிகமாக எனக்கு ஐந்து நிமிடங்களை ஒதுக்கித் தந்தார்கள்; மக்களுக்குப் பிரயோசனமாக ஏதாவது சொல்லும் படி! ஆரம்பத்தில் சாதாரணமாகத்தான் தகவல் சொல்லி வந்தேன். காலப் போக்கில் அதற்கென்றொரு வடிவம் அமைந்து விட்டது. கதை மாதிரி கருத்தைச் சொல்லி அதற்கொரு முடிவும் சொல்ல வேண்டும். ஞாபகத்தில் நிற்பதற்காக இறுதியில் ஒரு ஜோக் என்று அது தனியொரு வடிவம் பெற்று விட்டது.

**வரையறுக்கப்பட்ட / நியமிக்கப்பட்ட பணிக்கு அப்பால் மேலதிகமாக இந்நிகழ்ச்சியைத் தயாரிப்பது சிரமமாக இருக்கவில்லையா? ஆரம்பத்தில் இதற்குரிய வரவேற்பு எப்படி இருந்தது?**

எனக்கு உத்தரவு போடப்பட்டதும் செய்யத் தொடங்கி விட்டேன். ஆனாலும் தொடர்ந்து செய்வது சிரமமாயிருந்தது. அது பற்றி இயக்குநரிடம்

தெரிவித்தேன். ''ஒரு மாதம் நீயே செய். அடுத்த மாதம் வேறொருவரிடம் பொறுப்பைக் கொடுக்கலாம். 24 – 30 பேரை இதற்காகத் தெரிவு செய்யப் போகிறோம். எனவே, உன்னுடைய அடுத்த பொறுப்பு வர இரண்டு வருடங்கள் ஆகிவிடும்'' என்றார். ஒரு ஜூலை மாதம் முதலாம் திகதிதான் 'இன்று ஒரு தகவல்' நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. ''நாளையிலிருந்து யார் நிகழ்ச்சி செய்வது என்பதற்கு உத்தரவு போட வேண்டும்'' என்று 30ஆம் திகதி இயக்குநரிடம், போய் நின்றேன்.

''ஐயையோ கடைசி நேரத்தில் வந்து சொல்கிறாய். முதலிலே சொல்ல வேண்டாமா. திடீரென்று சொன்னால் தயார் படுத்துவதற்குச் சிரமப் படு வார்கள். ஆகஸ்ட் மாதமும் நீயே பார்த்துக் கொள்'' என்றார். சரியென்று ஆகஸ்ட் 15 இலிருந்தே இயக்குநருக்கு ஞாபகப்படுத்த ஆரம்பித்து விட்டேன். இந்தியாவுடைய விடுதலை நாள் இல்லையா! எனக்கும் விடு தலை கிடைக்கட்டுமே என்ற எண்ணம். ஆகஸ்ட் 31 ஆம் திகதி இயக்குநர் அழைத்தார். காபி, டிபன் எல்லாம் வாங்கித் தந்தார். முன்பெல்லாம் அதிகாரிகள் பணியாளர்களுக்கு இப்படியெல்லாம் வாங்கிக் கொடுக்கிற பழக்கம் இல்லை என்பதால் யோசித்துக் கொண்டே ''எனக்கா அல்லது வேறு யாருக்கா'' என்றேன்.

''உனக்குத்தான் சாப்பிடு'' என்றார். சாப்பிட்டு முடிந்த பிறகு சொன்னார். ''நான் வெளியில் போகிற இடங்களிலெல்லாம் இந்த நிகழ்ச்சியைத்தான் பாராட்டிப் பேசுகிறார்கள். என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவிக்கவே இந்த காபி, டிபன் எல்லாம் வாங்கித் தந்தேன்'' என்றார்.

''வாரத்திற்கு ஒரு தடவை செய்யலாமே'' என்றேன். ''இல்லை, தொடர்ந்து செய். எப்போது முடியாது என்கிறாயோ அப்போது நிறுத்தி விடுவோம். ஆனால் ஏன் நிறுத்திவிட்டாய் என்று கேட்க மாட்டேன்'' என்றார்.

கொஞ்சக் காலம் செய்து கொண்டிருந்தேன். முடியாது என்று சொல்வோம் என்பதற்குள் அவர் இளைப்பாறிப் போய் விட்டார். வேறு இயக்குநர் வந்தார். அவர் வருவதற்குள் இந்த நிகழ்ச்சியினுடைய பிரபலம் பற்றிப் பத்திரிகைகளில் எல்லாம் வந்திருந்தது. ஆக இந்த நிகழ்ச்சியை நிறுத்துவதற்கு யாருக்குமே விருப்பமில்லை. அதனால் நான் இளைப்பாறும் வரை செய்ய வேண்டியதாகிப் போயிற்று.



**தினமும் இந்த நிகழ்ச்சித் தயாரிப்புக்காக எவ்வளவு நேரம் செலவிடுவீர்கள்?**

இரண்டு மணித்தியாலங்கள் ஆகும். 10 மணிக்குத்தான் அலுவலக நேரம் ஆரம்பமாகும். நான் காலை 6 மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டால் 7 மணிக்குப் போய்ச் சேர்ந்து விடுவேன். 9 மணி வரை யாருமே இருக்க மாட்டார்கள். அதற்குள் ஒரு நிகழ்ச்சியை எழுதிப் பதிவு செய்து வைத்து விடுவேன். ஒலி நாடாவை ஓட விட்டவுடன் நானே ஸ்ருடியோவுக்குள் ஓடிப் போய் கடகடவென்று சொல்லி விட்டு மறுபடியும் ஓடி வந்து நாடாவை எடுத்துக் கொள்வேன். அது மறுநாளுக்கான நிகழ்ச்சிதான். ஆக இதற்காகத் தினமும் 2 மணி நேரம் அலுவலகமல்லாத நேரமாக ஒதுக்கிக் கொண்டேன்.

எப்போதும் மேலதிகமாக 10 நிகழ்ச்சிகளை வைத்திருப்பேன். லீவு எடுக்க வேண்டி வந்தால் அவற்றைக் கொடுத்து விட்டு ஓடிப் போய் விடுவேன்.

**தனியார் எஃப். எம். வானொலிகளின் வருகைக்குப்பிறகு அகில இந்திய வானொலியின் நிலைமை எப்படியிருக்கிறது?**

தொலைக்காட்சிகள் வந்த பின்பு வானொலிக்கான வரவேற்பு குறைந்தது. ஆனால் எஃப்.எம். அலைவரிசைக்குப் பிறகு மீண்டும் வானொலி நேயர்கள் பெருகி விட்டார்கள். அகில இந்திய வானொலியில்தான் முதன் முதலில் எஃப்.எம். அலைவரிசை ஆரம்பித்தோம். ஆனால் தனியாருக்கு அனு மதிக்கப்பட்ட பின்னர் நமக்குரிய நேயர்கள் குறைந்து போய் விட்டார்கள். விளம்பரங்களும் குறைந்து போய் விட்டன. இது ஒரு போட்டி நிலைமை தான். ஆனால் தற்போது தனியார் எஃப்.எம். மாதிரி நிகழ்ச்சிகளை வழங்க அகில இந்திய வானொலியிலும் முயற்சி செய்கிறார்கள்.

**வானொலி, தொலைக்காட்சியோடு ஒப்பிடுமிடத்து பத்திரிகைக ளுக்கான வரவேற்பு, அவற்றுக்கான விளம்பரங்கள் எப்படி இருக்கின்றன?**

மிகப் பிரபலமான ஊடகம் தொலைக்காட்சிதான். ஆனால் அதிகம் பேரைச் சென்றடைவது வானொலி. விளம்பரங்களும் தொலைக்காட்சிக்கே அதிகம். ஆனால், இவ்விரண்டுக்கும் இல்லாத சிறப்பு பத்திரிகைக்கு இருக்கிறது. அவற்றுக்கான விளம்பரங்கள் குறையத் தொடங்கியதும்

இலவச இணைப்புகளை வழங்கி சரிந்து விடாமல் பார்த்துக் கொள் கிறார்கள். விளம்பரங்கள் குறைந்தாலும் பத்திரிகை வாசகர்கள் குறையவில்லை. பெருகித்தான் விட்டார்கள். இம் மூன்றும் ஒன்றையொன்று போட்டி போடலாம். ஆனால் ஒன்றின் இடத்தை இன்னொன்றால் ஈடு செய்ய முடியாது.

**இலங்கைக்கு நிருபராக வந்திருந்த அனுபவம் குறித்து...**

1987 - 1988 இரண்டு வருடங்கள் இலங்கையில் ஒரு மாதமும் இந்தியாவில் ஒரு மாதமும் என போய் வந்து கொண்டிருந்தேன். இந்திய இலங்கை அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தானதுக்குப் பிறகு இந்திய இராணுவம் இலங்கை வந்தது. இலங்கை மக்கள் திலகம் வைத்து வரவேற்றார்கள். நிலைமை சுமூகமாயிருந்தது. பின்னர் போராளிகளுக்கும், இராணு வத்துக்கும் இடையில் பிணக்குகள் ஆரம்பித்தன. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், உறுப்பினர்கள் மாத்தையா, யோகி, அன்ரன் பாலசிங்கம், ஏனைய குழுக்களான ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப்., ரெலோ ஆகியவற்றின் தலைவர்கள், போராளிகள் ஆகியோருடன் பொது மக்களும் என அனைத்து மட்டத்திலிருந்தவர்களையும் சந்தித்துப் பேட்டி எடுத்தோம். அவர்களுடைய கருத்துகளின் மூலம் நாட்டின் நிலவரம் பற்றி எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டே இருந்தது. பதிவு செய்த ஒலி நாடாக் களை அன்றன்றே விமான கப்டன் மூலம் கொடுத்தனுப்பி விடுவேன். தினமும் எங்கள் வானொலியில் அவை ஒலிபரப்பப்பட்டன.

குறிப்பிட்ட காலம் வரைக்கும் நிலைமை சுமூகமாயிருந்தது. பின்பு இறுக்கத்தை உண்டு பண்ணியது. அது கலவரமாகவும் மாறிப் போனது. இந்திய இராணுவம் வெளியேறினாலே போதும் என்று மக்கள் நினைத்தார்கள். திலீபன் உண்ணாவிரதம் இருந்த போதெல்லாம் நான் யாழ்ப்பாணத்தில்தான் இருந்தேன். கவிஞர் காசி ஆனந்தனையும் அங்கு தான் சந்தித்தேன்.

**சென்னை வானொலியிலிருந்து ஓய்வு பெறப் போகிறீர்கள் என்று தெரிந்து; தினத்தந்தி பத்திரிகை உங்களைப் பேட்டி கண்ட போது (2002 இல்) 'ஓய்வுக்குப் பின்பு என்ன செய்தாக உத்தேசம்' என்று கேட்டது. 'ஓய்வுக்குப் பிறகு ஓய்வு தான். அதற்குப் பிறகும் வேலை செய்தால் ஓய்வுக்கு என்ன மரியாதை' என்று அவர்களிடமே கேட்டிருந்தீர்கள். ஆனால் இன்று நீங்கள் ஓய்வாக இல்லையே!**



''மரம் ஓய விரும்பினாலும் காற்று அதனை விடுவதில்லை'' யென்று கேள்விப்பட்டிருப்பீர்கள். மாவோ சேதுங் இனுடைய வாசகம் என்று நினைக்கிறேன். நிறைய வற்புறுத்தலுக்குப் பிறகுதான் நான் சன் தொலைக் காட்சியில் நிகழ்ச்சி செய்ய ஒத்துக் கொண்டேன். மேடைப் பேச்சு, திருமண விழா என்று பேசுவதற்கு அழைக்கிறார்கள். மறுக்க முடியவில்லை. ஆனால் என்னுடைய உள்ளுணர்வு 'சும்மா' இருக்கவே நினைக்கிறது, விரும்புகிறது.

**நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உங்களைப் பார்க்க விரும்பி இறுதிவரையில் அந்தச் சந்திப்பு முடியாமலே போய் விட்ட தில்லையா?**

ஆம். சிவாஜி கணேசனுக்கு கடைசி நேரத்தில் துணையாக இருந்தது வானொலியும், தொலைக்காட்சியும் தான். மிகப் பெரும் புகழ் பெற்றிருந்த அவரை விட்டு எல்லோரும் மரியாதைக்காக ஒதுங்க ஆரம்பித்தார்கள். அவர் 'இன்று ஒரு தகவல்' நிகழ்ச்சியைத் தினமும் கேட்பாராம். எனக்கு எப்படித் தெரியும் என்றால், அவருடைய குடும்ப டொக்டர் ஒருவர் ஒரு நாள் வானொலி நிலையத்திற்கு வந்திருந்தார். ''இன்று ஒரு தகவல் சொல்லிட்டிருக்கே ஒரு பிள்ளை. அதோட முகத்தைக் கொஞ்சம் காட்டக் கூடாதா என்று சிவாஜி கேட்கிறார். ஒரு தடவை போய் வரலாமா'' என்றார். சரி, நானும் அவரோடு ஒரு போட்டோ கூட எடுத்துக்கலாம் என்றேன். பிறகு அலட்சியமாகவே இருந்து விட்டேன். சினிமா பாடலாசிரியர் - தஞ்சை வாணன் (தொலைக்காட்சியில் வேலை பார்த்தவர், சிவாஜிக்கு நாடகங்களும் எழுதியிருக்கிறார்) சிவாஜியை அடிக்கடி போய்ப் பார்ப்பார். அவரிடமும் இப்படியே கேட்டிருக்கிறார்.

அவரும் என்னிடம் வந்து நின்றார். ''என்னப்பா உன் மூஞ்சியில் என்ன இருக்கு? உன்னைப் போய் பார்க்கணும்கிறார்'' என்றார். ''இப்பவே போக லாமா'' என்று கேட்டேன். ''அவர் 'பேஸ் மேக்கர்' வைப்பதற்காகச் சிங்கப்பூர் போகிறார். சாவகாசமாய் ஒரு நாள் போகலாம்'' என்றார். அதே போலவே ஒரு பத்திரிகையாளரிடமும் கூடக் கேட்டிருக்கிறார். நானும் நிறையவே ஆர்வமாகத்தான் இருந்தேன்.

சிங்கப்பூரிலிருந்து திரும்பிய பிறகு சிவாஜி எங்கள் வானொலிக்கு வந்தார். வானொலி 'ஒலிக் களஞ்சியத்திற்காக' அவருடைய நினைவலைகளைப் பதிவு செய்து கொண்டிருந்தார்கள். தினமும் ஒரு மணித்தியாலம், இரண்டு

மணித்தியாலம் என்று வந்து பதிவு செய்து விட்டுப் போவார். என்னுடைய அறை மாடியில் இருந்தது. சிவாஜி வந்திருக்கிறார் என்று தெரிந்ததுமே பார்க்கப் போனேன். ஒரே கும்பலாக இருந்தது. அப்போது போய், 'நான்தான் நீங்கள் பார்க்க விரும்பிய ஆள்' என்று சொல்வதற்குச் சங்கட மாயிருந்தது. இன்னொரு நாள் வீட்டில் போய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்று திரும்பி வந்து விட்டேன்.

அதுக்குப் பிறகு உடம்புக்கு முடியாமல் இறந்து போய் விட்டார். அவர் இறந்த பிறகு ஒருநாள் அவருடைய மகன் ராம்குமார் வானொலிக்கு வந்தி ருந்தார். ''அப்பாவை ஐ.சி.யு. (Intensive Care Unit) க்குக் கொண்டு போகும்போது 'வானொலியை எடுத்திட்டுப் போகலாமா' என்று டொக்டரிடம் கேட்டார். ஏன் என்றதற்கு இன்று ஒரு தகவல் கேட்க வேண் டும் என்றார். டொக்டர் அனுமதித்தார்'' என்றார். இறந்த பிறகு சிவாஜி யுடைய படத்திறப்பு விழா செய்தார்கள். அதில் என்னையும் பேசுவதற்கு அழைத்திருந்தார்கள். பேசி விட்டு, படத்தைத்தான் பார்த்திட்டு வந்தேன். (இந்தக் கேள்விக்குப் பிறகு நீண்டதொரு மௌனமும் வேறு பேச்சுக் களும் தொடர்ந்தன.)

**விமானத்துக்கு அடுத்த கட்ட வருங்காலப் போக்குவரத்துச் சாதனம் என்னவாக இருக்கும்?**

ரொக்கெட்டின் பயன்பாடு அதிகமாக இருக்கும். ஐரோப்பாவுக்குப் போகிற வர்கள், அமெரிக்கா போகிறவர்கள் எல்லோருமே ஒரே ரொக்கெட்டில் பயணம் செய்வார்கள். ரொக்கெட் லோஞ்சிங் ஸ்டேஷன் (Rocket Launching Station) இருக்கும். ரிக்கெட்டை வாங்கிக் கொண்டு ரொக்கெட்டில் ஏறிவிட வேண்டும். புவியீர்ப்பு விசையைத் தாண்டிப் போய் ரொக்கெட் நிறுத்தி வைக்கப்படும். பூமி சுற்றிக் கொண்டிருக்கும் போது எந்த நாடு வருகிறதோ அந்த நாட்டில் உங்களை இறக்கி விட்டு விடும். இப்போது விமானம்தான் பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. இனி பூமி ரொக்கெட்டைச் சுற்றும். இதையெல்லாம் நம்ப முடியாத அடுத்த கட்டமெல்லாம் கூட வந்து விடும். எப்படியென்றால், நீங்கள் இலங்கைக்குப் போக வேண்டுமென்றால் ஓர் அறைக்குள் விட்டுப் பூட்டி விடுவார்கள். அமெரிக்கா, சிங்கப்பூர், லண்டன் என்று எல்லா நாட்டுப் பயணிகளும் அறைகளில் விட்டுப் பூட்டப்படு வார்கள். வெளியே மீற்றர் இருக்கும். அழுத்தியைத் (Switch) தட்டி விட்டால் நீங்கள் அணு அணுவாகப் பிரிந்து போய் விடுவீர்கள். அடுத்த வினாடி



பிரிந்த அணுக்கள் ஒன்று சேர்ந்து இலங்கையில் ஒரு அறையிலிருந்து வெளியே வருவீர்கள். அழுத்தியை மாற்றித் தட்டினால் நீங்கள் வேறொரு நாட்டில் போய் இறங்கி விடுவீர்கள். அதற்கான பிரச்சினைகள் பின்பு ஏற்படும். ஆனால் பாஸ்போட், வீஸா எதுவும் இல்லாமல் யாரும் எங்கு வேண்டுமென்றாலும் போகலாம் என்கிற நிலை வரும்.

**உங்களுடைய கணிப்பில் கடவுள்...!**

கடவுள் என்பது ஒரு வினைச்சொல். பெயர்ச் சொல்ல அல்ல! அது ஒரு செயல். பூமி சுற்றிக் கொண்டிருக்கிறதில்லையா! அதுக்கு யார் பெற்றோல் போடுகிறார்கள்? பெற்றோல் இல்லாமல், தானே சுற்றுகிற அந்த இயக்கம் தான் கடவுள். கடவுள் என்பதைப் பெயர்ச் சொல் என்று புரிந்து கொண்ட தால் தான் உருவமெல்லாம் வைத்து அது கலாட்டாவில் முடிந்தது. உரு வம் ஒன்றும் இல்லாமல் செயல் என்று இருந்திருந்தால் எந்தப் பிரச்சினை யுமே வந்திருக்காது. ஊர்வலம் நடந்திருக்காது. சிலைகள் உடைந்திருக் காது. கொலைகளும் நிகழ்ந்திருக்காது.

**நாளைய உலகில் மதங்களும், வழிபாட்டிடங்களும் எவ்வாறிருக்கும்?**

மதங்கள் அழிந்து போய்விடும். கோயில்களும் மறைந்து விடும். ஆதி மனிதனின் பயம் தான், பக்தியாகி பாம்புக்குக் கூட கோயில் கட்டியது. இது குறித்த தெளிவு பெறும் போது ஜாதி, மதம் எல்லாம் மறைந்து உலகம் மாறிப் போய் விடும். கடவுளை நம்புவதற்கு ஆள் இல்லை யென்றால் கோயில் எதற்கு! எல்லாவற்றையுமே மனிதன் அறிவு பூர்வமாகச் சிந்திப்பான். மூட மந்திரம், தந்திரம் எல்லாம் கூட இப்போது ஒன்றுமே இல்லையென்று புரிந்து போயிற்றல்லவா! சாமியார்களே ஜெயிலுக்குப் போகத் தொடங்கி விட்டார்கள். உண்மை தெரியத் தெரிய மரியாதை குறைந்து போய்விடும்.

இன்றுள்ள எல்லா மதங்களுமே ஒளியை உண்மையென்று நம்புகின்றன. ஆக, 'இயற்கை என்பதே மாபெரும் சக்தி. அது மட்டுமே உண்மை' என்று நாளைய மனிதன் நம்புவான்.

இன்றைக்கு இருக்கிற கடவுள் உருவங்கள் ஒன்றுமே இருக்காது. நாம் மனிதர் என்பதால் கடவுளுக்கு மனித உருவம் கொடுத்தோம். அதிலும் நம்மை விட அவர்கள் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று

வேறுபடுத்திக் காட்ட நான்கு கைகள், நான்கு தலைகள் என்று அதிகமாக வைத்தோம். மாடு கடவுளை மாடு மாதிரித்தான் கற்பனை பண்ணும். தன்னுடைய கடவுளுக்கு அது எட்டுக் கால்களும், இரண்டு தலைகளும் வைக்கும்.

**கடவுளும், கோயிலும் நிஜமில்லை என்று ஆகிப் போனால் தவறு செய்யும் மனிதர்கள் அதிகரித்து அதிகரித்து மோசமானதோர் உலகம் உருவாகாதா?**

கோயில்களுக்குப் பதிலாகப் பொலிஸ் நிலையங்கள் அல்லது வேறு பாது காப்பு ஸ்தாபனங்கள் அதிகமாகும். மக்களைப் பயமுறுத்தவும் தண்டனை கொடுக்கவும் ஒரு அமைப்பு வேண்டுமே! மக்களை நல்வழிப் படுத்துவதற்கு; தப்பு செய்யாமல் தடுப்பதற்கு மனிதன் சொன்ன பொய் தான் கடவுள்.

இயற்கையை நோக்கித் திரும்புவோம் ( Back to the Nature) என்று உலகம் முழுவதும் இப்போது உணர ஆரம்பித்திருக்கிறார்கள். எல்லாம் சரியாக வரும்.

**இன்றைய தேதியில் இயற்கையே மனிதனைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. அது ஒரு மாபெரும் சக்தி தான். ஆனாலும்...!**

இயற்கையினுடைய நோக்கம் (Purpose of the Nature) - மறு உற்பத்தி தான்! ஒரு மனிதன் இன்னொரு மனிதனை உற்பத்தி செய்து விட்டுப் போய் விட வேண்டும். ஓர் ஆடு இன்னொரு ஆட்டையும், ஒரு கோழி இன்னொரு கோழியையும் உற்பத்தி செய்து விட்டுப் போய்விடுகின்றன. இந்த உலகத்தினுடைய - இயற்கையினுடைய நோக்கம் என்னவென்று யாருக்குமே தெரியாது. இதுவரை ஞானிகளால் சொல்லப்பட்டவை எல் லாம் கூட வெறும் ஊகத்தின் அடிப்படையில்தான்.

நீ ஜனாதிபதி ஆக வேண்டும், பிரதமர் ஆக வேண்டும் என்றெல்லாம் இயற்கை நம்மிடம் எதிர்பார்க்கவே இல்லை. உன்னை மாதிரி இன் னொன்றை உருவாக்கி விட்டுப் போய்விடு என்று மட்டுமே இயற்கை நம்மிடம் மௌனமாக வேண்டுகோள் விடுக்கிறது.

உலகத்தில் ஆணும் பெண்ணும் 50 : 50 என்கிற மாபெரும் சமன் பாட்டினை இயற்கையே பராமரித்துக் கொண்டிருக்கிறது. உலகில் 116



ஆண் பிள்ளைகளும் 100 பெண் பிள்ளைகளும் பிறக்கிறார்கள். 16 ஏன் அதிகம் என்றால், வாலிப வயது வருவதற்குள்ளாகவே 16 ஆண் பிள்ளைகளும் இறந்து போய் விடுகின்றனராம்.

யுத்தம் மூலமாக நாம் அந்தச் சமன்பாட்டைக் குலைத்துக் கொண்டிருக் கிறோம். அதை ஈடுகட்டத்தான் இயற்கை வெவ்வேறு அழிவுகளை ஏற் படுத்துகிறது. முதலாம் உலகப் போர் முடிந்த பிறகு 180 ஆண் குழந்தை களும் 100 பெண் குழந்தைகளும் பிறந்தன. போரில் இறந்த ஆண்களின் எண்ணிக்கையை ஈடுகட்டுவதற்காகவே இந்தச் சமன்பாடு!

கடல்கோள் அழிவின் போது ஏற்பட்ட உயிரிழப்புகளைக் கணக்கெடுத்துப் பார்த்தாலும் இந்த சமன்பாடு புரியும். இதற்குச் சரியான விஞ்ஞான விளக் கம் கொடுக்க முடியவில்லையே தவிர உண்மை இதுதான்! மனிதன் எந்தளவுக்கு முயன்றாலும் முழு உலகிலும் ஆண்களை மட்டுமோ அல்லது பெண்களை மட்டுமோ உருவாக்கிவிட முடியாது. 'குளோனிங்' பற்றி நீங்கள் சுஜாதாவிடம் கேட்டிருந்தீர்களில்லையா. உலகம் முழுவதும் நல்லவர்களாகக் கூட உருவாக்கலாம். ஆனால் அதில் அர்த்தம் இல்லை. புறா ஒரு தடவையில் இரண்டு முட்டைகள் இடும். குஞ்சு பொரிக்கும் போது அதில் ஒன்று ஆணாகவும் மற்றையது பெண்ணாகவும் இருக்கும். இதுதான் இயற்கையின் சமன்பாடு

**ம்ம்... கேட்பதற்கு நிரம்பவே சுவாரஸ்யமாயிருக்கிறது.**

இயற்கையை அனுசரித்துப் போக மனிதன் முயற்சி செய்ததே இல்லை. அதனை விட்டு விலகுவது ஆபத்து என்பதை இதுவரையில் புரிந்து கொண்டதும் இல்லை. மனிதனுக்கு எந்தெந்தப் பருவ காலத்தில் என்னென்ன தேவையோ அதெல்லாம் விளைகிறது. விஞ்ஞான விருத்தி என்ற பெயரில் எல்லா நாட்டிலும் எல்லாக் காலத்திலும் எல்லாக் காய்கறி களும், பழங்களும் விளைகிற மாதிரி ஏற்பாடு செய்து விட்டார்கள். இந்தியனுக்கு என்ன சாப்பிட்டால் உடம்பு நன்றாக இருக்குமோ முன்பு அதுதான் இங்கு விளைந்து கொண்டிருந்தது. இப்போது தேவைப்படாத எல்லாம் விளைகின்றன. சாப்பிடுகிறோம். உடம்பு சீர்கெட்டுப் போய் விட்டது.

மனிதன் மண்டி போட்டு நான்கு கால்களில்தான் நடக்க வேண்டும் என்று இயற்கை படைத்தது. அதிலிருந்து விடுபட்டு நிமிர்ந்தது மனிதனும்,

மனிதக் குரங்கும்தான். இதன் விளைவு - மனிதனுக்கும், மனிதக் குரங்குக்கும்தான் மூலநோயும், குடலிறக்கமும் ஏற்படுகிறது. நான்கு கால்களில் நடக்கிற எந்த மிருகத்துக்கும் தொந்தி விழுவதில்லை.

இயற்கை எத்தனையோ இரகசியங்களைத் தனக்குள்ளே வைத்திருக்கிறது. பொருட்களின் வடிவங்களுக்குள்ளேயே இரகசியங்கள் புதைந்திருக்கின்றன. அவரை விதை, முந்திரிப் பருப்பு எல்லாம் வளைந்திருக்கின்றன வல்லவா! சிறுநீரகத்தின் வடிவமும் அதுதான். சிறுநீரக நோய்க்குத் தேவையான மருந்து இவற்றிலிருந்து எடுக்கப்படுகிறது, இதயக் கோளாறுகளுக்கு தாமரைப் பூவிலிருந்து எடுக்கப்படுகிறது, கண் நோய்களுக்கு நெல்லிக்காயிலிருந்து எடுக்கப்படுகிறது, குடல் நோய்களுக்குப் புடோலங்காய், மூளைக் கோளாறுக்கு விளாம்பழம் என்று நம்முடைய உடல் உறுப்புகளுக்கும் இயற்கைப் பொருட்களுக்கும் சம்பந்தம் உண்டு என்பதை மனிதன் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொண்ட வரைக்கும் விஞ்ஞானம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறான்.

**தீவிரவாதம் அழிந்து போவதில் கூட இயற்கையின் பங்களிப்புதான் அதிகமாக இருக்கும் என்கிறார்களே!**

ஆமாம். இயற்கையே அழித்து விடும். சமீபத்தில் 3000 தீவிரவாதிகள் பூகம்பத்தால் பலியானார்கள் என்பது பல நாடுகளின் தலைவலியைக் குறைத்ததுண்மை. அநாவசிய உயிர்க் கொலைகளை யாரும் விரும்புவதில்லை. அதை யார் செய்தாலும் பிரதிபலனை இயற்கை கொடுத்து விடும். அதனால் இதெல்லாம் பற்றி அநாவசியமாகக் கவலைப்பட வேண்டியதில்லை.

தீவிரவாதம் உச்சக் கட்டத்துக்குப் போனதால், இராணுவ முகாம்களை மூட வேண்டும் என்று அமெரிக்கா இப்போது திட்டம் வகுத்திருக்கிறது. பலவற்றை மூடியும் விட்டது. இராணுவத்தை அதிகரிக்க அதிகரிக்கத்தான் அச்சுறுத்தலும் அதிகரிக்கிறதென்று அமெரிக்கா கருதுகிறது. அத்துடன் அது அநாவசியமான செலவென்றும் புரிந்து இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

**யாருடைய இலட்சியம் இறுதிவரையில் நிலைத்து நின்று வெற்றி பெறக் கூடும்?**



எந்த இலட்சியவாதியுமே உலகத்தில் ஜெயித்தது கிடையாது. இலட்சியம் என்று நாம் சொல்லிக் கொண்டிருப்பதும் ஒன்றுமே இல்லை. காந்தி, அஹிம்சையைப் போதித்தார். அவருக்குப் பிறகு இந்தியாவில் அஹிம்சை வளர்ந்து விட்டதா? அதற்குப் பிறகுதான் பணம் வாங்கிக் கொலை பண்ணுகிறான். பெரியார் பகுத்தறிவுக் கொள்கையைப் பிரசாரம் செய்தார். அதற்குப் பிறகுதான் மனிதன் தெருவுக்குத் தெரு கோயில் கட்ட ஆரம்பித்தான்.

லெனினால் கொம்யூனிஸம் வளர்ந்தது. இப்போ என்னாயிற்று? ஒவ்வொருத்தரும் இருக்கிற வரைக்கும் ஏதாவது மாறுதல்களைச் செய்து கொண்டே தான் இருப்பார்கள். ஆனால், இயற்கையை அனுசரித்துப் போவதற்கும், அதைப் புரிந்து கொள்வதற்கும் தெரிந்தவர்களுக்கு இலட்சியம், கொள்கை ஒன்றும் இருக்காது. எந்த இலட்சியமும் இயற்கையிடம் தோற்றுத்தான் போய் விடுகிறது. முந்திரிப் பருப்பை நேராக வைக்கிறேன் என்று யாராவது முயற்சி செய்தால் முடியுமா?

உலகம் எப்போதும் போலவே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஊடகங்கள் அதிகமாக இருப்பதால் சிறிய விடயம் கூடப் பெரிதாக நடப்பது போல் தெரிகிறது. எல்லா சம்பவங்களையுமே உடனுக்குடன் பார்க்கிறோம் என்பதால் உலகம் முழுவதுமே அக்கிரமம் நடப்பதாக நினைக்கிறோம்.

இவ்வுலகத்தில் ஆயுதங்களால் காயப்படுத்திக் கொல்பவர்களை விட வார்த்தைகளால் காயப்படுத்திச் சாகடிப்பவர்கள்தான் அதிகம் என்கிறார்கள். ஆயுதங்களால் காயப் படுத்துகிறவர்களைப் பத்திரிகையில் எழுதுகிறோம். தொலைக்காட்சியில் காட்டுகிறோம்.

இன்று கொழும்பில் இரண்டு பேர் திட்டிக் கொண்டார்கள் என்று தொலைக் காட்சியில் காட்டுவார்களா? அல்லது பத்திரிகையில் பிரசுரிப்பீர்களா? 50 பேர் பயணம் செய்த பஸ் விபத்துக்குள்ளாகி 02 பேர் மட்டும் இறந்து விடுகிறார்கள் என்றால் 48 பேரும் பத்திரமாக பயணம் செய்தார்கள் என்றா செய்தி வெளியிடுகிறார்கள். கெட்ட விஷயங்களைத்தான் உலகம் சுவாரஸ்யமாகப் படிக்கிறது என்பதால் மீடியாக்கள் எல்லாமும் அவற்றுக்கே முதலிடம் தருகின்றன.

**தீவிரவாதம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது என்ன?**

பழி உணர்வுதான். நீ என்னைப் பழி வாங்குகிறாய், நான் உன்னைப் பழி வாங்குகிறேன் என்கிற போக்கு இது! மனிதன் பிறந்ததிலிருந்தே இந்த உணர்வு இருக்கிறது. அப்போது கத்தி வெட்டு. இப்போது குண்டு வெடிப்பு.

மேற்குலக நாடுகள் புற வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டவை வீடு நன்றாக இருக்க வேண்டும். வசதியாக இருக்க வேண்டும் என்கிற எண்ணம் அது! கீழ்த்திசை நாடுகள் அக வளர்ச்சியில் அதிக ஈடுபாடுடையவை. இந்த அக வளர்ச்சி - மன வளர்ச்சி குறைந்ததால் தான் தீவிரவாதம் தோன்றியது. உள்முகப் பயணம் என்கிற இந்த மனோபாவம் இன்று இல்லாமற் போய் விட்டது. உங்களுக்குள் இருக்கிற நல்லவனைப் புரிந்து கொள்ளுங்கள் என்கிறார்கள் ஞானிகள். ஒரு மனிதனுக்குள்ளேயே மூன்று பேர் இருக்கிறார்கள். என்னைப் பற்றி நான் நினைக்கிறது ஒரு மனிதன், என்னைப் பற்றி நீங்கள் நினைக்கிறது இரண்டாமவன், நம் இருவருக்கும் தெரியாமல் இன்னொருவன் இருக்கிறான். இவன் மூன்றாமவன். இவனைக் கண்டு பிடித்து விட்டால் பிரச்சினை இருக்காது. இதை வார்த்தையில்தான் சுலபமாகச் சொல்லலாம். செயலாற்றுவது நிறையக் கஷ்டம். அடிபட்டு அடிபட்டு கஷ்டப்பட்டுத்தான் திருந்த வேண்டும்.

**இன்று ஆசிய நாடுகளில் அதிகரித்து வருகின்ற யோகா நிலையங்கள், அவற்றின் இலக்கு; இவற்றின் மூலம் மனங்களைச் செம்மைப்படுத்தி மக்களை நல்வழிப்படுத்த முடியுமா?**

அறிவுரைகளை எந்த மனிதனும் ஏற்று நடப்பதில்லை. அனுபவங்கள்தான் மனிதனைத் திருத்த முடியுமே தவிர; அறிவுரைகளால் முடியாது. 'நெருப்பு சுடும் தொடாதே' என்று நான் சொன்னால், மரியாதைக்காகத் தொடாமல் இருப்பீர்கள். பின்பு மறந்து விடுவீர்கள். ஆனால் நீங்கள் ஒரு தடவை தொட்டீர்களானால் அதன் பிறகு மறக்காது. அறிவுரைகள் எல்லாம் கொஞ்ச நேரத்துக்குத்தான் சரியென்று தலையாட்ட வைக்கும். அனுபவம் தான் உங்களைத் திருத்தும். அறிவுரைகளைக் கேட்டு ஒருவன் திருந்தி விடுகிறான் என்றால், இவ்வளவு நூல்கள் சிரஞ்சீவியாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. திருக்குறளைப் படித்து ஒருவன் திருந்தி விட்டானென்றால் அதற்குப் பின் திருக்குறள் எதற்கு? கோயிலுக்குப் போய் ஒருவன் நல்லவனாக மாறி விடுவான் என்றால் அதன் பின் எதற்கு கோயில்? ஆற்றைக் கடந்தவர்களுக்கு ஓடம் எதற்கு? திரும்பித் திரும்பி



வந்து போய்க் கொண்டிருப்பது,முன்னேற்றம் இல்லையே! அடுத்தவர்களுக்கு அசௌகரியம் இல்லாமல் வாழக் கற்றுக் கொண்டால் போதும் என்பதுதான் என்னுடைய கருத்து.

**நாம் வாழும் முறை சரியா, தவறா என்று எப்படிக் கண்டு பிடிக்கிறது?**

படுத்தவுடன் தூங்கம் வர வேண்டும். அப்படி வரவில்லையென்றால், உடம்பில் அல்லது மனதில் கோளாறு என்று அர்த்தம். உடம்பில் கோளாறு என்றால் மருத்துவரைப் பார்க்க வேண்டும். மனதில் கோளாறு என்றால் நாமாகவே அதனைச் சரிசெய்ய வேண்டும். யாரிடம் சண்டை போட்டோம் அல்லது வேறு என்ன சிக்கல் என்று பார்க்க வேண்டும். எதிலெல்லாம் இருந்து விலகியிருக்கிறீர்களோ அதிலெல்லாம் உங்களுக்குத் துன்பம் இல்லை. உலகப் பொருட்களை எல்லாம் பயன் படுத்திக் கொள்ளத் தெரிந்து கொள்ள வேண்டுமே தவிர சொந்தம் கொண்டாட நினைக்கக் கூடாது. மனிதர்களிடமும் அப்படியே இருக்கலாம். இதெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமா, இல்லையா என்று தெரியவில்லை. முடிந்தவரை பின்பற்றலாம். நம்முடைய நோக்கம் என்ன? அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதுதானே! உங்கள் மனதிடம் கேளுங்கள் இதையே சொல்லும்.

**இவ்வளவுக்குப் பின்னரும் கூட எனக்கு ஏதாவது ஓர் அறிவுரை கூறுங்கள் என்று நான் கேட்டால்...!**

சொல்ல விரும்புவது, கேட்க விரும்புவது எல்லாம் ஒரு பாவனைதான். இவ்விரண்டும் எவருக்குமே உடன்பாடில்லாத விடயங்கள். அவரவருடைய அனுபவங்கள் என்ன சொல்கின்றனவோ அவற்றின் படியே நடந்து கொள்ளுங்கள் என்பதுதான் உங்களுக்கும் எனக்குமான அறிவுரை. பள்ளிக்கூட வாத்தியார் மாதிரியல்ல அனுபவ வாத்தியார். பள்ளிக்கூட வாத்தியார் முதலில் பாடம் சொல்லிக் கொடுப்பார். பின்பு பரீட்சை வைப்பார். அனுபவ வாத்தியார் முதலில் பரீட்சை வைப்பார். அதனூடாகத்தான் ஒரு பாடத்தைச் சொல்லித் தருவார்.

*20.11.2005*



# அஷ்ரப் சிஹாப்தீன்

'ஓட்டமாவடி அஷ்ரஃப்' என்ற பெயரில் இலக்கிய உலகிற்குள் சிறக்க நுழைந்தவர் அஷ்ரஃப் சிஹாப்தீன்! எழுபதுகளின் பிற்கூறிலிருந்து எழுதிக் கொண்டிருப்பவர். தாள்களை அதிகரித்து வார்த்தைகளை விதைக்காமல், அவசியங்களை மட்டும் அழகுறப் பதிவு செய்யப் பழகியிருக்கிறது இவருடைய எழுதுகோல். ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த போதே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் இணைந்தவர். தமிழ்ச் சேவை, முஸ்லிம் சேவை, கல்விச் சேவை ஆகியவற்றில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியும், தொகுத்தும், தயாரித்தும் வழங்கியவர். முஸ்லிம் சேவையில் நீண்ட காலமாக இவர் நடத்திய 'அறிவுக் களஞ்சியம்' நிகழ்ச்சி அவருடைய ஆசிரியப் புத்தியை அதிகமாக உணர்த்தியதொன்றாகும். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திலும் 10 வருடகாலம் செய்தி அறிவிப்பாளராகப் பணியாற்றியுள்ளார். 2002 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் அனுசரணையுடன் கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டவர்.

இலக்கியத்தின் அனைத்துக் கூறுகளிலும் ஆர்வமுள்ள இவர், 'மீண்டும் தலைப்புச் செய்திகள்' என்ற தலைப்பில் தினகரனிலும், 'திரும்பிவரும் தெரு' என்கிற தலைப்பில் தினக்குரலிலும் எழுதி வந்த பத்தித் தொடர்கள் பலராலும் பாராட்டப்பட்டவை. 'காணாமல் போனவர்கள்' என்ற தன்னுடைய முதலாவது கவிதைத் தொகுதியை 1999 இல் வெளியிட்டார்.

இந்த அனுபவங்களினதும், ஆளுமைகளினதும் கூட்டுத் தொகுப்போடு அஷ்ரஃப் சிஹாப்தீன் மேற்கொண்ட சவாலான முயற்சியாக, 'யாத்ரா' என்ற கவிதை இதழைத் தொடங்கியமையைக் குறிப்பிடலாம். இலங்கையின் முதலாவது தமிழ்க்கவிதை இதழ் என்ற சிறப்போடு 2002 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு காலாண்டிலும் 'யாத்ரா' வெளிவந்து கொண்டிருக்கிறது. படைப்பாளி எவராக இருந்தாலும், அவர்களுடைய படைப்புக்களை மட்டும் விமர்சனம் செய்யும் தன்மை; இவர் கொண்டிருக்கிற விஷேட தகுதி எனலாம். தற்போதெல்லாம் ஊடகங்களோடு ஒன்றிப் போகாமலும், அதிகமாக எழுதாமலும் ஏன் இருக்கிறீர்கள் என்று கேட்பதற்காக நிகழ்ந்த சந்திப்பு இது!

**இலத்திரனியல் ஊடகத்துறை தொடர்பில் - தற்போதைய உங்கள் நிலை ஓய்வா? அல்லது விலகலா?**

தொலைக்காட்சிச் செய்தி அறிவிப்பாளர் என்ற நிலையை 2002 ஓகஸ்ட் அளவில் நானாகவே கைவிட்டேன். நான் இவ்வாறு ஒதுங்குவது கண்டு பல நெருக்கமான நண்பர்கள் என்னைக் கடிந்து கொண்டதுண்டு. அழைப்பு வந்தால் அவ்வப்போது இலங்கை வானொலியில் செய்திகள் வாசிக்கச் செல்கிறேன். புதிதாக வானொலி நிகழ்ச்சிகளை நடத்தும் ஆசையும், ஆவலும் உண்டு. அதற்குரிய வாய்ப்பும், வசதியும் சரியாக அமைய வேண்டும்.

**கவிஞன், ஊடகவியலாளன் ஆகிய உங்கள் இரு வேறு முகங்களில் எதனுடைய அடையாளத்துக்கு எதை அழுத்தமாய்ப் பயன் படுத்தினீர்கள்?**

கவிஞன் என்ற அடையாளத்துடன்தான் நான் ஊடகத்துக்குள் நுழைந் தேன். ஆனாலும் பின்னர் இவ்விரண்டு துறைகளும் பல்வேறு வழிகளில் ஒன்றுக்கொன்று உதவின. என்னுடைய வாழ்வின் முன்னேற்றத்திலும் இவ்விரண்டு துறைகளும் சம அளவிலான பலத்தையும், துணையையும் வழங்கின என்றுதான் சொல்ல வேண்டும்.

**இப்போதெல்லாம் வானொலிகளைக் கேட்கும் போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?**

ஒன்றும் தோன்றுவதில்லை. ஒரு காலத்தில் வானொலியைக் கேட்டுக் கற்றுக் கொள்வதற்கும் நம்மீது தாக்கம் செலுத்துவதற்கும் ஏராளமான நிகழ்ச்சிகள் இருந்தன. கவிதை, நாடகம் என்று தமிழ் மொழி தேனாகப் பாய்ந்தோடியது. சினிமாவிலிருந்து கூட 'நல்ல தமிழ் கேட்போம்' என்று ஒரு நிகழ்ச்சி தயாரித்து வழங்கப்பட்டது. 'ஹலோ.... யார் பேசுகிறீர்கள்... எங்கிருந்து பேசுகிறீர்கள்... உங்களுக்கு என்ன பாடல் வேண்டும்... யார் யாருடன் சேர்ந்து பாடலைக் கேட்க விரும்புகிறீர்கள்....' - செய்தியறிக் கையை விடுத்துக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இவ்வளவுதான் இன்றைய வானொலிகளின் சாராம்சமாகத் தோன்றுகிறது.

**ஒலிபரப்பாளன், ஒளிபரப்பாளன், கவிஞன் என்கிற எந்த நிலை உங்களுக்கு அதிகபட்ச நிறைவைத் தந்திருக்கிறது?**



கவிஞன், ஒலிபரப்பாளன், ஒளிபரப்பாளன் என்ற அடிப்படையிலேயே எனக்குண்டான நிறைவைக் குறிப்பிட முடியும். துப்பாக்கிகள் தீர்ப்பெழுதும் ஒரு தேசமாக இருந்த போதும் கூட, கவிஞன் என்ற நிலை ஓரளவு சுதந்திரமானது. நான் அரச வானொலியின் பகுதி நேர அறிவிப்பாளன். அரச வானொலிக்குரிய கட்டுப்பாடுகள் இருந்த போதும் சுதந்திரம் இருந்தது.

நமது திறமையைக் காட்டக்கூடிய நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கும், தொகுப்பதற்கும் சிரேஷ்டமானவர்கள் இருக்கின்ற போது இளையவர்களுக்கு அரிதாகவே வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. கிடைக்கின்ற வாய்ப்பை சரிவரப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தால் பெயர் பெற்று விடலாம். தொலைக்காட்சியைப் பொறுத்தவரை ஏறக்குறைய பத்து வருடங்கள் செய்தி அறிவிப்பாளனாகக் கடமையாற்றியுள்ளேன். அவ்வப்போது நேர்காணல்கள் சிலவற்றையும் செய்துள்ளேன். இவை யாவற்றிலுமே எனக்குத் திருப்தி இருக்கத்தான் செய்தது.

**ஓர் ஒலிபரப்பாளனாய், இத்துறை சார்ந்து உங்களைத் திரும்பிப் பார்க்க வைத்தவர்கள் பற்றிக் கூறுங்கள்?**

இக் கேள்விக்கு நான் பதிலளிக்க வேண்டுமாக இருந்தால் நிறையப் பேச வேண்டியிருக்கும். முன்னோடிகளையோ, சம காலத்தவர்களையோ குறிப்பிடுவதாக இருந்தால் ஒரு பெரும் பட்டியலைக் குறிப்பிட வேண்டி வரும். இவர்கள் எல்லோரிடத்திலும் ஏதோ ஒன்றை நான் கற்றிருக்கிறேன். ஒலிபரப்பில் என்னை நெறிப்படுத்திய சனூஸ் முஹம்மது பெரோஸை நன்றியுடன் நான் ஞாபகப்படுத்த வேண்டும். தனது அதிசயிக்கத்தக்க எழுத்தாற்றலால் என்னைக் கவர்ந்தவர் மஹ்தி ஹஸன் இப்றாஹீம். ஓர் அறிவிப்பாளனில் அவரைப் போன்ற எழுத்தாற்றல் மிக்க இன்னொரு திறமைசாலி இன்னும் வரவில்லை. சமகாலத்தில் கடமையாற்றிய சிரேஷ்ட அறிவிப்பாளர்கள் மற்றும் எனது நண்பர்களது திறமை வெளிப்பட்ட பல சம்பவங்கள் உள்ளன. சொல்வதாக இருந்தால் எல்லோரைப் பற்றியும் சொல்ல வேண்டியிருக்கும்.

தனியார் வானொலிகள் வந்த பிறகு அவற்றில் சில திறமைசாலிகள் இருந்தனர். அவர்களில் மப்றூக்கை மட்டும் விஷேடமாகக் கேட்பேன். புத்திசாதுரியமிக்க ஓர் ஒலிபரப்பாளராகவும், கவிஞராகவும் அவர்

இருப்பது அதற்குக் காரணம். ஒரு பெரு விழாவொன்றை அவர் தொகுத்து வழங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த அப்துல் ஹமீத் பிறகொரு சந்தர்ப்பத்தில் அவர் சிறப்பாக நிகழ்ச்சியை நகர்த்திச் சென்றதாக என்னிடம் தெரிவித்தார்.

எனக்குத் தனியார் வானொலிகளைக் கேட்கக் கிடைத்த சந்தர்ப்பங்களின் படி மேலும் இருவர் உள்ளனர். இலங்கை வானொலியில் கடமையாற்றி இன்று சக்தியில் இருக்கும் அவர் சரியான வெளிப்பாட்டு முறையுடன் அறிவிப்புச் செய்பவர். சூரியனில் இருக்கும் இளைஞர் வேகமாகப் பேசக் கூடியவர். ஆனால், இருவரிலும் சிறு சிறு குறைபாடுகள் உள்ளன.

**தகுதி தரைமட்டத்தில் இருக்க, வாய்ப்புகள் சாதகமாக அமைந்ததால் மட்டுமே வானொலிக்கும், தொலைக்காட்சிக்கும் இளைய தலைமுறை யொன்று படையெடுத்து அவற்றை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாய் பல மூத்த ஊடகவியலாளர்கள் (ஓய்வு பெற்றவர்கள்) விசனம் தெரிவிக்கிறார்கள். உங்களுடைய அவதானிப்பில் இந்த விடயம் எப்படிப் படுகிறது?**

ஓர் அறிவிப்பாளராகத் தெரிவாகி நான்கு பேர் கேட்கப் பேசி விட்டோம் என்றால் உச்சத்தை அடைந்து விட்டோம் என்று ஒரு போதும் நினைக்கக் கூடாது. வலுவான குரலில் பேசுவதும், தொலை பேசிக்குப் பதிலளிப் பதும் அறிவிப்பு ஆகாது. இன்றைய நிலையில் அறிவிப்பு என்பது செய் தியோடும், மரண அறிவித்தலோடும் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. மற்றப்படி கதைத்துக் கொண்டே இருக்கிறார்கள். சுத்தத் தமிழைப் பேச முடியாவிட்டாலும் ஓரளவுக்குக் கண்ணியமான முறையில் மொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்பது எனது விருப்பம். பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுடன் ஓர் அறிவிப்பாளர் உலகத் தின் அத்தனை மாற்றங்களையும், நிகழ்வுகளையும் அவதானித்தவராக இருப்பதும் கடமை. இன்றைய தலைமுறை இதில் கவனம் கொள்வதாக இல்லை என்பதை வானொலியைக் கேட்கும் போதும், தொலைக்காட்சி யைப் பார்க்கும் போதும் அறிந்து கொள்ளக் கூடியதாய் இருக்கின்றது.

**கவிதை இதழொன்றின் ஆசிரியர் என்கிற வகையில் இன்று நம்மவர்களின் எழுத்து நிலை பற்றி உங்கள் கணிப்பீடு என்ன?**

நல்ல பல படைப்பாளிகள் நம்மிடையே இருக்கிறார்கள். பெரும் பிரச்சினை என்னவென்றால் பெரும்பாலானோர் உச்சி வெயில் பொழுதில் தங்களது



நிழல் விழும் எல்லைக்குள் ஒரு குச்சியால் வட்டமிட்டுக் கொண்டு அதற் குள் சுல்தான்களாக உலா வருவதுதான். வேறு யாராவது சற்றுச் சிறப்பாக ஒரு படைப்பைத் தந்து விட்டால் தங்களது உடைவாளை உருவிக் கையிலெடுத்துக் கொள்கிறார்கள். உடைவாளோ, குத்துவாளோ இல்லாத வர்கள் ஒரு 'பிளேட்' (சவர அலகு) துண்டை வைத்திருக்கிறார்கள். நான் எல்லோரையும் சொல்லவில்லை.

**அதிகமான உங்கள் கவிதைகள், உங்களது இனத்தை நிலைக் களனாகக் கொண்டே படைக்கப்பட்டுள்ளன. அக்கம் பக்கம் பார்ப்பதில் அக்கறை இல்லையா அல்லது அவசியமில்லை என்று தவிர்க்கிறீர்களா?**

நான் ஒரு மௌலவியின் மகன். தந்தையின் தந்தை, தந்தையின் சகோ தரர், தாயின் தந்தை மூவரும் கூட ஆலிம்கள். எனது சூழல் இஸ்லாம் மார்க்கத்துடன் மிகவும் இறுக்கமான தொடர்பு கொண்டதாக இருந்தது. மூன்று வருடங்கள் ஜாமிஆ நளீமியா என்கின்ற இஸ்லாமியக் கலா சாலையில் மாணவன். பின்னர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்களுடனான தொடர்பு. செய்யது முஹம்மது ஹஸனின் நாவல்கள், ஜே. எம். சாலி, ஆளூர் ஜலால் போன்றோர் முஸ்லிம் வாழ்வியலையும், இஸ்லாமிய சட்ட திட்டங்களையும் கதைகளில் சொன்ன அழகு, பேராசிரியர் கா. அப்துல் கபூர், கவிக்கோ அப்துல் ரகுமான், புரட்சிக் கமால் சாலி, சமுதாயக் கவி ஞர். தாஸிம், தத்துவக் கவிஞர் இ. பதுருத்தீன் போன்றவர்களது படைப்புக்கள் யாவும் என்னை மிகவும் கவர்ந்திருந்தன. எனவே, எதையும் இஸ்லாமிய வரையறையூடாகவும், சமுதாயத்தினூடாகவும் பார்ப்பது இயல்பாகவே வாய்த்து விட்டது.

இலங்கையில் வாழும் இரண்டாவது சிறுபான்மைச் சமுதாயத்தின் அங்கம் அல்லது பிரதிநிதி நான். எனது குரல் எனது சமுதாயத்தின் குரலாய் இருப்பதில் என்ன தவறு இருக்கிறது? எனது கவிதைகளில் ஐம்பது வீதமானவை அவ்வாறுதான் அமைந்து விட்டன. ஆனால் இப்படித்தான் எழுத வேண்டும் என்று திட்டமிட்டு எனது படைப்புக்களை நான் படைக்கவில்லை.

**'காணாமல் போனவர்கள்' கவிதைத் தொகுதி வெளியான 1999க்குப் பிறகு உங்களுடைய எழுத்துக்களை மிக அரிதாகவே பார்க்க முடிகிறது. என்ன காரணம்?**

அந்த நூல் வெளிவந்த பிறகு கவிதைகள் சில வெளிவந்தன. தினக் குரலில் சில மாதங்கள் 'திரும்பி வரும் தெரு' என்ற தலைப்பில் பத்தியொன்றை எழுதி வந்தேன். தேவகௌரி எனக்களித்த உற்சாகம் அது. அதைத் தொடர்ந்து எழுதுவதற்கு அவகாசம் இல்லாது போயிற்று. தோன்றுவதையெல்லாம் ஏதோ ஒரு வடிவத்தில் எழுதுவதாக இருந்தால் எழுதிப் பிரசுரித்து நான்கைந்து புத்தகங்களை வெளியிடலாம். ஆனால் அதில் அஷ்ரஃப் சிஹாப்தீன் இருக்க மாட்டார். முதற்தொகுதிக்குப் பிறகு வெளியான கவிதைகளைத் தொகுத்து வெளியிடும் எண்ணத்தில் இருக்கிறேன். தருணம் வாய்க்கும் போது அவை வெளிவரும்.

இது தவிர இராக்கியக் கவிஞர் ஜமால் ஜுமாவின் 'புத்தகங்களின் புத்தகம்' என்ற நெடுங் கவிதையைத் தமிழாக்கம் செய்துள்ளேன். யாத்ரா தொடங்கிய பிறகு எனது சகல இலக்கியச் செயற்பாடுகளுமே யாத்ராதான் என்றாகி விட்டது. 2002 இல் நடத்தப்பட்ட உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டுக்கான ஏற்பாடுகளிலேயே ஒரு வருடம் கழிந்து போயிருக்கிறது.

**இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டை இலங்கையில் முன்னின்று நடத்தியவர்களில் நீங்களும் ஒருவர். சொல்லுங்கள் இஸ்லாமியத் தமிழ் ஏன் அவசியமாயிற்று?**

அவசியம் என்று கருதி இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் படைக்கப் படவில்லை. உங்களுக்குத் தெரியும், கடந்த காலங்களில் முஸ்லிம்கள் தமது சமய நடவடிக்கைகளை மிகப் பேணுதலோடு மேற்கொண்டி ருக்கிறார்கள். அவர்களது இலக்கியப் படைப்புகளில் தமது பண்பாடு, கலாசாரம், வழிபாடுகள், சமயக் கிரியைகள் பற்றி அதற்கே உரித்தான முறையில் வெளிப்படுத்தியுள்ளார்கள். சீறாப் புராணம் போன்ற ஒன்றிரண்டு இலக்கியங்களைத் தவிர ஏனையவை தமிழ் கூறும் நல்லுலகால் கண்டு கொள்ளப்படவில்லை. அல்லாமா உவைஸ் அவர்களுக்கு இவற்றை வெளிக்கொணர்ந்ததில் பெரும் பங்குண்டு.

முஸ்லிம்களால் படைத்தளிக்கப்பட்ட ஏறக்குறைய இரண்டாயிரம் இலக்கி யங்கள் இருப்பதாக அறியப்பட்ட போது தமிழ் உலகம் ஆச்சரியப் பட்டது. எனவே இவற்றைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கும் ஆய்வு செய்வதற்கும், இலக்கியப் பரப்புக்குக் கொண்டு வருவதற்கும் இவ்வாறான மாநாடுகள் தேவைப்படுகின்றன.



சென்னையில் நடந்த ஒரு மாநாட்டுக்கு டொக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் என்னைப் பலவந்தப்படுத்தித்தான் அழைத்துச் சென்றார். அங்கு போன பிறகுதான் இதே மாதிரி ஒரு மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டும் என்ற ஆசை எனக்குள் ஏற்பட்டது. காரணம், வாழ்வில் சந்திக்க முடியுமா என்று ஒரு காலத்தில் நான் ஏங்கிய பல எழுத்தாளர்கள் சர்வசாதாரணமாக என்னருகே இருந்தனர். ஏனைய இலங்கை இலக்கிய அன்பர்களுக்கும் இவ்வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று நான் விரும்பினேன்.

இதே வேளை இன்று இஸ்லாமிய இலக்கியம், முஸ்லிம் இலக்கியம் என்றும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் இருக்கிறதா என்றும் கூடச் சர்ச்சைகள் நடைபெற்று வருகின்றன. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள் நடைபெறாதிருந்தால் இவ்வாறான சர்ச்சைகள் எழுந்திருக்க முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதே வேளை சர்ச்சைகளில் இறங்கியிருக்கும் அன்பர்கள் எதிர்காலத்தில் இம்மாநாடுகள் எவ்வாறு, எந்த அடிப்படையில் நடைபெற வேண்டும் என்ற முடிவுக்கும் வந்தாக வேண்டும்.

**'ஸெய்த்தூன்' என்கின்ற உங்களின் புகழ் பெற்ற கவிதை, பலஸ் தீனக் கவிதையொன்றின் தழுவலாக உள்ளதென்று அண்மையில் தேசிய வாரப் பத்திரிகையொன்றில் குறிப்பொன்று பிரசுரிக்கப் பட்டிருந்ததே... உங்கள் பதில் என்ன?**

ஆம். இரண்டு கவிதைகளையும் அருகருகே பிரசுரித்துக் குறிப்பு இடம் பெற்றிருந்ததாக இரண்டு வாரங்களுக்குப் பிறகு கவிஞர் ஒருவர் தொலை பேசியில் எனக்குத் தெரிவித்தார். உண்மையில் நான் அதனைப் பார்த் திருக்கவில்லை. மூன்றாவது அல்லது நான்காவது வாரம் மிகக் கேவல மான முறையில் ஒரு குறிப்பு வெளிவந்திருந்தது. கவிதைகளைப் பிரசுரித்து விட்டு நானோ என் சார்பில் வேறு ஒருவரோ பதில் எழுதினால் இன்னும் கேவலப்படுத்தலாம் என்று எதிர்பார்த்து, அவ்வாறு ஏதும் நிகழாததால் மேற்சொன்ன கூற்றை அவர்கள் எழுதியிருக்கலாம் என்று என்னால் யூகிக்க முடிந்தது. அந்தக் குறிப்பைப் படித்தவர்கள் இது எழுதப் பட்டதன் நோக்கம் என்ன என்பதைப் புரிந்திருப்பார்கள்.

இந்தக் கவிதை என்னால் எழுதப்பட்டு வெளியானது 1985ஆம் ஆண்டு. இது ஒரு தழுவல் என்று 2006 ஆம் ஆண்டு எழுதியிருக்கிறார்கள். ஆக, சம்பந்தப்பட்ட நபருக்கு இதைக் கண்டு பிடிக்க இருபது ஆண்டுகள்

தேவைப்பட்டிருக்கிறது. எழுச்சிக் குரலில் வெளியான பிறகு பல தடவைகள் மீள் பிரசுரம் செய்யப்பட்ட கவிதை இது. அக்கரைப்பற்றில் ஆயிரக் கணக்கில் அச்சிட்டுத் துண்டுப் பிரசுரமாக இக்கவிதை வெளியிடப்பட்டது. கவிக்கோ அப்துல் ரகுமான் தனது 'கவிக்கோ' இதழிலும் பின்னர் 'சமநிலைச் சமுதாயம்' இதழிலும் இரண்டு தடவைகள் மீள் பிரசுரம் செய்துள்ளார். கவிதை இடம்பெற்ற எனது கவிதை நூலை விமர்சனம் செய்தவர் சி. சிவசேகரம். அவர் இது பற்றி எதுவும் சொல்லியிருக்கவில்லை.

தமக்கு ஒவ்வாத விடயத்தை அல்லது தமது கருத்துக்கு மறு கருத்து எழுதியதற்காகக் கவிஞரும், தீவிர சிந்தனாவாதியுமான - இதயத்திலும், தலையிலும் சத்திர சிகிச்சை மேற்கொண்ட ஒரு நண்பரை அதே பத்திரிகையின் அதே பக்கத்தில் மனிதாபிமானமற்ற முறையில் ஒரு முறை 'மனோ நிலை பாதிக்கப்பட்டவர்' என்று குறிப்பிட்டிருந்தார்கள். இவர்கள் இவ்வாறு எழுதியிருந்த பிறகு அவரது மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன. இந்தப் பக்கத்தைக் கையாள்பவர்களின் கொள்ளளவு இவ்வளவுதான் என்றால்; அவர்கள் இப்படித்தான் எழுதி வருவார்கள் என்றால்; நாம் அதற்கு ஏன் வருத்தப்பட வேண்டும். மற்றொரு முறை கவிதையைப் பிரசுரித்தமைக்கு வேண்டுமானால் நன்றி என்று ஒரு வார்த்தையைச் சொல்லிக் கொள்ளலாம்.

**மரபைப் பின் தள்ளி வேகமெடுத்து வந்த புதுக்கவிதைகளின் புறப்பாடுகள் குறித்து...**

கவிதைகள் எங்கும் புறப்பட்டுப் போய் விடவில்லை. நாம்தான் 'போக்கு'க் காட்டிக் கொண்டிருக்கிறோம். என்னுடன் உடன்படாத பலர் இருக்கலாம். தமிழ்க் கவிதையை உலக தரத்திற்குக் கொண்டு செல்கிறோம் என்றெல்லாம் சற்றுக் காலங்களுக்கு முன்னர் பெரும் ஆர்ப்பரிப்பு நடந்தது. இணையத்தில் கவிதை இடம்பெற்றால் அதை ஒரு 'நோபல்' பரிசு லெவலுக்குப் பேசினார்கள். தமிழ் இணையங்கள் சிலவற்றின் இலக்கியப் பக்கங்களுக்கு அல்லது கவிதைப் பக்கங்களுக்குச் செல்வீர்களானால் புத்தகங்களாக வெளிவருவதை விட இணையத்தில்தான் குப்பைகள் அதிகம் என்பதைக் கண்டு கொள்வீர்கள். யார் வேண்டுமானாலும் கவிதை என்ற பெயரில் அனுப்பி வைத்தால் அது இணையத்தில் இடம்பெற்று விடும் நிலை காணப்படுகிறது. கனினியின் வாசல்களைத் திறக்கத் திறக்க ஏற்படும் அதிசயங்களினூடாக இலக்கியத்தைப் பேசிக் கொண்டு தமிழ்க்



கவிதை எங்கேயோ போய் விட்டது என்று சொல்வது சிறுபிள்ளைத் தனம். மஹாகவியின் 'புள்ளியளவில் ஒரு பூச்சி' போலவோ, புரட்சிக் கமாலின் 'நாளை வருவான் ஒரு மனிதன்' போலவோ அல்லது அதற்கு ஈடானதாகவோ ஒரு நவீன கவிதையை நம்மால் காண முடியவில்லையே.

**கவிதை தாண்டி சிறுகதை, நாவல் முயற்சிகளில் உங்களுக்கு முடியவில்லையா? அல்லது முயலவில்லையா?**

எண்பதுகளின் முற்பகுதியில் சில சிறுகதைகள் எழுதியிருக்கிறேன். அவற்றில் பிரசுரமானவை மூன்று. ஒன்று, 'தினகரன் வாரமஞ்சரி' யிலும் இன்னொன்று மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'களம்' சஞ்சிகையிலும், மற்றையது எம்.எச்.எம். ஷம்ஸ் அவர்களின் 'அஷ்ஷூறா' விலும் வெளிவந்தன. ஏனோ தெரியவில்லை, சிறுகதைகளுடனான ஈடுபாடு விடுபட்டுப் போயிற்று. நிறைய எழுதி, மீண்டும் திருத்தி எழுதி... மீண்டும் செப்பனிட்டு என்று திருப்பித் திருப்பி எழுதும் சோம்பலும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும். ஆனாலும் சிறு கதைகள் சிலவற்றுக்கும் நாவல் ஒன்றிற்குமான கருக்கள் நீண்ட நாட்களாக மனதுக்குள் கிடக்கின்றன. சிறுகதைகளை எழுதிப் பிரசுரித்து விட்டு தொகுதியாக்கும் எண்ணமும் உள்ளது. ஆனால் தொகுதி வெளியிடுவதற்காகக் கதைகளை எழுத முடியாது.

**நம் நாட்டைப் பொறுத்தவரையில் சிற்றிதழ்களின் வருகை ஒரு போதும் நிலைத்து நின்று நீடிப்பதில்லை என்று தெரிந்தும் ஏன் யாத்ராவைத் தொடங்கினீர்கள்?**

உண்மையில் நல்ல கவிதைகள் சிலவற்றைப் படிக்கலாம் என்ற ஆசைதான். ஒரு கைந்நூலளவு சின்னதாய் இந்தச் சஞ்சிகை அமைய வேண்டும் என்ற கனவுடன் நீண்ட நாள் காத்திருந்தேன். பல முறை யோசித்து யோசித்து முடிவுக்கு வர முடியாது தவித்த வேளை, தைரியம் தந்தவர் நண்பர் எஸ். நளீம். ஒரு கை பார்த்து விடுவது என்றுதான் இறங்கினோம். ஓர் இலக்கியச் சஞ்சிகை இலங்கையில் இடைநடுவே நின்று விடுவதற்குப் பணம் மட்டுமே காரணம் அல்ல. சரியான வேளையில் சரியான படைப்புக்கள் கிடைப்பதில்லை, படிப்பவர்கள் உற்சாகப்படுத்துவதில்லை என்று பல காரணங்களைச் சொல்லலாம். குறிப்பிட்ட நண்பர்கள் சிலரின் ஒத்துழைப்பு யாத்ராவுக்கு இருப்பது அதன் பலம் என்று நினைக்கிறேன்.

**இலங்கையின் இலக்கியப் பரப்பினுள்ளோ அல்லது எல்லை தாண்டியோ யாத்ரா எதைச் சாதித்திருப்பதாய்க் கருதுகிறீர்கள்?**

இலங்கையில் 16 இதழ்களைத் தாண்டிய கவிதை இதழ் என்ற சாதனையை யாத்ரா அடைந்திருக்கிறது . இதுவரை முழுமையான தமிழ்க் கவிதைச் சஞ்சிகை எதுவும் 16 இதழ்கள் வந்ததில்லை (புகவம் வெளியிட்ட தூது 16 இதழ்கள் வெளிவந்தன. ஆனால் அது சஞ்சிகையாக இருக்கவில்லை). தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் யாத்ராவை ஆய்வு செய்வதாக அறிகிறேன். சிரேஷ்ட எழுத்தாளர்களில் ஒருவரான ஏ.எம். சமீம் அவர்கள் ஆய்வுக்காக அனைத்து இதழ்களையும் கேட்டிருக்கிறார். இளங்கவிஞர்கள் பலர் தமது கவிதையொன்று யாத்ராவில் வெளிவர வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

சென்னையில் பல அறிஞர்களுக்கு மத்தியில் கவிஞர் இன்குலாப் யாத்ராவை ஆய்வு செய்தார். அவரது ஆய்வு யாத்ரா 9 இதழில் இடம் பெற்றிருக்கிறது. ஆக, இலங்கையிலும், இந்தியாவிலும் யாத்ரா அறியப் பட்டுள்ளது. இதுவே எமக்குப் போதும் என்று படுகிறது.

**இந்தியப் படைப்புகளை 'நச்சிலக்கியம்' என்று விமர்சனம் செய்கிற நம்மவர்களைப் பார்க்கிறோம். அது சரிதானா? எதைக் கொண்டு இதைச் சொல்கிறார்கள்?**

இந்திய இறக்குமதிகள் யாவுமே நச்சிலக்கியங்கள் ஆகா. அங்கிருந்து வரும் ஜனரஞ்சக இதழ்களை இவ்வாறு சொல்கிறார்கள் என்று எண்ணு கிறேன். ஜனரஞ்சகமான இதழ்கள் தமிழ் சினிமாவை மையப்படுத்தி; குறிப்பாக நடிகைகளை மையப்படுத்தி வெளிவருகின்றன. கவர்ச்சியான ஒரு படத்தையேனும் தாங்கியபடிதான் இவை வெளிவருகின்றன. நேரடியாக இல்லையெனினும் மறைமுகமான பாதிப்பை இளையவர்களில் இவை ஏற்படுத்துவதற்கு இடமுண்டு. ஆனாலும் இவற்றை நிறுத்தி விடுவதால் அவற்றுக்கு நிகராக நாம் நமது சஞ்சிகைகளைக் கொண்டு வந்து விட முடியாது. அப்படிக் கொண்டு வந்தாலும் உடனேயே வெற்றி கண்டு விடவும் முடியாது.

**தமது (இந்தியர்களின்) படைப்புக்களை இலங்கையர்கள் படித்தே ஆக வேண்டும் என்கிறார் ஜெயகாந்தன். இது ஈழத்து இலக்கிய உலகின் மாற்றவே முடியாத தலைவிதியா?**



ஜெயகாந்தன் என்றால் யார் என்று கேட்கும் படித்தவர்கள் இலங்கையில் சாப்பாடு, வீடு, தொழில் என்று குறைவில்லாமல் வாழ்ந்து கொண்டிருப் பதாக நான் கருதுகிறேன். நமது இளம் இலக்கியவாதிகள் பலருக்குப் பதினைந்து வருடத்துக்கு முன் பேசப்பட்ட இந்தியப் படைப்பாளிகள் பலரைத் தெரியாது. இலத்திரனியல் பிரமாண்டங்கள் வந்த பிறகு புதிய தலைமுறை இலக்கியத்தைக் கட்டிப் பிடித்துக் கூத்தாடத் தயாரில்லை.

இலக்கியவாதிகள் என்ற அடிப்படையில் இலங்கைப் படைப்பாளிகள் இந்தியப் படைப்பாளிகளைப் படிப்பது அவசியம் என்று திரு. ஜெயகாந்தன் அவர்கள் சொல்வது சரியாக இருக்கலாம். அதே கடமை அவர்களுக்கும் உண்டு. அவர்களுக்கு இருக்கும் சந்தை வாய்ப்புத்தான் அவரை இப்படிச் சொல்ல வைத்துள்ளது. இலக்கியம் அவர்களுக்குச் சோறு. நமக்குப் பகுதி நேரப் பொழுது போக்கு அல்லது திருப்தி என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. இலக்கியம் சோறு போடும் சந்தை வாய்ப்பைத் தருவதாக இருந்திருக்குமானால் இலங்கையிலும் பல புகழ் பெற்ற எழுத்தாளர்கள் தோன்றியிருக்கக் கூடும். ஜெயகாந்தனின் கூற்றை இங்கிருந்தும் ஒருவர் சொல்லியிருக்கக் கூடும்.

**இந்திய இறக்குமதிகளைத் தடுப்பதன் மூலமே இலங்கையில் படைப்புக்களை ஊக்குவிக்கலாம் என்று கருத்துரைக்கிறார்களே! இது நமது இயலாமையில்லையா?**

ஒரு நீண்ட விவாதத்திற்குரிய தலைப்பு இது. இக்கேள்விக்குப் பதில் தருவதானால் பக்கம் பக்கமாகப் பேச வேண்டும். தமிழகத்தில் வெளிவரும் நூல், சஞ்சிகைகளையும் அங்கு அவற்றைப் படிக்கும் மக்கள் தொகையையும் இலங்கையுடன் ஒப்பிட முடியாது. இலங்கையில் அடுத்த இந்திய வார இதழுக்காகக் காத்திருக்கும் நிலைதான் உள்ளது. அதே மாதிரியான ஒரு தமிழ் வார இதழை இங்கு வெளியிட முடியாது. காரணம், தமிழ் சினிமாவும், தமிழ் நடிகைகளும் இங்கில்லை. அவர்களிடமுள்ள அச்சகப் பிரமாண்டமும் இங்கில்லை. சாண்டில்யன், ஜெக சிற்பியன், அகிலன், மு.வரதராசன், நா. பார்த்தசாரதி, ஹஸன், நீல.பத்மநாபன், தோப்பில் முஹம்மது மீரான், சுஜாதா.... என்று பெயர் பெற்ற எழுத்தாளர்களின் நேர் நிற்கும் ஓர் அணி இங்கு தோன்றவில்லை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

நமது வெளியீடுகளின் ஒரு சிறு பகுதியையாவது இந்தியாவில் சந்தைப்படுத்தும் வாய்ப்பைக் கூட நம்மால் ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. தாம் இந்தியாவிலும் அறியப்பட வேண்டும் என்று எண்ணியவர்கள் தமது நூல்களில் ஒன்றிரண்டை இந்தியாவில் வெளியிட்டனர். நிலைமை இதுதான்.

**குழுக்களாகப் பிரிந்து நிற்கும் இலக்கியச் சர்ச்சையாளர்கள் இங்கும் கூடத் தோன்றி விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. அண்மைக்கால நிகழ்வுகள் சிலவற்றை வைத்துக் கேட்கிறேன். இலக்கியத்தில் உங்கள் சார்பு என்ன?**

இலக்கியச் செயற்பாடுகளுக்காகக் குழுக்களாக இயங்கினால் செம்மையாக நடத்திச் செல்ல முடியும்தான். எதுவும் செய்யாமல் தன்பாட்டில் எழுதிக் கொண்டிருப்பவர்களும் உள்ளனர். வெறும் சர்ச்சைகளுக்காக அல்லது எதிராளி என்ற பார்வையில் உள்ளவரை அவமதிப்பதற்காகக் கட்சி கட்டிக் கொண்டு நிற்பதில் மனக்கிலேசங்கள் ஏற்படுமே தவிர, எந்தப் பிரயோசனமும் கிடைக்கப் போவதில்லை. இன்று இலக்கியச் சர்ச்சைகள் என்று வரும் சில குறிப்புகளைப் படித்தால் வாந்திதான் வருகிறது. அவற்றையே பெரிய இலக்கியச் செயற்பாடுகளாகக் கொண்டு பக்கம் நிரப்பும் நிலையைப் பார்க்க வியப்பாக இருக்கிறது. இந்தச் சர்ச்சைகளின் சாரம் சண்டையில் போய் முடிவதாக, ஆளுக்காள் தூசித்துக் கொள்வதாகத்தான் இருக்கிறது. இது பற்றிப் பதில் சொல்லிக் கொண்டிருப்பதும் கால விரயம் என்று கருதுகிறேன்.

**நாம் எதிர்கொண்ட அரசியல் நெருக்கடிகளையோ, அதனால் உருவான போராட்ட நிலைமையையோ 1980 களுக்குப் பிறகு நம்மால் (உண்மையாக) வெளிப்படுத்திப் பதிவு செய்ய முடியாமல் போய்விட்ட இழப்பை எது கொண்டு ஈடு செய்யப்போகிறோம்?**

வாழ்விலும் சரி, வரலாற்றிலும் சரி குறிப்பிட்ட காலத்துக்கு ஏதாவது ஒரு விடயத்தில் இடைவெளிகள் விழுவது நியதி. எண்பதுகளின் முற்பகுதியில் நிலைமை நன்றாகத்தான் இருந்தது. பிற்பகுதிதான் ரத்தம் தோய்ந்த காலமாக மாறிப்போனது. பாதிப்புக்கு அஞ்சிச் சிலரும், பாதிக்கப்பட்டதால் சிலரும் எழுத்தைக் கைவிட்டனர். எது எழுதப்பட்டாலும் அது



ஏதோ ஒரு வகையில் அச்சுறுத்தலைக் கொண்டு வரும் நிலையே அப்போது இருந்தது. எழுத்தாளர்களை நம்பி மனைவி, பிள்ளைகள், குடும்பம் என்றிருந்ததை நாம் மறந்து விடக் கூடாது.

ஆனாலும் கூட இந்தக் காலத்தைச் சில படைப்புகள் பதிவு செய்துள்ளன. அவை இலங்கையில் வெளிவந்துமுள்ளன. வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்து வாழ்ந்து வரும் நண்பர்கள் ஒரு தசாப்தம் கழித்து அவற்றைப் படைப்புருவாக்கி வெளியிட்டு வருவதை நாம் பார்க்கிறோம். அவை ரத்தமும் சதையுமாகப் பேசுகின்றன. ஆனால் முழுமையாக இல்லைதான். இதை நாம் எந்தவகையிலும் ஈடு செய்ய முடியாது.

**படைப்பாளியும், பதிப்பாளனும் நட்பாடும் சந்தர்ப்பமும், முரண்படும் இடமும் பற்றி...**

பதிப்பாளன் என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. ஒன்று அச்சகம் வைத்திருப்பவர். இரண்டு, ஒருவரது நூலைப் பெற்றுத் தனது செலவில் பதிப்பித்து இலாபம் பெறுபவர். முதல் வகையினர்தான் இலங்கையில் உள்ளனர். பணத்தைக் கொடுத்தால் பதிப்பகம் வைத்திருப்பவர் அச்சிட்டுத் தருகிறார். குறிப்பிட்ட நாளில் தராமலோ அல்லது புத்தகத்தைப் பெற்றுக் கொண்டு மீதி தருவதில் நூலாசிரியர் இழுத்தடிப்பதிலோ மனத்தாங்கல் தரும்.

நூல்களை வெளியிட எண்ணும் நபர்கள் ஏற்கனவே அறியப்பட்ட பதிப்பகத்தின் பெயரில் தமது நூல்கள் வெளிவர வேண்டும் என்பதற்காகப் பணத்தை முழுமையாகச் செலுத்தி அவ்வாறு வெளியிட்டுக் கொள்வதுமுண்டு. இரு பிரிவினரும் சரியாக இருந்தால் முரண்பாடுகளுக்கு இடமில்லை. இவ்வாறான இலாபம் கருதாத வெளியீட்டகங்கள் சில வேளை அவர்களுக்குப் பொருத்தமில்லை என்பதற்காக அல்லது தங்களது அணிக்குப் பொருத்தமில்லை என்று கருதுவோருக்கு உடன்படாமல் போகலாம். அத்தீர்மானத்தை மேற்கொள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டு. இந்த இடத்திலும் மனத்தாங்கல் ஏற்பட இடமுண்டு.

**ஒரு விமர்சகராகக் கூறுங்கள். நடுநிலைமை என்பது சாத்தியமா?**

சாத்தியம்தான். ஆனால் நம்மால் செய்ய முடிவதில்லை. விமர்சனத்துக்கென்று மேடையில் ஏறினால் விமர்சனத்தைத் தவிர மற்ற எல்லாவற்றை

யும் பேசுகிறோம். சில வேளை நூலாசிரியரை ஒரு மகாத்மாவாகச் சித்தரிக்க எத்தனிக்கிறோம். விமர்சகர் தன் மேதாவித்தனத்தின் மேன்மையைக் காட்ட நூலாசிரியரின் வாழ்க்கையே வெறுத்துப் போகும் அளவு பேசிய சந்தர்ப் பங்களும் உண்டு. குறையையும் நிறையையும் எடுத்து நாகரிகமாகவும், நாசுக்காகவும், சாதுர்யமாகவும் சொல்வதற்குத் தமிழில் ஆயிரக்கணக்கான வார்த்தைகள் உள்ளன.

சரியான விமர்சனங்கள் இடம் பெறாமல் போவதற்குக் காரணங்கள் பல உள்ளன. நம்மீது அபிமானம் உள்ளவரைத் தேடிப்பிடித்து விமர்சிக்கச் சொல்வது, நமது புத்தக விழாவில் இன்னாரை அழைத்து மேடையில் இருத்திப் பேசக் கொடுக்காவிட்டால் மரியாதை இருக்காது என்பதற்காக ஒருவரை அழைப்பது, பத்திரிகையாளர் ஒருவர் இருக்க வேண்டும், ஒலிபரப்பாளர் ஒருவர் இருக்க வேண்டும், ஒளிபரப்பாளர் ஒருவர் பேச வேண்டும் என்பதற்காகவெல்லாம் ஒருவரை அழைப்பது போன்ற காரணங்களால் விமர்சனங்கள் சரிவர இடம்பெறுவதில்லை. இவர்கள் யாரும் சரியாக விமர்சனம் செய்ய மாட்டார்கள் என்று நான் சொல்ல வரவில்லை. அவர்கள் பொருத்தமானவர்களா, அவர்களுக்கு நமது நூலைப் படித்து விமர்சனம் செய்ய நேரம் இருக்குமா என்றெல்லாம் நாம் சிந்திப்பதில்லை.

மனதைத் திறந்து பேசுவோமானால், நாம் விமர்சனத்திற்காகவா விழாக் களை நடத்துகிறோம்? புத்தகத்துக்குச் செலவு செய்த தொகையில் நான்கில் ஒரு பங்கேனும் சேர்ந்து விடாதா என்கிற எதிர்பார்ப்போடும், ஏக்கத்தோடுமே விழாக்களை நடத்துகிறோம். பிரபலங்களை மேடையில் வைக்கிறோம். எனவே, விமர்சனங்களும் அதற்கேற்ற மாதிரித்தான் இருக்கும்.

*18.06.2006*





# ஜெயகாந்தன்

சர்ச்சைகளைத் தன்னுள் இயல்பாகவே கொண்ட படைப்பாளி ஜெயகாந்தன். இந்தியா வின் தேசிய அரங்கில் தமிழ் இலக்கியத்தைத் தூக்கி நிறுத்தியவர். பாரதிக்குப் பின்னர் நாம் கண்ட கம்பீரமான படைப்பாளியும் இவரே! அதீத கவர்ச்சியும், காத்திரமுமான இவருடைய எழுத்துக்கள் அனைத்து மட்ட மனிதர்களையும் விசாரணை செய்து வேஷங்கலைத்திருக்கிறது. பெரும்பாலானவர்களின் பார்வைக்குச் சாதார ணங்களாகத் தெரிபவை இவருக்குள் உறுத்த லாகியும்; அவர்களுடைய ஆச்சரியங்களெல் லாம் ஒன்றுமே இல்லை எனும்படியும் ஆகிப் போன இவருடைய மனோநிலையின் பிரதிபலி ப்புக்களாய் வெளிவந்த அத்தனை படைப்புக் களும் வருங்கால வரலாற்றிற்கும் நிரந்தர விலா சங்களாகிவிட்டிருக்கின்றன.

ஒன்றையொன்று சாராத கருத்தியல்களோடு ஒவ்வொரு படைப்புக்களும் பல்வேறு பாத்திர ங்களை நமக்கு நினைவுபடுத்திவிட்டுள்ளன. அவருடைய பாத்திரங்கள் நமது சமுதாயத்தில் நம்மோடு ஒன்றியும் இருக்கலாம். நாமாகவும் இருக்கலாம். ஆனாலும் நாம் அல்லாத அவர் கள்; நமக்குரிய ஆதர்ஷ மனிதர்களாக அல்லது நமது சுதந்திரம் பற்றி உரத்துச் சிந்திப்பதற்கு ரியவர்களாகப் படைக்கப்பட்டிருக்கிறார்கள்.

எட்டாவது வரை மட்டுமே படித்த கண்ணதாசனைக் காட்டிலும் ஐந்தாவது வரை படித்த ஜெயகாந்தன் படைப்புக்களை வியப்பு மேலீட்டால் விரும்பிப் படிப்பவர்கள்; அவருடைய எழுத்துக்களுக்கு ஈடாக வேறெதனையும் கொண்டாட முடியாது.

கம்பனுக்குப் பிறகு பாரதியைக் கொண்டாடிய தமிழ் உலகம், இப்போது புதுமைப் பித்தனுக்குப் பிறகு ஜெயகாந்தனைத் தான் நிறுத்தி வைத்து நிறைவு கொள்கிறது.

கொம்யூனிசவாதியாகத் தன்னை அறிவிப்புச் செய்யாமல் அதுவாகவே வாழ்ந்தவர், பின்னாளில் காங்கிரஸுக்கு ஆதரவாளராக, அக்கட்சிகளுக்குச் சார்பாகப் பேசிக்கொண்டிருந்த காலம் ஒன்றும் இவருடைய மனோநிலையை வெளிப் படுத்திய கண்ணாடி ஆயிற்று.

நாகரிகமான, நடுத்தர வர்க்கத்து அல்லது மேல்தட்டு வர்க்கத்து மனிதர்களைப் பதிவு செய்த பல படைப்பாளிகளினின்று வேறுபட்டு விளிம்பு நிலை மனிதர்களையும், வேசிகளையும், பொறுக்கிகளையும், பிச்சைக்காரர்களையும், கூட்டிக் கொடுப்பவர்களையும், பிறழ்வு கொண்டவர்களையும் பற்றித் தயங்காமல் எழுதியவர்.

அவர்களுடைய உணர்வுகளையும், மதிப்பீடுகளையும் யதார்த்தத்தின் வெளிச்சத்தில் கலைத்துப் போட்டார். மனித மனங்களின் விசித்திரத்தைத் தனது படைப்புக்களில் பதிவு செய்த இவரை; இவருடைய எழுத்துக்களைப் படிக்கும் போது தமக்குள் ஒருவித அச்சமும் ஆச்சரியமும் ஏற்படுகிறது என்று கூறுபவர்களை நான் சந்தித்திருக்கிறேன்.

நிரம்பவும் கறாராகப் பேசுபவர், முன்கோபி என்றெல்லாம் இவருடைய தன்மைகள் பற்றி வெளியே விமர்சிப்பவர்களும் நிறையப்பேர்.

அகிலனுக்குப் பிறகு தமிழுக்கான ஞானபீட விருதினை யாருமே பெறவில்லை என்கிற குறை, தமிழ் இலக்கிய உலகில் நெடுங்காலமாகவே இருந்து வந்தது. ஜெயகாந்தனுடைய மனோநிலையோடு ஒத்துப்போக முடியாதவர்கள்- அவருடைய கொள்கைகளின் எதிர்ப்பாளர்கள் கூட, இந்த உயரிய விருதினை இவர் தான் பெறுவார் என்றும், இவருக்கே வழங்கப் பட வேண்டும் என்றும் எதிர்பார்த்தார்கள்.

''ஆனால் விருதுகளுக்கு நான் எழுதுவதில்லை'' என்று முடிவாகவே இருந்தவருக்கு ஞானபீட விருது கிடைத்திருக்கிறது. சோவியத் ரஷ்யாவின் 'நேரு விருது', தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தின் 'ராஜ ராஜ சோழன் விருது', இந்திய சாகித்ய அக்கடமி விருது ஆகியவையும் இவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சில சிறப்பு விருதுகளாகும்.

நவீனமான புனை கதைகளின் பலமான பூட்டுக் களையும், இறுக்கமாக அடைப்புக்களையும் தன்னுடைய எழுதுகோலினால் உடைத்துத் திறந்துவிட்டவர்.

தமிழ் இலக்கிய உலகினுள் தன்னியல்பாகவே திருப்பங்களை ஏற்படுத்தியிருந்த ஜெயகாந்தன்; 'இது தான் சினிமா' என்று படங்காட்டிக் கொண்டிருந்த தமிழ் சினிமாவின் போக்கினையும் மாற்ற முடியும் என்று தன்னுடைய படைப்புகளினூடாகவே முயன்று பார்த்தவர்.

பாடலாசிரியர், இயக்குநர், தயாரிப்பாளர், கதை வசன கர்த்தா, விநியோகஸ்தர் என்றெல்லாம் மிகக் குறுகிய காலத்திலேயே சினிமாவுக்குள் செயற்பட்டவர். ஆனால் நின்று நிலைக்காமல் சென்ற வேகத்திலேயே வெளியே வந்து விட்டார். சமரசம் செய்து கொள்ளத் தெரியாத; மனிதாபிமானத்தை அவ்வப்போது அடகு வைக்கத் தெரியாத தன்மைகளைக் கொண்ட இவர் சினிமாவுக்குள் இருந்திருந்தால் சீரழிந்து போயிருப்பார். ஜெயகாந்தன் என்ற ஆச்சரியம் நமக்கு அசாதாரணமானதொரு நபராகத் தெரிந்திருக்கும், அல்லது தெரியாமலே கூடப் போயிருக்கும்.

ஆனந்த விகடனில் வெளியாகி அதிகமான சர்ச்சைகளுக்கும், விமர்சனங்களுக்கும், பாராட்டுதல்களுக்கும் கூட உள்ளான 'அக்கினிப் பிரவேசம்' என்ற சிறுகதையைத் தான் 'காலங்கள் மாறும்' என்கிற பெயரில் தொடர்கதையாக எழுதினார். ஒரு சில தொடர்களுக்குப் பின்னர் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்று பெயரிட்டார்.

அது பின்னர் நாவலாக வெளிவந்து சாகித்ய அக்கடமி விருதினையும் பெற்றுக் கொண்டது. பீம்சிங் இயக்கத்தில் இந்நாவலின் பெயரிலேயே வெளிவந்த திரைப்படத்தில் நடித்திருந்த நடிகை லஷ்மிக்கும் 'தேசிய விருது' கிடைத்தது. 'ஓர் இலக்கியவாதியின் திரையுலக அனுபவங்கள்' என்ற நூலில் இது பற்றியெல்லாம் விரிவாக எழுதியிருந்தார்.

'கங்கா போகிறாள்' (சில நேரங்களில் சில மனிதர்களின் அடுத்த பாகமாய் வெளிவந்தது) 'பாரிஸுக்குப் போ', 'சினிமாவுக்குப் போன சித்தாளு', 'ஊருக்கு நூறு பேர்', ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்', எத்தனை கோணம் எத்தனை பார்வை', 'யாருக்காக அழுதான்', 'உன்னைப் போல் ஒருவன்' போன்றவை ஜெயகாந்தனுடைய ஆளுமையைப் பறை சாற்றுகின்ற அற்புதமான பதிவுகள்.

நாற்பது வருடங்களுக்கு முன்பே எழுத வந்த வர். கடந்த பதினைந்து வருடங்களாக ஏன் அமைதி காத்தீர்கள்? என்று பத்திரிகைகள் கேட்டபோது; 'எழுத்தின் மீதுள்ள மதிப்பினா லேயே எழுதாமல் இருக்கிறேன்' என்று இயல் பாய் தெரிவித்தார். முப்பது வருடங்களுக்கு முன்பு 'ஜெய ஜெய சங்கர' எழுதியவர்; 2004 இல் சர்ச்சைக்குள்ளான சங்கராச்சாரியாரை ஆத ரித்து 'ஹர ஹர சங்கர' எழுதினார். ஒட்டுமொ த்த இந்தியா அல்லது உச்சஅளவிலான இந்து மதவாதிகள் கூட எதிர்ப்பு தெரிவித்த ஒருவரை இவர் ஆதரித்து எழுதினார்.

உங்களுக்குக் கிடைத்த ஞானபீட விருது பற்றி...' என்று கேட்ட பத்திரிகைக்காரர்களு க்கும், மற்றவர்களுக்கும் 'இதற்காகத் தமிழர் கள் ஹிந்தி மொழிக்காரர்களுக்குத்தான் நன்றி தெரிவிக்க வேண்டும்' என்று கூறியதால் பல எதிர்க்குரல்களால் விமர்சனத்திற்குள்ளானார். 'ஞானபீட விருது பெற்ற படைப்பாளி ஜெயகா ந்தனுக்குப் பாராட்டு விழா நடத்தப் போகி றோம்' எனக் கூப்பிட்ட பல்வேறு தமிழ் அமைப் புக்களின் விழாவிலும் கூட தன்னுடைய கருத் துக்களை முன்வைத்து குழப்பங்களை ஏற்படு த்தினார்.

பலருடைய கேள்விகளும் இவருடைய பதில்க ளும் அச்சபைகளில் முட்டி மோதிப் பத்திரிகை களுக்குத் தீனி போட்டன. இதனால் எதிர்க் கருத்தியலாளர்கள் அடைந்த திருப்தியோ அல் லது அதிருப்தியோ மகிழ்ச்சியோ அல்லது மற்றெதுவுமோ இன்றைய இலக்கிய உலகில் பதிவாகியிருப்பது குறித்து அவர்களுக்கும் நிச் சயம் ஏதோ ஒரு அடையாளம் நிரந்தரமாகியி ருக்கிறது - ஜெயகாந்தன் என்கிற சிம்மத் தினூடாக!

ஆனால் ஜே.கே., புறக்காரணிகளின் சச்சரவு களுக்கெல்லாம் ஆடாத; தன்னுடைய சுயத்தை மாற்றிக்கொள்ளாத கம்பீரமான கலைஞன். முர ண்பாடுகள் முளைப்பதனூடாகவே முழுமை யான பலவற்றைப் பெற்றுக்கொள்ள முடிவது இயற்பியல். ஜே.கே. தான் இதற்குப் பொருத்த மாக நமக்குக் கிடைத்திருக்கிறார்.

என்னுடைய பத்தாவது வயதில் படிக்கக் கிடைத்த அவருடைய நாவல், 'சில நேரங்க ளில் சில மனிதர்கள்' இது எவருக்குள்ளும் என் னென்ன முனைப்புக்களையும் எடுக்கத் தூண் டியிருக்கலாம் அல்லது விட்டிருக்கலாம்.

அச்சிறுவயதிலேயே நான் கங்காவுடன் நட்பு கொண்டு விட்டிருக்கிறேன். சராசரிப் பெண்க ளுக்கு அப்பால் எனது சுயம் பலசாலியாக என்னை வளர்த்து விட்டிருக்கிறது. அவருடனான சந்திப்பிற்காய் நான் காத்திருந்த வருடங்கள் அதிகம்.

‘வீரகேசரிக்காக வந்திருக்கிறேன்’ என்ற போதோ, விளையாட்டுத் தனம் மிகுந்த என்னுடைய கேள்விகளின் போதோ, வள்ளுவரைவிடவும் கஞ்சத்தனமாகச் சில வார்த்தைகளில் அவர் பதிலளித்தபோதோ எனக்குப் பலரும் கூறிய முரட்டு மனிதனாகவோ முன்கோபியாகவோ ஜே.கே. தெரியவில்லை.

கடந்த 2005 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தின் ஒரு நாளில், இல 162, 94ஆவது தெரு, செக்டார் நகர், சென்னை 600078 இல் உள்ள அவருடைய இல்லத்தில் ஜே.கே. யைச் சந்தித்தேன்.

**சமீபகாலமாக ஏன் எதுவுமே எழுதாமல் இருக்கிறீர்கள்?**

எழுதுவதும், எழுதாததும் என் இஷ்டத்தைப் பொறுத்தது. அது என் தேவையைப் பொறுத்தது.

**வாசகர்கள் எதிர்பார்க்கிறார்களில்லையா!**

நான் எழுதுவதைத்தான் அவர்கள் படிக்க வேண்டும். அவர்கள் எதிர்பார்ப்பதற்காக நான் எழுத முடியாது.

**எழுதுவதற்கு உங்களை உந்தியவர்கள்...**

எனக்கு முன்னால் தமிழில் எழுதியவர்களும், பிற மொழிகளில் எழுதித் தமிழில் எனக்குக் கிடைத்தவர்களும்.

**அவர்களில் யாரைப் பின்பற்றுகிறீர்கள்?**

நான் யாரையுமே பின்பற்றுவதில்லை.

**உன்னதமானதோர் படைப்பாளி நீங்கள். எழுதாமல் இருப்பதால், சமுதாயத்தை மறந்து போயிருப்பதாகக் கூறலாமா?**

அப்படியெல்லாம் சொல்லக் கூடாது.

**உங்களுடைய இளமைக் காலம்?**

ரொம்பவும் வித்தியாசமானது. ஆனால் மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தேன்.

**சற்றுக் கூறுங்களேன்.**

நிறைய எழுதியிருக்கிறேன். ‘இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள்’ என்ற நூலிலும் பல கட்டுரைகளிலும் எழுதியிருக்கிறேன். 70 வருடங்கள் வாழ்ந்ததை ஒரு மணி நேரத்திலா சொல்ல முடியும்.

**உங்களுடைய கதைகளுக்கான கருக்களை எங்கிருந்து பெற்றுக் கொள்கிறீர்கள்?**

வாழ்க்கையிலிருந்துதான்.

**'சில நேரங்களில் சில மனிதர்கள்' அதைத் தொடர்ந்து 'கங்கா போகிறாள்' இவ்விரண்டு படைப்புகளிலும் அசாதாரணமானதொரு நாயகியாகக் காட்டப்பட்ட 'கங்கா'வை நடைமுறையில் பார்த்தீர்களா?**

நடைமுறையில் பார்ப்பதெல்லாம் கதாபாத்திரமாக முடியாது. உருவாக்கினால்தான் அது பாத்திரம் ஆகிறது.

**ஞானபீட விருதை எதிர்பார்த்தீர்களா?**

நான் விருதுகளை எதிர்பார்ப்பதே இல்லை.

**என்ன நோக்கத்திற்காக எழுதுகிறீர்கள்?**

விருதுகள் பெறுவதற்காக அல்ல. என்னுடைய நூல்களைப் படித்தால் புரியும்.

**உங்களுடைய எழுத்துக்களால் சமுதாயம்...?**

திருந்தியும் இருக்கிறது. கெட்டும் இருக்கிறது.

**கெடுவார்கள் என்று தெரிந்துமா எழுதுகிறீர்கள்?**

எழுதுவது மட்டும்தான் என்னுடைய வேலை என்று பல தடவைகள் கூறியிருக்கிறேன். எதனாலும் கெடுபவர்கள் கெடவே செய்வார்கள். (எதையாவது காரணம் வைத்துக் கொண்டு). கெடட்டுமே. கெட்டால்தானே திருந்த முடியும். கெடாத மனிதர்களே கிடையாது.

**எழுதுவது மட்டும்தான் உங்கள் வேலையா?**

அது என் வேலையா, இல்லையா என்பதை நான்தான் தீர்மானிக்க வேண்டும். நீங்களல்ல.

**சாதாரண மக்கள் கொண்டிருக்கிற அபிப்பிராயங்களுக்குப் புறம்பான அபிப்பிராயங்களையே நீங்கள் கொண்டிருக்கிறீர்கள் எனலாமா?**

சாதாரண மக்களுக்கு அபிப்பிராயமே கிடையாது.

**உங்களை நோக்கி வருகின்ற விமர்சனங்களை ஆராய்வீர்களா?**

ஆராயத் தக்கவற்றை ஆராய்வேன். புறந்தள்ள வேண்டியவற்றைப் புறந்தள்ளுவேன்.



**திருத்திக் கொள்வீர்களா?**

அவர்களையும் திருத்துவேன்.

**உங்களுக்குக் கிடைத்த ஞானபீட விருதுக்கு ஹிந்தி மொழிக்காரர்களுக்கு ஏன் நன்றி சொன்னீர்கள்?**

முதலில் தமிழுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால் நான் தமிழில் எழுதியதுக்காகத்தான் அவர்கள் விருது வழங்கியிருக்கிறார்கள். அதன் பிறகு இந்திய சகோதர மொழிகளில் இம்மாதிரி ஊக்கம் தருவதனால் ஹிந்தி மொழிக்காரர்களுக்கும் , இந்தியாவுக்கும் இதன் மூலம் தமிழர்கள் நன்றி செலுத்த வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

**இன்றைய இலக்கிய உலகினை எப்படிப் பார்க்கிறீர்கள்? எல்லாமே பதிவு செய்யப்பட்டு விட்டதென்றா அல்லது ஏதாவது விடுபட்டு விட்டதென்றா?**

இதை வருங்காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

**உங்களுக்கும் இவ்விடயங்களுக்கும் தொடர்பில்லையென்றா கூறுகிறீர்கள்?**

பிறர் விடயங்களில் நான் தலையிடுவதில்லை.

**இன்றைய சினிமா சமுதாயத்தை எது நோக்கி இழுத்துச் செல்கிறது?**

பணம் - இலாபம் - விளம்பரம்.

**நாளையும் கூட இதுதான் தொடருமா?**

அதன் தேவையுள்ளவரை தொடரும்.

**இன்று எழுதிக் கொண்டிருக்கிற பெண் கவிஞர்கள் பற்றி...**

கவிஞர்களில் ஆணாவது, பெண்ணாவது.

**ஆண்களுக்கெதிராகத் தம்மால் எதுவுமே செய்ய முடியும் என்று குரலெழுப்புபவர்கள் பற்றி...**

அவர்களுடைய குரல்களைக் கவனித்துக் கொண்டு மட்டுமே இருக்கிறேன்.

பல வளர்ச்சிகளையும் மாற்றங்களையும் கூட! முதல் குரல் பல மாதிரியாகத் தொனிக்கும். போகப் போகச் சரியாக மாறும்.

**அரசாங்கத்தையே எதிர்க்கக் கூடிய ஆற்றலுடன் பல பெண்கள் உருவாகி வருகிறார்கள் என்று கூறப்படுகிறதே!**

அப்படி நான் பார்க்கவில்லை. நிரந்தரமாக நான் அதனை எதிர்க்கவுமில்லை. நிரந்தரமாக ஆதரிக்கவுமில்லை. நிலைமைக்கேற்பவே எனது ஆதரவும் எதிர்ப்பும் உள்ளது.

**உங்களைப் பின்பற்றி நான் எழுத விரும்புகிறேன்.**

என்னை யாரும் பின்பற்றாதீர்கள். கஸ்டப்படுவீர்கள். உங்கள் வழியில் நீங்கள் போங்கள். அந்த வழி சரியா என்று மட்டும் பார்த்துக் கொள்ளுங்கள்.

**நீங்கள் விரும்பினாலும் இல்லாவிட்டாலும் கூட; ஜெயகாந்தன் போல் எழுத்தாளராக வேண்டும் என்று விரும்புபவர்கள் பலர் இருக்கிறார்கள்.**

(மீண்டும் குறுக்கிடுகிறார் அவசரமாக) ஒருத்தர் மாதிரி ஒருத்தர் ஆக முடியாது. அவரவர் அவரவராகத் தான் இருக்க முடியும். வேண்டுமானால் வேஷம் போட்டுக் கொள்ளலாம்.

**ஏன் நிறையவே கோபப்படுகிறீர்கள்?**

(இதற்குச் சிரித்துக் கொண்டே பதில் சொன்னார்) கோபப்படுவது, சந்தோஷப்படுவது எல்லாம் சூழ்நிலையைப் பொறுத்துத்தான். நான் நிரந்தர கோபக்காரனாய் இருந்தால்; எனக்கு எப்படி நண்பர்கள் இருக்க முடியும்!

**'நான் கோபப்படாமல் இருப்பதற்கு இந்தச் சமுதாயம் ஒன்றும் ஜோக்கியமானதல்ல' என்றொரு பேட்டியின் போது கூறியிருந்தீர்கள்.**

சொன்னதெல்லாம் சொன்னதுதான். அதனால் சொன்னதெல்லாம் சரியா யிருக்க வேண்டிய அவசியமில்லை.

**உங்களுடைய எழுத்துக்களால் இந்தச் சமுதாயத்தை மாற்ற முடியவில்லை என்றா நினைக்கிறீர்கள்?**

முடியும் என நினைத்து; மாறுவதற்காகவே எழுதியிருக்கிறேன்.



**நீங்கள் யாரையுமே பின்பற்றுவதில்லை என்று கூறுகிறீர்கள். ஆனால் பாரதியைக் குருவாகக் கொண்டிருக்கின்ற சிஷ்யன் நீங்கள்...**

குருவை சிஷ்யன் தாண்டலாம்.

**மகாத்மா?**

அவர் எனக்கு மட்டும் தந்தையல்ல. என் தேசத்திற்கே அவர்தான் தந்தை.

**அவருடைய வழியில் கூட நீங்கள் இல்லையே!**

தந்தை வழியில் எந்தப் பிள்ளை இருக்கிறான்?

**அரசியலுடன் நீங்கள்....**

அது ஒரு சமூக விஞ்ஞானம். எல்லா அறிவாளிகளுக்கும் அரசியலில் பங்குண்டு. ஓட்டு (Vote) வாங்குவது தான் அரசியல் என்றால் அதில் எனக்கு இடமில்லை. பொதுவுடமைக் கொள்கைவாதியாகவே நான் எப்போதும் இருக்கிறேன்.

**இலக்கியவாதிக்கு ஆன்மீகத்துடன் உள்ள தொடர்பு என்ன?**

ஆன்மீகம் என்பது மதம் சம்பந்தப்பட்டதல்ல. அது மனிதம் சம்பந்தப் பட்டதும், தனிமை சம்பந்தப்பட்டதும், இலக்கியம் சம்பந்தப்பட்டதுமாகும்.

**ஜெயேந்திரர் கைது தொடர்பாக...**

அது சமூகம் சம்பந்தப்பட்டது. வழக்கு சம்பந்தப்பட்டது. இதுபற்றி நான் என்ன சொல்வது.

**முப்பது வருடங்களுக்கு முன்பு 'ஜெய ஜெய சங்கர' என்ற நூலைப் படைத்திருந்தீர்கள். ஜெயேந்திரர் சர்ச்சைக்குள்ளான பின்பு 'ஹர ஹர சங்கர' எழுதியிருந்தீர்கள். அது தொடர்பாக வெளிவந்த விமர்சனங்களுக்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?**

படைப்பினூடாகத்தான் என்னால் பதில் சொல்ல முடியும். இன்னும் எழுதுவேன்.

**சர்வதேசமே கொண்டாடிய ஒரு சமயத் தந்தை அவர். அதிர்ந்து போய்த் திரும்பிப் பார்க்கப்பட்டிருக்கின்றார்.**

சர்வதேசமே பார்க்கவேண்டும் என்பதுதானே வழக்கின் நோக்கம். பார்க் கட்டுமே! இறுதி வரை பார்க்கட்டும்.

**இந்தச் சம்பவம் அல்லது நிலைமை இந்து மதத்தின் எதிர்கால வீழ்ச் சிக்குக் காரணமாகி விடாதா?**

இதற்கும் இந்து மதத்திற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. இச்சம் பவத்திற்கும் சங்கர மடத்திற்கும்தான் சம்பந்தம்.

**இது காஞ்சி காமாட்சியம்மன் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களைக் குறைத்து விடாதா?**

இல்லை.

**இன்னும் 10 வருடங்களுக்கப் பிறகு மதமும், சமய நம்பிக்கையும் இப்படியே இருக்குமா?**

அதிலென்ன உங்களுக்குச் சந்தேகம்? கடவுளை மறக்கிற மதமல்ல இந்து மதம்.

**நீங்கள் கடவுளை வணங்குகிறீர்களா?**

நாங்கள் வணங்குவதற்காகவா கடவுள் இருக்கிறார். அவர் வேலையை அவர் பார்க்கிறார். நம்முடைய வேலையை நாம் பார்ப்போம்.

**அப்படியா?**

அப்படித்தான் நான் நினைக்கிறேன். கடவுளை நம்புகிறவர்கள் அப்படித்தான் நினைப்பார்கள்.

**எது பற்றியும் தீர்க்கமானதொரு பதிலைச் சொல்கிறீர்களில்லையே. கர்வமா? அல்லது பயமா?**

அறிவு.

**உங்களுடைய முதல் நாவல்...**

அது சுமாராகத்தான் இருந்தது.

**சென்னை வட்டார வழக்கை அதிகமாகப் பயன்படுத்தி நாவல் எழுதியவர் நீங்கள். 'சென்னை மக்களின் வாழ்க்கை பற்றி எழுதியதால்' என்று கூறியிருக்கிறீர்கள். இலங்கையின் பயன்பாட்டு**



**மொழி புரியவில்லை என்று கூறி, இலங்கை நூல்களை இங்குள்ளவர்கள் படிக்க மறுக்கிறார்கள். இவர்கள் புரிந்து கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும்?**

தொடர்ந்து படிக்க வேண்டியது தான். படிக்கவில்லையென்றால் அடிக்கவா முடியும்? படித்துப் புரிந்து கொள்ள முடியாதவனுக்கு யார் என்ன செய் வது? வட்டார வழக்கைப் பயன்படுத்துகிற நவீன வழக்கம் எப்போதோ இலக்கியத்துக்குள் வந்து விட்டது.

**உங்களுடைய படைப்புகளின் முன்னுரைகளே தனி நூலாக வெளி வந்ததே! அது உங்களுடைய சுயவிமர்சனம் என்று கூடக் கருதப் பட்டது. அது குறித்து...?**

சுய விமர்சனம், சுய தரிசனம் எல்லாம்தான். இந்த மாதிரி கேள்விகளைத் தவிர்ப்பதற்காகத்தான் நான் முன்னுரை எழுதுகிறேன்.

**இன்று பாலியல் ரீதியான சொற்களைப் பெண்கள் தங்களுடைய எழுத்துக்களில் தாராளமாகப் பயன்படுத்துவது தம்மை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுமென்கிற ஒரே காரணத்துக்காகத் தானென்று நான் கூறினால்...?**

நீங்கள் கூறினால் கூறுங்கள். இது பற்றி நான் என்ன கூறுவது. சமுதாயமும் அவர்களுமே சேர்ந்து தீர்மானிக்க வேண்டிய விடயம் அது.

**ஒரு விமர்சன ரீதியில்....**

நான் விமர்சகன் இல்லை. பெண்களைப் பற்றிப் பெண்களே அபிப்பிராயம் சொல்லட்டும்.

**எழுதவும் பேசவும் மொழியை நன்கு பிரயோகிக்கவும் தெரிந்த எல்லோரும் படைப்பாளிகளாக முடியுமா?**

படைத்தால்தான் படைப்பாளியாக முடியும்.

**எழுதுவதற்குச் சாத்தியமான சூழ்நிலைகளும் வசதிகளும் இருக்கின்ற சிலர் தம்மைப் படைப்பாளிகளென்று சுய விமர்சனம் செய்கிற போக்கு...**

(குறுக்கிடுகிறார்) பிறர் பற்றிய கேள்விகளுக்கு என்னிடம் பதிலில்லை.

**ஈழத்திலிருந்து வெளிவருகின்ற படைப்புக்களைப் படிக்கிறீர்களா?**

அங்கிருந்து வருகிற முற்போக்கு எழுத்தாளர்களுடைய நூல்களை எல்லாம் படித்திருக்கிறேன். படிக்கிறேன். என்னுடைய நண்பர்களுக்கும் கொடுக்கிறேன். டானியல், ஜீவா, கைலாசபதி, சிவத்தம்பி - இவர்களுடைய படைப்புகள் தமிழ் நாட்டுக்குப் புதியவையல்ல. இன்னும் சொன்னால், கைலாசபதி, சிவத்தம்பி போன்ற விமர்சகர்கள், இங்குள்ளவர்களுக்குச் சமமாக மதிக்கப்படுகிறார்கள்.

**இந்திய நூல்களுக்கு இலங்கையிலுள்ள மதிப்பு போல், இலங்கை நூல்களுக்கு இந்தியாவில் இல்லையே!**

இருக்க முடியாது. (தீர்மானமாகவே சொல்கிறார்) நாங்கள் எழுதுவதை நீங்கள் வாசித்தே ஆக வேண்டும் .

**என்ன காரணம்?**

நீங்கள் தான் காரணம் சொல்ல வேண்டும். நாங்கள் எழுதுவதை நீங்கள் படித்தே ஆக வேண்டும். நீங்கள் எழுதுவதை நாங்கள் படிக்க விரும்ப வேண்டும். ஒப்பிட முடியாது. ஒப்பிட்டால் தவறான முடிவு தெளிவாகும். இங்கு இருக்கின்ற பல்வேறு வட்டார வழக்கு இலக்கியங்கள், தலித் இலக்கியங்கள், பிராமண இலக்கியங்கள் - இவையெல்லாவற்றையும் எல்லோரும் படிக்கிறதில்லை. இலங்கை இலக்கியமும் இவை போல்தான் எல்லோரும் படிப்பார்களா என்றெனக்குத் தெரியாது. 'சரஸ்வதி' காலத்திலிருந்து (ஜெயகாந்தன் ஆரம்பத்தில் எழுதிய பத்திரிகை) இலங்கையிலிருந்து எனக்கு நூல்கள் வந்தவாறே உள்ளன. இந்த விடயத்தில் நட்போடு நடந்து கொள்ள வேண்டும். குறை கண்டால் குறை தீராது. இதை விலக்கிப் பாருங்கள். சந்தோசமாகவே இருக்கும்.

**இன்று வாசகர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டதாகக் கூறப் படுவது சரிதானா?**

இது வியாபாரிகளின் கணக்கு. அன்று எவ்வளவு வாசகர்கள் இருந் தார்கள், இன்று எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்றும், அன்றைக்கு விற்பனையான புத்தகங்களையும் இன்றைக்கு விற்பனையாகிற புத்தகங்களையும் கணக்குப் போட்டுப் பார்ப்போமா? நிச்சயம் இன்று இரண்டுமே அதிகம்தான். ஏன் வேறு மாதிரியான பார்வையை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? Positive Attitude இல்லாமல் அழுது கொண்டும் புலம்பிக் கொண்டும் இருந்திட்டு அவஸ்தையுடன் சாக வேண்டியது தானா? (உஸ்ணமாகப் பேசினார்).



**வாழ்க்கை என்றால்...**

காணுங்கள். அது பற்றியென்ன நான் சொல்வது அல்லது நீங்கள் சொல்வது. வாழ்ந்து நிரூபியுங்கள்.

**சர்வதேசமெங்கிலும் பரவியிருக்கிற தீவிரவாதம் குறித்து...**

அதை யார் உருவாக்கினார்களோ அவர்களேதான் அதற்குத் தீர்வு காண வேண்டும். அந்த முயற்சி நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது.

**இந்திய - சீன நட்புறவு குறித்து...**

எங்களுடைய நெடுநாள் கனவு பலித்திருக்கிறது. இதனால் இரண்டு நாடுக ளுமே நன்மையடையும். உலகம் நிறைய நன்மையடையும். நடப்பதைப் பாருங்கள்.

**நான் எதிர்பார்த்து வந்தளவுக்கு நீங்கள் பேசவில்லை.**

இதுவே அதிகம் என்று எனக்குத் தோன்றுகிறது. 50 கேள்விகளுக்கு மேல் கேட்டுவிட்டீர்கள். 'ஐ விஷ் யூ'. அழகான article எழுதலாம்.

*21.08.2005*



# பீ.எச். அப்துல் ஹமீத்

அப்துல் ஹமீதைக் கொண்டாடி மகிழ்கிற ரசிகர் கூட்டம் உலக அரங்குகளின் கீழ் காத்துக் கிடப்பதற்கான முதற் காரணம், அசாதாரணமானதோர் மனிதவியல்பாக அவர் கடைப்பிடிக்கும் ஒழுக்கம்; மிக அரிதான ஊடகவியற் பண்பாகவும் நம்மை வியக்க வைப்பதனாலாய் இருக்கலாம். கொழும்பு மாநகரில் பிறந்து வளர்ந்து, இலங்கை வானொலிக்கான தமிழ் மொழிக்குப் பழகிப்போன ஆச்சரியம் இவர். 18 வயதிலேயே அறிவிப்பாளராகி மூன்று தசாப்தங்களுக்கு மேல் இலங்கை வானொலிக்குள்ளேயே சுவாசித்துக் கொண்டிருந்தவர், 'பாட்டுக்குப் பாட்டு' நிகழ்ச்சியை அறிமுகம் செய்து அகிலம் வாழ் தமிழர்களைத் தன்பால் திருப்பியவர், 'இறைதாசன்' என்கிற பெயரில் மெல்லிசைப் பாடல்களை எழுதியவர், நாடகங்களை எழுதி, இயக்கி, தயாரித்தவர், பிரபல இந்தியக் கலைஞர்களையும் ஊடகங்களையும் கூட வியப்பில் ஆழ்த்தியவர், தொடர்ந்து 97 நாட்களுக்கு மேல் ஓடிய 'கோமாளிகள்' திரைப்படத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்துப் புகழ் பெற்றவர், இலங்கை வானொலியை விட்டு விலகிய பிறகு சர்வதேசங்கள் நோக்கிய பறப்புகளுக்கான வாய்ப்புகளை நிரந்தரமாகப் பெற்றிருப்பவர் என்று இன்று வரையிலான ஹமீதின் சிறப்புக்களை ஒரு பெரும் பட்டியலிட்டுப் பார்க்க உங்களால் முடியும்.

வளர்ச்சி நோக்கிய முனைப்புகளினூடே நகர்ந்து கொண்டிருக்கிற ஓர் ஊடகவியலாளனுக்கு இருக்க வேண்டிய சிறப்புகளுக்குள்ளும், ஆளுமைகளுக்குள்ளும் ஹமீத் கொண்டிருக்கிற தகைமைகளும் அடங்கியும் போகலாம், அல்லது மிகையாயும் தெரியலாம்.

தேசிய அளவில் பிரபல்யம் வாய்ந்த ஒருவரை நோக்கிய விமர்சனக் கல்லெறிகள் விமர்சகர், படைப்பாளி என்கிற அவ்விரு சாராரையும் சேராத நமக்குள் அநியாயமான மகிழ்ச்சியைத் தந்து விட்டுப் போவது அல்லது அநாவசியமான கோபத்தைத் தூண்டிவிடுவது இயல்பாக இருக்கிறது.

இன்றைய அப்துல் ஹமீத் நேற்றே சர்வதேசஅளவில் பிரபலமாகி விட்டவர் என்பதை நாளைய சந்ததியும் மறக்க வாய்ப்பில்லை எனும்படி நாம் காணவும் கேட்கவும் அவருடைய சாதனைகள் அதிகம் பதிவாகியிருக்கின்றன. அதனோடு அவர் நோக்கிய விமர்சனங்களும் அதிகம் தான் என்பதால் அவற்றுக்கெல்லாமான விடைதேடவும், அவருடைய ஆளுமையின் அசலை அனைவரும் அறிந்து கொள்ளவும் இப்பேட்டியினூடாக முயன்றிருக்கிறேன்.

**உங்களுடைய இயங்கு தளத்தை தற்போது சென்னையில் வைத்தி ருக்கிறீர்கள். இங்கே உங்களுக்கு என்ன முடியாமல் போய் விட்டது?**

இயங்கு தளமோ, களமோ எனக்குத் தற்போது ஓரிடத்திலென்றில்லை. சுதந்திரமாக இயங்க வேண்டும் என்ற எண்ணத்தாலும் விருப்பத்தாலும் என்னுடைய நிகழ்காலம் மாறியிருக்கிறது. 1967 இல் தொடங்கி தொடர்ந்து 32 வருடங்கள் இலங்கை வானொலி மட்டுமே என்னுடைய இயங்கு தளமாக இருந்தது. காலத்தின் கட்டாயத்தினால் அந்த நிரந்தரப் பணியி லிருந்து விலகினேன். அதற்குப் பின்னான அடுத்த இந்தக் கட்டம் திருப்தி யாகவே இருக்கிறது.

**இலங்கையில் உங்களுடைய இருப்பைக் குறைத்து வெளிநாடுகளின் எல்லைகளைத் தொடுவதனூடாகப் பெற முடிகிற அத் திருப்திதான் என்ன?**

என் மனமும், சிந்தனையும் ஒரு குறுகிய வட்டத்திலிருந்து விலகி விசால மடைந்திருக்கின்றன. பக்குவமான வளர்ச்சியை உணர்கிறேன். எதற் கெடுத்தாலும் உணர்ச்சி வசப்பட்ட என் பழைய இயல்பு மாறியிருக்கிறது. பன்மொழிகள் பேசுகிற, பல்வேறு சூழல்களில் வாழ்கிற மக்களைச் சந்திக்க முடிவதால் பல விடயங்களையும் அறிந்து கொள்கிறேன். இவற்றுக் கெல்லாம் அப்பால் பொருளாதார நிலையிலும் தற்போதுதான் திருப்தியாக இருக்கிறேன்.

**மக்களுக்கான படைப்புகளின் வெளிப்பாடாக அங்கெல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?**

படைப்பாற்றல் திறமை காலத்தின் தேவைக்கேற்பவே உருவாகும். இப்போது என்னால் எதையும் படைக்கும் திறனோடு இயங்க முடிய வில்லை என்பதை மனப்பூர்வமாக ஒத்துக் கொள்கிறேன். காரணம், ஜனரஞ்சகமான பல விடயங்களில்தான் தற்போது நான் ஈடுபட வேண்டியிருக்கிறது. நிரந்தரத் தொழிலில்லாத நிலையும், பொருளீட்ட வேண்டிய தேவையும் இருப்பதால் படைப்பாற்றல் குறைந்து போய் வருகிறது என்பதைக் குற்ற உணர்வோடுதான் கூற வேண்டியிருக்கிறது.



**சன் தொலைக்காட்சியில் பல வருடங்களாக நீங்கள் தொடர்ந்து நடத்திய 'பாட்டுக்குப் பாட்டு' உங்களிடமிருந்து கங்கை அமரனிடம் கைமாறியதற்கு என்ன காரணம்?**

இதற்கான விளக்கத்தைப் பல பத்திரிகைளில் ஏற்கனவே கூறியுள்ளேன். சன் தொலைக்காட்சியின் 12 வருட வரலாற்றில் 'பாட்டுக்குப்பாட்டு' நிகழ்ச்சியும் அத்தொலைக்காட்சியின் ஜனரஞ்சக அந்தஸ்துக்குக் காரணி யாய் அமைந்த ஒன்று என்ற வகையில், புலம்பெயர்ந்த மண்ணிலெல்லாம் வாழ்கின்ற நம்மவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தொலைக்காட்சிகளிலும் இந்த நிகழ்ச்சியையும் விலை கொடுத்து வாங்கி ஒளிபரப்பி வந்தார்கள். குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் டீ. ஆர். டி யில் ஆரம்பித்து தீபம், சீ.ஐ. டீவி போன்றவற்றிலும் மறு ஒளிபரப்புச் செய்யப்பட்டு வந்தது.

சன் தொலைக்காட்சியில் பாட்டுக்குப்பாட்டு நிகழ்ச்சியோடு 'முடிவு உங் கள் கையில்' என்ற புதுமையான நிகழ்ச்சியையும் நான் வழங்கி வந்தேன். அதே வேளை ராஜ் தொலைக்காட்சியிலும், ஜெயா தொலைக்காட்சியிலும் கூட சமகாலத்தில் நிகழ்ச்சிகளை நடத்தி வந்தேன். (என் முதலாவது தொலைக்காட்சி நிகழ்ச்சி தூரதர்ஷனிலும் அதனைத் தொடர்ந்து ராஜ் டிவியிலும்தான் ஆரம்பமானது) சன் தொலைக்காட்சி நம்மவர்களின் தொலைக்காட்சி சேவைகளுக்குப் போட்டியாகத் தனித்துத் தன் சேவையை ஐரோப்பிய நாடுகளிலும் விரிவு படுத்த ஆரம்பித்த வேளை யில்தான் இந்நிகழ்ச்சியை சன் தொலைக்காட்சிக்காக தயாரித்து வழங்கிய நண்பர் ரமேஷ் பிரபா மூலமாக ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள்.

அதாவது தங்கள் தொலைக்காட்சியைத் தவிர பிற தொலைக்காட்சிகளில் தோன்றுவதைத் தவிர்க்குமாறு. அவ்வாறெனில் பிற இந்தியத் தொலைக் காட்சிகளில் மட்டுமல்லாமல், நான் ஏற்கனவே பங்களிப்பினை வழங்கி வந்த சிங்கப்பூர்- வசந்தம்சென்றல், லண்டன்-தீபம் தொலைக்காட்சி, இலங்கைத் தொலைக்காட்சிகள் மற்றும் கனடா, அவுஸ்திரேலியா, மலேசிய நாட்டுத் தொலைக்காட்சிகளிலும் நான் தோன்ற முடியாத நிலை ஏற்படும். காரணம் அங்கெல்லாம் சன் தன் ஒளிபரப்பை விரிவுபடுத்த ஆரம்பித் திருந்தது. என் மீது முழு உரிமை பாராட்டக்கூடிய இலங்கை வானொ லியில், 32 ஆண்டு கால சேவைக்குப் பிறகு ஒரு சுதந்திரப் பறவையாக வாழ விரும்பிய நான் மீண்டும் ஒரு கூட்டுக்குள் அடைபட்டு பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியை மட்டுமே நடத்திக் கொண்டிருக்க வேண்டிய நிலை

ஏற்படும். எனவேதான் அந்த வேண்டுகோளை ஏற்காமல் நாகரிகத்தோடு விடைபெற்றேன்.

**'பாட்டுக்குப் பாட்டு' நிகழ்ச்சி உங்களுக்கு தேடித் தந்த புகழும், வசதியும் அதிகம். ஆனால் அந்த நிகழ்ச்சியினூடாக உங்களை அடையாளப்படுத்த வேண்டாமென்று பேட்டிகளில் குறிப்பிடு கிறீர்களே!**

வேண்டாம் என்றில்லை. பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி மூலம் மட்டுமே என்னை அடையாளம் காண்பது எனக்கு மனக் குறையாக இருக்கிறது. காரணம், ஆரம்பத்தில் மிகச் சிறந்த நாடகங்களுக்காகவும் புதுமையான நிகழ்ச்சிகள் பலவற்றிற்காகவும் என்னுடைய மிக அதிகமான காலத்தை ஒலிபரப்புத் துறையிலே செலவழித்திருக்கிறேன். அவற்றுள் சில வரலாற்று ஏடுகளில் பதியப்பட்டும் உள்ளன. இப்படியானதொரு நிலையிலேதான் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி மூலம் மட்டும் நான் அடையாளம் காணப் படுவது மிகுந்த மனக் குறையாக இருக்கிறது.

**'மெல்லிசைப் பாடல்களை மட்டும் கொண்டு இசை நிகழ்ச்சியொன்றை நடத்த முடியாது' என்று மேடைகளில் நீங்கள் கூறியிருக்கிறீர்கள் என்கிறார்களே! உண்மையா?**

இல்லையே. அப்படி என்றுமே நான் சொன்னதில்லையே. இலங்கையில் மெல்லிசைப் பாடல்களின் நதி மூலத்தை ஆராய்ந்தால் அதில் என்னுடைய பங்களிப்பு மிக முக்கியமானது. இதை ஒருவிதமான தலைக்கனத்தோடும், தற்பெருமையோடும்தான் சொல்கிறேன். காரணம், பலரால் மறக்கவும், மறைக்கவும் பட்ட விடயம் இது.

**கலைஞர்களையும், ரசிகர்களையும் பரவசப்படுத்திய அந்த மெல்லிசை பின் மறைந்து போனது எப்படி?**

1983 இல் நிகழ்ந்த இனக்கலவரம்தான் மெல்லிசை மறையக் காரணமாய் இருந்தது. நல்ல திறமையான கலைஞர்கள் புலம் பெயர நேர்ந்ததால் இலங்கை வானொலியில் மெல்லிசை போன்ற நிகழ்ச்சிகளுக்குச் சரியான பக்க பலமும் நிதிவளமும் கூட இல்லாமல் போய் விட்டது. ஆனாலும் சந்திரமோகன் காலத்திலே நல்லதொரு நிகழ்ச்சி - 'சந்தன மேடை' என்ற பெயரில் நடத்தப்பட்டது. மோகன்ராஜ் போன்றவர்கள் மிகச் சிறப்பாக



இசையமைத்தார்கள். நாளடைவில் அதுவும் கூட மறைந்து போனது. ஆனால் தனியார் வானொலிகள் நினைத்தால் நிச்சயமாக இங்குள்ள இசைக் குழுக்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில் நல்ல நிகழ்ச் சிகளை நடத்த முடியும். நடத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**இவ்வளவு பிரபல்யம் பெற்று விளங்கினாலும் கூட; இந்திய சினிமாப் பாடல்களுடன் போட்டிபோட முடியாதவைகளாகத்தானே நம் நாட்டுப் பாடல்கள் இருக்கின்றன?**

இந்திய சினிமாவோடு, எங்கள் சினிமா ஏன் போட்டி போட முடியவில்லை என்பதற்கான விடையைக் கண்டுபிடித்தால் இதற்கான காரணமும் புரியும். திரைப்படத்தைத் தயாரிப்பதற்கான செலவும், சந்தை வாய்ப்பும் அவர் களளவுக்கு எம்மால் முடியாதவை. ஒரு காலகட்டத்தில் ஏ.ஆர். ரஹ்மானு டைய பாடல்களுக்கான சந்தை வாய்ப்பு இரண்டு கோடி ரூபா வரை சென்றது. ஆனால் இப்போது 25 இலட்சத்துக்குக் குறைந்திருக்கிறது. நமது சினிமாவுக்கும் மெல்லிசைப் பாடல்களுக்குமான சந்தை வாய்ப்பைப் பெறுவது கடினமாகவே இருக்கிறது.

புலம் பெயர்ந்த நாடுகளில் மூன்றரை இலட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தென்னிந்தியத் திரைப்படங்களுக்கும், பாடல்களுக் குமே அடிமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் மக்களை நான் ஒரு போதும் குறை சொல்ல மாட்டேன். இதற்கு முழுதும் காரணமானவர் கள் ஊடகத்தினர்தான். இன்று இந்தியத் திரைப்படங்களும் பாடல்களும் இல்லாமல் எமது எந்த ஊடகமும் இயங்கவில்லை. இதே நிலைதான் வெளி நாடுகளிலும் இருக்கிறது.

**இது மக்களுடைய ரசனையோடு சம்பந்தப்பட்டு; அவர்கள் கேட்பதை/ விரும்புவதைக் கொடுக்கின்ற ஊடக நிலைதானே!**

மக்களுக்கு ஊடகங்கள் எதைக் கொடுக்கின்றனவோ அவற்றையே அவர் கள் நாளடைவில் ஏற்றுக் கொள்கிறார்கள். இப்போது மிகவும் தரம் குறைந்த; எமது பண்பாட்டுக் கோலங்களுக்கு முற்றிலும் முரணான தொலைக்காட்சி நாடகங்களையே மக்கள் நாளடைவில் பார்த்துப் பார்த் துப் பழகிப் போகிறார்கள். இப்போது நீங்கள் கேட்கும் குத்துப் பாடல்களும் பழகிப் போய் விட்டன.

சமீபத்தில் வெளிவந்த 'கலாபக் காதலனுக்கு' இசையமைத்தவர் யாழ் மண்ணில் பிறந்து வளர்ந்த தமிழ் இளைஞர் 'நிரு'. இவர் 'மூங்கில நிலா' என்றொரு அற்புதமான இறுவட்டை உருவாக்கினார். எங்கள் வானொலிகளில் ஏதாவதொன்று அதை ஒலிபரப்புகிறதா! அதிகமான பொருட் செலவில் அமெரிக்கா வரை சென்று உருவாக்கிய அந்த இசைக் கோர்வையை நான் என்னுடைய நிகழ்ச்சிகளில் பல தடவைகள் ஒலிபரப்பியிருந்தேன். தொடர்ந்து வழங்க ஊடகங்களில்லை. மக்களின் ரசனையில் குறையில்லை. ஊடகங்கள்தான் இதற்கெல்லாம் பொறுப்பேற்க வேண்டும்.

**இதனை மாற்ற உங்கள் தரப்பிலிருந்து விதைக்கப்படுகிற கருத்துக்களும், அதனூடான பயன்களும் எத்தகையனவாயுள்ளன?**

துணிச்சலாகவே சில விடயங்களை நான் செல்லும் மேடைகளில் கூறுகிறேன். ஆனால் சபையிலிருந்து கிடைக்கிற கரகோசத்துடன் செயல் நின்று போய் விடுகிறது. தற்போதைய என்னுடைய வாழ்க்கை ஓரிடத்தில் நின்று நிதானிக்க நேரமில்லாதது. நின்று செயற்படுத்த முனைந்தாலும் அது விழலுக்கிறைத்த நீராகிவிடுமோ என்று பயமாகவும் இருக்கிறது.

**பொருளீட்ட வேண்டிய தேவை காரணமாகப் பல ஆக்கபூர்வமான பணிகளை ஆற்ற முடியாமல் இருப்பதாகக் கூறுகிறீர்கள். இந்தத் தேவை தனியார் ஊடகங்களுக்கும் இருக்கலாமில்லையா?**

இல்லை. தனியார் என்று நான் குறிப்பிடுவது ஏற்கனவே பெரும் பொருட் செல்வம் சேர்த்தவர்கள். இவர்கள் மேலும் பெருக்கிக் கொள்ளவே முயல்கிறார்கள். ஒரு தனி மனிதனுடைய பொருளாதாரப் போராட்டத்தை/ தேவையை நிறுவனம் ஒன்றோடு ஒப்பிடுவது தவறு என்று நான் கருதுகிறேன்.

இன்று அரசியல் வாதிகளைத் திருப்திப் படுத்த வேண்டிய நிலைக்கு அரச ஊடகங்களே தள்ளப்பட்டு விட்டன. தனியார் வானொலிகள் இதனோடு வேறு நிர்ப்பந்தங்களுக்கும், போக்குகளுக்குமேற்ப இயங்குகின்றன. மக்களின் ரசனையை மேம்படுத்தும் எண்ணம் எந்த ஊடகத்திற்கும் இல்லை. இதனூடாக நான் அறிவிப்பாளர்களையோ, நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களையோ குறிப்பிடவில்லை என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறேன். அவர்கள் அங்கே பணி செய்கிறவர்கள். வேலை கொள்வோரின் எதிர்பார்ப்பையே நான் இங்கு குறையாகக் குறிப்பிடுகிறேன். நாங்கள்தான்



'நம்பர் வண்' என்று நம்மை நாம் எப்போதுமே சொல்லிக் கொண்டதில்லை. இதை நேயர்களல்லவா சொல்ல வேண்டும். சமுதாயம் சார்ந்த இவர்களின் பணி, இரண்டாம், மூன்றாம் பட்சமாகிப் போய்விடுகின்ற போது எப்படி 'நம்பர் வண்' ஆக இருக்க முடியும்!

**நம் நாட்டு ஊடகங்களில் நீங்கள் காணும் பாரிய குறைபாடுகள் இந்தியாவில் - தமிழ் நாட்டில் ஆரோக்கியமாகவே இருக்கிறதா?**

இல்லை என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிய வேண்டியதில்லை. நூறு சதவீதமும் வர்த்தக நோக்கத்துடன் தான் இந்திய ஊடகங்கள் இயங்குகின்றன. அவற்றுள் நானும் ஓர் அங்கமாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் தரமான நிகழ்ச்சிகளை வழங்குவதன் மூலமும், சரியான தமிழை உச்சரிப்பதன் மூலமும் அவர்களிலிருந்து நான் வேறுபடுகிறேன்.

**இலக்கியம் சம்பந்தமாக நீங்கள் தொகுத்து வழங்கிய நிகழ்ச்சிகள் தவிர; 'இறை தாசன்' என்ற பெயரில் நீங்கள் எழுதிய பாடல்களோ, பிறவோ இலக்கியம் என்ற தரத்திற்குள் இல்லை என்றொரு விமர்சனம் இருக்கிறதே!**

நான் இலக்கியத் துறையில் படைப்பாளன் அல்ல. நல்ல இலக்கியங்களுக்கும், இலக்கியக்காரர்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்தவன். நான் ஒரு மேடையாகச் செயற்பட்டிருக்கிறேன். இறைதாசன் என்கிற பெயரில் நான் எழுதியவை இலக்கியமல்ல. அவற்றுக்குச் சரியான இலக்கணம் இருக்கிறதா என்று கூட எனக்குத் தெரியாது. மெட்டுகளுக்குச் சரியான சொற்களைச் செருகியிருக்கிறேன். நண்பர்களின் அன்பு வேண்டுகோளுக்கிணங்கவே நான் அப்பாடல்களை எழுதினேன். மாறாக, நானாக முனைந்து இவற்றைச் செய்தவனல்ல. ஒரேயொரு நாடகம் எழுதியிருக்கிறேன். எல்லோராலும் எல்லாமே செய்து கொண்டிருக்க முடியாது. எமக்கான சாபக்கேடே வெள்ளைத் தாளில் கறுப்புப் புள்ளி எங்கே என்று தேடுவதுதான். அதனால்தான் நாம் வளராமல் இருக்கிறோம். உதாரணத்துக்கு ஈழத்து இரத்தினம் எழுதிய பாடல் ஒன்றை மிகவும் அழுத்தமாகச் சொல்வேன்.

*'எவனுக் கெவனும் தாழ்ந்தவன் இல்லை*
*அவனவன் திறமை ஒரு துறையில்*

*எல்லாம் தெரிந்தவன் எவனுமில்லை*
*எல்லாம் அறிந்தவன் மனிதனில்லை'*

**புதிய தலைமுறையின் இலக்கிய ஈடுபாடு எவ்வாறு உள்ளது?**

சமீபத்தில் வைரமுத்துவின் மகனுடைய நூல் வெளியீட்டுக்குச் சென்றிருந்த போது அவர் அழகாகச் சொன்னார். "இலக்கியவாதிகள் என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பவர்களில் மூன்று வகை உண்டு."

1. பழந்தமிழ் இலக்கியங்களை மனனம் செய்து விட்டு அவற்றை அப்படியேவாந்தி எடுப்பவர்கள் - தாமே பெரிய இலக்கியவாதிகள் என்று நினைத்துக் கொண்டிருக்கிற அவர்களால் நமக்குப் பயன் ஏதும் இல்லை.

2. இங்கும் அங்குமாகக் கால் வைத்துக் கொண்டிருப்பவர்கள் - இவர்கள் ஜனரஞ்சகமும் படைப்பார்கள். காத்திரமான இலக்கியமும் படைப்பார்கள்.

3. புதிய இலக்கியம் படைத்துக் கொண்டே சமூகப் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்கள் - இவர்கள்தான் நமக்குத் தற்போது தேவையானவர்கள்.

தான் சார்ந்து வாழ்கின்ற சமூகத்திற்காகச் சிந்தித்துத் தன்னாலான பணியைச் செய்யும் கூட்டத்தில் சேரவே நான் விரும்புகிறேன் என்று சொன்னார். தந்தையின் நிழலில் தங்க விரும்பாமல் அவர் தனியாக ஓர் அரசியல் இயக்கமே ஆரம்பித்திருக்கிறார். இளைஞர்களின் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே அந்த இயக்கத்தின் நோக்கம். மாறாக பொதுக் கூட்டம் நடத்துவதற்கோ ஊர்வலம் போவதற்கோ அல்ல!

'கல்வித் துறையில் நாம் மேம்பட வேண்டும். நாளைய ஒவ்வொரு அரசியல்வாதியும், தான் சார்ந்துள்ள துறையில் முழுமையான அறிவு பெற்றவராக இருக்க வேண்டும்' என்று வலியுறுத்திப் பேசியிருந்தது மிக அருமையாக இருந்தது.

**சர்வதேச அளவில் நீங்கள் பிரபல்யம் பெற்றதனால் தான் உங்களை நோக்கிய விமர்சனங்களும் அதிகமாக இருக்கிறதா?**



அது தெரியாது. ஆனால் எனக்கு விமர்சிப்பவர்களையே பிடிக்காது. விமர்சித்துக் கொண்டே இருப்பவர்கள் காலப்போக்கில் தமது படைப்பாற்றலை இழந்து விடுகிறார்கள். வளர்ச்சி தடைபட்டுப் போகிறது. பிறரைப் பற்றிப் பேசுவதும் கேட்பதும் இன்பமாக இருக்கும். இதுவே தொடருமானால் நம்முடைய ஆற்றல் போய்விடும்.

**சரி, விமர்சனம் எப்படி இருக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

நல்ல விடயங்களை மட்டுமே முன்னிலைப்படுத்த வேண்டும். இதுதான் பலருக்கு வழிகாட்டியாக அமையும். அங்கு பார், இங்கு பார் என்று குறைகளைக் காட்டுவதை விட நிறைகளைக் காட்டுங்கள். நல்ல படைப்பாளிகள் தோன்றுவார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பலவீனம் இருக்கும். அதை முன்னிலைப்படுத்தி அவர்களைத் தரமிறக்கிப் பார்ப்பதில் எங்களுக்குத்தான் என்ன நன்மை!

**தெனாலி பற்றியெழுந்த விமர்சனங்களை எவ்வாறு எதிர் கொண்டீர்கள்?**

அவற்றையெல்லாம் நான் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. யாழ்ப்பாணத் தமிழைக் கிண்டலடித்திருப்பதாகக் குறை கூறிய விமர்சனக்காரர்கள், தெனாலிக்கு முன்பு இலங்கை விடயத்தை உள்ளடக்கி எடுக்கப்பட்ட திரைப்படங்களோடு அதனை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவற்றையெல்லாம் விட தெனாலி எவ்வளவோ நன்றாயிருப்பது தெரியும்.

இரண்டு காட்சிகளில் மட்டும் சோகங்களைத் தொட்டுக் காட்டிய நகைச்சுவைப் படம்தான் தெனாலி. முழுவதுமே சோகமாயிருந்திருந்தால் யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். ஏன் நம்மவர்களே பார்த்திருக்க மாட்டார்கள். ஐரோப்பாவிலும் நம்மவர்கள் 20 படங்களுக்கு மேல் எடுத்திருக்கிறார்கள். தியேட்டரில் இரண்டு நாள் கூட ஓடவில்லை.

அந்தச் சோகக் காட்சியை கமல், கிளிசரின் போடாமல் தான் அழுது நடித்தார். இது பற்றியெல்லாம் யாரும் பேசுவதில்லை. வெளிநாட்டில் வாழும் நம்மவர்களிடமிருந்து பெருந்தொகை திரட்டும் நோக்கத்தில் தயாரிக்கப்பட்ட படம் என்றும் கூட விமர்சனம் வந்தது.

ஆகக் கூடியது 10 இலட்சம் கிடைக்கும். 15 கோடிக்கும் 10 இலட்சத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்? அதையும் யாரெல்லாம் பங்கு போட்டுக்

கொள்வார்கள் தெரியுமா? திருட்டு வி.சி.டி தயாரிப்பவர்களில் நம்ம வர்களும் உண்டு. அவர்களும்தான் இதன் மூலம் சம்பாதித்துக் கொள் கிறார்கள். ஐங்கரன் போன்றவர்கள் பெருந் தொகைப் பணம் கொடுத்து உரிமை (Rights) வாங்குவார்கள். ஆனால் திருட்டு வி.சி.டி காரர்கள் இப்படி உழைக்கிறார்கள்.

தெனாலி வெளிவந்த புதிதில் என்னைச் சூரியனுக்காக ஒரு தடவை பேட்டி எடுத்திருந்தார்கள். யாரோ ஒரு பெண் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ''தெனாலி பேசுறது ஒரிஜினல் யாழ்ப்பாணத் தமிழ் இல்லைத் தானே பாருங்கோ'' என்றார். ''அம்மா நீங்கள் ஒரிஜினல் என்றொரு வார்த்தை சொன்னீர்களே! அதுவும் யாழ்ப்பாணத் தமிழ்தானா?'' என்று கேட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கூறித் தொலைபேசியை வைத்து விட்டார்.

வடக்கில் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரித் தமிழ் பேசுவார்கள் என்பது எனக்குத் தெரியும். லண்டன் கந்தையா நாடகம் கோமாளிகள் போன்றவை நகைச்சுவை மிகைப்படுத்தப்பட்ட யாழ்மொழி வழக்கைக் கையாண்டன. நகைச்சுவைக்கு இந்தப் பாணிதான் சரியாக வரும். கமல ஹாசனுடைய ஒப்பற்ற நடிப்புத்தன்மைகளைப் பார்க்க வேண்டுமானால் அன்பே சிவம், ஹேராம் போன்ற படங்கள் இருக்கின்றன.

அவர் ஜனரஞ்சகம், படைப்பாற்றல் மிகு கலை வடிவம் என இரண்டு பக்கமும்தான் செய்கிறார். ''வருமானம் பெற வேண்டிச் சில படங்கள் செய் கிறேன். அந்த வருமானத்தைத் தொலைக்கிறதுக்காகவும் சில படங்கள் பண்ணுகிறேன்'' என்று அவரே சொல்கிறார்.

**நேயர்கள் உங்கள் நண்பர்கள் மாதிரி. அவர்களுடைய மொழியிலேயே நீங்கள் உரையாடுங்கள் என்று பிரித்தானிய ஒலிபரப்பாளர் 'ஸ்ருவாட் வெவல்', இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கான பயிற்சிக் கைந்நூலில் குறிப்பிட்டிருந்தார். தென்னிந்திய தமிழ் சினிமாவின் வெற்றிக்கு, ரசிகர்களுக்குப் புரிகிற வகையில் தமிழைக் கையாள் வதும் மிகப் பெரிய காரணம் எனலாம். இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத் தாபனத்தில் இதுவரையில் பயன் படுத்தப்படுகிற இறுக் கமான தமிழ் காலத்திற்கேற்ப கொஞ்சம் நெகிழ்வடையக் கூடாதா?**

ஸ்ருவாட் வெவல் அந்த நூலை ஆங்கிலத்தில்தான் எழுதியிருந்தார். அதைத்தான் தமிழுக்கு மொழி பெயர்த்திருந்தார்கள். ஆங்கில மொழியிலோ,



சிங்கள மொழியிலோ பேச்சும், உரைநடையும் அதிகம் வித்தியாசப் படுவ தில்லை. தமிழில் பிரதேச வழக்குகள் பல உண்டு.

அவர் குறிப்பிட்டிருப்பது என்னவென்றால், 'நேயர்களை நண்பர்களாகப் பாவியுங்கள்; அதாவது ஒரே Frequency யில் இருங்கள்' என்பதுதான். உதாரணமாக, எங்களைப் பயிற்றுவிக்கும் போது கேட்டார்கள் : 'நீங்கள் வானொலியில் உரையாடும் போது எத்தனை பேருடன் பேசுவதாக நினைத்துக் கொள்வீர்கள்?' என்று. 1000 பேர், 2000 பேர் என்று ஒவ்வொரு வரும் ஒவ்வொரு மாதிரிப் பதில் சொன்னோம். உண்மையில் ஒரே ஒரு நண்பருடன் பேசுவது போல்தான் நினைத்துக் கொள்ள வேண்டுமாம். மேடையில் நின்று பேசும்போது இதை உணர்ந்திருப்பீர்கள். நம்முடைய கவனம் விலகும் என்பதால் குறிப்பிட்ட சில முகங்களைப் பார்த்துப் பேசுவோம்.

மொழிப் பிரயோகம் என்று வரும் போது, எங்களுக்கென்றொரு பொதுவான உரை நடைத் தமிழ் தேவையாக இருக்கிறது. அந்தத் தமிழால்தான் இந்தியாவையே தொட்டிருக்கிறோம். அதனை சரித்திர நாடகம் அல்லது மேடையில் அரசியல்வாதிகள், சொற்பொழிவாளர்கள் பேசுவது போலன்றி; சரளமாகப் பேசவேண்டும். வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங் களுக்கு ஒரு கடமை இருக்கிறது. வளர்க்க முடியாவிட்டாலும் அழியாமல் மொழியைப் பாதுகாக்க வேண்டும். இந்தியாவில் நடைபெறுகின்ற வழக் காடு மன்றங்கள், விவாத மேடைகள், பேச்சு மேடைகள் எல்லாவற்றையும் பாருங்கள். எவ்வளவு சரளமாகப் பேசுகிறார்கள். நம்மவர்களைப் பேச விட்டால் ஒவ்வாரு பிரதேசத்துக்கேற்றவாறு பேச முற்படுவார்கள்.

**நேர்காணல் என்பது கூட ஒரு வரைமுறையைக் கொண்டிருக்கிற கலைதான்.அதில் நீங்கள் கடைப்பிடிக்கிற முறைகள் பற்றியோ, தவிர்க்கிற விடயங்கள் பற்றியோ...**

என் ஒலிபரப்பு அனுபவத்தில் இப்போது கிரிக்கெட் அணியின் நடுவராக இருக்கின்ற வெங்கட் ராகவனைத்தான் முதலில் பேட்டி கண்டேன். அப் போது அவர் சுழல் பந்து வீச்சாளராக இருந்தார். அந்த நேர்காணலை ஒலி மஞ்சரியில் ஒலிபரப்பினேன். அப்போது தேசிய சேவையின் பணிப் பாளராக இருந்த ராஜசுந்தரம் அவர்கள் அந்த நேர்காணல் ஒலி நாடாவை தேசிய சேவை அறிவிப்பாளர்களுக்குப் போட்டுக் காட்டி அதில் உள்ள நல்ல விடயங்களைப் பாராட்டினார்.

ஒரு பேட்டி எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு இந்த நேர்காணல் சிறந்த உதாரணம். எப்படியென்றால் வெங்கட் ராகவன் முழுக்க முழுக்க இந்தியப் பேச்சு நடையிலேயே பேசுகிறார். ஆனால் இலங்கை வானொலியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற அப்துல் ஹமீத் முழுக்க முழுக்க உரைநடைத் தமிழிலேயே பேசுகிறார். அதேவேளை இருவரும் சிரமமில்லாமல் உரையாடுகிறார்கள். ரசிகர்களுக்கு நாம் எதைக் கொடுக்கிறோம் என்பதை ஒரு ஆசிரியராக இருந்து முடிவு செய்து கொடுக்க வேண்டும்.

**ஆனால் நீங்களே பின்னர் முரண்பட்டீர்களே!**

ஆம், சமீப காலத்தில் எனக்குள் அந்த முரண்பாடு வந்தது உண்மைதான். பல நாடுகளுக்கும் போய் வருகிற அனுபவத்தால் நான் உணர்ந்ததொன்று: இந்த மொழிப்பற்று அல்லது தமிழ் மொழிக்கு நான் ஆற்றப்போகிற பணி என்பது ; யாரோ ஒருவன் கண்டுபிடித்த பொருளுக்கு அவன் வைத்த பெயரை மாற்றுவது அல்ல. டெலிவிஷனுக்கு நாம் தொலைக்காட்சி என்று ஏன் சொல்ல வேண்டும். இதனால் தமிழனுக்கு என்ன பெருமை? தமிழனே ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்குத் தமிழ்ப் பெயர் வைக்க வேண்டும். ஆனால் தமிழன் கண்டு பிடிக்கும் பொருட்களுக்கு ஆங்கிலத்தில் அல்லவா பெயர் வைக்கிறான்.

வானொலி, தொலைக்காட்சி, கணினி என்கிற தமிழ்ப் படுத்தல்கள் அவசியமில்லை பயன்படாதவற்றையெல்லாம் உச்சரிக்கத் தேவையில்லை. அதேவேளை இருக்கும் தமிழைக் காப்பாற்ற வேண்டும். தொலைக் காட்சிகளில் Hi, Bye சொல்கிறார்கள். அவசியமில்லை. நன்றியும், வணக்கமும் சொல்லலாம் என்று சிலரிடம் கூறியிருக்கிறேன்.

இலங்கை வானொலியில் கே.எஸ்.ராஜா அறிமுகப்படுத்திய அறிவிப்புப் பாணியில் ஆரம்பத்தில் எங்களுக்கு உடன்பாடில்லை. ஆனால், ஒரு சிறப்பு என்னவென்றால் ஒரு ஆங்கிலச் சொல் கூடக் கலக்காமல் தமிழையே English Style இல் தான் அவர் அறிவிப்பு செய்தார். அதுவே ஒரு அலையாகப் பரவி எத்தனையோ பேர்களை அந்த அறிவிப்புப் பாணியைப் பின்பற்ற வைத்தது. இளைய தலைமுறை ஏற்றுக் கொண்டது. இப்படி நவீன வடிவங்களைக் கொண்டு வரலாமே!



**ஒருவரிடமிருந்து பதிலை எப்படி வரவழைப்பதென்பதை ரஜினியிடமிருந்து கற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். அது பற்றி...**

ஆம். அவருடனான நேர்காணலின் போது, நான் ஒரு கேள்வியைக் கேட்டால் அவர் முகட்டு வளையைப் பார்ப்பார், கீழே பார்ப்பார். ஒரு சில வினாடிகள் கடந்த பின் "ஆமாம்" என்று பதில் சொல்வார். அடுத்த கேள்விக்கும் அதே போல் தாமதித்து "இல்லை" என்பார். அதற்கடுத்த கேள்விக்கு "நீங்கள் சொன்னது சரி" என்பார். எல்லாமே ஒற்றைச் சொல் பதில்கள். இப்படியே அமைந்த பேட்டியில் அவர் ஒன்றுமே பேசியிருக்கவில்லை. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்தப் பதிவினைப் போட்டுக் கேட்டுவிட்டு நான் தனியாக இருந்து சிந்தித்துப் பார்த்தேன். நான் கேட்டதுக்கு அப்படியும் பதில் சொல்லலாம் என்பது அப்போது புரிந்தது. ஏனென்றால் என்னுடைய கேள்வியிலேயே பதில் இருந்தது. ஆகவே, ஒருவருடைய பதிலை எனது கேள்விக்குள் எப்படிச் சிக்க வைப்பது என்பதை அன்றுதான் நான் கற்றுக் கொண்டேன்.

**சரி தவிர்க்கிற விடயங்கள்...**

அவர்களை இழிவு படுத்துகிற விதமாகக் கேள்விகள் கேட்பதைத் தவிர்க்கிறேன். ஏதாவதொரு விதத்தில் மாட்டி விடுவோம் என்ற ரீதியில் கேள்விகள் அமையக் கூடாது.

**வாசகர்களுடைய அபிப்பிராயங்களாக இருக்கின்ற பட்சத்தில்; எதிரான விடயங்களாக இருப்பினும் உண்மையை அறியும் நோக்கில் கேள்விகள் அமையக் கூடாதா?**

நீங்கள் சந்திக்கச் செல்பவர் புகழ் பெற்ற ஒருவராக இருந்தால்; அவருடைய பலவீனத்தையோ, குறையையோ சுட்டிக் காட்ட வேண்டிய அவசியமில்லை. பெருமளவு மக்களும் அவர் மீது வைத்திருக்கிற அபிப்பிராயத்தைக் கெடுக்க நீங்கள் யார்? அந்த இடத்திற்கு வருவதற்கு அவர் எவ்வளவு உழைத்திருப்பார். ஒரு சின்ன கிளு கிளுப்புக்காக ஒருவருடைய புகழ்ச்சிக்குக் களங்கம் கற்பிக்க நாம் ஏன் முயல வேண்டும்! இது Investigation Journalism ற்குப் பொருத்தப்பாடுடைய போக்கு. அதற்குப் பொருத்தமானவர்கள் சமூகவிரோதிகள்-குற்றவாளிகள் மட்டுமே. ஆனால்

புகழ் பெற்ற மனிதர்களின் குறைகளைக் காட்டுவதினூடாக அதையும் மற்றவர்கள் பின்பற்ற வேண்டுமென்கிறீர்களா? அவர்களிடமிருந்து நமக்குத் தேவையான நல்ல விடயங்களை மட்டுமே எடுத்துக் கொண்டு தேவை யில்லாதவற்றை விட்டுவிடுங்கள்.

**தென்னிந்திய சினிமாவோடு நிறைய நெருக்கமுள்ள நீங்கள்; இங்குள்ள நல்ல கலைஞர்களை ஏன் அங்கு அறிமுகப்படுத்தக் கூடாது?**

சிலரை அறிமுகப்படுத்தியிருக்கிறேன். இன்னும் வாய்ப்புக்காகக் காத்தி ருக்கிறேன். அதற்கெல்லாம் முன்பு நம்மவர்களுக்குச் சிறந்தவோர் பயிற்சிப் பட்டறை அவசியம்.

**கன்னத்தில் முத்தமிட்டால் திரைப்படத்தில் நீங்கள் எழுதிய 'சிஞ்ஞோரே' என்ற பாடலில் மிக அழகான சொற்களைப் போட்டிருந்தீர்கள்!**

கவிநயம், தத்துவம், Tourist Promotion எதுவுமே வேண்டாமென்று மணி ரத்னமும், ஏ.ஆர்.ரஹ்மானும் கேட்டுக் கொண்டார்கள். 20 பாடல்கள் எழுதினேன். இருவருக்கும் பிடிக்கவில்லை. 21வது பாடல்தான் ஓகே யானது.

**'சிஞ்ஞோரே' என்பதன் அர்த்தம்தான் என்ன?**

சார், தலைவா, ஐயா என்று மரியாதையாக (அல்லது கிண்டலாக) அழைப் பது. சிஞ்ஞோரே என்பது போர்த்துக்கேயச் சொல். இலங்கையில் பைலா வையும், கப்பிரிஞ்ஞாவையும் அறிமுகப்படுத்தியவர்கள் போர்த்துக் கேயர்கள்தான். சிஞ்ஞோரே என்றொரு பைலாப் பாடல் ஏற்கனவே இருப் பது பற்றித் தெரிந்திருப்பீர்கள்.

**இதுவரை காற்றோடு மட்டுமே கலந்து போய் விட்ட உங்களது படைப்பாற்றல் வடிவங்களைப் பதிவுகளாக்கும் எண்ணமேதும் இருக்கிறதா?**



பலரையும் போலச் சுய தம்பட்டம் அடித்துக் கொள்ளும் வகையிலோ அல்லது தம்முடைய காலம்தான் பொற்காலம் எனும் மாதிரியோ நான் எதையுமே பதிவு செய்யப் போவதில்லை. எதிர்காலத்தில் இளைய சந்த திக்குப் பிரயோசனப்படுமாறு ஏதாவது படைக்க விரும்புகிறேன். அந்த நல்ல விடயங்கள், அவர்கள் பல புதிய நிகழ்ச்சிகளை உருவாக்குவதற்கு உதவ வேண்டும்.

இன்னொன்று நான் சந்தித்த மனிதர்களிடம் கற்றுக் கொண்ட, பெற்றுக் கொண்ட நல்ல விடயங்களையெல்லாம் ஒரு நூலில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

*14.05.2006*



## எஸ்.நடராஜா

பவள விழா கண்ட வீரகேசரியில் பொன்விழா கண்ட பத்திரிகையாளர் இவர்! அதிகம் பேசமாட்டார். ஆனால் 'வாயாடி' என்று அறியப்பட்டவர். வேலை செய்வதற்காகவன்றி; வேறெதற்காகவும் அலுவலகம் செல்லாத பத்திரிகையாளராய் இவரை மட்டும் தான் நான் அடையாளம் கண்டிருக்கிறேன்.

1955 இல் வீரகேசரி விளம்பரப் பிரிவிற்கு மொழி பெயர்ப்பாளராக இணைந்தவர். பின்னர் வழங்கற் பகுதி முகாமையாளராகவும், வீரகேசரியின் யாழ். கிளை முகாமையாளராகவும் பணியாற்றியிருக்கிறார். ஆனால் இவர் கொண்டிருந்த/ இன்னமும் கொண்டியங்குகிற பேனா; சில வாய்ப்பாடுகளின்படியோ, வரை முறைகளின்படியோ வெறும் முகாமைத்துவப் பதிவெழுதி முன்னேறியிருக்குமானால்; என்னுடைய இந்தப் படைப்பு, 19 பேர்களுடைய நேர்காணல்களை மட்டுமே கொண்டிருந்திருக்கும்.

அரை நூற்றாண்டு காலம் (1955-2005) தொடர்ந்து ஒரே பத்திரிகை நிறுவனத்தில் இவர் பணியாற்றிய சாதனையை, உலகளவிலுள்ள வேறெந்தவொரு ஊடகவியலாளரும் நிகழ்த்தியிருக்கக் கூடும் என்றெனக்குத் தோன்றவில்லை. (''விரும்பினால், 'கின்னஸ்'



இற்கு விண்ணப்பித்துப் பாருங்கள்'' என்றிவரிடம் வேண்டுகோள் விடுக்கிறேன்.)

எழுபது வயது தாண்டிய முதுமையை அடித்துக் கிடப்பில் போட்டு விட்டு இப்போது இவருக்குள் பறந்து கொண்டிருக்கிறது ஒரு சிட்டுக் குருவி! இதன் சிறகடிப்புக்கு வானம் கொடுத்து வரவேற்றிருக்கிறது சுடரொளி பத்திரிகை! களங்கள் மாறினாலும், தன் கருத்துக்களை விதைப்பதற்குச் சரியான தளங்கள் கிடைத்துக் கொண்டே இருப்பது இந்தப் பத்திரிகையாளனுக்கு மட்டும் பிரத்தியேகமான கிடைப்பனவோ! ஒன்பது வருடங்கள் வீரகேசரியில் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். ஆனால் அவர் அங்கிருந்த இறுதி இரண்டு வருடங்கள் தான், நான் அங்கு பணி செய்த காலமாகவும் இருந்தது. ஏதாவது பேசமாட்டாரா என்று நானாக வலிந்து போய் பேச்சுக் கொடுத்துப் பெற்றுக் கொண்ட சில அனுபவங்களை எனக்குள் ஏற்றி மீட்டுப் பார்க்கிறேன்.

எமது நாட்டின் தமிழ்ப் பத்திரிகையாளர் களுக்குள் இவர் ஒரு 'Living Legend' என்று தான் என் உதடுகள் வார்த்தையாடி மனதை நிறைக்கிறது. பத்திரிகையாளர்களாகப் பிறக்க முடியும்! ஆனால் யாரும் உருவாக முடியாது!! இவருடைய மௌனம் மொழி பெயர்க்கப்பட்ட போது...

**பத்திரிகையாளரின் ஓய்வுக் காலத்தைத் தீர்மானிப்பது வயதா? இயலாமையா ?**

சிறந்ததோர் பத்திரிகையாளராயின்; உச்ச பட்ச இயலாமையே அவருடைய ஓய்வைத் தீர்மானிக்கும். மூப்பு ஆரோக்கியமாக இருந்தால் அவருடைய தொழிலோட்டம் தடையின்றிச் சென்று கொண்டிருக்கும். பிற தொழில்களுக்கில்லாத பல தனிச்சிறப்புகள் கொண்டதுதான் பத்திரிகைத் தொழில். தகுதி வாய்ந்த ஒரு பத்திரிகையாளரின் பிறப்பு என்பது இந்த உலகிற்குக் கிடைத்ததோர் அருங்கொடையே! அவருடைய ஆளுமையில் தங்கியிருக்கின்ற விடயங்கள் உலகத்தின் போக்கினையே மாற்றக் கூடியன, மாற்றியும் இருக்கின்றன எனும் போது அந்த உற்சாகமே அவரை அதிக காலம் ஆரோக்கியமாக வாழ வைக்கப் போதுமானது.

**மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரையில், பத்திரிகையாளர்களின் சேவைக்காலம் எந்த வயது வரை என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா?**

உடலும், மனமும் ஆரோக்கியமாக இருந்தால் எந்த வயது வரை வேண்டுமானாலும் பத்திரிகைத் தொழிலில் இருக்க முடியும். ஆனாலும், மூன்றாம் உலக நாடுகளில் 55 வயதுக்கு மேற்பட்ட பத்திரிகையாளர்கள் தொழிலில் இருப்பது குறைவாகவே இருக்கிறது. இந்த வயதிலுள்ள எல்லோருடைய மனதுக்கும், உடலுக்குமிடையில் ஒரு போராட்டம் நடக்கிறது. வேலைக்குப் போ போ என்று மனம் சொல்ல; உடல் அதை மறுக்கிறது. ஓய்வெடுக்கும் படி தூண்டுகிறது. பிற தொழில்களில் இந்தப் போராட்டம் உடலின் பக்கம் நின்று வெற்றியைக் கொடுக்கும். ஆனால் பத்திரிகைத் தொழிலில் மன வலிமையே வெற்றி பெற்று விடுகிறது. உலகத்தை தன்னுடைய மூளைக்குள் வைத்து எடை பார்க்கிற பத்திரிகையாளன் மரணத்திற்குப் பிறகும் கூட தொழில் செய்வான். அவனுடைய அனுபவத்தைப் பெற்றுக் கொண்டு வளர்ந்தவர்கள் ஆசிரிய பீடத்தில் தொடர்ந்து கொண்டே இருப்பார்கள்.

**உங்களையொத்த மன வலிமையால் மூப்பை / வயதை வென்ற பத்திரிகையாளர்களாக இன்று யாரைக் குறிப்பிடுவீர்கள்?**

எனக்குக் குருவாக இருந்த ஈ.வி. டேவிட் ராஜு அவர்கள் (72 வயது), தினக்குரலில் இப்பொழுதும் பத்திரிகையாளராகக் கடமையாற்றுகிறார்.



**மேற்சொன்ன இயல்புகளையெல்லாம் நீங்கள் கொண்டு தான் இருந்திருக்கிறீர்களா? உங்களின் கீழ் பணி புரிந்தவர்களை எப்படி நடத்தியிருக்கிறீர்கள்?**

நான் மாறாக நடக்கவில்லையென்பதாலேயே இந்தப் பேட்டியில் என் வாய்மொழியைப் பதிவு செய்கிறேன். குரோதங்களையோ, குறுகிய மனப்பான்மையையோ கொண்டவன் யாராக இருந்தாலும் அவன் புனிதமான இந்தத் துறையில் இருப்பதற்கு லாயக்கற்றவன்.

என்னுடைய காலத்தில் புதிதாக வேலைக்கு வருகின்ற பத்திரிகையாளரை நான் சும்மா இருக்க விடமாட்டேன். அவர், தான் வேலைக்கென்று வந்தவரென்பதை உணரும் வகையில் தொடர்ந்து வேலை கொடுத்துக் கொண்டே இருப்பேன். அவசியமற்ற செய்தியாக, மொழிபெயர்ப்பாக இருந்தாலும் அவர் தொடர்ந்து சுறுசுறுப்பாக எழுதிக் கொண்டே இருக்க வேண்டும். எழுதியவற்றை வாங்கி மேசையில் வைத்து விட்டு அவரில்லாத வேளையில் குப்பையிலும் போடுவேன். இத்தகைய பயிற்சியை முழுமனதோடு ஏற்றுக் கொண்டவர்களால் தான் பத்திரிகைத் துறையில் மிளிர முடியும்.

மேலும், எனக்குக் கீழ் பணியாற்றுகின்ற பத்திரிகையாளர்களுடைய செய்திகளை வாசித்து அவர்களுக்குப் புதிய ஐடியாக்களைக் கொடுக்க வேண்டும். அவர்கள் சேகரித்துக் கொண்டு வருகின்ற செய்தி பிழையாக இருக்குமானால் அவர்களைப் பகிரங்கமாக ஏசுவதில்லை. தனிப்பட்ட முறையில் அழைத்துத் திருத்தி, இப்படி எழுதினால் நன்றாக இருக்கும் என்று கூறுவதும், அவருக்குப் பாராட்டு வந்தால் அதைத் தெரிவிப்பது அல்லது கடிதங்களைக் கையிலேயே கொடுப்பதும் என இத்தொழிலில் அவருக்கு விருப்பத்தோடு கூடிய ஈடுபாடு வருவதற்குரிய என்னுடைய செயற்பாடுகளைச் சரியாகச் செய்திருக்கிறேன்.

**உங்களைப் போன்ற பத்திரிகையாசிரியர்களும், நீங்கள் பயிற்றுவித்தவர்கள் போன்ற பத்திரிகையாளர்களும் இன்று இல்லாமற் போய் விட்டார்களே!**

இது கணினி யுகம். வசதிகள் அதிகரித்து விட்டன. எழுதுவது குறைந்து, மூளைக்கான வேலை அதிகரித்து விட்டது. செய்திப் பரிமாற்றங்களைப் பொறுத்தவரையில் காலத்துக்குக் காலம் அது வளர்ந்துதான் வருகிறது. ஆனால் மனோ பாவங்கள், மற்றவர்களை வளர்த்து விடுகிற தன்மைகளை

எல்லாம் எங்களுடைய தேசியப் பத்திரிகை நிறுவனங்களில் உள்ள வர்களிடம் காண முடியவில்லை. விதிவிலக்காக ஒரு சிலர் இருக்கலாம்.

வளர வேண்டிய இளைய பத்திரிகையாளர்கள் தமது மேதா விலாசங்கள் வெளியுலகிலெல்லாம் தெரிய வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் வேறொருவரின் சிந்தனையை அப்படியே தமதாக்கிக் கொள்கிறார்கள். இதற்கெல்லாம் இன்று இணையமும், இந்தியத் தமிழ் இதழ்களும் பெரு வசதி செய்கின்றன.

இன்னொரு மொழியில் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றை நான் அப்படியே மொழி பெயர்த்தால் அதற்கு மொழிபெயர்ப்பு என்று குறிப்பிட்டுத்தான் என் பெயரைப் போட வேண்டுமே தவிர; தானே அலசி, ஆராய்ந்து, தேடி எழுதியதாகப் பெயர் போட நினைக்கிற பத்திரிகையாளன் வளர்ச்சியைக் காண முடியாது. copy, paste செய்கிற பத்திரிகையாளர்கள்தான் இன்று நிறையவே இருக்கிறார்கள்.

உங்களுடைய கேள்வியின் படி இந்த நிலைமை இன்று காணப்படுவதற் கான காரணம், பத்திரிகை உள்ளிட்ட ஊடகத்துறை இன்று ஒரு கவர்ச்சித் தொழிலாகி விட்டது. இதிலும் பத்திரிகையை விட வானொலிக்கும், தொலைக்காட்சிக்கும் படையெடுப்பவர்கள்தான் மிக அதிகம். தங்களு டைய குரலைக் கேட்க வேண்டுமென்றும், முகம் தெரிய வேண்டுமென்றும் ஆசைப்படுகிறார்கள். ஆனால் அதற்குண்டான பெறுமதியை அல்லது தகுதியை உணருகிறார்களில்லை.

**இலங்கையிலுள்ள எல்லா மொழி ஊடகங்களிலும் இந்த நிலைமை இருக்கிறதா? அல்லது...**

தமிழ்மொழி ஊடகங்களில் தான் பெருமளவில் இருக்கிறது. இதற்கு நாட்டின் சூழ்நிலையும் ஒரு காரணம். ஆங்கில, சிங்களப் பத்திரிகைகள் விசாரித்து, ஆய்வு செய்து எழுதுகிற அளவுக்கு தமிழ்ப் பத்திரிகைகள் இல்லை.

இலங்கைப் பத்திரிகைத் துறை தோன்றி 150 வருடங்களுக்கு மேலா கிறது. ஆனால் 5 வருடங்களுக்கு முன்புதான் இதழியல் கல்லூரி (College of Journalism) என்றொன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். இங்கு



வருடா வருடம் பயிற்சி பெறுகின்ற மாணவர்களிலும் தமிழ் மொழி மாணவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள்.

முன்பு பத்திரிகை நிறுவனங்களில் வழங்கப்பட்ட செய்முறைப் பயிற்சி, மொழி பெயர்ப்புப் பயிற்சி, எழுத்துப் பயிற்சி, செய்தி சேகரிப்பு முறை எல்லாம் அனுபவ ரீதியாக வழங்கப்பட்டன. தற்பொழுது அங்கே கேள்வி ரீதியில் படிக்கிறார்கள். இதன்படி பார்த்தால், எமது பத்திரிகைத் துறையின் வளர்ச்சி வேறொரு திசை நோக்கித்தான் போய்க்கொண்டிருப்பதாய்ப் படுகிறது. இன்னும் 5 வருடங்கள் சென்றால், இந்த இதழியல் கல்லூரியில் படித்தவர்களுக்குத்தான் வேலை கிடைக்கும் என்றொரு நிலை ஏற்படலாம்.

இதற்கேற்றவாறுதான் தற்போதைய கல்வித் திட்டமும் கூட மாறியிருக் கிறது. தகவல் தொழில் நுட்பத்திற்கே (IT) முக்கியத்துவம் கொடுக்கி றார்கள். ஆகவே மாணவர்கள் இந்த நிலைமைகளையெல்லாம் தெரிந்து கொண்டு அதற்கேற்றவாறு தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். என்னுடைய அப்பா பத்திரிகையாளராக இருந்தவர் என்பதால், நானும் பத்திரிகையாளராக முடியும் என்று முயற்சி செய்ய முடியாது.

**முன்பெல்லாம் Copy, Paste முறையைக் கையாளும் பத்திரிகை யாளர்கள் இருந்ததில்லையா?**

மிகக் குறைவாக இருந்தார்கள். இந்தியாவிலிருந்து வெளிவரும் பத்திரி கைகளிலிருந்து சில செய்திகளை, துணுக்குகளை வெட்டி எடுத்துப் போடுவார்கள். அதனைக் Cutting and Pasting என்போம். அத்தகைய விடயங்கள் பெரும்பாலும் சினிமா செய்திகளாகவே இருக்கும். தனக்குக் கொடுக்கப்பட்ட பக்கத்தை இப்படி நிரப்புவதை அவர் பெருமையாகக் கருதுவார். ஆனால் அவர் பிரயாசையுள்ள ஒரு பத்திரிகையாளனல்ல.

**உங்களுடைய காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த சர்வதேச செய்திச் சேவை எது? அதனை எப்படிப் பயன்படுத்தினீர்கள்?**

முன்பு ரொய்ட்டர் (Reuter) என்கிற ஒரேயொரு Tele Printer Service தான் இருந்தது. வெளிநாட்டுச் செய்திகளுக்காக அதனைப் பாவிப்போம். முக்கியமான செய்திகளை மட்டும் எடுத்து மொழி பெயர்த்துப் போடுவோம். அப்போதெல்லாம் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவருகின்ற உலகச்

செய்திகள் ஒரே மாதிரி இருக்காமல், வெவ்வேறு கோணங்களிலும், தலைப்புகளிலும் இருக்கும். இன்று இணையத்திலிருந்து தமிழில் எடுத்து மேலும் கீழும் வெட்டி விட்டோ அல்லது தம்மால் முடிந்த ஏதோ ஒரு மாற்றத்தைச் செய்து விட்டோ போட்டு விடுகிறார்கள். இதனால் உலகச் செய்திகளும், சில வேளைகளில் உள்நாட்டுச் செய்திகளும் எல்லாப் பத்திரிகைகளிலும் ஒரே மாதிரியாகவே வெளிவருகின்றன.

**ஒவ்வொரு பத்திரிகை நிறுவனமும் தகுதியான பத்திரிகையாளர் களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்தால் தவறான இப்போக் கினைத் தவிர்க்கலாமில்லையா! ஏன் முடியாமல் இருக்கிறது?**

1983 ஜூலையில் ஏற்பட்ட கலவரத்திற்குப் பின்னர் சிறந்த பல தமிழ்ப் பத்திரிகையாளர்கள் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுக ளுக்குச் சென்று விட்டார்கள். அதனால் அவர்களுக்குக் கீழிருந்தவர்கள் ஆசிரியர்களாகப் பொறுப்பேற்றுப் பத்திரிகைகளை நடத்த வேண்டியி ருந்தது. இது படிமுறை வளர்ச்சியாக இல்லாமல் பாய்ச்சலாக அமைந்து விட்டது. முன்பு குருகுலக் கல்வி முறை என்பார்களே. அது போல்தான் பத்திரிகைத் துறையிலும் இருந்தது. மொழி பெயர்ப்பாளராக இருந்து செய்தியாளராகி, உதவி ஆசிரியராகி, செய்தி ஆசிரியராகி பின் பிரதம ஆசிரியராவது. புலம்பெயர்வு இந்தப் படிமுறை வளர்ச்சியைக் குலைத் ததால் ஏற்பட்ட விளைவுகள்தான் உங்கள் கேள்வியில் தொனிக்கும் விடயம்.

ஈடுபாட்டுடன் இல்லாமல் வேலைக்கு வந்தவர்களையும் சேர்த்துக் கொண்டு பத்திரிகைகளைக் கொண்டு நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டு விட்டது. இப்பொழுது 40 வயதிற்குக் குறைந்தவர்கள் பத்திரிகை ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அனுபவமோ வாழ்க்கைப் பாடமோ தெரியாது. தனக்குக் கீழுள்ளவர்களின் சிரமங்களைக் கண்டு கொள்ளவும் அவர்கள் முயல்வதில்லை.

பத்திரிகைத் துறையில் பரந்து பட்ட அளவுக்கு வேலை வாய்ப்புக்கள் இல்லை. இலங்கையில் நான்கைந்து தேசியப் பத்திரிகைகள் தான் இருக்கின்றன. இங்கு பொறுப்பான பதவிகளில் இருப்பவர்களில் சிலர் தம்முடைய பதவிகளைக் காப்பாற்றுவதற்காகப் பல்வேறு முயற்சிக ளையும் மேற்கொள்கிறார்கள். அப்போதுதான் அவர்களின் கீழே பணி புரிபவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.



**இந்த மனோநிலை தவறென்று தெரிந்தும், நிறுவனம் அவரை ஏன் தொடர்ந்தும் ஆசிரியராக அமர்த்தி வைத்திருக்கிறது?**

தெரியவில்லை

**'ஊடகங்களில் வெட்டு'- இது ஒரு தொற்று நோய் மாதிரிப் பரவிக் கொண்டே இருக்கிறது. பொறுப்பான பதவிகளில் இருப்பவர்களும், அவர்களுக்குக் கீழே பணி புரிபவர்களும் எங்கே முரண்பாடு கொள்வதால் இது நிகழ்கிறது?**

ஆசிரியரோ அல்லது வேறு ஊடகங்களின் பொறுப்பாளர்களோ, தன்னிடமுள்ள திறமையால் அந்த ஊடகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று நினைக்கிறார்கள். இதை விட்டால் வேறெங்கு போக முடியும் என்று அநாவசியமாகப் பயப்படுகிறார். தனக்குக் கீழுள்ளவர்கள் திறமையுள் ளவராக இருந்தால், அவரால் தன்னுடைய வேலை பறிபோய் விடும் என்று பயப்படுகிறார். தன் மீதும், தன் திறமை மீதும் நம்பிக்கை இல்லாத தன்மை இது. இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்கிற அடிப்படையில் தனக்குக் கீழுள்ளவரை வளர்த்து விட வேண்டியது ஆசிரியருடைய/ நிகழ்ச்சிப் பொறுப்பாளருடைய கடமை. முன்பெல்லாம் பத்திரிகைச் சுதந்திரத்திற் காகப் போராடினார்கள். இப்போது...?

பத்திரிகைத் துறையை எடுத்துக் கொண்டால்; ஆசிரியர், உதவி ஆசிரியர், பத்திரிகையாளர்கள் என்று பணிபுரியும் எல்லோருமே ஒரே குடும்பமாக/ குழுவாகச் செயற்படுவோம். பொதுவாகப் பார்த்தால் பத்திரிகை நிறுவனம் ஒரு குடும்பம். விளம்பரம், ஆசிரிய பீடம், வழங்கற் பகுதி, நிர்வாகம் என்ற அடிப்படையில் பார்த்தால் அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு குடும்பங்கள். ஆசிரிய பீடம் என்கிற குடும்பத்துக்குத் தலைவராக இருப்பவர் பிரதம ஆசிரியர். அவர் தகப்பன் மாதிரி இருக்க வேண்டும். உயர் பதவியிலிருக் கும் அவர், தனக்குக் கீழே உள்ளவர்களைத் (வயது குறைந்தவர்களோ, கூடியவர்களோ) தன்னுடைய பிள்ளைகள் போல் நடத்த வேண்டும். வெளிப்படையாகக் காட்டாவிட்டாலும் மனதுக்குள் அப்படித்தான் நினைக்க வேண்டும். பத்திரிகையாளருக்கு அவசியமான மனோபாவம் இது! இந்த உறவு இருந்தால் பதவி பறிபோய்விடும் என்ற பயம் வராது.

என்னுடைய வீடு மட்டும்தான் எனக்கு இருப்பிடமல்ல என்று நான் அடிக்கடி சொல்வதுண்டு.

**பத்திரிகையாளருடைய பரிணாம வளர்ச்சியில், அவர் பிறருடைய வாழ்க்கையைப் படிக்கக்கூடிய வயது எதுவாக இருக்கிறது?**

எல்லோருக்குமே 20 வயதுக்குப் பிறகுதான் வேலை வாழ்க்கை ஆரம்பிக் கிறது. 20 வயதிலேயே பத்திரிகைத் தொழிலில் தன்னை இணைத்துக் கொண்டவர் 10 வருடங்கள் வரை அனுபவம் பெறுகிறார். 30-50 வயதிற்குள் தான் அவர் தன்னுடைய திறமையை வெளிக்காட்டுகிறார். இந்த 30 வருட காலத் தொழில் வாழ்க்கையில், தான் பெற்றுக் கொண்ட அனுபவங்களும், வளர்த்துக் கொண்ட திறமைகளும் சேர்ந்தால்தான், தனக்குக் கீழே உள்ளவருடைய வாழ்க்கையை அவரால் படிக்க முடியும். அப்போதுதான் அவர்களைத் தட்டிக் கொடுத்து வளர்க்கும் பரந்த மனப்பாங்கு இயல் பாகவே அவருக்கு ஏற்படும். இலத்திரனியல் ஊடகக்காரர்களுக்கும் இதுவே பொருந்தும்.

**இந்த மனப்பான்மை உள்ளவர்கள் தங்களை மாற்றிக் கொள்வ தற்கான வாய்ப்பு எத்தகையது?**

இவர்கள் உலகத்தை நன்கு படித்தாலொழிய உருப்படமாட்டார்கள். தனக்குரிய பதவி வாய்ப்புக் காலம் வரை அந்த நிறுவனத்தினையே தான் ஆள்வதாக நினைக்கிற இந்த மனோபாவத்துக்கு சிறந்த மதக்கல்வி அறிவின்மையும் ஒரு காரணம். சுய நம்பிக்கையை வளர்ப்பதற்கு மதக் கல்வி அவசியம். எல்லா மதங்களும் ஒன்றையேதான் போதிக்கின்றன. எதையாவது ஒன்றைப் பின்பற்றி அறிவைப் பெறாதவர்களின் கேலிக் கூத்துக்கள்தான் இந்த நடவடிக்கைகள் எல்லாம்.

இரண்டாவது விடயம், ஆங்கில அறிவு குறைவு. தமிழில் அல்லது சிங்க ளத்தில் மட்டும் படித்தவனுக்குத்தான் குறுகிய மனப்பான்மையும், குறைந்த அறிவும் இருக்கிறது. ஆங்கிலத்தில் படித்து, அவர்களுடன் பழகிப் பாருங்கள். பழக்க வழக்கமும் நன்றாக இருக்கும். மனமும் விசால மாகி விடும். இப்போது யார்தான் புத்தகங்களை வாசிக்கிறார்கள். சினி மாவைத்தானே பார்க்கிறார்கள்.

**ஆங்கில மொழி ஊடகங்களில் இந்தத் தலைமைகளின் நிலைமை எப்படி இருக்கிறது?**



இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழைப் போலன்றி; ஆங்கில, சிங்கள ஊடகங்களில் வேலை வாய்ப்புக்களும் அதிகம். திறமையை வளர்த்துக் கொள்வதற்கான வழிவகைகளும் அதிகம். அரசியலிலும் அரசாங்கத்திலும் அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. தமிழில் இது மிகவும் குறைவு. தமிழ்ப் பத்திரிகையைப் பொறுத்தவரையில் பெரிய பதவிகளில் அதிகம் பேர் இருந்ததில்லை. பீட்டர் கெனமன், ஆனந்த டி. அல்விஸ் போன்றவர்கள் நிருபர்களாக இருந்து, குறைந்தது ஐந்து வருட அனுபவத்தோடு பத்திரிகைத் துறையில் நுழைந்து தம்மை வளப்படுத்திக் கொண்டார்கள். தமிழ்ப் பத்திரிகைத் துறையைப் பொறுத்தவரையில், எழுத்தாளர்களோ, பேச்சாளர்களோ பொருளாதாரத்தில் தம்மை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. சுற்றிச் சுற்றி இதற் குள்ளேயே இருக்க வேண்டும். அதனால்தான் இந்த அவலங்கள் எல்லாம் தமிழ் ஊடகங்களில் அரங்கேறி ஆடிக் கொண்டிருக்கின்றன.

**நிதானமாக 'வாயாடி'க் கொண்டிருந்த நீங்கள் திடீரெனச் 'சிட்டுக் குருவி'யாகிப் பறக்கத் தொடங்கியதன் அவசியம்தான் என்ன?**

(சிரிக்கிறார்) இது, தாத்தா - மகன் - பேரன் என்கிற உறவு முறைக்குள் ஏற்படும் பாகப் பிரிவினை கோரலின் பாற்பட்டது. என்னுடைய வாயாடித் தனத்தில் முன்பு அந்தக் குடும்பம் கலகலப்பாகவே இருந்தது. சில காலம் செல்ல என்னுடைய பதவிக்கு வருவதற்கு ஒருவர் ஆசைப்பட்டார். நான் முன்பு குறிப்பிட்ட நிலவரங்களின் படியும், இக்கட்டான சூழ்நிலையின் படியும், அவருக்கு ஒரு தலைமைப்பதவி வழங்கப்பட்டது. ஆனால் வெளியிலிருந்து வருபவர்கள் என்னைச் சந்தித்து விட்டுத் தன்னைச் சந்திப்பதை அவர் பிழையாகக் கருதிக் கொண்டார். நான் இருப்பதால் தான், வருபவர்கள் தன்னிடம் நேரடியாக வரவில்லை என்று எண்ணி, பாகப் பிரிவினை கோரினார். தாத்தா இறந்தால் அவருடைய சொத்து தமக்குத்தான் என்று சில பேரன்களும் அவருடன் உடன் நின்று உரிமை கோரினார்கள். தன்னுடைய சொத்து பாகப் பிரிவினைக்குட்படுவதை விரும்பாத தாத்தா எவருக்கும் சொல்லாமல் வெளியேறிப் பறக்கத் தொடங்கினார் - சுதந்திரமாகவே!

**அரை நூற்றாண்டு கடந்து கொண்டிருக்கும் உங்கள் பத்திரிகையுலக வாழ்க்கையில் நீங்கள் கற்றுக் கொண்டதெல்லாம் என்ன?**

பொறுமை, சகிப்புத் தன்மை, நிதானம், நெருக்கடிகளுக்கும் சர்ச்சைகளுக்கும் முகங்கொடுப்பது என்றெல்லாவற்றையும் கூறலாம். ஆனாலும் கூட இயல்பிலும் நான் இப்பண்புகளைக் கொண்டுள்ளவன்தான். என்னுடைய வெற்றி, தோல்விகளால் மனதில் ஏற்படும் மாற்றமும், அதனூடு தொடரும் அடுத்த கட்ட முயற்சிகளும் அமைதியானவையே!

**வீரகேசரி, தமிழர்களுடைய உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டது தானா? ஆரம்பகாலத்தில் அதனுடைய சார்பு நிலை என்னவாக இருந்தது?**

சந்தேகமே இல்லாமல் தமிழர்களுடைய உரிமைகளுக்காகத்தான் செட்டியார் வீரகேசரியை ஆரம்பித்தார். அதன் ஆரம்ப காலங்களில் இந்தியச் செய்திகள் தான் அதிகம் பிரசுரமாகின. இந்தியத் தமிழர்களும், இலங்கைத் தமிழ் ஆசிரியர்களும் தான் தமிழ்ப்பத்திரிகைகளில் நாட்டம் கொண்டிருந்தார்கள். மட்டக்களப்பு, யாழ்ப்பாண மக்கள் ஆங்கில மொழி மூலம் படித்தவர்கள். அவர்கள் ஆங்கிலப் பத்திரிகைகளைத் தான் படித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது வீரகேசரியின் ஆசிரிய பீடத்தில் பணி புரிந்தவர்களில் அதிகமானவர்களும் இந்தியர்கள்தான். குறைந்த சம்பளம் என்பதால் அதில் சேர்பவர்களும் குறைவு. 1956 இற்குப் பின்னர் பண்டாரநாயக்க, பத்திரிகையாளர்களுக்குச் சார்பாகச் சில சட்டங்களைக் கொண்டு வந்தபின்புதான் இலங்கையர்கள் பத்திரிகைத் தொழிலில் விரும்பிச் சேர்ந்தார்கள். இந்தியச் செய்திகள் குறைவடையத் தொடங்கின. 1956 இற்குப் பிறகு தான் வீரகேசரியைத் தமிழர்கள் பரவலாகப் படிக்கத் தொடங்கினார்கள். இந்த வளர்ச்சி முறையில் வீரகேசரி இன்று வரையில் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் கடமையிலிருந்து தவறவில்லை. பொறுப்பாக இருந்த ஆசிரியர்கள் எல்லோருமே அதைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள்.

**அரசாங்கத்திடமிருந்து நெருக்கடிகள் ஏற்படும் வேளைகளில்...**

ஈடுகொடுத்துத் தான் போயிருக்கிறோம். ஆனாலும் 1960 இல் மட்டும் ஒரு சிறிய சோதனை ஏற்பட்டது. அப்போது தமிழரசுக் கட்சியினுடைய சத்தியாக்கிரகப் போராட்டம் உச்சக்கட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இன்று யாழ்ப்பாணத்தில், நாளை திருகோணமலையில்...



என்று இலங்கையின் பல இடங்களிலும் இப்போராட்டம் தொடர்ந்தது. பத்திரிகைகள் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு படங்களையும், செய்திகளையும் பிரசுரித்தன.

இந்தப் போராட்டங்களுக்குப் பத்திரிகைகள் தான் தூண்டுகோலாக இருக்கிறதென்றொரு எண்ணம் அப்போது ஆட்சியிலிருந்த சிறிமாவோ அரசாங்கத்திற்கு இருந்தது.

அப்போதிருந்த தமிழ் அமைச்சர் - குமாரசூரியர். தமிழ்ப் பத்திரிகைகள், குறிப்பாக வீரகேசரி தான் இந்தப் போராட்டங்களுக்குத் தூண்டுகோலாக அமைவதாகக் குறிப்பிட்டு, வீரகேசரிக்கு அரசாங்க விளம்பரங்கள் எதையும் கொடுக்கக் கூடாதென்று தடை விதித்தார். அத்துடன் யாழ்ப்பாண நிருபரையும் உடன் வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்று கோரினார். அப்போது யாழ்ப்பாணத்து நிருபராக இருந்தவர் எஸ். செல்லத்துரை - மிகவும் திறமையானவர். ஃபக்ஸ் வசதியொன்றும் அப்போது இல்லை. தொலைபேசி - அதுவும் Trunk Call தான். அங்கத்தைய செய்திகளையும், படங்களையும் அவர் உடனுக்குடன் விமானம் மூலம் அனுப்பி விடுவார். விபரங்களைத் தொலைபேசியினூடாகத் தெரிவிப்பார்.

செய்திகளைத் தடுப்பதற்காகவே குமாரசூரியர் அவரை வேலை நீக்கம் செய்ய வேண்டும், விளம்பரங்களைத் தடுக்கவும் வேண்டும் என்றார். ஆனால் வீரகேசரி முகாமைத்துவம் அதற்கு இடம்கொடுக்கவில்லை. விளம்பரம் வராவிட்டால் பரவாயில்லை. தமிழருக்கான பத்திரிகை, தமிழருக்கான செய்திகளைப் போட வேண்டும் என்பதில் உறுதியாக நின்று வெற்றி பெற்றோம். இன்று வரையிலும் வீரகேசரிக்கு அரசாங்க விளம்பரங்கள் வருவதில்லை.

**நீங்கள் வீரகேசரியிலிருந்து விலகிய பிறகு அப்பத்திரிகையின் போக்கில் ஏதாவது மாற்றங்களைக் காண்கின்றீர்களா?**

இல்லை. அது எப்போதும் போலவே தன்னியல்போடு வெளிவந்து கொண்டிருக்கிறது.

**அதில் பணியாற்றிய நீங்கள், கட்சிகளுக்கிடையிலான விவகாரங் களைச் செய்திகளாக்கும் போது ஏதாவதொரு கட்சியின் பால் சார்ந்து நின்று செயற்பட்டதுண்டா?**

இல்லை. ஆனால் கட்சிகளுடைய போக்கினைப் புரிந்து கொண்டு; அவற்றின் நாடியோட்டத்தினைப் பார்த்து முக்கியத்துவம் கொடுத்திருக் கிறேன். எங்களுடைய தமிழர் போராட்டங்களுக்காக முன்னர் அரும்பாடு பட்டது தமிழரசுக் கட்சி. தமிழருக்காக அது பல தியாகங்களைச் செய்து போராட்டங்களை நடத்திய போது; அதனுடைய செய்திகளுக்கு முன் னுரிமை வழங்கியிருந்தோம். ஏனைய கட்சிக்காரர்கள் இது குறித்துக் குறைப்படுவதுண்டு. ஆனாலும், அவர்கள் சொல்வதையும் அப்படியே பதிவு செய்வோம். பிரசுரிக்காமல் விடுவதில்லை. முதற்பக்கத்தில் போட வேண் டிய செய்தி எனில் போடுவோம். அல்லது உள்ளே போடுவோம்.

முன்பு தமிழ்ப்பத்திரிகைகளுக்கு அழுத்தங்கள் குறைவு. இரண்டொரு கட்சிகள்தான் இருந்தன. தற்போது நிறைய இயக்கங்கள் தலை தூக்கி யுள்ளன. துப்பாக்கி முனையில் கலாசாரங்கள் வளர்ந்திருப்பதால் பத்திரி கையாளர்கள் கவனமாகத்தான் கையாள வேண்டியுள்ளது.

அதை விடுத்து ஒரு குறிப்பிட்ட இயக்கத்தை மழுங்கடிக்க வேண்டிய தில்லை. ஆனால் சில இயக்கங்கள் தங்களைத் தான் பெரிது படுத்த வேண்டும். மற்றையதைப் போடக் கூடாதென்று கூறுகிறார்கள். பத்திரிகை கள் இதற்கு அடி பணியக் கூடாது.

பத்திரிகையாளன் சுதந்திரமானவன். அவருக்கு விருப்பு வெறுப்புக்கள் எதுவும் இருக்கக் கூடாது. ஆனால் செய்திகளைப் பெரிது படுத்து வதற்கும், அடக்கி வாசிப்பதற்கும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. எல்லாத் தரப்புச் செய்திகளும் பத்திரிகையில் வந்தாக வேண்டும். இப்போது என்ன செய்கிறார்கள்; தங்களுக்குப் பிடிக்காதவர்களுடைய செய்தி என்றால் தூக்கிக் குப்பையிலே போடுகிறார்கள். இது பத்திரிகை அதர்மம்.

**இந்தத் துறைக்குள் வந்ததற்காக எப்போதாவது வருந்தியிருக் கிறீர்களா?**

இல்லை. இது எனது விதிவசம் கிடைத்த தொழில். 1955 இலிருந்து 2005 வரையான 50 வருட காலமும் வீரகேசரியில் மட்டும்தான் தொடர்ந்து பணியாற்றியிருக்கிறேன்.

**ஆசிரியரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அவரின் கீழ் பணி புரியும் பத்திரிகையாளர்கள் இயைந்து போகத் தான் வேண்டுமா?**



மேலாளருடைய அனுசரணையும், ஆதரவும் இல்லாமல் கீழே வேலை செய்பவர்களால் பிரகாசிக்க முடியாது. ஆனால், ஆசிரியருடைய சுயநலம் தலைதூக்குவது தெரிந்தால் பத்திரிகையாளர் உஷாராகலாம். தனிப்பட்ட முறையில் ஒருவருடைய வாழ்வினைப் பாதிப்பது அல்லது பொருளா தாரத்தைப் பாதிப்பது நீதியற்றது.

**இந்தியாவிலிருந்து பிரசுரங்களை இறக்குமதி செய்ய வேண்டியதன் அவசியம் எப்போது உணரப்பட்டது? அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்ன?**

சிறிமாவுடைய ஆட்சிக் காலத்துக்குப் பிறகு ஏற்பட்ட திறந்த பொருளா தாரக் கொள்கையின் படி வெளிநாடுகளிலிருந்து தாள்களையும், பிரசுரங் களையும் இறக்குமதி செய்யத் தொடங்கினார்கள். அதற்கு முன்பு - சிறிமாவோ காலத்தில் மூடிய பொருளாதாரக் (closed economy) கொள்கையே கடைப்பிடிக்கப்பட்டது. அப்போதெல்லாம் இலங்கையில் வாசிப்பதற்குப் புத்தகங்கள் இல்லை. இதன் தேவையை உணர்ந்து வீரகேசரி ஒரு புத்தகப் பிரசுரத்தை ஆரம்பித்தது. இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை 5,000 வரையான பிரதிகள் விற்பனையாகின. இங்குள்ள எழுத்தாளர்கள் வளர்ந்தார்கள்.

திறந்த பொருளாதாரத்திற்குப் பிறகு ஏற்பட்ட இறக்குமதியால் இங்குள்ள எழுத்தாளர்களுடைய ஊக்கம் குறைந்தது. இந்தியாவில் பிரசுரமும் மலிவு, அச்சுப் பதிப்பும் மலிவு. ஆனால் தரங்களைப் பற்றிக் குறிப்பிட முடியாது. பொழுதுபோக்கு அம்சங்களே அங்கு அதிகம். அவர்களில் 6 கோடிப் பேர் இருந்தாலும், நாங்கள் 25 இலட்சம் பேர் தான் உலகம் முழுவதிலும் தமி ழைப் பரப்பியிருக்கிறோம். அவர்கள் சினிமாவைத்தான் வளர்த்தார்கள்.

**இல்லையே! இன்றுள்ள நமது ஊடகங்கள் இந்தியாவை நம்பித் தானே ஓடிக் கொண்டிருக்கின்றன...!**

இன்றைய எமது ஊடகங்கள் வழங்குவனவற்றை தரமானதென்று சொல்ல முடியாதே! எம்முடைய உருவாக்கற் சிந்தனை வெளிப்பாட்டுக்கு வாய்ப்புக்கள் குறைவு. இதற்குரிய அடிப்படைக் காரணம், சமூகத்திற்காகத் தியாகம் செய்வதற்கு எமது வர்த்தகப் பெருங்குடி மக்கள் தயாராக இல்லை என்பதே! புதிய உருவாக்கங்களுக்குப் போதிய

வளமின்மையால் இந்திய சமாசாரங்கள் இங்கு எமது ஊடகங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஆனால் அவர்கள் எங்களுடைய நிகழ்ச்சி களையோ, விடயங்களையோ தமது ஊடகங்களுக்குப் பயன்படுத்த வில்லை. சிங்கள மொழி ஊடகங்கள் முன்பு நன்றாக வளர்ந்திருக்க வில்லை. பின்னர் தமிழோடு போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து விட்டன. அவர்களுக்கு உற்சாகம் கொடுக்க அரசியலில் ஆள் இருக்கிறது. வசதிகளும் நிறைய இருக்கின்றன.

எங்களுக்காக எத்தனை தமிழ் அமைச்சர்கள்/பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்? நாட்டிலுள்ள பிரச்சினையைப் பாராளுமன்றத்தில் பேசி உலகத்துக்குத் தெரியப்படுத்தினார்களா? இன்று இலங்கையில் தமிழர் படுகின்ற அவலங்களைத் தடுக்க முடியாமல்தானே அவர்கள் பதவிகளில் இருக்கிறார்கள். கண்ணையும், காதையும் பொத்திக் கொண்டு வேலை செய்ய வேண்டியுள்ளது.

*09.07.2006*





# மனோரமா

கொலிவூட் கண்ட 'பொன் விழா' மனோரமா! குணச்சித்திரத்தின் மொத்த ஆளுமை! நகைச்சுவையின் பரிணாமத்துக்கும், பரிமாணத்துக்குமிடையிலான கோட்டைத் தகர்த்தவர். எந்தப் பாத்திரத்திற்கும் பொருந்தக் கூடிய தன் நடிப்பாற்றலால் இதுவரையில் 1350ற்கு மேற்பட்ட படங்களை முடித்து 'கின்னஸ்' சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளவர். கலைமாமணி, பத்ம ஸ்ரீ பட்டங்களுடனும் பலநூறு விருதுகளுடனும் இன்னமும் கொலிவூட்டில் வலம் வந்து கொண்டிருக்கிறார்.

அறிஞர் அண்ணாவும், கலைஞர் கருணாநிதியும் எழுதி அரங்கேற்றிய நாடகங்களில் தோன்றிப் பெற்ற புகழோடு சினிமாவுக்கு வந்து தமிழ், கன்னடம், ஹிந்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய ஐந்து மொழிகளிலும் நான்கு தலைமுறைகளைக் கடந்து நடித்துக் கொண்டிருக் கிறார். தொலைக்காட்சி நாடகங்களும், விளம்பரங்களும் கூட மனோரமாவை விடுவதாயில்லை.

தென்னிந்திய தமிழ் சினிமாவில் இவருடன் நடிக்காத நடிகரோ, நடிகையரோ யாருமில்லை என்பதும், கலைஞர் கருணாநிதி, எம். ஜி. ஆர்., ஜானகி, ஜெயலலிதா என தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர்கள் நால்வருடனும்

இணைந்து நடித்தவர் என்பதும் மற்றெவர்க்கும் கிட்டாத வாய்ப்புகள் தான். எத்தனை தலைமுறை கடந்தாலும் எல்லோராலும் ரசிக்கப்படும் என்று எதிர்வு கூறப்படுகின்ற இவருடைய இரண்டு படங்கள் - 'தில்லானா மோகனாம்பாள்', 'பாட்டி சொல்லைத் தட்டாதே'.

'நடிப்பு என்பது என்னைப் பொறுத்தவரையில் கேக் சாப்பிடுவது போலத் தான்' என்கிறார். நடித்துக் கொண்டிருக்கும் போதே இறந்து விட வேண்டுமென்றும் விரும்புகிறார். ஆனாலும் இது வரையில் நிறைவேறாத விருப்பம் ஒன்றும் இருக்கிறதாம். 2005 இல் கொழும்புக்கு வந்திருந்த அவரை தாஜ் ஹோட்டலில் சந்தித்தேன்.

**நீங்கள் நாடகத் துறையிலிருந்து சினிமாவிற்கு வந்தீர்கள். நடிப்ப தற்கான விதிப்புகள் இரண்டு துறையிலும் வேறுபடுகின்றன. அது குறித்துக் கூறுங்கள்.**

நடிப்பு என்பது இரண்டு துறையிலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கி றது. நடிப்பதற்கு வேண்டிய விதிப்புக்கள் என்று பார்த்தால், நாடகத்தில் நடிக்கும் போது ஒரே தடவையில் திறம்படச் செய்தே ஆகவேண்டும். சினிமாவில் நன்றாக வரும்வரை மீண்டும் மீண்டும் Shots எடுத்துக் கொள்ளலாம். ஆக, இவ்விரண்டிற்குமிடையில் உள்ளது வசதி வேறு பாடுதான்.

ஆனால் உணர்வுகளோடு பொருத்திப் பார்த்தால் நாடகத்தில் முடிவு (Climax) வரையில் Mood ஒரே மாதிரியாக குழப்பமில்லாமல் இருக்கும். இது சினிமாவில் சிரமம். முடிவுக் காட்சியை முதலில் எடுப்பார்கள். அது சோகமாகவும் இருக்கலாம். சந்தோசமாகவும் இருக்கலாம். ஒரு வீட்டில் எடுக்கப்படும் காட்சிகளை முடிக்க வேண்டும் என்பதற்காகத் தொடர்ச் சியாக உணர்வுகளை மாற்றி, மாற்றி நடிக்க வேண்டியேற்படும். அப்படிப் பார்த்தால் இரண்டிலும் சிரமமிருக்கலாம். ஆனால் நடிப்பு இயல்பாக வருபவர்களுக்கு இது குறித்துச் சிக்கல்களில்லை.

**நீங்கள் கலைக் குடும்பத்தைச் சார்ந்தவரா?**

இல்லை. நான் மட்டும்தான் முதன் முதலில் நடிக்க வந்திருக்கிறேன்.

**கலைப் பின்னணி இல்லாத குடும்பத்திலிருந்த உங்களுக்குள் நடிப்புக்கலை மீது ஆர்வம் தோன்றக் காரணம் என்ன?**

பாடசாலைப் பருவத்தில் நன்றாகப் பாடுவேன். பாடசாலைகளில் நிகழ்ந்த கலை நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருக்கிறேன். தனியா கவும் பாடுவேன். நாடகங்களுக்காகவும் பாடுவேன். ஒன்றிற்காக இன் னொன்றைச் செய்யும் போது இரண்டிலும் ஆர்வம் வருவது இயல்புதானே. அதன் பின்புதான் நாடகங்களில் நடிக்க முன் வந்தேன்

முதலில் அமெச்சூர் நாடகங்களில்தான் நடித்துக் கொண்டிருந்தேன். பின்னர், நாடகக் கம்பனியில் சேர்ந்தேன். அப்போது திராவிட இயக்க

நாடகங்களில்தான் மிக அதிகமாக நடித்துக் கொண்டிருந்தேன். அண்ணா, கலைஞர் ஆகியோருடன் இணைந்து பல அருமையான நாடகங்களைச் செய்திருக்கிறேன். அதுவே பின்னர் சினிமாவிற்கு இட்டுச் சென்றது.

**உங்கள் பூர்வீகம் குறித்து...**

தஞ்சாவூர் ஜில்லாவில் ராஜமன்னார் குடியில் நான் பிறந்தேன். ஆனால் வளர்ந்ததெல்லாம் செட்டிநாடு. நான் பத்து மாதக் கைக்குழந்தையாக இருக்கும் போதே அப்பா சின்னம்மாவைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுடைய கொடுமை தாங்க முடியாமல் அம்மா என்னை எடுத்துக் கொண்டு செட்டிநாடு செல்ல வேண்டியதாயிற்று.

**செட்டி நாட்டில் வளர்ந்ததால்தான் 'ஆச்சி' ஆகிவிட்டீர்களா?**

ஆம். சினிமாத்துறையில் எல்லோரும் இன்று என்னை 'ஆச்சி' என்று அழைப்பது எனக்குப் பெருமையாகவே இருக்கிறது. அதற்கு நான் செட்டி நாட்டைச் சேர்ந்தவள் என்பதுதான் காரணம் என்றும் சொல்லலாம். லக்ஷ்மி, ஜெய்சங்கர், சிவகுமார் ஆகியோர் சினிமாவுக்கு வந்த ஆரம்பத்தில் என்னை எப்படி அழைப்பதென்று சங்கடப்பட்டார்கள். அம்மா என்றும் அழைக்க முடியாது. அக்கா என்றும் அழைக்க முடியாது. 'ஆச்சி' என்றார்கள். இன்று ரசிகர்களும் கூட அப்படித்தான் அழைக்கிறார்கள்.

**பெண்களின் மீதான அடக்குமுறை வலுவாக இருந்த காலத்திலேயே அரங்கம் ஏறி இருக்கிறீர்கள். உறவினர்களிடமிருந்தும் சமுதாயத்தினரிடமிருந்தும் குறைந்தபட்சம் வார்த்தைகளாலான எதிர்ப்புகளையாவது சந்திக்க வேண்டி ஏற்பட்டிருக்குமே!**

இல்லை. பெண்களை யாருமே அடக்கவில்லை. இதை நீங்கள் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நமது பண்பாடு, கலாசாரம் போன்றவற்றைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தினால் பெண்களும் கொஞ்சம் அடக்கமாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், அது அடக்கு முறையல்ல. பாரதி கண்ட கனவு அன்றே பலித்துவிட்டது. பெண்கள் உலகை ஆள்கிறார்கள் எனும்போது ஆண்கள் அவர்களை அடக்கியாள வேண்டுமென்று எப்படி நினைக்க முடியும்!



ஆனால், பெண்களுக்கான பண்பை, அடையாளத்தை விட்டு விடமுடியாது. ஆண்கள் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாதில்லையா? ஆண்களுக்கு நான் பரிந்து பேசுவதாக தயவு செய்து நினைத்து விடாதீர்கள். பெண்களின் நாணமும், குணமும் என்றுமே அவர்களை விட்டு நீங்கக் கூடாது. ஆனால், வீரத்துடன் இருக்க வேண்டும். முறத்தாலேயே புலியை அடித்து விரட்டிய மறத்தியை புறநானூறு எமக்குக் காட்டியிருக்கிறது. இது எந்த அளவுக்கு உண்மை என்றெல்லாம் என்னால் கூற முடியாது. ஆனால், பெண்கள் துணிச்சலுடன் இருப்பதென்பது இன்றைய தேவைதான். ஆனால் ஆண்களால் அவர்கள் அடக்கப்படவே இல்லை.

**அப்படிப் பார்த்தால் 'பெண்களுக்கு சுதந்திரம் வேண்டும்; ஆண்களின் அடக்குமுறை ஒழிய வேண்டும்' என்று குரல் எழுப்புகின்ற மாதர் சங்கங்கள் இன்று தேவையற்ற ஒன்று என்கிறீர்களா?**

(அவசரமாக மறுக்கிறார்) அப்படியெல்லாம் நான் சொல்லவே மாட்டேன். அவர்களுக்கு என்னை எதிரியாக்காதீர்கள். ஆண், பெண் இருவருக்குமே எல்லாம் கிடைத்திருக்கிறது. பெண்கள் கொஞ்சம் பார்த்து நடந்து கொள்ள வேண்டும். அவ்வளவுதான்.

**நீங்கள் ஒரு நடிகையாக ஆகியிராவிட்டால் வேறு எந்தத் துறையின் மூலம் அடையாளப்பட்டிருப்பீர்கள்?**

இதுபற்றி எனக்குச் சொல்லவே தெரியாது. ஏனென்றால் எனக்குத் தெரிந்த வித்தையே நடிப்பு மட்டும்தான். நான் நிறையப் படித்ததுமில்லை. அதனால் என்னால் வேறு துறையில் இறங்கியிருக்கவே முடியாது. ஏதோவொரு மூலையில் குழந்தை குட்டிகளுடன் இருந்திருப்பேன். ஆனால், ஆண்டவன் எனக்கு நிறைவான வாழ்க்கையையே தந்திருக்கிறான்.

**ஒவ்வொருவருடைய வெற்றிக்கும் யாரோ ஒருவரோ அல்லது பலரோ காரணமாக இருக்கிறார்கள். உங்களுக்கு?**

எனது அம்மாதான். நான் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதும், நடிக்க வேண்டும் என்பதும் கூட அவருடைய தீர்மானமும், பிரார்த்தனையும் காட்டிய வழியில்தான் நிறைவேறியிருக்கின்றன. எனக்குக் கிடைத்த விருதுகளும், வெற்றிகளும் கூட அம்மாவுக்குரியவைதான்.

**இதுவரையில் எத்தனை மொழிப் படங்களில் நடித்திருக்கிறீர்கள்?**

தமிழ், மலையாளம், ஹிந்தி, தெலுங்கு என இந்திய மொழி சினிமாக்களில் நடித்திருக்கிறேன். தவிரவும் சிங்கள மொழியிலும் கூட நடித்திருக்கிறேன். முதன் முதலில் நான் கமெரா முன்பு நின்றதே சிங்கள மொழிப் படத்துக் குத்தான். முன்பெல்லாம் சிங்கள மொழிப் படங்கள் சென்னையில்தான் எடுக்கப்பட்டன.

**மிகச் சிறந்த குணச்சித்திர நடிகையென்றும் நகைச்சுவை நடிகை யென்றும் நீங்கள் கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கிறீர்கள், ஆயினும் ஒரு சில படங்களில் மட்டுமே கதாநாயகியாக நடித்துள் ளீர்கள். அந்த அனுபவம் குறித்து...**

அந்த அனுபவம் குறித்து எனக்கு வேறுபட்ட உணர்வுகளில்லை. ஏனென்றால் நான் எல்லா நாடகங்களிலும் கதாநாயகியாகவே நடித்திருந் தேன். முதன் முதலில் (1963 இல்) டி.ஆர்.சுந்தரம் அவர்களுடைய 'கொஞ்சும் குமரி' என்ற திரைப்படத்தில் மனோகருடன் இணைந்து கதாநாயகியாக நடித்திருந்தேன். அது அப்போதைய ஆர்வமாகவும், பெரு விருப்பமாகவும் தான் இருந்தது. ஆனால், நிறைய நகைச்சுவைப் படங்கள்தான் என்னைத் தேடி வந்தன. அதற்கேற்றாற்போல் என்னை நான் மாற்றிக் கொண்டு நடித்துக் கொண்டுள்ளேன். என்னுடைய முதல் படமான 'மாலையிட்ட மங்கை' யிலும் நகைச்சுவைக் கதாபாத்திரத்தில்தான் நடித்திருந்தேன்.

**நான்கு தலைமுறைகளுக்காக நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். வாய்ப்பு கிடைக்காமல் எப்போதாவது இருந்திருக்கிறீர்களா?**

இல்லவே இல்லை. முன்பெல்லாம் ஓய்வே இல்லாமல் இருந்திருக்கிறேன், தற்போது குறிப்பிட்ட சில படங்களில் மட்டும் என்று நடித்துக் கொண்டிருக்கிறேனானாலும் வாய்ப்பில்லாமல் நான் இருந்ததே இல்லை.

**பல பாத்திரங்களில் நடித்திருக்கிறீர்கள். ஆனால், 'இதில்' நான் நடிக்கவில்லையே என்று ஆதங்கப்படுகின்ற கதாபாத்திரம் ஏதாவது இருக்கின்றதா?**

ஆம். அரவாணியாக நடிக்க வேண்டும் என்பது இன்றுவரையில் எனக்குள்ள மிகப்பெரிய ஆதங்கம் அவர்களுக்கும் வாழ்க்கை இருக்கிறது. அவர்களும்



சமூகத்தின் அங்கத்தினர்தான் என்பது சாதாரண மக்களுக்கு புரியும் படியும், உறைக்கும் படியும் நான் அரவாணியாகப் பாத்திரமேற்று நடிக்க வேண்டும் என்பது அவாவாகவே இருக்கிறது. இதுபற்றி இயக்குனர்களி டம் பேசியுள்ளேன். சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்கிறேன்.

**அரசியலில் நுழையும் ஆர்வம் இருக்கிறதா?**

இல்லை. ஆனால் எனக்குத் தெரியாமலே நான் அரசியலில் இருந்திருக் கிறேன். எப்படியென்றால், முன்பு திராவிடக் கட்சியின் நாடகங்களில்தான் நடித்துக் கொண்டிருந்தேன். ஆனால், கட்சி பற்றியோ அரசியல் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. மிக நீண்ட காலங்களாக அண்ணா, கலைஞர் ஆகியோரின் வழிநடத்தலில் இருந்திருக்கிறேன்.

**'கின்னஸ்' சாதனைப் புத்தகத்தில் உங்கள் பெயர் பதிவாகியபோது எத்தனை படங்களை முடித்திருந்தீர்கள்?**

அப்போது 1050 படங்களைத் தாண்டியிருந்தேன். இன்று வரையில் 1350 படங்களிற்கு மேல் நடித்துவிட்டேன்.

**உங்களுக்கு Inspiration யார்? நீங்கள் யாருக்கெல்லாம் Inspiration ஆக இருக்கிறீர்கள்?**

எனக்கும் யாரும் இல்லை. நானும் யாருக்கெல்லாம் இருக்கிறேன் என்று தெரியவில்லை. உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள்.

**இன்றைய சினிமாத்துறை மீது உங்களுக்கு ஏதாவது விசன மிருக்கிறதா?**

இல்லையே! எல்லாம் கால மாற்றத்திற்கேற்றபடி ஆரோக்கியமாகவே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நான் இருக்கின்ற துறை பற்றி; எனக்குச் சோறு போடுகிற துறை பற்றி ; எனக்கென்ன விசனம் இருக்க முடியும்!

**இன்று நடிப்பதற்கு மிக வேகமாகவும், அதிகமாகவும் முன்வருகிற இளந்தலைமுறை பற்றி...**

மிகவும் பிரமாதமாகவே நடிக்கிறார்கள். துணிச்சலோடு செயற்படு கிறார்கள். 'முதல் நாள் கமெரா கூச்சம்' என்றெல்லாம் அவர்களுக்கு

இல்லவே இல்லை. எனது காலத்தில் நடிப்பு என்பது ஒரு கலை, கோயில் என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருந்த போக்கு இன்றையவர் களிடமில்லை. ஆனாலும் நன்றாகவே செய்கிறார்கள் என்று ஆச்சரியத் தோடு பார்க்கிறேன்.

**எம்.ஜி.ஆரை விட, சிவாஜியுடன் மிக அதிகமான படங்களில் நடித்திருக்கிறீர்கள். நடிகராகவும், அல்லாமலும் சிவாஜி குறித்து உங்கள் மனப்பதிவுகளென்ன?**

எம்.ஜி.ஆர். நிறையப் படங்களை ஒப்புக் கொள்ளமாட்டார் என்பதால் அவருடன் நான் நடித்தது குறைவு. சிவாஜி 500 படங்களில் நடித்திருக் கிறார் என்றால், அவற்றுள் நான் 200 படங்களில் நடித்திருக்கிறேன். தான் நடிப்பது மட்டுமன்றி, மற்றவர்களுடைய நடிப்பிலும் குறை வரக் கூடாதென்று சிவாஜி மிகவும் அக்கறையாக இருப்பார். நேரத்தை மிகவும் உயரியதாக மதித்து நடிப்பவர் சிவாஜி.

நடிகர் என்பதற்கு அப்பால் மிகச் சிறந்த மனிதர் அவர். என்னுடைய உடன் பிறந்த சகோதரர் போன்றே நான் இன்றும் உளமார மதிக்கிறேன். என்னு டைய பல துன்பங்களின் போது நான் எதிர்பாராத பல உதவிகளைச் செய்திருக்கிறார். குறிப்பாக எனது தாயாரின் மரணத்தின்போது எனது சகோதரனாகவும் எனது தயாருக்கு மகனாகவும் அவர்தான் இறுதிக் கடமைகளைச் செய்தார். அவரின் இழப்பு எனது குடும்பத்திற்கும் ஈடு செய்ய முடியாத ஒன்றாகவே இருக்கிறது.

**தில்லானா மோகனாம்பாளின் 'ஜில்லு'வைக் கொஞ்சம் நினைவு கூருங்கள்...**

(சிரிக்கிறார்) மறக்கவே முடியாத கதாபாத்திரம் அது. நகைச்சுவையாக நடித்துக் கொண்டிருந்த என்னைக் குணச்சித்திர நடிகையாகப் பதிவு செய்தவள் 'ஜில்லு'தான். ஏ.பி.நாகராஜன் அவர்கள்தான் எனக்கு அந்த வாய்ப்பைத் தந்தார். மனோரமாவுக்கு நடிக்க வரும் என்று நிரூபணமான தும் அந்தப் பாத்திரத்தின் மூலம்தான். இப்போது நினைத்தப் பார்த் தாலும் ஆச்சரியமாகவே இருக்கிறது. அப்படியொரு பாத்திரத்தை இனி மேல் செய்யமுடியுமா என்பதும் ஆச்சரியம்தான்!



**ஒரு குணசித்திர, நகைச்சுவை நடிகைக்கு 'பத்மஸ்ரீ' விருது கிடைத்தது மிகப் பெரிய விடயம். இது குறித்து நீங்கள் அடைந்த மகிழ்ச்சி பற்றி முன்னைய பேட்டி ஒன்றில் சிலாகித்துப் பேசியிருந்தீர்கள். ஆனாலும், இந்த விருதினைத் தாண்டி உங்கள் நடிப்புக்குக் கிடைத்த தலைசிறந்த வெகுமானமாக எதனை நினைக்கிறீர்கள்?**

சந்தேகமில்லாமல் எனது ரசிகர்கள்தான். அப்பா, மகன், பேரன், பூட்டன் என நான்கு தலைமுறை என்னை மனோரமா என அன்போடு அழைத்துப் பேசுகிறார்கள். இதுவே மிகப் பெரிய விடயமல்லவா!!

**பிரபலமாக இருப்பதில் ஏதாவது சங்கடமான அல்லது சிக்கலான நிலைமை இருப்பதாக உணர்கிறீர்களா?**

இல்லை. சிலர் அப்படிக் கூறுகிறார்கள்தான். ஆனால், என்னை எனது ரசிகர்கள் எதுவிதத்திலும் தொல்லைப்படுத்துவதில்லை.

**தொடர்ச்சியாக நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். 'நடித்தது போதும்' என எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா?**

இன்றுவரை நினைக்கவில்லை. இனிமேலும் நினைக்கமாட்டேன். நடிக்க முடியாது என்கிற நிலை வருமுன்பே இறந்து விடவேண்டும் என்று பேராசைப்படுகிறேன். சம்பாதிக்க வேண்டும் என்பதற்கான ஆசையல்ல இது. எனது பிடிப்பே நடிப்புதான்!

**'சவால்' என்கிற படத்தில் கமலின் ஒரு ஆண் ரவுடி போல நடித்தி ருந்தீர்கள். 'பாட்டி சொல்லைத் தட்டாதே'யில் மிகவும் வித்தியா சமான பாத்திரம் ஏற்றிருந்தீர்கள் சண்டை, சிலம்பம், நடனம் இவற்றுக்கெல்லாம் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தீர்களா?**

இல்லை. எதையுமே நான் முறைப்படி கற்கவில்லை. நடிப்பையும் கூடத்தான். ஆனால், இயக்குனர்கள் என்ன சொன்னாலும் என்னால் செய்துவிட முடிகிறது.

**ஆரம்பத்தில் நீங்கள் அனுபவிக்க நேர்ந்த பொருளாதாரப் பிரச்சினைகளின் ஞாபகத்தில்; இன்று சமுதாயத்திற்கோ அல்லது**

**தனி நபருக்கோ ஏதாவது உதவிகள் செய்து கொள்ளத் தூண்டுகிறதா?**

ஆம். என்னால் முடிந்த பல உதவிகளைச் செய்து வருகிறேன். கல்விக் காக நிறைய உதவுகிறேன். எனது அம்மா அப்பா பிரிவு, அதனால் ஏற் பட்ட சிரமங்கள் இன்னும் என்னைப் பாதிக்கவே செய்கின்றன. இந்த மனோநிலைதான் பிறருக்கு உதவ வேண்டும் என்று என்னை விரட்டிக் கொண்டிருக்கிறது.

***உங்கள் 'மியூசிரமா' பற்றி...***

நானும் என் மகன் பூபதியும் சேர்ந்து 'மனோரமா வழங்கும் மியூசிரமா' என்றொரு நிகழ்ச்சி நடத்துகிறோம். பாடல்களுடன் மோனா நடிப்பும் அதில் இடம்பெறும். நான், பூபதி மற்றும் ஒன்றிரண்டு பாடகர்கள் அதில் பாடுவோம். அந்த நிகழ்ச்சியை 1983 இல் இலங்கையில்தான் முதன் முதலில் நடத்தியிருந்தோம். இப்போது, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் கூட நடத்தி வருகிறோம்.

**இலங்கை ரசிகர்களுக்கு!**

நாடு இப்போது நல்ல அமைதியாக இருக்கிறது எல்லோரும் சுபிட்சமாக வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

*07.11.2005*



நட்சத்திரங்களை எண்ணி ரசிக்கும்
சுகானுபவம்
லதாவின் எழுத்துக்களினூடாகப்
பயணிக்கும் போது கிடைக்கும்!

இவரின் மொழி ஓவியத்தை
பன்மைத் தடவைகளில்
படித்து ரசிக்கலாம்.

எல்லா மௌனங்களும்
அழகானவையல்ல!
ஆனால்,
அழகான மௌனங்களை மட்டுமே
லதா இங்கு மொழிபெயர்த்திருக்கின்றார்!!

இவருடைய எழுத்தழகை ரசிக்கையில்,
இதை கவிதை கலந்த நேர்காணல் தொகுதி என்றும்
கருத இடம் உண்டு!
ஏனென்றால், இவர் ஒரு தமிழ் இலக்கியப் பட்டதாரி!!

மொழி என்பது மௌனத்தின் உருகு நிலை!
மௌனம் என்பது மொழியின் உறை நிலை!
ரசித்து, ரசித்து உருகத் தெரிந்த மனசுகளுக்கு மட்டுமே
மௌனத்தை உருக வைக்கவும் தெரியும்!
லதாவுக்கு இது நன்றாகவே தெரிந்திருக்கிறது!!

அறிவுக்கும், அனுபவத்துக்கும் தொடர்பேதுவும் இல்லையென்று
தனது பங்கிற்கும் கூவிக் களிக்கிறது இந்தக் குயில்!
பத்திரிகையாளராகி மூன்றே ஆண்டுகளுள்
லதா நிகழ்த்தி முடித்தவை இவை!

தன் பெயரிலும்,
'ராஜா மகள்' என்கின்ற புனைப் பெயரிலும்
தேசிய பத்திரிகைகளுக்காக
இவர் தேடித் திரட்டியவை இந்த நேர்காணல்கள்.

ராஜா மகள் - இளவரசி ஆயிற்றே!
ஆனால், ஓர் அரசி போலவே மொழியை
ஆண்டு கொண்டிருக்கின்றார் லதா!!

● பூவியல் மப்றூக்

ஊற்று
பதிப்பகம்

ISBN 955-99609-0-